நல்லூர் வீர கவிராயர்

இயற்றிய

# அரிச்சந்திர புராணச் சுருக்கம்

(விளக்கக் குறிப்புரையுடன்)

பதிப்பாசிரியர்:
வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

எம். ஆர். அப்பாதுரை, B. A.,
13, முத்தியாலு செட்டித் தெரு,
புரசைப்பாக்கம், சென்னை.

பதிப்புரிமை] [விலை ரூ. 2

Second edition 1948

The Premier Art Press, Madras.

# உள்ளுறை


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | v |
| | நூலாசிரியர் வரலாறு முதலியன | vii |
| | கதைச் சுருக்கம் | ix |
| | பாயிரம் | 1 |
| | நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு | 3 |
| 1. | விவாக காண்டம் | 5 |
| 2. | இந்திர காண்டம் | 12 |
| 3. | வஞ்சனைக் காண்டம் | 16 |
| 4. | வேட்டம் செய் காண்டம் | 23 |
| 5. | சூழ்வினைக் காண்டம் | 33 |
| 6. | நகர் நீங்கிய காண்டம் | 65 |
| 7. | காசி காண்டம் | 93 |
| 8. | மயான காண்டம் | 104 |
| 9. | மீட்சிக் காண்டம் | 137 |
| 10. | உத்தர காண்டம் | 145 |
| | செய்யுள் முதற்குறிப்பு அகராதி | 151 |

ஸ்ரீ :

## முன்னுரை

### காப்பு

### நேரிசை வெண்பா

*மன்னுமரிச் சந்திரன்றன் மாசரிதை சொற்சுருங்கப்*
*பன்னுமிந் நூற்சுருக்கம் பாரின்மிசை—மன்னிமிக*
*மற்றவன்ற னற்புகழ்போன் மாண்புற் றொளிரவரும்*
*கற்றசட கோபன்றாள் காப்பு.*

மக்கள் மனத்தைப் பண்படுத்துவதில் செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட இலக்கிய நூல்கள் இணையில்லாதவை என்பது எந்நாட்டறிஞரும் ஆய்ந்தறிந்த உண்மையாகும். இம்முறையில் தமிழர்க்கமைந்த தனிப்பெருஞ் செல்வமாயுள்ளவை பண்டைப்புலவர் வகுத்த இன்னிசைக் கவிக் களஞ்சியங்களாயிலங்கும் தமிழ்க் காவியங்களாம். எனினும், பண்டைச் செல்வமாயிலகுந் தண்டமிழ்க் காவியங்களைக் கற்றுத்தம் வாழ்க்கையைப் பண்பும் பயனும் உடையதாக்கிக் கொள்வார் இந்நாளில் அரியராயினமைக்குக் காரணம் பலவாம். அவற்றுள் முக்கியமானவையாகக் கருதப்படுவன தமிழ்க் காவியங்கள் இலக்கணப் பயிற்சி உடையார்க்கன்றி ஏனையர்க்கு விளங்கலாகா வகையில் அமைந்திருப்பதும், தமிழ்க் காவிய நூல்கள் கண் கவர் வனப்புடையனவாகப் பதிப்பிக்கப்படாத குறையும், நன்கு மதிக்கப்படுங் காவியங்கள் ஆயிரக்கணக்கான செய்யுட்களைக் கொண்டிருத்தலுமே எனக் கூறலாம்.

இக்குறையை நீக்குதற்கு இந்நாளில் ஒரு சிலர் முன் வந்திருப்பதைப் பலர் அறிவர். யானும் என்னாலியலும் பணியை இத்துறையில் இயற்றித் தமிழ்த் தாய்க்குத் தொண்டாற்றும் கருத்துடன் இப்பணியை மேற்கொண்டுள்ளேன். ஆசை பற்றி மேற்கொண்ட இத்திருப்பணியைப்

பயன்பெறச் செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

தமிழ்ச் சிற்றிலக்கியங்களைச் சுருக்கித் தொகுத்து' செய்யுட்களின் இன்னிசை கெடாதவாறு சொற்றொடர்களிற் சந்திகளைப் பிரித்து, பொருள் இலகுவில் விளங்குமாறு நிறுத்தக்குறிகளை வேண்டுமிடங்களில் அமைத்து, செய்யுளில் அமைந்துள்ள அருஞ் சொற்களுக்குக் குறிப்புரை தந்து, அழகிய தோற்றத்துடன் பதிப்பிக்கவேண்டும் எனக்கருதி யான் முதலில் இந்நூலை அம்முறையில் வெளியிடுகின்றேன்.

இப்பதிப்பில் இந்நாள் இளமாணவரும் பொதுமக்களும் அருவருக்கத் தகுந்த வருணனைகளும் அல்வழியான சொற்களும் தொடர்களும் நீக்கப்பட்டுள்ளன. ஆதலின், இம்முறையில் வெளிவரும் இலக்கியங்கள் ஆடவர், பெண்டிர், இளைஞர் ஆகிய அனைவரும் மகிழ்ந்து கற்றற்கு உரியனவாகும். இத்தகைய நூல்கள் பள்ளிக்கூடங்களிலுள்ள நூல் நிலையங்கட்கும், தமிழறிவு பெற விரும்பும் பொது மக்களுக்கும், தமிழ் மாணவர்களுக்குப் பரிசளித்தற்கும் மிகவும் தகுதி வாய்ந்தனவாம்.

செய்யுட்களில் அல்வழியான சொற்களேனுந் தொடர்களேனும் அமைந்த இடங்களில், அவை காரணமாக அழகிய செய்யுட்களை நீக்கிவிட அஞ்சி, இனிதமையத் தகுந்த வேறு சொற்களையும் தொடர்களையும் யான் அமைத்துள்ளமையை அறிஞர் பொறுத்தருள்வரெனுந் துணிபுடையேன். அறிஞர் இந்நூலைப் பல்லாற்றானும் ஆதரிக்குமுகத்தால் எனக்கு இத்துறையில் மேன்மேலும் உழைக்க ஊக்கமளிக்குமாறு அவர்தமை வேண்டிக்கொள்ளுகிறேன்.

'நாமகள் கழகம்'
காஞ்சிபுரம்,
1—9—'48

மே. வீ. வே.

வீர கவிராயர்* என்பவர் இந்நூலாசிரியர். இவர் திருநெல்வேலி ஜில்லாவில், இராமநாத புரத்தைச் சார்ந்த நல்லூர் என்னும் ஊரில் பிறந்து வளர்ந்து வாழ்ந்தவர். இவர் தமது இளமைப்பருவத்தில் தமிழ் மொழிக்குத் தோற்றமும் ஏற்றமும் அளிப்பனவாய் இலகும் கம்ப ராமாயணம், திருக்குறள், சங்க நூல்கள் முதலியவற்றை நன்கு பயின்று, விரைந்து கவி பாடுந் திறம் பெற்று விளங்கியது காரணமாக ஆசு கவிராயர் என வழங்கப்பட்டனர். இவர் காளியை வழிபட்டு வந்த சைவர்.

இவர் சந்த விருத்தம் பாடுவதில் மிக வல்லவர். இவர் இயற்றிய இந்நூற்செய்யுட்களில் திரிபு, மடக்கு என்னுஞ் சொல்லணிகளும் பிற இலக்கணக் கருத்துகளும் அமைந்திருப்பதைக் காணலாம். அவலச் சுவை பொருந்தக் கவி பாடுதலில் விஞ்சிய ஆற்றல் இவருக்கு உண்டென்பது, மகனை இழந்த சந்திரமதி புலம்பலாக இந்நூலில் இவர் அமைத்துள்ள கவிகளால் (மயான காண்டம் செய்யுள் 15-26) இனிது விளங்கும். அச்செய்யுட்கள் கன்னெஞ்சையுங் கரைந்துருகச் செய்யுந் தன்மை வாய்ந்தவை.

இந்நூலாசிரியர் வடமொழியிலுள்ள அரிச்சந்திரன் கதையையும் தமிழிலுள்ள அரிச்சந்திர வெண்பாவையும் இந்நூலுக்கு முதல் நூலாகக்கொண்டு, அவற்றினும் சிறப்-

---

*சேது நாட்டுக் குலோத்துங்க சோழ நல்லூர் என்னும் ஊரை அடுத்த விரையாத கண்டன் என்னும் ஊர்ப்பெயரின் மரூஉவாகிய விரை என்பதே இந்நூலாசிரியரின் பிறப்பிடப் பெயராகுமெனவும், ஆதலின், இந்நூலாசிரியர் விரை ஆசு கவிராயர் என வழங்கப்படுதலே பொருத்தமுடைத்தெனவும், இஃதறியாது பிற்காலத்தார் இவர் பெயரைப் பிறழக் கூறினர் எனவும் தமிழ்ப்பேரறிஞர் திரு. மு. இராகவையங்காரவர்கள் பெருந்தொகையின் (பக்-636) விசேடக் குறிப்பில் குறித்துள்ளார்கள்.

புற்று விளங்குமாறு இந்நூலைச் செய்தனர். அரிச்சந்திர வெண்பா வழக்காறற்றமைக்கு இந்நூலின் சிறப்பே காரணமாமென்பது மிகையாகாது. இவர் இந்நூலுக்கு வழங்கிய பெயர் அரிச்சந்திர சரித்திரம் என்பதாயினும், இந்நூல் பலராலும் அரிச்சந்திர புராணம் எனவே வழங்கப்படுவதாயிற்று.

இவர் இந்நூலைக் கி. பி. 1524-ஆம் ஆண்டு திருப்புல்லாணி*என்னும் க்ஷேத்திரத்தில் திருமால் சந்நிதியில், சக்கர தீர்த்தக் கரையின் மேல் மண்டபத்தில், அறிஞர் பலர் கூடிய பேரவையில் அரங்கேற்றினர். ஆதலின், இவரது காலம் 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும், 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகும்.

* தருப்ப சயனம்; இராமநாத புரத்திற்கு அருகிலுள்ளது.

# கதைச் சுருக்கம்

## 1. விவாக காண்டம்

நீர் வளமும் நில வளமும் குடி வளமும் செழித்தோங்கக் கோசலம் என்னும் நன்னாட்டில், நிலமா மகளின் நெற்றியில் விளங்கும் திலகம் போலும் சீர் பெறும் அயோத்தியைத் தலை நகராகக் கொண்டு, அரிச்சந்திரன் என்னும் வாய்மை வழு-வாத மன்னன் செங்கோல் செலுத்தி வந்தனன். அவன் ஒரு நாள் தன் கொலு மண்டபத்தில் வீற்றிருக்கையில் முனிவர் பலர் அங்கு வந்தனர். அவன் அம்முனிவரை வணங்கி, அவர்க்கு இருக்கை அளித்து, 'பெரியீர், நீவிர் எத்தேசங்-களைக் கண்டீர்? அத்தேசங்களிற்கண்ட புதுமைகள் என்ன?' என வினவினன்.

முனிவர், "மன்னவ, யாங்கள் கன்னோசி நாட்டை அடைந்து, கண்டகி நதியில் நீராடி, நின்னைக் காண இங்கு வந்தோம். அந்நாட்டில் கன்னமா புரியை ஆளும் சந்திர-குல மன்னனாகிய மதிதயன் என்பவன், சிவபிரான் அருளிய வரத்தால், சந்திரமதி என்னும் தையலைப் பெற்றனன். அவள் கற்பிலும் பொற்பிலும் ஒப்பற்றவள். அவளை மணக்க மன்-னர் பலர் விரும்பினர். எனினும், மதிதயன், 'சிவ பெருமான் என் மகளைப்பற்றி வெளியிட்ட இரகசியத்தை அறிபவருக்-கன்றி மற்றவர்க்கு அவளை மணமுடியேன்,' எனக் கூறிவிட்-டனன். அவள் உன் மனைவியாதற்குத் தகுந்தவள்," என்று கூறினர்.

அரிச்சந்திரன், சந்திரமதியைத் தனக்கு மணம் செய்-விக்குமாறு முனிவர்களை வேண்ட, அவர்களும் உடன்பட்டு, மீண்டும் கன்னமா புரியை அடைந்து, மன்னன் கருத்தை மதிதயனுக்கு அறிவித்தார்கள். மதிதயன், "முனிவர்காள், சிவபெருமான் வெளியிட்ட இரகசியத்தை அறிய வல்லார் எவராயினும், அவர் என் மகளை மணத்தற்குரியராவர். ஆத-லின், அரிச்சந்திரர் இங்கு வரின் அறியலாம்," எனக் கூறி-னன். முனிவர்கள் மீண்டு சென்று அரிச்சந்திரனுக்குச் செய்தி அறிவித்தார்கள். உடனே மன்னன் மந்திரிமார்

முதலானவர்களுடன் புறப்பட்டுக் கன்னமா புரியை அடைந்தனன்.

மதிதயன், தன் மகளுக்குச் சுயம்வரம் ஏற்படுத்தி, மற்ற மன்னர்களையும் அதற்கு அழைப்பித்தனன். சுயம்வர மண்டபத்தில் அனைவரும் வீற்றிருக்கையில் தோழியர் பலருடன் சந்திரமதி தன் கைகளில் மலர் மாலை தாங்கி அங்கு வந்தனள். அறிவிலும் அனுபவத்திலும் சிறந்த தோழி ஒருத்தி, அங்கு வந்திருந்த மன்னர் ஒவ்வொருவருடைய சிறப்பியல்புகளை-யெல்லாம் சந்திரமதிக்கு விளங்கக் கூறி, பின்பு அரிச்சந்திரனைச் சுட்டி அவன் வரலாற்றையும் விளக்கினள். சந்திரமதியின் மனம் அரிச்சந்திரனை விரும்பியது. அரிச்சந்திரனும் அளவில்லாத காதலுடன் சந்திரமதியைக் கூர்ந்து நோக்கி, அவள் கழுத்தில் மங்கல நாண் விளங்கக் கண்டு வியப்படைந்து, "என்னே இது! முன்னமே மங்கலம் பூண்ட இவள், பின்னும் ஒருவனை மணத்தல் தகுமோ?" என மதிதயனை வினவினன். அது கேட்ட மதிதயன் மகிழ்ந்து, மற்ற மன்னரை நோக்கி, "வேந்தர்காள், அரிச்சந்திரர் கூறியது உண்மையோ? இவள் கழுத்தில் தாலி உண்டானால் நீங்கள் காட்டுங்கள்," என்று கூற, அவர்கள் அது காண இயலாமையால், 'இம்மன்னர் இயம்பியது பொய்,' என்று கூற, உடனே மதிதயன், "அரசர்காள், இம்மன்னர் கூறியது உண்மையே. இதில் தெய்வ இரகசியம் உண்டு. சிவபிரான் தந்த வரத்தால் தாலியுடன் தோன்றிய என் மகளைக் கடி மணம் புரிதற்குரியவர் எவரோ, அவருக்கு மட்டும் அத்தாலி புலப்படும் என்பது சிவபெருமான் கூறிய இரகசியமாகும். அவ்வுண்மை இப்பொழுது விளங்கியது," என்று கூறினன். உடனே சந்திரமதி, அரிச்சந்திரனை மனத்திலெண்ணி, மாலையை உயர வீசினள். அம்மாலை அவன் கழுத்தில் விழுந்தது. மன்னன் முகம் மலர்ந்தது. மற்றவர் முகம் சுளித்தனர்.

பின்னர் அனைவரும் அகமகிழ்ந்து வாழ்த்த அரிச்சந்திரன் சந்திரமதியை மணந்து, சில நாள் கன்னமா புரியிலிருந்து, பிறகு மதிதயன் முதலியவரிடம் விடை பெற்று, அயோத்தியை அடைந்தனன். சில மாதங்கள் கழித்துச்

சந்திரமதி ஒரு மைந்தனைப் பெற்றனள். அம்மைந்தன் தேவதாசன் எனப் பெயரிடப்பட்டு, ஈன்றோர் மகிழ இனிது வளர்ந்து, ஏழாம் வயதை எய்தினன்.

## 2. இந்திர காண்டம்

ஒரு நாள் தேவேந்திரன் தேவர், அசுரர், முனிவர் முதலியவர் புடை சூழத் தன் சிங்காதனத்தில் வீற்றிருக்கையில் மண்ணுலக மாதவராகிய வசிட்டர், விசுவாமித்திரர் முதலியவரை நோக்கி, "உலகில் உண்மையிலும் சாஸ்திர ஆராய்ச்சியிலும் மனத்தூய்மையிலும் சிறந்தவரை ஆராய்ந்து கூறுங்கள்," எனக் கேட்க, வசிட்டர், "மகபதி, அவற்றில் சிறந்தவன் அரிச்சந்திரனே," எனக்கூறினர். அது கேட்ட விசுவாமித்திரர், வசிட்டரிடம் தாம் கொண்ட பழைய பகைமையால் மனம் கொதித்து, வசிட்டரை நோக்கி, "அவ்வரிச்சந்திரன் கொடியவன்; பாதகன்; பொய்யன்; பொறுமை சிறிதும் இல்லாதவன்; கபடன். அப்படிப்பட்டவனை நல்லவன் என்று நீர் கூறியது எக்காரணத்தால்?" என்றனர். வசிட்டர் முனிவரை முனிந்து, "ஒப்பற்ற அரிச்சந்திரனை இவ்வாறு கூறிய உம்மைத் தெய்வமும் தண்டிக்கவில்லையே!" என்று கூற, விசுவாமித்திரர் கடுமையான வார்த்தைகளைக் கூறி, அவருடன் வாதமிட்டனர்.

இந்திரன் இருவரையும் கையமர்த்தி, "முனிவர்காள், நீங்கள் சொல்லுவதை ஆராய்ந்து முடிவு கட்டுவதில் ஒருவர் தோல்வி அடைந்தால் செய்யத்தக்கது யாது? சொல்லுங்கள்," எனக்கேட்க, வசிட்டர், "அரிச்சந்திரனிடம் குற்றம் உண்டு என்பதை வெளிப்படுத்தி இவ்விசுவாமித்திரர் என்னைத் தோற்கச் செய்தால், யான் அப்பொழுதே என் தவத்தை இழந்து, மண்டை ஓட்டில் கள்ளை ஏந்தித் தென் திசை நோக்கிச் செல்வேன்!" என்று கூறினர். அது கேட்ட நாரதர், "விசுவாமித்திரரே, அரிச்சந்திரன் குற்றமுடையவன் ஆனால் வசிட்டர் இவ்வாறு சபதம் செய்வரோ? நீர் உமது சபதத்தைக் கூறும்," என, விசுவாமித்திரர், "அரிச்சந்திரன் வென்றால், என் தவத்தில் பாதியை அவனுக்குக் கொடுப்பேன்!" என்று கூறினர். நாரதர், "அவ்வாறாயின், நீர் மண்ணுலகு சென்று அரிச்சந்திரனைச் சோதியும்," என்று கூறி-

னர். பின்னர் இந்திரன் சபை கலைய, அனைவரும் அவரவர் இருப்பிடம் அடைந்தனர். விசுவாமித்திரர் மண்ணுலகி-லுள்ள தம் தவச் சாலையை அடைந்தனர்.

### 3. வஞ்சனைக் காண்டம்

முனிவர் பலர் விசுவாமித்திரரை அடைந்து, இந்திர-சபையில் நடந்ததைக் கூறும்படி அவரை வேண்டினர். அவர் உண்மையைக் கூறாமல், "தேவர் சபையில் பல முனி-வர் வேண்டுகோளுக்கிணங்கி ஒரு யாகத்தை முடிக்கக்கருதி மண்ணுலகு அடைந்தேன். நீங்கள் சென்று அரிச்சந்திர-னைக் கண்டு, யான் செய்யும் வேள்விக்கு வேண்டும் பொருள் தர அவனைச் சம்மதிக்கச்செய்து வருக," என்றனர். அவர்-கள் அங்ஙனமே சென்று, அரசனைக் கண்டு, விசுவாமித்திரர் கட்டளைக்கு அவனை இணங்கச்செய்து மீண்டனர்.

பின்னர்ச் சில மாதங்கள் கழித்து,விசுவாமித்திரர் அரிச்-சந்திரனை அடைந்து, தம் வேள்விக்குத் தருவதாக வாக்-களித்த பொருளைத் தருமாறு கேட்டனர். மன்னன், "வேள்-விக்கு வேண்டும் பொருள் எவ்வளவு?" என, முனிவர், "யானைமேல் நின்று வீசும் கவண் கல் செல்லுந் தூரம் பொருள் குவித்தால் வேள்வி முடியும்," எனக் கூற, மன்னன் அப் பொருள் தரச் சம்மதித்தனன். முனிவர் தாம் வேள்வி தொடங்கும்போது அப்பொருளைப் பெற்றுக்கொள்வதாகக் கூறிச் சென்றனர்.

பின்பு முனிவர் கொடுவிலங்குகள் முதலியவற்றை அழைத்து அயோத்தியிலுள்ள விளைபொருளை அழித்துக் குடிகளை வருத்துமாறு ஏவினர். அவை அங்ஙனமே சென்று குடிகளுக்குப் பல வித இடையூறு விளைத்தன. அவற்றின் கொடுமையைப் பொறுக்கலாற்றாத குடிகள், மன்னனைக் கண்டு முறையிட, அவன் குடிகளுக்கு இரண்டாண்டுக்கு வரி இல்லை என்று கூறி அனுப்பினன்.

### 4. வேட்டம் செய் காண்டம்

மன்னன் தன் மந்திரிகளுடன் இருந்து ஆலோசித்து, வேட்டையாடி விலங்குகளை மாய்க்கக் கருதி, வேடர் பல-ருடனும், தன் மனைவியுடனும், மற்றவருடனும் காட்டை அடைந்து, எண்ணற்ற விலங்குகளைக் கொன்றும், பல

விலங்கைப் படுகாயப்படுத்தியும், காட்டின் பல பகுதிகளை தீக்கிரையாக்கியும் களித்தனன்: அதை அறிந்த விசுவாமித்திரர் ஒரு பெரும்பன்றியைச் சிருட்டித்து, மன்னனுக்கும் அவனுடைய பரிவாரத்திற்கும் இடையூறு விளைக்கக் கட்டளையிட்டு, ஏவினர். அப்பன்றி, மன்னன் சேனையிற் புகுந்து, பேரிடையூறு விளைத்தது. மன்னன் அதைத் தன் அம்புகளால் பெரிதும் புண்படச் செய்தனன். பன்றி பொறுக்கலாற்றாது, ஒரு மலையிற்சென்று மறைந்தது. மன்னன் மற்றவருடன் ஒரு குளக்கரையை அடைந்து, ஒரு சோலையில் இளைப்பாறி இருந்தனன். அங்கு வந்த முனிவர் சிலர் அரசனைக் கண்டு, அச்சோலை விசுவாமித்திரருக்குரியதாதலின், அதில் அரசன் பரிவாரத்துடன் தங்கினால் முனிவர் சாபத்திற்கு இலக்காக நேரிடுமெனக் கூற, அரசன் விசுவாமித்திரர் தனக்குத் தீங்கிழையார் எனக் கூறினன். முனிவர், "அங்ஙனமாயின், பார்ப்போம்!" எனக் கறுவிச் சென்றனர்.

இரவானதும் மன்னனும் மற்றவரும் துயில் கொண்டனர். மன்னன் ஒரு தீக்கனாக் கண்டு எழுந்து, தன் மனைவி முதலாயினார்க்கு அதனைத் தெரிவித்தனன். முதல் மந்திரியாகிய சத்தியகீர்த்தி, அக்கனவின் பலனை அரசனுக்கு விளக்கி, விசுவாமித்திரரால் அரச குடும்பத்திற்கு நிகழப்போகும் தீங்குகளைத் தெரிவித்தான். சந்திரமதி அவற்றைக் கேட்டுத் திடுக்கிட்டு, அரசனை நோக்கி, "காதலரே, எத்தீங்கு விளையினும் நீதி முறை தவறாதீர்," எனக் கூறினள்,

## 5. சூழ்வினைக் காண்டம்

அரசன் அம்புகளால் அல்லல் அடைந்த பன்றி, முனிவரை அடைந்து முறையிட்டது. முனிவர் பெருமுனிவு கொண்டனர்; தாம் விட்ட பெருமூச்சினால் அழகிய பெண்டிர் இருவரைச் சிருட்டித்து, கோபத்தில் தோன்றியதால் புலைச்சியரான அம்மகளிர்க்குக் கீதமும் யாழும் சிறக்கக் கற்பித்தனர். அப்பொழுது மன்னனைக் கறுவி மீண்ட முனிவர்கள் விசுவாமித்திரரை அடைந்து, மன்னன் சோலையில் பரிவாரத்துடன் தங்கி இருத்தலை அறிவித்தனர். உடனே முனிவர் அப்பெண்டிரை நோக்கி, "மடவீர், நீவிர் மன்னனி-

டம் சென்று, உமது இசைத்திறத்தால் அவனை மயக்கி, அவன் வெண்கொற்றக் குடையைப் பரிசாகப் பெறுமின். இன்றேல், அவனை உமக்குக் கணவனாக்கிக்கொள்ளுமின்," எனக்கூறி விடுத்தனர்.

அப்பெண்டிர் மன்னனை அணுகி, வணங்கிப்போற்றி, தாம் இன்னாரென்பதை அவனுக்குணர்த்தி, அனைவரும் மகிழுமாறு தம் இசைத்திறம்தோன்ற யாழிசைத்துப்பாடினர். மன்னன் அவர்க்கு வளம்பெறு பரிசில்பல அளித்தும், அவற்றைக் கொள்ளாமல், கவிகையைத் தருமாறும், அல்லது தம்மை மணந்துகொள்ளுமாறும் அவனை வேண்டினர். தன் பரம்பரைப்பொருளான வெண்கொற்றக்குடையைக் கொடுக்கவும், புலைப்பெண்டிரை மணக்கவும் அரசன் மறுக்க, சத்தியகீர்த்தி அப்பெண்டிரை அப்பாற்செல்லக் கட்டளையிட்டனன். பின்னும் பெண்டிர் அடாமொழி சில கூற, அரசன் முனிந்து, அவர்களை அப்புறப்படுத்துமாறு ஏவலரை ஏவ, பெண்டிர் பெரிதும் அஞ்சி, யாழைக் கீழே போட்டுவிட்டு, முட்புதரென்றும் கல் வழி என்றும் அறியாது ஓடி, உடலில் இரத்தஞ் சோர விசுவாமித்திரர் முன் விழுந்தனர். முனிவர் நிகழ்ந்ததைக் கேட்டுப் பெருஞ்சினம் கொண்டு, முனிவர் சிலர் தம்மைப் பின் பற்றி வர, அரிச்சந்திரனை அடைந்தனர்.

அவர் வருகையை அறிந்த மன்னன் மனந்திடுக்கிட்டு, அவரை வணங்கி மன்னிப்பு வேண்டினன். முனிவர் அவனைப் பலவாறு வைது, தம் மக்களை மணப்பின் மன்னிப்பதாகக் கூறினர். அது கேட்ட காவலன், "எதை வேண்டினும் ஈவேன்; புலைப்பெண்டிரை மணவேன்," எனக் கூற, முனிவர், "அங்ஙனமாயின், உன் அரசைக் கொடு," என்றனர். அரசன், "தந்தேன்; தந்தேன்," எனவும், முனிவர், "தாரை வார்த்துத்தா," என, மன்னன் அவ்வாறே செய்தனன். அது கண்ட மற்ற முனிவர் பெருமகிழ்ச்சியுற்றனர். முனிவர் பின்னும் அமையாமல், அரசனும் அவன் மனைவியும் மைந்தனும் அணிந்திருந்த ஆடையாபரணங்களையும் வலிதிற் பெற்று, அவர்களை மரவுரி உடுக்கச்செய்து, மன்னனை

நோக்கி, "அரிச்சந்திரா, நீ எம்முடன் நகரத்திற்கு வந்து, முன்பு வேள்விக்கு அளிப்பதாக வாக்களித்த பொருளைத் தந்துபோ," என வற்புறுத்தினர். மன்னன், "பெரியீர், யான் உமக்குத் தந்த நாடு நகரங்களை ஒழித்து, வேறு தர என்னிடம் பொருளேது?" என, முனிவர், "நீ தாரை வார்த்தபோது, முன்சொன்ன பொருளுக்கும் சேர வார்த்த-துண்டோ? சூரிய குலமன்னர் சொன்னது தவறியதில்லை. உன்னிடம் அக்குணம் காணேம்," என்றனர். மன்னன் அது கேட்டு நாணி, "பெரியீர், ஒரு தவணை குறிப்பிட்டால், அதற்குள் அப்பொருளைத் தேடித்தரத் தடையில்லை," என, முனிவர், "சரி; இருபது நாளையில் கொடு; அங்ஙனம் கொடுக்கும் பொருள் எம் நாட்டை அகன்று அப்பால் தேடிய பொருளாயிருக்கவேண்டும்," எனக் கூறினர். மன்-னன், "மாதவரே, யான் அயல் நாடு சென்று சேரவே நீர் குறித்த தவணைக்கு இரட்டிப்பான நாள் செல்லுமே!" என, "அங்ஙனமாயின், நாற்பத்தெட்டு நாட்களில் கொடு," என்றனர் முனிவர்.

பின்பு முனிவர் விரும்பியபடி அரசன் அவருடன் அயோத்திக்குச் சென்று, அங்கிருந்த பொக்கிஷச் சாலை முதலியவற்றை எல்லாம் பலரும் அறிய முனிவருக்குக் காட்டிக் கொடுத்து, மந்திரிமார் முதலாயினேரும் குடிகளும் பெரிதும் வருந்தியதனால் அவர்களை ஒருவாறு தேற்றி, சந்திரமதியுடனும் தேவ தாசனுடனும் புறப்பட்டான். முனிவர் சிங்காதனத்திருந்து உலகாளலாயினர்.

## 6. நகர் நீங்கிய காண்டம்

தங்கள் நல்லரசன் நகர் நீங்கிச் செல்வது கண்ட குடி-கள் ஆறுத்துயர் கொண்டு அரற்றினுர்கள்; விசுவாமித்-திரரைப் பற்பலவாறு நிந்தித்தார்கள். அரிச்சந்திரன், தன் பிடியொடும் கன்றொடும் கானகம் புகுதுங் களிறேபோல, தன் மனைவியொடும் மைந்தனெடும் நடந்து சென்று, சரயு நதியைக் குறுகினன்; அந்நதியைக் கடந்து சென்று, ஒரு சோலையிற்புகுந்தனன். தன் குலத்தில் தோன்றிய மன்னன் படுந்துன்பங் கண்டு சகியாதவனைப்போலச் சூரியன் மேற்-கடலில் மறைந்தனன். விசுவாமித்திரர், "அரிச்சந்திரன்

கூறுவனவற்றையும் செய்வனவற்றையும் அறிவோம்," எனக் கருதி, அங்கொரு புறம் வந்து ஒளித்திருந்தனர். அப்பொழுது அமைச்சர் பலரும் அரிச்சந்திரனைக் கண்டு, அரசரே, "நீர் மீண்டு நகரடைதல் எந்நாள்?" என வினவ, மன்னன், "இனி ஒரு நாளும் நகர்க்குத் திரும்பேன்," எனக் கூறினன். அமைச்சர் மனங்கலங்கி, "அங்ஙனமாயின், யாங்கள் முனிவனை விட்டுப் பிரிந்தால் அவன் என் செய்வன்? யாங்கள் சென்று அவனை எதிர்ப்போம். அவன் கீழிருந்து உயிர் வாழ்தலினும் தீப்பாய்ந்து உயிர் விடுதல் நன்றாம், எனக் கூறினர்; "யாங்கள் இப்பொழுதே அம்முனிவனைக் காட்டுக்கோட்டுகின்றோம். நீவிர் வந்து அரசு புரிக," என்றனர். அது கேட்ட அரசன், இரு கரத்தாலும் செவி பொத்தி, "பாவம்! ஐயோ! குடி கெடினும், உயிர் கெடினும், யான் கொடுத்தது வாங்கேன்!" எனக் கூறினன்.

அப்போது முனிவர் எதிர் வர, மன்னன் அவரை வணங்கினன். முனிவர், "அரச, நீ எம் மக்களை வைதாய்; கொடுமை பல செய்தாய்; எமக்களித்த நாட்டை யாம் தர நீ வாங்காயாகில், இவ்வமைச்சர் இப்போது கூறிய அனைத்தும் செய்தவனாவாய்," என, அரசன், "முனிவீர், முனியாதீர். சிறியவர் செய்த பிழை பொறுத்தருள்க! உமக்களித்த அரசுரிமையை இனி ஒரு காலத்தும் வாங்கேன்," எனக் கூறினர். முனிவர், தம் சூழ்ச்சி பலியாமை கண்டு, மனம் வாடினர்; மன்னன் செயல்களை மனத்துட்போற்றினர்; பின்னும் அரசனை நோக்கி, "அரச, 'அழல் வேள்வி முடித்திடுதற்கீவேன்,' என்று உரைத்த பொருளைத் தருவாயோ, மாட்டாயோ?" என வினவ, மன்னன், "முனிவீர், யான் உரைத்தது இனி மாறுவனோ? என்னோடு ஓர் ஆள் விட்டால் அப்பொருளைத் தந்தனுப்புவேன்," என, முனிவர் சுக்கிரனை ஒரு புறம் அழைத்து, அரசனுடன் சென்று அரச குடும்பத்திற்குப் பலவித இன்னலிழைக்குமாறு இரகசியமாய்க் கூறி, பொருள் பெற்று வர அவனை மன்னனுடன் அனுப்பினர்.

பின்பு மன்னன் உடன் வந்த அனைவர்க்கும் நன்மொழி பல கூறி, நகர் செல்லுமாறு பணித்து, தேற்றியும் மனம் தேறாது உடன்வந்த தலைமை அமைச்சனாகிய சத்தியகீர்த்தி-

யையும் உடனழைத்துச் சென்றனன். அவர்கள் ஒரு பாலை வனத்தை அடைந்து, "படாத பாடுகளைப் பட்டு, அவ்வனத்தைக் கடந்து, கோமதி நதிக்கரையை அடைந்ததும், சூரியன் அத்தமித்தனன். மந்திரி, கந்தமூல பலாதிகளைச் சேகரித்து வந்து மற்றவர்க்களிக்க, சுக்கிரன், " அரச, யான் காய் கனி கிழங்குகளைத் தின்று வயிறு வளர்த்தவன் அல்லேன். எனக்கு இனிய உணவு வேண்டும்," என அடம் செய்தனன். மன்னன், அவன் மனமுருகுமாறு இன்மொழி பல இயம்பி, அவனை உண்பித்தனன். மற்றவரும் உண்ட பின், அனைவரும் மணலிற்படுத்துக் கண்ணயர்ந்தனர். முனிவர் சூழ்ச்சியால் பெருமழை தோன்றி, அவர்களைப் பெரிதும் வருத்தியது. சுக்கிரன் சுடுசொல் பல கூறி, மற்றவரை மனங்கலங்கச் செய்தனன்.

மறுநாள் காலை அவர்கள் புறப்பட்டு, கால் கடுக்க நடந்து, கங்கைக் கரையை அடைந்து நீராடி, ஒரு சோலையில் தங்கினார்கள். முனிவர் ஏவலால் வன விலங்குகள் பல அவர்களைத் துன்புறுத்திச் சென்றன. சுக்கிரன் மன்னனை நோக்கி, "மன்னவ, இன்னும் உனக்குப் பல துன்பங்கள் வரும். ஆதலின், நீ உன் அரசாட்சியை மீண்டும் பெறுவது உத்தமம். நீ முனிவர்க்கு ஈந்த நாட்டை, 'ஈந்திலேன்,' எனக் கூறினாற்போதும். உன் அரசை வாங்கித் தருவது என்னைப் பொறுத்த செயல்," என்றனன். மன்னன் அதற்கு உடன்படவில்லை.

பின்னர் அவர்கள் புறப்பட்டுச் சென்று, யமுனைக் கரையில் தங்கினார்கள். விசுவாமித்திரர் கடுஞ்சினத்துடன் மன்னன் முன் தோன்றினர். மன்னன் பெரிதும் அஞ்சி, அவரைப் பலவாறு உபசரிக்க, முனிவர், "அரச, நீ படும் துன்பமுணர்ந்து யாம் மிக வருந்துகிறோம்! நீ தந்த நாட்டை, 'தந்தது இல்லை,' எனக் கூறி, இன்புடன் ஆண்டிரு. காட்டு வாழ்க்கை கடுந்துயர் விளைக்கும்," எனக் கூறினர். மன்னன் அவர் விருப்பத்திற்கு உடன்படல் அடாது எனத் தகுந்த நீதி மொழிகளைக்கூறி மறுத்தனன். முனிவர் கடுஞ்சினமுற்று, "இனி வரும் துன்பங்களைப் பார்!" எனக் கழறி, அவ்விடம் விட்டகன்றனர். அரசனும் மற்றவரும் அவ்விடம் விட்டுப் புறப்பட்டனர்.

முனிவர் தீக்கடவுளை அழைத்து, "நீ காடு பொடிபட எரித்து, மன்னனை வருத்து!" என்று கூற, அக்கினி, "அந்தோ! கற்பு மிக்க கன்னியையும் பொற்பு மிக்க மன்னனையும் யான் எங்ஙனம் சுடுவேன்! ஆயினும், உமது சொல்லை மறுக்க அஞ்சி அங்ஙனமே செய்வேன்," என்று கூறி, பொறிகளும் கரும்பெரும்புகையும் தோன்றக் காட்டை எரித்தனன். அது கண்ட மன்னவன் அஞ்சினன். சுக்கிரன், "அரசனே, இவ்வழல் அரசமரபில் ஒருவர் உயிரை உண்டாலன்றித் தணியாது," என மன்னனை அச்சுறுத்தினன். அரசன், "அங்ஙனமாயின், என்னுயிர் இவ்வெரிக்கு ஈந்து, மற்றவரை வாழ்விப்பேன்," என்று கூறி, எரியிற்பாய முயல, அமைச்சன் அவனைத் தடுத்து, தான் தீயிற்பாய முந்தினன். "மன்னவரன்றி அமைச்சரை இவ்வெரி வேண்டாது," எனக் கூறி, மன்னன் மந்திரியைத் தடுத்தனன். அது கேட்ட சந்திரமதி, "யான் தீப்பாய்வேன்," என முந்தினள். தாய் செயல் கண்ட தேவதாசன், அவளைத் தடுத்துத் தான் உயிர் துறத்தலே தகுதியென்றனன். அன்னை அவனைத் தகுமுறைகூறித் தேற்றி, தீயை அணுகி, "யாங்கள் செய்யத் தகாதன செய்தோமாகில், தீயே, என்னைக் கொல்," எனக் கூறிப் பாய்ந்தனள். உடனே தீ மறைந்தது. மற்றவர் அக்கற்புக்கரசியைப் போற்றினர். பின்னர் அனைவரும் வாரணவாசியை அடைந்து, நதியில் நீராடி, காசி நாட்டினிற்புகுந்தனர்.

## 7. காசி காண்டம்

மறு நாள் சுக்கிரன் பொருள் தருமாறு மன்னனை நெருக்கினன். மன்னன் இன்னது செய்வதென அறியாது மயங்கினன். சந்திரமதி அவனைத் தேற்றி, "தலைவரே, முனிவர் குறித்த தவணை கழிய இன்னும் ஒரே நாள் உளது. ஆதலின், நீர் என்னையும் மகனையும் எவர்க்கேனும் விற்று, உமது வாக்கை நிறைவேற்றும்," என்றனள். சுக்கிரனும், "அதுவே நலம்," என்றனன். மன்னன் வேறுவழி காணாது, அவ்விருவரையும் விலை கூறினன். அது கண்ட நகர மாந்தர் பலரும் மனம் வருந்தினர். ஓர் அந்தணன் மன்னன் முன் தோன்றி, மன்னன் கூறிய விலையினைச் சுக்கிரனுக்குக்

கொடுத்துவிடுவதாகக் கூறி, அடிமைச் சீட்டுடன் சந்திரமதியையும் தேவதாசனையும் அடிமைகளாகக் கொண்டு சென்றனன்.

பின்பு சுக்கிரன், 'மன்னவ, நீ முன்னம் முனிவர்க்கு மொழிந்த பொருள் ஈந்தனை. எனக்குத் தரும் கூலிக்கு என்ன சொல்லுகிறாய்?" என, மன்னன் தன்னை விற்றுச் சுக்கிரனுக்குப் பொருள் தரும்படி சத்தியகீர்த்திக்குக் கூறினன். மந்திரி, தன்னை விற்றுத் தரும்படி மன்னனைப் பலவாறு வேண்டினன். மன்னன் அதற்குச் சிறிதும் உடன்படாமையால், மந்திரி வேறு வகை அறியாது, அரசனை வீர வாகு எனும் புலையனுக்கு அடிமை ஆக்கி, அடிமைச் சீட்டும் எழுதிக்கொடுத்து, பொருள்பெற்றுச் சுக்கிரனுக்குத் தந்து அவனைப் போக்கி, மனம் கசிந்து, மற்றோரிடம் சென்றிருந்தனன்.

வீர வாகு அரிச்சந்திரனை அழைத்துச் சென்று, தனக்குப் பதிலாகச் சுடலையைக் காத்து வருமாறு அவனுக்குக் கட்டளை இட்டனன். மன்னன் சுடலையை அடைந்து, ஒரு குடிசை அமைத்துக்கொண்டு, காவல் புரிவானாயினன். மறு நாள் சத்திய கீர்த்தி, மன்னன் சுடலை காப்பதறிந்து, அவனை அடைந்து, பெரிதும் வருந்தி, பிறகு மன்னன் தேற்ற ஒருவாறு தேறி இருந்தனன்.

## 8. மயான காண்டம்

அந்தணன் மனையடைந்த சந்திரமதியும் தேவதாசனும், அந்தணன் மனைவியளித்த அற்ப உணவையுண்டு, அடிமை வேலை புரிந்து வந்தனர். ஒரு நாள் தேவதாசன் வழக்கம் போல விறகும் தருப்பையும் கொண்டுவர அயல் மனைச் சிறுவருடன் கானடைந்து, தருப்பை கொய்கையில் விடம் தீண்டப்பெற்று, ஓராலமரத்தின் கீழ் உயிர் சோர்ந்து வீழ்ந்தனன். அது கண்ட அயல் மனைச் சிறுவர் அலறியோடி, அந்நிகழ்ச்சியைச் சந்திரமதிக்கு அறிவித்தனர். சந்திரமதி அனலிற்பட்ட புழுவெனத் துடித்து, மைந்தனைக் கண்டெடுத்து அடக்கம் செய்துவர உத்தரவு தரும்படி மறையவனைப் பலவாறு வேண்டினள்.

மறையவன் அரிதின் விடை தர, அவள் இருளிற் கான்

அடைந்து, பல இடங்களிலும் அலைந்து தேடி, ஆலின்கீழ் அரவினால் உயிரிழந்த மைந்தனைக் கண்டெடுத்து, பேயும் இரங்குமாறு வாய் விட்டுக் கதறி, பின்பு தீ எரியும் சுடர் கண்டு சுடலையை அடைந்து, மைந்தனுடலைக் கொளுத்த அங்குக் கிடந்த கரிந்த கட்டைகளை அடுக்கித் தீ மூட்டினள்.

சுடலை காத்திருந்த அரிச்சந்திரன் அது கண்டு ஓடி வந்து, அவள் தன் மனைவியென்பதுணராமல், பிணஞ்சுடு கூலி முதலியன கொடுத்தாலன்றி அவள் தன் மைந்தனைத் தகனஞ்செய்தல் இயலாதெனக் கூறி, பிள்ளையின் சவத்தைக் காலாலுதைத்து எறிந்தனன்; அவளைப் பலவாறு இழித்துப் பேசினன். சந்திரமதி தன் அறுதை நிலையைப் பற்பல கூறி அவனுக்கு விளக்கினள். அவள் கழுத்திலிருந்த மங்கிலியங்-கண்ட அரிச்சந்திரன், "செம்பொன் மங்கலநாண் உன் கழுத்திலிருக்க, 'ஏதும் இல்லை,' எனச் சொல்லுவது சற்றும் ஏலாது. இதனை எனக்குக் கொடு," என்றனன். அவள், "அரிச்சந்திரர்க்கன்றி மற்றவர்க்குப் புலப்படாத என் மங்கல-நாண், புலையன் காணவும் நேர்ந்ததோ!" என்று வாய் விட்டு அரற்றினள். உடனே அரிச்சந்திரன் அவள் தன் மனைவி என்பதை அறிந்து, பெரிதும் வருந்தி, நிகழ்ந்த யாவும் அவள் கூறக் கேட்டு, அனைத்தும் ஊழ்வினையின் செயல் என ஒரு-வாறு தேறி, சந்திரமதியை நோக்கி, "சந்திரமதி, யான் புலையனுக்கடிமை. அவனுக்குச் சேரவேண்டிய பொருளை யான் இழப்பது தவறாகும். ஆகையால், நீ சென்று உன்னை அடிமை கொண்ட மறையவரிடம் பொருள் பெற்று வரு-வதே தகுதி," என்று கூறினன். சந்திரமதி அதற்குடன்-பட்டு, சுடலையில் மகன் உடலை வைத்து, அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, அரச வீதி வழியே சென்றனள்.

அப்பொழுது கள்வர் சிலர் காசி மன்னன் புதல்வன் மீதிருந்த அணிகளைக் களவாடி, அவனைக் கொன்று வழியிற்-கிடத்திச் சென்றனர். சந்திரமதி அச்சவத்தைத் தன் மகன் சவமென எண்ணி, விரைந்தெடுத்தனள். அச்சமயம் அரச மைந்தனைத் தேடிவந்து அவ்விடம் அடைந்த அரசன் ஏவலர், அவளைக் கொலைகாரியெனப் பிறழ உணர்ந்து, அடித்து வருத்தி, அரசன் முன் கொண்டு போய் விட்டனர். அவள்

முகத்திற் கொலைக்குறி சிறிதும் காணாத காசி மன்னன், நிகழ்ந்ததை உள்ளவாறு உரைக்கும்படி அவளைக் கேட்க, அவள், "இன்னல் பல அடைவதினும் இறப்பதே மேல்," எனத் துணிந்து, தானே கொலைகாரி என ஒப்புக்கொண்டனள். ஆதலால், மன்னன் வீரவாகுவை அழைப்பித்து, அவளைக் கொலை செய்விக்குமாறு கட்டளையிட்டனன். வீரவாகு அவளை அழைத்துச் சென்று அரிச்சந்திரனிடம் விட்டு, அவளைக் கொலைக்களத்திற் கொண்டு சென்று வெட்டிவீழ்த்தக் கட்டளை தந்தனன். அரிச்சந்திரன், விதியின் கொடுமையை நொந்து, அவளைக் கொலைக்களத்திற்குக் கொண்டு போயினன். சத்தியகீர்த்தி நடந்ததறிந்து வருந்தி, அவர்களுடன் நடந்தான். வழியில் நகர மாந்தர் பலர் அவர்களைத் தொடர்ந்து மனத்திற்குத் தோன்றியபடியெல்லாம் பேசிச் சென்றனர். அப்பொழுது வசிட்டர், இந்திரன் முதலிய தேவர்களுடன் ஆகாயத்தில் இருந்து மேல் நடைபெறுவதைக் கவனிக்கலாயினர். விசுவாமித்திரர் விரைந்து வந்து அரிச்சந்திரனைக் கண்டு, "அரச, முன்னம் நீ தந்த நாட்டை 'யான் தந்திலேன்,' எனக் கூறி, அந்நாட்டையும் இவ்வுயிர்களையும் பெறுக," என்று கூறினர். அரிச்சந்திரன் பல நீதிகளைக் கூறி அவர் வாயை அடக்கினன். முனிவர் மதி இழந்து, வாய் இழந்து, மறைந்து சென்றனர். அது கண்ட இந்திரன், அவரைக்கூவி அழைத்து, "முனிவீர், நீர் மன்னன்மீது குறை கூறியதன் காரணத்தை அறிந்து செல்லும்!" எனக் கூறினன். முனிவர் தேவருடன் நாணி இருந்தனர்.

அரிச்சந்திரன் சுடலையை அடைந்து, சந்திரமதியை நோக்கி, "வழக்கமாக நீ வழிபடும் தெய்வத்தை வணங்கி, இங்குக் கிழக்கு நோக்கி இரு," என, அவள் தன் வழிபடு தெய்வமான கணவனைத் தியானித்து, "தலைவரே, என் ஆவி இழத்தற்கு அஞ்சி நீர் தருமம் தவறுதீர். நீர் நெடிது வாழ்வீராக!" என்று கூறி இருந்தனள். அரிச்சந்திரன், தன் கையில் வாளை ஏந்தி, "உலகுயிர்க்கெல்லாம் சிவபிரான் முதல்வரென்பதும், அவர் மொழி வேதமென்பதும், அதில் விளங்கும் பல அறத்திலும் சத்தியம் ஒப்பற்றதென்பதும், யான் அச்சத்தியத்தை விரதமாகக் கொண்டிருப்பதும், அப்-

படிப்பட்ட என்னை விடாத கற்பு இவளுக்கு உண்டென்பதும் உண்மை ஆனால், இவள் இறவாதிருக்கக் கடவள்; இல்லையானால், இறக்கக் கடவள்,'' எனக் கூறி வீசினன். அவ்வாள் அவளுக்கு அரிச்சந்திரன் இரண்டாம் மணத்திலிட்டதுபோல அவள் கழுத்தில் மலர் மாலையாய் விழுந்தது.

## 9. மீட்சிக் காண்டம்

அப்பொழுது தேவர் பலரும், வசிட்டரும், விசுவாமித்திரரும், காசி மன்னன் முதலியவரும் அவ்விடம் அடைந்தனர். விசுவாமித்திரர், "என்னால் இவ்வரிச்சந்திரன் நற்குணம் யாவும் விளங்கின எனின், என்னைப்போல இவனுக்கு நன்மை செய்தவர் யாவர்?'' எனக் கூறிக் களித்துக் கூத்தாடினர். வசிட்டர் பெருமகிழ்வடைந்தனர். அரிச்சந்திரனும் சந்திரமதியும், அனைவரையும் வணங்கி, ஆசி பெற்றனர். மாண்ட அரச மைந்தர் இருவரும் முருகன் திருவருளால் உயிர் பெற்று எழுந்தனர். அனைவரும் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தனர். முத்தேவரும், "முற்காலத்து உத்தமர் எவரும் உனக்கு ஒப்பாகார்!'' எனக் கூறி, அரிச்சந்திரனை வாழ்த்தினர். அரிச்சந்திரனும், காசி மன்னனும் அத்தேவரைப் பல முறை வணங்கித் துதித்தனர்.

பின்பு விசுவாமித்திரர், தாம் அரிச்சந்திரனுக்கு இழைத்த இன்னல் அனைத்தையும் அனைவரும் அறியக் கூறி, வென்றவர் வசிட்டரே என்றும், தோற்றவர் தாமே என்றும் ஒப்புக்கொண்டு, தம் தவத்தில் பாதியையும் தாம் பெற்ற பேரரசையும் அரிச்சந்திரனுக்குக் கொடுத்துவிட்டதாகக் கூறினர். எனினும், அரிச்சந்திரன், தன் மனைவியையும் மைந்தனையும் அந்தணர்க்கு அடிமையாக்கி, புலையர்க்கு அடிமைப்பட்ட தான் மீண்டும் அரசைப்பெறல் இயலாது என மறுத்தனன். அப்பொழுது, அந்தணனாய் வந்து சந்திரமதியையும் தேவதாசனையும் அடிமை கொண்ட அக்கினி தேவன் தோன்றி, அரிச்சந்திரன் எழுதிக்கொடுத்த அடிமைச் சீட்டைச் சிவபெருமான் முன் வைத்து, விசுவாமித்திரர் தந்திரத்தை விளக்கினன். அப்பொழுது இயமன் தோன்றி, தானே புலையனாய் வந்து அரிச்சந்திரனை அடிமை கொண்ட வீரவாகு என்பதையும், அரிச்சந்திரன் காத்த

சுடலை யாகசாலை என்பதையும் விளக்கி, தான் சத்தியகீர்த்தியினிடமிருந்து பெற்ற அடிமைச் சீட்டையும் காட்டினான்.

பின்பு சிவபெருமான் அரிச்சந்திரனை நோக்கி, "அரச, அயோத்தி அடைந்து, மகுடம் சூடி, இம்முனிவன் தவத்தில் பாதியைப் பெற்றுக்கொண்டு, உலகை ஆண்டு, எம் பாதத்தினை அடைவாய்," என்று கூறி, இந்திரனை நோக்கி, "நீயும் மற்ற முனிவரும் காசி மன்னனும் அரிச்சந்திரனுடன் சென்று, அவனுக்கு முடி சூட்டிய பின்னர் இருப்பிடம் செல்க," என்றுரைத்து மறைந்தனர். திருமாலும் பிரமனும் தம் இருப்பிடம் அடைந்தனர்.

பின்பு மற்றவர் அயோத்தியை அடைந்து, குடிகள் மகிழ்ந்துஎதிர்கொள்ள அரண்மனையில் புகுந்தனர். இந்திரன் அரிச்சந்திரனுக்கு முடி சூட்டிச்சென்றனன். முனிவர் பலரும் அரிச்சந்திரனை வாழ்த்திச் சென்றனர். விசுவாமித்திரர் தம் தவத்திற்பாதியை அரிச்சந்திரனுக்குத் தாரை வார்த்து அளித்து, அனைவரையும் வாழ்த்தி, வனத்திற்சென்றனர். பின்னர் வசிட்டரும் காசி மன்னனும் அரிச்சந்திரனும் இன்பமாகப் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது காசி வேந்தன் வசிட்டரை வணங்கி, "விசுவாமித்திரர் அரிச்சந்திரருக்குத் துன்பம் இயற்றக் காரணம் என்ன?" என்று கேட்க, வசிட்டர் சொல்லத் தொடங்கினார் :

## 10. உத்தர காண்டம்

"காதி மன்னன் மைந்தனாகிய கௌசிகன் அரசு புரிந்த காலத்தில் ஒரு நாள் வேட்டைக்குச் சென்று, காட்டை அடைந்து, வேட்டையாடிக் களைத்து, யான் தவம் புரிந்த மலைச்சாரலை அடைந்தான். யான் அவனைக் கண்டு இரங்கி, காமதேனுவை அழைத்து, அவனுக்கும் அவன் பரிசனர்களுக்கும் நல்விருந்து செய்வித்தேன். அவன் காமதேனுவைத் தனக்குத் தரும்படி என்னை வேண்டினான். யான் அதற்கு உரியவனல்லேன் எனக் கூற, தன் பரிசனர்களைப் பாசமெறிந்து அப்பசுவைப் பிடிக்க ஏவினன். அவர்கள்

அதைப்பிடிக்க முயல, அப்பசு அவர்களைக் கொன்று வீழ்த்தி அமராவதியை அடைந்தது.

"பின்பு கௌசிகன் புதல்வர் நூற்றுவரும் என்னைக் கொல்லக் கருதிப் போர் தொடங்கிச் சரமாரி பொழிந்து, எனது சாபத்தியால் சாம்பலாயினர். அது கண்ட கௌசிகன் என்மீது சரமாரி பொழிந்தனன். யான் அவனுக்கு எதிராக என் திரிதண்டத்தை நட்டேன். அத்தண்டம் அவன் விட்ட படைகளெல்லாம் பொடியாய் விழச் செய்தது. அவன் என்னை அழித்தல் இயலாதென உணர்ந்து, துறவியர் அரசரினும் வலியரென்பதை அறிந்து, தன் அரசைத் துறந்து, தவமியற்றினன். இந்திரன் அவன் தவத்தை அழிக்கத் திலோத்தமையை ஏவினன். அவன் அவளழகில் ஈடுபட்டுத் தவத்தை இழந்து, அவளை மனிதப்பிறப்பிற்சென்று பிறக்கச் சபித்து, தென் திசை அடைந்து தவத்தை முடித்திட, சிவபெருமான் அவனுக்கு அழியாத வரத்தைக் கொடுத்தனர்.

"அந்நாளில் அரிச்சந்திரன் தந்தையாகிய திரிசங்கு மன்னன், தன்னை உடலோடுமோட்சத்திற்கனுப்பும்படி என்னை வேண்டினன். யான், அது முடியாதென, அவன், "வேறு முனிவரால் யானதை அடைவேன்!" எனத் தருக்கிக் கூற, யானவனைப் புலையனாகச் சபித்தேன். அவன் உடனே அழகு கெட்டு, தன் பந்துக்களால் நிந்திக்கப்பட்டு, கௌசிகனை அடைந்து வேண்டினன். கௌசிகன் என்னிடம் கொண்ட பகைமையால், புட்பக விமானத்தில் அவனை ஏற்றித் தேவருலகுக்கனுப்பினன். தேவர்கள் அவனைப் புறந்தள்ள, அவன், 'கௌசிக முனிவருக்கு அபயம்!' எனக் கூறிக்கொண்டே விமானத்துடன் விழுவதைக் கண்டு, கௌசிகன் அதை விழாது நிறுத்தி, கடுஞ்சினங்கொண்டு, 'ஏழுலகும் தேவர்களும் வேறு படைப்பேன்!' எனத் தொடங்க, முத்தேவரும் அஞ்சி, உலகம் உய்யும்படி, திரிசங்கு மன்னனுக்கு நட்சத்திரப் பதவியை அளிக்குமாறு கூறினர்.

"இத்தகைய இவ்விசுவாமித்திரன், யான் நல்லவன் என்று கூறிய அரிச்சந்திரனுக்கு என்மீது கொண்ட பகைமையால் இத்தீங்குகளை இழைத்தனன்," என்று வசிட்டர் காசி மன்னனுக்குக் கூறினர்.

பின்னர்க் காசி மன்னன் அரிச்சந்திரன் முதலியவரிடம் விடை பெற்றுத் தன் நாடு ஏகினன். அரிச்சந்திரன் இனிது அரசாண்டிருந்தனன்.

ஸ்ரீ :

# அரிச்சந்திர புராணச் சுருக்கம்

## பாயிரம்

### 1. கடவுள் வணக்கம்

#### கலி விருத்தம்

பரிதி தன்மர பில்வரு பார்த்திவன்
விரித ரும்புகழ் மேவரிச் சந்திரன்
சரிதம் மன்னும்த மிழ்க்குத் துணைசெயக்
கரிமு கன்பதம் கைதொழு தேத்துவாம்.

### 2. அவை அடக்கம்

#### அறுசீர் விருத்தம்

நீர்கொள்வார் பாலோடு நேர்உற்றால்;
பதர்கொள்வார் நெல்லோ டுற்றால்;
நார்கொள்வார் பூவுற்றால்; வேர்கொள்வார்
அதில்சிறிது நறைஉண் டாயின் ;
சீர்கொள்வார் புன்சொல்லும் செஞ்சொல்லும்
சேர்ந்தொன்றில் சேர ; புன்சொல்
ஆர்கொள்வார் என்பதுசற் றறியாமல்
சிறியேன்நா அசைக்கின் றேனே! 2

1. பரிதிதன் மரபு - சூரிய குலம், பார்த்திவன் - அரசன், மன்னும் - பொருந்திய, தமிழ்க்கு - தமிழ் நூலுக்கு, கரிமுகன் – யானைமுகக் கடவுள், ஏத்துவாம் - யாம் துதிப்போம்.

2. நேர் உற்றால் - கலந்தால், நறை - வாசனை, செஞ்சொல் - இனியசொல், புன்சொல் - அற்ப வார்த்தை, ஆர் - யார், சற்று அறியா

## 3. ஆக்கியோர் பெயர் முதலியன

எண்சீர் விருத்தம்

தண்கவிகைக் குரிசில்அரிச் சந்திரன்தன்
சரிதமதைத் தாரணியோர் விருப்பம் எய்த
வண்கவிஞர் வகைவகையே வகுத்துரைத்த
வடமொழியும் தென்மொழியின் வழுஇலாத
வெண்கவியும் கண்டரங்கின் மாதர் ஆடல்
விதங்கேட்டு மழையெனவே வெருண்டு சோலைக்
கண்கவிகள் குதிபாயும் நல்லூர் வீர
கவிராச னேவிருத்தக் கவிசெய் தானே. 3

விதியின் அரசு இழந்தஅரிச் சந்திரன்தன்
வியன்கதையாம் வெண்கவியை விருத்தம் ஆக்கி
அதிவிதமாம் கலியுகத்தில் வருச காத்தம்
ஆயிரத்து நானூற்று நாற்பத் தாறில்
சதுமறைதேர் புல்லாணித் திருமால் முன்னே
சக்கரதீர்த் தக்கரைமேல் மண்டபத்துள்
கதிதருசீர் நல்லூர்வாழ் வீரன் ஆசு
கவிராசன் கவிஅரங்கம் ஏற்றி னானே. 4

---

மல் - சிறிதும் யோசியாமல், நா அசைக்கின்றேன் - நாவை அசைத்துப் பாடுகின்றேன்.

3. தண் கவிகை - குளிர்ச்சியான வெண்கொற்றக்குடை, குரிசில் - அரசன், சரிதம் - சரித்திரம், தாரணியோர் - உலகத்தார், எய்த - அடையும்படி, வண் கவிஞர் - கலை வளம் பெற்ற வித்துவான்கள், வகுத்து - முறைப்படுத்தி, வடமொழி - சம்ஸ்கிருதம், தென்மொழி - தமிழ், வழு - குற்றம், வெண்கவி - வெண்பா, கண்டு - ஆராய்ந்து, அரங்கின் - நாடக மேடையில், ஆடல் விதம் கேட்டு - ஆடலுக்கு அமைந்த மத்தள ஓசையைக் கேட்டு, மழை என - மேகத்தின் முழக்கம் என்று எண்ணி, சோலைக்கண் - சோலைகளில், கவிகள் - குரங்குகள், குதிபாயும் - குதித்தோடுகின்ற.

4. விதியின் - ஊழ்வினையால், வியன் - பெரிய, அதிவிதமாம் - பல விதக் கொள்கைகளையுடையதாகிய, வரு - பொருந்திய, சகாத்தம்-

## நாட்டுச் சிறப்பு

### கலி விருத்தம்

நிலம்வி ளக்கிடும் நித்திலம்; நீலஉற்
பலம்வி ளக்கிடும் பைம்புனல்; பண்பினன்
னலம்வி ளக்கிடும் நல்லவர் வாய்மொழி;
குலம்வி ளக்கிடும் கோசல நாடரோ. 5

## நகரச் சிறப்பு

மகர தோரண வாயிலும் நாஞ்சிலும்
சிகர மாமதி லும்செறி பேரகழ்
சகரர் வான்புகழ் சாற்றும்அ யோத்திமா
நகர மேன்மை சிறிதுந டத்துவாம்: 6
பொருளும் வேத புராணமும் புந்தியில்
தெருளும் தானதி யாகமும் யாகமும்
மருளில் மாதவ மும்வள மும்உயிர்க்(கு)
அருளும் தோன்றுறும் அந்நக ரத்தினை. 7

---

1446 - கி. பி. 1524, சகாத்தம் - சாலிவாகன சகாப்தம், சது மறை தேர் - நான்கு வேதங்களும் ஆராய்ந்து கூறுகிற, புல்லாணி - திருப்புல்லாணி என்னுந் தலம், கதி - மோட்சம், சீர் - சிறப்பையுடைய.

5. நித்திலம் - முத்து, விளக்கிடும் - விளங்கச் செய்யும், நீல உற்பலம் - கருங்குவளை மலர், பைம்புனல் - அழகிய நீர், பண்பின் நல் நலம் - பயன்படத் தக்க நல்ல நீதிகள், குலம் - மேன்மை.

6. மகர தோரணம் - சுறு மீன் வடிவிலமைந்த தோரணம், நாஞ்சில் - மதிலுறுப்பு, செறி - நெருங்கிய, பேரகழ் சகரர் வான் புகழ் சாற்றும் - பெரிய அகழியானது சமுத்திரம் போல விளங்குவதால் அச்சமுத்திரத்தை உண்டாக்கிய சகரர்களுடைய பெரிய கீர்த்தியைத் தன் மூலமாகத் தெரிவிக்கின்ற, நடத்துவாம் - சொல்லுவோம்.

7. புந்தி - புத்தி, தெருள் - அறிவு, தானம் - கொடை, தியாகம் - பிறருக்காக எதையும் விடுதல், மருளில் - (மருள் + இல்) மயக்கமில்லாத, உயிர்க்கு அருள் - சீவ காருணியம்.

டி வேறு

அத்திருந கர்க்குள்நிரை ஆயிரம ணித்தூண்
பத்திகளும் அத்தொகைய பைம்பொனுறு கோயில்
சித்திரம ணித்தவிசின் முத்தணிசெ ழும்பொன்
சத்திரம்நி ழற்றஅரிச் சந்திரன்இ ருந்தான். 8

---

8. நிரை - வரிசையாக, மணித்தூண் - அழகிய தூண்களை யுடைய, பத்திகளும் - (மண்டப) வரிசைகளும், அத்தொகைய - அவ் வளவினையுடைய, கோயில் - அரண்மனை, சித்திர மணித் தவிசின் - மிகுந்த அழகையுடைய ஆசனத்தில், முத்து அணி - முத்தால் அலங்க ரித்த, சத்திரம் - குடை, நிழற்ற - நிழலைச் செய்ய.

# 1. விவாக காண்டம்

*கலி நிலைத்துறை*

இருந்த காலையில் யாவர்க்கும் விடைகொடுத் தருளித்
திருந்தும் மாமுடி மன்னவன் சிலருடன் இருப்பப்
பொருந்தும் நன்னெறிப் புண்ணிய தீர்த்தங்கள் ஆடி
அருந்த வத்தினர் அநேகர்வந் தந்நகர் அடைந்தார். 1

வந்த மாதவர் ஓதைஅம் மன்னவன் கேட்டுச்
சிந்தை யில்பெரு மகிழ்வரச் சென்றெதிர் கொண்டே,
'எந்த மாதவம் இன்றுவந் தெய்திய'தென்று
அந்த மாதவர் அடிமலர் முடியுறத் தொழுதான். 2

தொழுத காலையில் ஆசிகள் அருந்தவர் சொல்லி,
முழுதும் மாமறை முழங்கிட, மண்டபம் முற்ற,
எழுதும் மாமணி ஆதனம் அவ்வவர்க் கீந்து,
பழுதி லாமொழி மன்னவன் இருந்திவை பகர்வான்: 3

'எந்தத் தேயங்கள் கண்டனிர்? எத்திசை புகுந்தீர்?
எந்தத் தீர்த்தங்கள் ஆடினீர்? புதுமையென் கண்டீர்?
முந்தக் கூறுமின்,' என்றரிச் சந்திரன் மொழிய,
அந்தக் காலையில் அரசனுக் கருந்தவர் உரைப்பார்: 4

---

1. காலையில் - சமயத்தில், மாமுடி - சிறந்த கிரீடத்தை அணிந்த, இருப்ப - இருக்க, தீர்த்தங்கள் - நதிகளில், ஆடி - மூழ்கி.

2. மாதவர் - முனிவர், ஓதை - ஓசை, மகிழ் வர - மகிழ்ச்சியுண்டாக, எய்தியது - சித்தித்தது, என்று - என்று கூறி, அடி மலர்-பாத கமலங்கள்.

3. ஆசிகள் - வாழ்த்துரைகள், மண்டபம் முற்ற - மண்டபத்தில் வந்து கூட, மாமணி எழுதும் - சிறந்த இரத்தினங்கள் அழுத்திய, ஆதனம் - இருக்கை, பழுது இலாமொழி - குற்றம் இல்லாத சொல்லைப் பேசுகின்ற, இருந்து - இருக்கையில் அமர்ந்து.

4. முந்த - விரைவாக, கூறுமின் - சொல்லுங்கள்.

'அங்கண் மாநிலத் தரியகன் ஞேசிநாட் டகத்துப்
பொங்கு கண்டகி என்பதோர் புண்ணிய தீர்த்தம்;
அங்கி யாம்புகுந் தாடி,நின் அருள்முகம் காண
இங்கு வந்தனம்; இன்னமும் கேட்டி,' என் றிசைப்பார்: 5

'அந்த நாட்டினில் கன்னமா புரிநகர் ஆள்வோன்
சந்தி ரன்வழிச் சந்திர தயன்தவம் புரிந்து,
கந்த வார்சடைக் கடவுள்தன் வரத்தினால் பயந்த
சந்த மார்முகத் தையல்சந் திரமதி என்பாள். 6

'மண்மடந்தையர் தம்முளும் வாசவன் உறையும்
விண்மடந்தையர் தம்முளும் நிகர்இலா விறல்வேல்
கண்மடந்தை;தண் கருங்குழல் அருந்ததிக் கற்பிற்(கு)
எண்மடங்குகற் புடையள்;இந் திரையினும் எழிலாள். 7

எழுசீர் விருத்தம்

'அன்னதன் மையளை அமிர்தினில் பிறந்த
அணங்கபி டேகத்தை அனந்த
மன்னர்தந் தமக்கு மணம்செயக் கருதி,
மணமொழிந் தவர்க்கெலாம் கொடாது,

---

5. அம் கண் மாநிலம் - அழகிய இடத்தையுடைய பெரிய உலகத்தில், கண்டகி - ஒரு நதி, அங்கியாம் - அங்கு யாம், அங்கு யாம் புகுந்து ஆடி - அத்தீர்த்தத்தில் யாங்கள் முழுகி, கேட்டி - கேட்பாயாக, இசைப்பார் - சொல்லத் தொடங்கினார்.

6. சந்திரன் வழி - சந்திர குலத்தில் பிறந்த, சந்திர தயன் - கன்னமாபுரி மன்னன், கந்தவார் சடைக் கடவுள் - சிவபெருமான்,பயந்த-பெற்ற, சந்தம் ஆர் - அழகு பொருந்திய, தையல் - அழகி.

7. வாசவன் - இந்திரன், நிகர் - சமானம், விறல் வேல் - வெற்றி வேல் போன்ற, தண் - குளிர்ச்சி பொருந்திய, இந்திரையினும் - இந்திராணியைக்காட்டிலும், எழிலாள் - அழகி.

8. அமிர்தினில் பிறந்த அணங்கு அபிடேகத்தை - திருப்பாற் கடலில் தோன்றின இலட்சுமிக்கும் சிறந்த மகுடம் போன்றவளான

'முன்னம்எம் பெருமான் மொழிந்தவற் கன்றி
முடிக்கிலேன் கடிமணம்,' என்னச்
சொன்னதோர் மொழியும் கேட்டனம்; அவள்நின்
தோள்களுக் கிசைந்தவள்,' என்றார். 8

[முனிவர் மொழிந்தமை கேட்ட மன்னன், சந்திரமதியை மணக்க விரும்பி, அவளைத் தனக்கு மணமுடித்து வைக்குமாறு முனிவரை வேண்டினன். முனிவரும் அதற்கிசைந்து, அவனிடம் விடைபெற்றுக் கன்னமாபுரிக்கேகி, மதிதயனைக் கண்டனர். அவன் முனிவரைவணங்கி அவர் திரும்பித் தன்னிடம் வந்த காரணம் யாதென வினவினன், முனிவர் அவனை நோக்கி,]

அறுசீர் விருத்தம்

'மன்னகேள்: சென்ற யோத்தி மாநகர் புகுந்து யாங்கள்
அந்நகர்க் கரசன் நீதி அருள்அரிச் சந்த்ரன் என்பான்
நின்னகர் வளமும் நின்றன் நெறியும்நின் மகள்தன் ஏரும்
சொன்னபின் நின்பால்எய்தும் உவகையே துணிந்து'னின்றான்.

'அறநெறி மிக்கோர் தம்பால் அருந்ததிக் கற்பி னாளைப்
புறநெறி போகா வண்ணம் வருந்தியும் பொருந்தச்செய்தல்
மறநெறி அன்று; மாயா மாதவந் தன்னின் மிக்க
திறநெறி; அதனால் நின்பால் சேர்ந்தனம் செல்வ,' என்றார். 10

[அது கேட்ட மதிதயன், முனிவரை நோக்கி,]

'மூவரா யவரின் மூன்றும் மூர்த்தியார் அருளிச் செய்த
தேவரா சியம்ஒன் றுண்டால்; அன்னது தெரிய வல்லார்

---

சந்திரமதியை, (அபிடேகம் - கிரீடம்), அனந்த மன்னர் - பல அரசர், மணம் மொழிந்தவர்க்கெலாம் - கலியாணத்தைக் குறித்துப் பேசினவர்களுக்கெல்லாம், மொழிந்தவற்கு - சொன்னவனுக்கு, கடிமணம் - கலியாணம்.

9. நீதி அருள் - நீதியும் கருணையுமுள்ள, நின்னகர் - உனது நகரத்தின், நின்றன் - உனது, நெறியும் - வழியும், ஏரும் - அழகும்.

10. அருந்ததிக் கற்பினாளை - அருந்ததியைப்போன்ற கற்புடையவளை, மறநெறி - தீய முறை, திறநெறி - உறுதியான நல்வழி.

யாவராயினும், யான் பெற்ற இளங்கொடி தனக்குக் கேள்வர் ஆவரால்; அவனிங் கெய்தின் அறியலாம்; அமையும்,' என்றான். 11

[அது கேட்ட முனிவர் மகிழ்ந்து, அயோத்தி நோக்கிச் சென்றனர். மதிதயன், தன் மகளுக்குச் சுயம்வரம் ஏற்படுத்தி, நன்னாள் குறித்து, மன்னர் பலர்க்கும் அச்செய்தி அறிவித்து வரத் தூதரை அனுப்பினான். அச்செய்தி அறிந்த மன்னர் பலரும் கன்னமாபுரியை அடைந்தனர். முனிவர் அரிச்சந்திரனை அடைந்து, நடந்தன யாவும் நவின்றனர். உடனே அரிச்சந்திரன் அமைச்சர் முதலானவருடனும் முனிவருடனும் புறப்பட்டு, மலை, காடு, நதி முதலியவற்றைக் கடந்து, கன்னமாபுரியை அடைந்தனன். மதிதயன் அவனை நல்வரவேற்று உபசரித்து, அவனுக்குத் தங்குதற்குரிய மாளிகை முதலிய வசதிகளை அளித்தனன்.

அடுத்த நாள் சுயம்வர மண்டபத்தை அனைவரும் அடைந்தனர்; அரிச்சந்திரனும் தனக்கென அமைக்கப்பட்டிருந்த இருக்கையில் வீற்றிருந்தனன். சந்திரமதி, தன் கைகளில் மலர் மாலையுடன், தோழியர் சூழச் சுயம்வர மண்டபத்தை அடைந்தனள். வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த தோழி ஒருத்தி, அங்கு அமர்ந்திருந்த சேரன், சோழன், பாண்டியன், குருநாடன், மகததேசாதிபன், கவுடாதிபன், சிந்து மன்னன், அங்கநாடன், காந்தாரன், கலிங்கன், அவந்தி நாடன், மத்திரன், மச்சநாடன், கேகயன், முதலிய அரசர்களின் வரலாற்றைச் சுருக்கமாகச் சந்திரமதிக்குக் கூறிப் பின்பு அரிச்சந்திரனைச் சுட்டி, அவன் வரலாற்றையும் கூறினள்.]

### கலி விருத்தம்

மந்தரம் அனையதோள் வள்ளல் பேர்சொலச்
சுந்தரத் தோகைமார் தோளைத் தாழ்த்தி,அச்

---

11. மூவராயவரின் - அரன், அரி, அயன் என்னும் முத்தேவருள், மூன்றும் மூர்த்தியார் - சிவபெருமான், அருளி - கிருபை கொண்டு, தேவ ராசியம் - தெய்வத் தன்மை பொருந்திய இரகசியம், இளங் கொடி - இளமை வாய்ந்த பூங்கொடி போன்ற சந்திரமதி, கேள்வர் - கணவர், அவன் - அவ்வரிச்சந்திரன், இங்கு எய்தின் - இவ்விடம் வந்தால்.

12. மந்தரம் அனைய - மந்தர மலைக்கு ஒப்பான, வள்ளல் - கொடையாளியான அரிச்சந்திரன், தோகைமார் - மயில்போன்ற தோழியரின்,

சந்திர மதிஅரிச் சந்தி ரன்தனைக்
கந்தரம் நீட்டி,உள் கருத்தும் நோக்கினாள். 12

அங்கைவேல் மன்னனும் ஆசை மீக்கொள
மங்கைதன் பங்கய வதனம் நோக்கினான்;
செங்கயல் கண்ணினாள் திருக்க ழுத்தினில்
மங்கல நாண்உ ரீஇ வயங்கக் கண்டனன். 13

'கன்னியென் றெண்ணினம்! கன்னி யோஅலள்!
முன்னரே மங்கலம் பூண்ட மொய்குழல்
இன்னமும் ஒருவருக் கெய்து மோ?' என
மன்னவன் மாதுலற் குரைவ ழங்கினான். 14

வள்ளல்ஈ துரைத்தலும் மதித யன்தன(து)
உள்ளம்விட் டோங்கிய உவகை அம்பெரு
வெள்ளம்உள் அடக்கியே, 'வேந்தர் காள்! இவன்
கள்ளமோ மெய்ம்மையோ கட்டு ரைத்ததே? 15

'தையலாள் கழுத்தினில் தாலி உண்டெனில்
கையினால் கண்ணுறக் காட்டும் நீர்!' என,

---

கந்தரம்-கழுத்தை, உள் கருத்து-அவன் மனக் கருத்தையும், நோக்கினாள்-ஆராய்ந்தாள்.

13. மீக்கொள - அதிகரிக்க, பங்கய வதனம் - தாமரை மலர் போலுமுகத்தை, செங்கயல் - சிவந்த கெண்டை மீன் போன்ற, மங்கல நாண் - தாலிக் கயிறு, உரீஇ வயங்க - பொருந்தி விளங்க.

14. கன்னி – மணமாகாத பெண், மொய் குழல் - அடர்ந்த கூந்தலையுடைய பெண், எய்துமோ - மனைவியாவளோ, என - என்று, மாதுலற்கு - தன் மாமனாகிய மதிதயனுக்கு.

15. ஈது உரைத்தலும் - இதைச் சொன்னதும், உள்ளம் விட்டு - மனத்தைக் கடந்து, உவகை அம் பெருவெள்ளம் - சந்தோஷமாகிய அழகிய பெருவெள்ளத்தை, கள்ளமோ - பொய்யோ, கட்டுரைத்தது - உறுதியாகக் கூறியது.

செய்யகை அறைந்தணி மூக்கில் சேர்த்தி,'இவ்
வையனும் பொய்யன்!'என் றரசர் கூறினர். 16

'மண்டல வேந்தன்எம் மடந்தை மங்கலம்
கண்டதும் நீங்கள்தாம் கண்டி லாததும்
திண்டிற லீர்!ஒரு தேவ ராசியம்
உண்டெ'ன மதிதயன் உரைப்ப தாயினன் : 17

'அண்டர்நா யகன்வரம் அளித்த நாளையில்
வண்டணி குழலியோ டுதித்த மங்கலம்
கண்டவன் பதியிவட் கென்ற கட்டுரை
உண்டது அன்றிவே றுண்டு; கேட்டிரால் : 18

'மஞ்சனச் சடையினன் வரத்தின் வந்தநாள்
கஞ்சன நீழலில் காண்ப தன்றியே
அஞ்சனக் கண்ணிக்கும் அங்கைக் கெய்திடா(து)
எஞ்சலில் யாவரும் யானும் கண்டிலேம்.' 19

வேறு

என்றலும் வல்லிமூன் எண்ணரிய நாமம்
ஒன்றல துள்ளுற உன்னலள் ஆகிச்

---

16. தையலாள் - அழகுடைய சந்திரமதி, இவ்வையனும் - இவ்வரிச்சந்திர மன்னனுங்கூட.

17. மங்கலம் - தாலி, திண்டிறலீர் -(திண்மை + திறலீர்) மிகுந்த வலிமையை உடையவர்களே.

18. அண்டர் நாயகன் - தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமான், வண்டு அணி - சங்கு வளையலை அணிந்த, குழலி - அழகிய கூந்தலையுடையவள், பதி இவட்கு-இவளுக்குக் கணவன், கட்டுரை-உறுதிச் சொல், அன்றி-அதுவுமல்லாமல், கேட்டிர் - கேட்பீராக, ஆல் - அசை.

19. மஞ்சனம் - கங்கை நீரால் அபிஷேகம் செய்யப்பட்ட, வரத்தின் வந்த நாள் - வரத்தினால் பிறந்த நாளில், கஞ்சன நீழலில் - கண்ணாடி நிழலில், அஞ்சனம் - மைதீட்டிய, அங்கைக்கு - அழகிய கைக்கு, எய்திடாது - அகப்படாமல், எஞ்சலில் - மறைந்திருப்பதால்.

20. உன்னலள் ஆகி - நினையாதவளாய், சேர்கென - (சேர்க +

'சென்றவன் மார்பிது சேர்க'என உன்னு,
மன்றலர் மாலையை வானில் எறிந்தாள்.

[அம்மாலை அரிச்சந்திரன் கழுத்தில் விழுந்தது. உடனே மன்னவன் முகம் மலர்ந்தது; மற்றவர் முகம் கரிந்தன. யாவரும் பல்லாண்டு பாடினர்.]

நல்லியல் நூலறி நாவலர் பாடப்
பல்லிய மும்பல பாடலும் ஆர்ப்ப
அல்லிம லர்த்தொடை மாலை அணிந்த
வல்லியும் மன்னனும் மாளிகை புக்கார்.

[அரிச்சந்திரனும் சந்திரமதியும் சில நாள் கன்னமாபுரியிலிருந்து, பின்பு மதிதயன் முதலியவரிடம் விடைபெற்றுப் புறப்பட்டுத் தம் பரிவாரங்களுடன் அயோத்தியை அடைந்தனர். சில மாதங்களில் சந்திரமதி ஒரு மைந்தனைப் பெற்றனள். முனிவர் அம்மைந்தனுக்குத் தேவதாசன் எனப் பெயரிட்டனர். தேவ தாசன், பெற்றோர் மகிழ வளர்ந்து, ஏழாம் வயதை எய்தினன்.]

ஆ. செய்யுள் 29.

---

என) அமையக் கடவது என்று, உன்னு - நினைத்து, மன்றலர் - (மன்று + அலர்) வாசனை வீசுகின்ற.

21 பல்லியமும் - (பல் + இயமும்) பல வாத்தியங்களும், ஆர்ப்ப - ஒலிக்க, அல்லி - அக இதழ், தொடை மாலை - தொடுக்கப்பட்ட மாலை, வல்லி - பூங்கொடி போன்ற சந்திரமதி.

## 2. இந்திர காண்டம்

[இந்திர லோகத்தில் இந்திரன், தன் மனைவியாகிய இந்திராணியுடன், தேவர், அசுரர், கேசரர், தும்புரு, சித்தர், விச்சாதரர், பூதர், பைசாசர், கின்னரர், நாரதர், நாகர், இயக்கர், அரக்கர் முதலியவர் தன்னைப் போற்றச் சிங்காதனத்தில் வீற்றிருந்தனன். முனிவர் பலர் அவன் சபையில் வீற்றிருந்தனர். இந்திரன், வசிட்டர் விசுவாமித்திரர் முதலிய மண்ணுலக மாதவரை நோக்கி,]

*கலி நிலைத்துறை*

'பாய்மைக் கலோலக் கடல்சூழ் புவிபார்த்தி வர்க்குள்
தீமைக்கும் வேகச் சிலுகுக்கும் இடம்கொ டாது
வாய்மைக்கும் நன்னூல் வளனுக்கும் மனத்தில் உற்ற
தூய்மைக்கும் மிக்கார் தமைஆய்ந் தனிர்சொன்மின்,' என்றான். 1

[அது கேட்ட வசிட்டர் மகபதியை நோக்கி,]

'பாருக் கொருவன்; பரதா ரசகோ தரன்;வெம்
போருக் கொருவன்; புகழுக் கும்மறைப் பொருட்கும்
நேருக்கும் வீடா மனுநூல் நெறிக்கும் பொறைக்கும்
ஆருக்கும் மிக்கான் அரிச்சந் திரன்ஆகும்,' என்றான். 2

அன்னான் அதுகூ றிட,மைந் தரைஅட்ட தாலும்
முன்னாள் அமர்வென் றொருதண் டின்முடித்த தாலும்

---

1. பாய்மைக் கலோலம் - (கரையின்மீது) பரவுகின்ற கருமையான நீரலைகளையுடைய, பார்த்திவர் - அரசர், சிலுகுக்கும் - துன்பத்திற்கும், நன்னூல் வளன் - நல்ல சாஸ்திர விசாரணை, தூய்மை – பரிசுத்தம், மிக்கார்தமை-சிறந்தவரை, ஆய்ந்தனிர்-(நீங்கள்) ஆராய்ந்து, சொன்மின் - சொல்லுங்கள்.

2. பாருக்கு ஒருவன் - மண் உலகத்தில் ஒப்பற்றவன், மறைப் பொருட்கும் -வேதப் பொருளுணர்ச்சிக்கும், நேருக்கும்-நேர்மையான ஒழுக்கத்திற்கும், வீடா - அழியாத, பொறைக்கும் - பொறுமைக்கும்.

3. அன்னான்-அவ்வசிட்டர், மைந்தரை அட்டதாலும்-தன் நூறு புதல்வரை வசிட்டர் அழித்ததாலும், அமர் - போர், ஒரு தண்டின் -

தன்னால் உணரா தசலத் தினன் தான் அழன்று
கொன்னார் தவத்தோங் கியகோ சிகன் கூற லுற்றான்: 3

'வெய்யன் பதகன் பரதா ரவிருப்பன் வீணன்
பொய்யன் நிறையும் பொறையும் சிறிதும் இல் புல்லன்
கையன் கபடன் கயவன் தனை நல்லன் என்றிவ்
வையன் திருமுன் உரைத்தாய்! இதென்னாக?' என்றான். 4

[அது கேட்ட வசிட்டர்,]

'தீவெந் தொழிலின் றிஒப்பற் றமெய்ச்செவ்வி யோனைக்
காய்வெந் திறலால் இவைகூ றியகௌசி கா!நின்
வாய்வெந் திலை!நின் மனம்வெந் திலை!வம்பு சொன்ன
நீவெந் திலை!தெய் வமும்நின் வயின்பொய்த்த'தென்றான். 5

தெய்வந் தனைநொந் துவசிட் டனிச்செய்தி செப்பக்
கைவந் தகொடுந் தொழிற்கௌ சிகன்கன்றி நோக்கி,
'பொய்வந் தநின்வாய் புழுவா குதல்அன்றிப் பொய்யா
மெய்வந்த என்வாய் மனம்வே வல,'என்று சொன்னான். 6

---

ஒப்பற்ற யோக தண்டத்தினால், தன்னால் உணராத சலத்தினன் - தம்மை மறந்த கோபத்தையுடையவராகிய விசுவாமித்திரர், அழன்று - மனங்கொதித்து, கொன் ஆர் - பெருமை பொருந்திய, தவத்து ஓங்கிய - தவத்தினால் சிறந்த, கோசிகன் - விசுவாமித்திரர் (கௌசிகை என்பவளின் புதல்வர்). இச்செய்யுளிலுள்ள வரலாற்றை உத்தர காண்டத்தாலறிக.

4. வெய்யன் - கொடியவன், பதகன் - பாதகன், விருப்பன் - இச்சையுள்ளவன், வீணன் - பயனற்றவன், நிறை - மன ஒடுக்கம், புல்லன் - அற்பன், கையன் - வஞ்சகன், கயவன் தனை - புத்தியீனனை, இவ்வையன் - இந்தத் தேவேந்திரன், திருமுன் - சமூகத்தில், இது என் ஆக - இஃது என்ன பயனைத்தர?

5. தீ வெந்தொழில் இன்றி - தீயனவாகிய கொடுந்தொழில்கள் (செய்தல்) இல்லாமல், செவ்வியோனை - செம்மைக்குணமுடைய அரிச்சந்திரனை, காய் வெந்திறலால் - கோபிக்கின்ற கொடிய உனது வல்லமையால், நின் வயின் - உன்னிடம்.

6. கைவந்த - தேறிய, கன்றி - கோபித்து, வேவல - வேகவில்லை.

புனங்கொண் டசெந்தீப் புயல்தா விஎழுந்த தேபோல்
மனங்கொண் டடங்காப் பெருவன் மைவசிட்டற் கெய்திக்
கனங்கொண் டகற்ப முடிவின் கண்உருத்தி ரன்போல்
சினங்கொண் டெழுந்தான் விழித்தீத் திசைதோறும் சிந்த. 7

[விசுவாமித்திரரும் மிகக் கோபித்தனர்.]

ஆற்றா நெடுவெஞ் சினம்ஆற் றிஅமர்த்தி உள்ளம்
தேற்றா, மகவான் திருச்செம் மலர்க்கைஅ மைத்து,
'கூற்றால் விளைவா வனகண் டிடின்கூ றும்நீர்மை
தோற்றால் இழிதக் கதுசெய்வ தென்?சொன்மின்,' என்றான். 8
அன்பால் கடலா யவசிட் டன்அழன் று, 'மன்னன்
தன்பால் தவறுண் டெனக்கௌ சிகன்சாய்க்கின் அன்றே
என்பால் தவம்விட் டிழிகள் தலையோட்டின் ஏந்தித்
தென்பால் தனிச்செல் குவன்யான்; இதுதிண்ணம்!' என்றான். 9
'மாறா நெறிகொண் டவசிட் டன்அம்மன்னன் உள்ளம்
வேறாம் எனின்இச் சபதத்தை விளம்பு வானோ?
தேறா, இனிநின் சபதத்தை இத்தேவர் கோன்முன்
கூறாய்,' எனநா ரதன்கோசி கனுக்கு ரைத்தான். 10

---

7. புனங்கொண்ட - காட்டிற்பற்றிய, புயல் தாவி - மேகத்தை அளாவி, வன்மை - வல்லமை, கனம் கொண்ட - நிறைவைக்கொண்ட, கற்ப முடிவின்கண் உருத்திரன் - பிரளய கால ருத்திரன்.

8. ஆற்றா நெடுவெஞ்சினம் - ஒருவராலும் தணிக்க முடியாத பெருங்கொடுங்கோபத்தை, அமர்த்தி - (அவ்விருவரையும்) இருக்கச் செய்து, உள்ளம் தேற்றா - மனத்தைத் தேற்றி, மகவான் - இந்திரன், கூற்றால் - உங்கள் சொல்லினால், விளைவு ஆவன - (அரிச்சந்திரனிடத்தில்) உண்டாவனவற்றை, கண்டிடின் - பரிசோதித்தால், கூறும் நீர்மை தோற்றால் - நீங்கள் சொல்லும் தன்மை தோற்குமானால், இழிதக்கது - (தோற்றவர்) தாழ்ந்து செய்யத் தகுந்த காரியம்.

9. கடல் ஆய - சமுத்திரம் போன்றவராகிய, சாய்க்கின் - தோற்கச் செய்தால், என்பால் தவம் விட்டு-என்னிடமுள்ள தவத்தை இழந்து, இழிகள் - இழிந்த கள்ளை, தென்பால்-தென் திசை நோக்கி, திண்ணம் - உண்மை.

10. தேறா - ஆலோசித்து, நாரதன் - நாரத முனிவர்.

‘நன்றா குக!’ என் றவன்நா ரதனுக் குரைத்து,
‘பின்றா திவன்போல் பெரும்பா டைபிதற் றமாட்டேன்;
வென்றான் எனின்யான் செய்தமெய்த் தவந்தன்னில் பாதி
குன்றாமல் ஈவேன்!’ எனக்கௌ சிகன்கூ றி னனால். 11

‘அமையும்! அமையும் இஃதே! அரிச்சந்தி ரன்பால்
சமையும் சபையின் திறம்யா வதும்சாற் றாமல்
எமையும் சுரர்கா வலில்என் றும்இருத் தி நீயிச்
சமையம் துறந்தே’கெனப்பின் னரும்சாற்றல் உற்றான்: 12

‘ஆதித் தன்அருங் குலத்தண் ணலைநண்ணி ஆன்ற
நீதித் தொழிலும் நெறியும் தருமத்தின் நேரும்
சாதித் தஉன்றன் சமைப்பால் சமர்த்தாற்றும் ஆற்றால்
சோதித் திடுபோ,’ எனச்சொல்லி அச்சூழல் உற்றான். 13

அக்கா லையில்அந் தஅருஞ் சபையுங் குலைந்து,
தொக்கார் முனிவோர் பலரும் தமசூழல் சார்ந்தார்;
மைக்கார் நிறஅண் ணலைவாழ்த் திஅக்கௌசி கன்போய்ப்
புக்கான் முதல்வை கியபொன் மலைச்சாரல் பொங்கர். 14

---

11. நன்று ஆகுக - நல்லது! அப்படியே ஆகட்டும், அவன் - அவ் விசுவாமித்திரர், பின்றாது - பின்னடையாமல், பெரும்பாடை - பெருஞ் சபதம்.

12. அமையும் - போதும், இஃதே அமையும் - இதுவே போதும், ‘சமையும் சபையின் திறம் யாவதும் அரிச்சந்திரன்பால் சாற்றாமல் எமையும் சுரர் காவலில் என்றும் இருத்தி,’ என அனுவயிக்க. துறந்து ஏகு - இவ்விடம் விட்டுச் செல்.

13. ஆதித்தன் - சூரியன், அண்ணலை - பெருமை பொருந்திய அரிச்சந்திரனை, நண்ணி - அடைந்து, ஆன்ற - சிறந்த, சமைப்பால் - முயற்சியினால், சமர்த்து ஆற்றும் ஆற்றால் - சமர்த்தை முடிக்கும் வகையால், அச்சூழல் - அந்தத் தேவர் கூட்டத்தில்.

14. குலைந்து - கலைந்து, தொக்கார் - கூடியிருந்தவராகிய, தம சூழல் - தம் இருப்பிடம், மைக்கார் நிற அண்ணல் - தேவேந்திரன், பொங்கர் - சோலை, ‘அக்கௌசிகன் ................பொங்கர் புக்கான்’ என அனுவயிக்க.

## 3. வஞ்சனைக் காண்டம்

[விசுவாமித்திரர் மண்ணுலகடைந்து, தம் தவச்சாலையைச் சேர்ந்தனர். அவர் அரிச்சந்திரனை எங்ஙனம் பொய்யனென நிலை நாட்டுவதென நீடு யோசித்தனர். முனிவர் பலர் அவரை அடைந்து வணங்கினர். தேவேந்திர சபையில் நடைபெற்ற விஷயத்தைக் கூறும்படி அம்முனிவர் விசுவாமித்திரரை வேண்டினர்.]

கலி விருத்தம்

கொற்ற வாசவன் கூறிய மாற்றமும்
மற்றோர் வாய்மை வசிட்டன்உ ரைத்ததும்
உற்ற ஆறும் உணர்த்துதல் இன்றியே
கற்றோர் வஞ்சனைக் கட்டுரை கூறுவான் : 1

'தெரியும் நீள்மறைத் தேவர்அ வைக்கணே
பெரிய மாதவர் பேசிய வேள்வியில்
அரிய தொன்றுமு டிக்கும்அ வாவினால்
கரிய ஓலக் கடல்புவி எய்தினேன். 2

'சொல்வ தொன்றுண்டு : கேட்கத் துணிதிரேல்
நல்ல தென்று கவுசிகன் நாட்டினான் ;
'அல்ல தாயினும் நின்சொல் மறுத்திடல்
வல்ல மோ?'என்று மாதவர் கூறினார். 3

---

1. கொற்ற வாசவன் - வெற்றி வாய்ந்த இந்திரன், மாற்றமும் - சொல்லும், வாய்மை - சொல், உற்ற ஆறும் - (மற்றும்) நிகழ்ந்த விதமும், உணர்த்துதல் இன்றி - தெரிவியாமல், ஓர் வஞ்சனைக் கட்டுரை கற்று - வேறொரு வஞ்சகமான புனைந்துரையைக் கற்பித்து.

2. நீள் மறை தெரியும் - பெரிய வேதங்களை உணர்ந்த, அவைக் கணே - சபையில், வேள்வியில் - யாகங்களில், ஓலக் கடல் - ஒலி செய்யும் கடலால் சூழப்பட்ட, புவி - மண்ணுலகத்தை.

3. துணிதிரேல் - சம்மதிப்பீரானால், நாட்டினான் - சொன்னார், அல்லது ஆயினும் - (நீர் சொல்வது) தகாத காரியமானாலும்.

'அருள்அ யோத்தி அரிச்சந்தி ரனையுற்(று)
இருள்அ றும்பெரு வேள்விக்கி யான்சொலும்
பொருள்த ரும்படி இன்றுபொ ருத்திநீர்
வருக,' என்று மறைமுனி கூறினன். 4

[முனிவர் பலரும் விசுவாமித்திரர் விருப்பத்தை நிறைவேற்ற அரிச்சந்திரனை அடைந்து, அவனால் உபசரிக்கப்பட்டு, தாம் வந்த காரணத்தை அவனுக்கு அறிவிப்பாராயினர்.]

'மன்ன! கேள்: ஒரு வாசகம் கௌசிகன்
சொன்ன துண்டது நல்கத்து ணிந்திடின்
இன்ன தென்றிங் கியம்புதும்,' என்றனர்;
பின்னர் மன்னவன் பேசத்தொ டங்கினன்: 5

'இறுதி எய்தல் எனினும்இ னிது;மற்(று)
அறுதி அற்றுள தாய்எற்க மைவதேல்
உறுதி நீர்உரை செய்ததற் கொத்திடப்
பெறுதும் யாம்,'என, மாதவர் பேசுவார்: 6

'வேந்த! அப்பெரு வேள்விக்கி ரும்பொருள்
ஈந்தி டற்குரி யார்எவர் என்றியாம்
ஆய்ந்த னம்;உனை அன்றிமற் றில்எனப்
போந்த னம்,'என, மன்னன் புகலுவான்: 7

'பரவும் இப்பொருள் பற்றஉ மக்கது
தரல்எ னக்கியல் பென்றரிச் சந்திரன்,

---

4. இருள் அறும் - குற்றமற்ற, வேள்விக்கியான் - வேள்விக்கு + யான், பொருத்தி - சம்மதிக்கச் செய்து, மறைமுனி-விசுவாமித்திரர்.

5. வாசகம் - விஷயம், நல்க - தர, இயம்புதும்-சொல்லுவோம்.

6. இறுதி எய்தல் - மரணம் அடைதல், அறுதி - முடிவு, எற்கு அமைவதேல்-எனக்கு அமையுமானால், யாம்-(அரசர்களாகிய) யாங்கள்.

7. இரும்பொருள் - பெரும்பொருள், ஆய்ந்தனம்-யோசித்தோம், இல் என - இல்லை என்று துணிந்து, போந்தனம் - (உன்னிடம்) வந்தோம்.

8. பரவும் இப்பொருள் - மிகுந்த இப்பொருளை, பற்ற-(நீங்கள்) பெறும்படி, எனக்கு இயல்பு - எனக்குத் தகுதியாம், கொடு வம்-

'திரவி யம்கொடு வம்,'எனச் செப்பலும்
பிரம சாரிகள் மீளவும் பேசுவார் : 8

'இன்று வேண்டலம் ; யாகம்இ யற்றிடும்
அன்று நல்க அமையுமெ மக்'கென,
'நன்று நன்'றென மன்னன் நவின்றபின்
நின்று வாழ்த்தி நெடுநகர் நீங்கினர். 9

[பின்னர் அம்முனிவர் விசுவாமித்திரரை அடைந்து, அரிச்சந்திரன் வேள்விக்குப் பொன்னளிக்க உடன்பட்டதை அறிவித்துச் சென்றனர்.]

'அடிவ ணங்கி அருந்தவர் போனபின்
கடிது சிற்சில திங்கள் கழித்துநீள்
வடிசு டர்ப்படை மன்னனைக் காணிய
கொடிய பாதகக் கோசிகன் தோன்றினன். 10

[மன்னவன் அவரை வணங்கி, வந்த காரணத்தை வினவினன்.]

'காவல் மன்ன ! கடிமறை வேள்விக்கென்
ஏவல் மாக்கட் கிசைந்த பெரும்பொருள்
தா,'எ னச்சொலக் கேட்டரிச் சந்திரன்,
'ஈவல் ! எத்துணை வேண்டும்?'என் றேத்தினன். 11

---

கொண்டு வாருங்கள், செப்பலும்-(தன் ஏவலரை நோக்கிச்) சொன்ன உடனே, பிரமசாரிகள் - முனிவர்கள்.

9. வேண்டலம் -(யாம் பெற) விரும்பவில்லை, நல்க அமையும் - கொடுத்தாற்போதும், நவின்ற பின் - சொல்லிய பிறகு, நீங்கினர் - (முனிவர்) பிரிந்தனர்.

10. திங்கள் - மாதம், வடி சுடர்ப் படை-கூர்மையான பிரகாசம் பொருந்திய வாளாயுதத்தையுடைய, காணிய - பார்க்க.

11. காவல்-பூமியைக் காக்கின்ற, கடி மறை வேள்விக்கு-(தேவர்களின்) காவலையுடைய வேத முறையான யாகத்திற்கு, ஏவல் மாக்கட்கு-கட்டளை பெற்று வந்த முனிவர்கட்கு, இசைந்த - (நீ கொடுப்பதாகச்) சம்மதித்த, ஈவல்-கொடுப்பேன், எத்துணை-எவ்வளவு, ஏத்தினன்-(முனிவரைப்) போற்றினன்.

மான வன்சொல மாமுனி நோக்கியே,
'யானை மேல்நின் றெறிந்தக வண்சிலை
போன தூரம் பொருள்குவிப் பாய்எனின்
மோன வேள்வி முடித்திட லாம்,'என்றான். 12

இறைவன், 'இவ்வகை ஈகுவன் யான்,'என,
அறைநி றந்'திவண் ஆனையைத் தம்,'எனக்
குறைவில் வாதுவர் ஓடிக் கொணர்ந்திடப்
பிறைஎ யிற்றுப் பெருங்களி றுற்றதே. 13

'ஒத்த தேஅமை யும்;என தொண்பொருள்
வைத்த னன்நின் னிடத்தடை; மன்ன!யான்
சுத்த வேள்வி தொடங்கிடும் நாள்எனக்(கு)
உய்த்தி நீ,'என் றுரைத்தவன் ஏகினான். 14

[பின்பு விசுவாமித்திரர் தமது பர்ணசாலையை அடைந்து, தம் தவ வன்மையால் கொடுவிலங்குகள் முதலியவற்றைக் கூட்டி, அயோத்தியி லுள்ள விளை பொருளை அழித்துக் குடிகளை வருத்த ஏவினர்.]

முழங்கு நீர்த்தடம் முற்றும் உடைத்து,நீர்
வழங்கு வண்டல் மடைகளும் தூர்த்துராய்த்

---

12. மானவன் - பெருமையுடைய அரிச்சந்திரன், எறிந்த கவண் சிலை-வீசிய கவண் கல், மோன வேள்வி- மௌனமாயிருந்து செய்யும் யாகம்.

13. இவ்வகை-இப்படியே, என-என்று கூறி, இவண் ஆனையைத் தம்-இவ்விடம் யானையைக் கொண்டு வாருங்கள், வாதுவர் - யானைப் பாகர், பிறை எயிற்று-பிறைச்சந்திரனைப் போன்ற தந்தங்களை உடைய, களிறு-ஆண் யானை.

14. ஒத்ததே அமையும் - (நீ) சம்மதித்ததே போதும், ஒண் பொருள்-சிறந்த பொருளை, நின்னிடத்து அடை வைத்தனன் - உன்னிடத்திலேயே அடைக்கலமாக வைத்தேன், உய்த்தி-செலுத்துவாயாக.

15. தடம்-குளம், வழங்கு-பாய்கிற, வண்டல்-சேற்றையுடைய, தூர்த்துராய் - தூர்த்து+உராய், உராய் - தேய்த்து, முழங்கு - ஒலிக்

தழங்கு சாலியும் சாடித் தழைகொடி
கிழங்கு மாய்த்தன கேழல் திரள்களே. 15

காட்டு வாழ்கலை மான்கட மாமரை
நாட்டு வாழ்புனம் சேர நலிந்திட,
ஓட்டு வாரை ஒதுக்கிநின் றேபருங்
கோட்டு வாரணம் குத்திப் பிளந்தவால். 16

மதந்த ரும்கரி மான்மரை வல்லுளி
ததைந்த தாமரைத் தண்வய லில்புகப்
புதைந்து சேற்றினில் புக்கவும் வேர்அறச்
சிதைந்த வும்செழுஞ் செந்நெலும் வெண்ணெலும். 17

இந்த வாறு நிகழ்ந்திட ஏங்கியே
அந்த நாட்டில் அனைவரும் கூடினார்,
வந்த யோத்தியின் மன்னனைப் போற்றித்தம்
சிந்தனைப்படர் செப்பத் தொடங்கினார் : 18

'என்ன பாவம்! இதற்குமுன் கண்டிலேம்!
மன்னர் மன்ன! வனத்துவி லங்கினால்

---

கின்ற, சாலி-நெற்பயிரை, சாடி - அழித்து, மாய்த்தன - அழித்தன, கேழல் திரள்கள்-பன்றிக் கூட்டங்கள்.

16. காட்டு-காட்டில், கட மா-யானை, மரை-காட்டுக் குதிரை, நாட்டு வாழ் புனம்-நாட்டில் உள்ள வயல்களை, சேர நலிந்திட-முழுதும் அழிக்க, கோட்டு-தந்தங்களையுடைய, வாரணம் - யானைகள், பிளந்த-பிளந்தன, ஆல்-அசை.

17. மதம் தரும் கரி - மத சலத்தைப் பெய்கின்ற யானை, வல் லுளி - பன்றி, ததைந்த - நெருங்கிய, தண் - குளிர்ச்சி பொருந்திய, புக்கவும் - மூழ்கியவைகளும், சிதைந்தவும் - அழிந்தவைகளும், 'புக்கவும் சிதைந்தவும் செந்நெலும் வெண்ணெலும் ஆம்,' என முடிக்க.

18. கூடினார் - கூடி, சிந்தனைப் படர் - மனத் துயரத்தை.

19. கண்டிலேம் - நாங்கள் காணவில்லை, வனந்து விலங்கு-காட்டு மிருகங்கள், கன்னல்-கரும்பு, தினைப்புனம் - தினைக் கொல்லை,

செந்நெல் கன்னல்தினைப்புனம் தேம்பொழில்
இன்ன எண்ணில இற்றன இன்றென்றார். 19

'கலையும் மானும் கடமையும் ஏனமும்
மலியும் தண்பயிர் யாவையும் மாய்த்தன !
புலியும் பல்லமும் சிங்கமும் புக்குயிர்
நலியும் ஓட்ட நடந்தவர் தம்மையே. 20

'இன்று இன்று இரண்டபைங் கூழெலாம்
ஒன்றும் இன்றி உழக்கின ; ஓட்டவே
சென்று சென்று செறிந்தவர் தங்களைக்
கொன்று கொன்று குவித்தன கோடியே. 21

'அரிஅனந்தம்; அரவும்அனந்தம்;வெங்
கரிஅனந்தம்; கரடிஅனந்தம்;மா
நரிஅனந்தம்; நவிஅனந்தம்;கொடு
வரிஅனந்தம் மலிந்தன வந்'தென்றார். 22

'நாற்றம் ஏற்றுவந் தெம்மை நலிந்திடத்
தோற்றும் ஆகுலச் சூழ்வினை தன்னை நீ

---

தேம் பொழில் - தேன் சிந்தும் பூஞ்சோலைகள், இன்ன - இப்படிப் பட்டவை, இற்றன - அழிந்தன.

20. கலை - கலைமான், கடமை - காட்டுப் பசு, ஏனம் - பன்றி, மலியும் - செழித்த, பல்லம் - கரடி, ('ஓட்ட நடந்தவர் தம்மைப் புலியும் பல்லமும் சிங்கமும் புக்கு உயிர் நலியும்,' என இயைக்க.) புக்கு - வந்து, உயிர் நலியும் - உயிரை வாட்டும்.

21. பைங்கூழ் - விளை பயிர், உழக்கின - அழித்தன, செறிந்தவர் - கூடியவர்.

22. அரி - சிங்கம், அனந்தம் - மிகப் பல, மா நரி - பெருநரி, நவி - (நவ்வி) மான், மலிந்தன - மிகுந்தன.

23. நாற்றம் ஏற்று - மோப்பம் பிடித்து, ஆகுலச் சூழ்வினை தன்னை - துன்பமாகிய பாவத்தை, ஆற்றொணாது - சகிக்க முடியாது.

மாற்றி டாய்எனின், மன்னவ ! எங்களால்
ஆற்றொ ணா'தென் றடிதொழு தேத்தினார். 23

[குடிகளின் முறையீட்டைக் கேட்ட கோமான்]

'அறைபு னல்திரு நாடழி வுற்றதற்(கு)
இறைஉ மக்கிரண் டாண்டினுக் கில்,'எனாக்
குறைவி லாநிதி கூறைஅ ளித்து,'நீர்
உறையும் ஊர்தொறும் செல்லும்,'என் றேகினான். 24

ஆ. செய்யுள் 67

24. அறை புனல்-ஒலிக்கின்ற (கங்கை) நீரையுடைய, இறை-வரிப் பணம், இல்-இல்லை, நிதி-பொருள், கூறை-வஸ்திரம்,

## 4. வேட்டம் செய் காண்டம்

**கலி விருத்தம்**

செல்லும் என்னப் பணிந்தவர் சேறலும்
வெல்லும் வெம்படை வேந்தன்,'அமைச்சர்காள்!
கொல்லும் இந்தக் கொடுவினைக் கென்செய்கோ!
சொல்லும்,' என்னத் தொழுதவர் சொல்லுவார்: 1

'கூட்ட வேடரும் கோலும்வை வேலும்நாய்
ஈட்டமும்கொடு கானகத் தெய்திநீ
வேட்டை ஆடிவி லங்கினம் மாய்த்தனை
நாட்டை ஓம்பல் நலன்,'எனக் கூறினார். 2

என்றமைச்சர் இயம்பலும் மன்னவன்,
'நன்று நன்'றென நண்ணிம னக்கொளா,
'குன்ற வாணரைக் கூட்டிக்கொ ணர்'கென,
நின்ற தூதர் தொழுதயல் நீங்கினார். 3

ஓடினார்கள், உயர்வரைக் கானகம்
நாடினார்கள்,'நம் நாயகன் உங்களைத்

---

1. சேறலும்-சென்றதும், வெம்படை-கொடிய ஆயுதத்தை யுடைய, அமைச்சர்காள்-மந்திரிகளே, என் செய்கோ-என்ன செய்வேன் !

2. கோலும்-அம்பும், வை வேலும்-கூர்மையான வேலாயுதமும், ஈட்டமும்-கூட்டமும், கொடு-(உடன்) கொண்டு, மாய்த்தனை-அழித்து, ஓம்பல்-பாதுகாத்தல்.

3 இயம்பலும்-சொன்னதும், நண்ணி - சம்மதித்து, மனக்கொளா-மனத்திற்கொண்டு, குன்ற வாணரை-மலையில் வாழும் வேடரை, கொணர்க-கொண்டு வருக, அயல் நீங்கினார்-அப்பாற் சென்றார்கள்.

4. நாயகன்-தலைவனாகிய அரிச்சந்திரன், துடி-பம்பை என்னும் வாத்தியத்தை, கொட்டினர்-முழக்கினர்,

தேடி னன்,' என்று செப்பலும், சிற்சிலர்
கூடி னார்; துடி கொட்டினர் எங்குமே. 4

[அரிச்சந்திரன் சந்திரமதியுடன் தேரேறி, வேடர் முதலியவர் புடை சூழக் காடடைந்து, வேட்டையாடலாயினன்.]

எழுசீர் விருத்தம்

ஏனம் எண்குபுலி யாளி சிங்கம்மத
யானை சம்புழைபுல் வாய்மரை
நானம் ஓரிகட மாஅ ழுங்கிரலை
நாவி யூகம்எலி ஆகணில்
கான மேதிவரை யாடு டும்புமுயல்
கால்வி சைத்திடை கலந்தன;
வான கத்திடை பறந்தெ ழுந்தபல
வன்சி றைப்பறவை வர்க்கமே. 5

வேல்கள் பட்டஒரு கோடி கோடி; விறல்
வில்லு மிழ்ந்தசுடு பல்கொடுங்
கோல்கள் பட்டஒரு கோடி கோடி; எறி
குணில்கள் பட்டஒரு கோடி; தேர்க்
கால்கள் பட்டஒரு கோடி கோடி; எறி
கவண்உ மிழ்ந்தபல கற்கள்பட்(டு)
ஓலம் இட்டஒரு கோடி கோடி; சிலை
உண்டை பட்டஒரு கோடியே. 6

---

5. எண்கு-கரடி, சம்பு-நரி, உழை-மான், புல்வாய்-கலை மான், நானம்-கவரி மான், ஓரி-கிழ நரி, அழுங்கு-ஒரு மிருகம், இரலை-கரிய மான், நாவி-புழுகுப் பூனை, யூகம்-கருங்குரங்கு, ஆகு-பெருச்சாளி, கான மேதி-காட்டெருமை, வரையாடு மலையாடு, கால் விசைத்து-காற்றைப் போல வேகங்கொண்டு, இடை கலந்தன-அவ்விடத்திற்கூடின, வானகத்திடை - வானத்தில், எழுந்த-எழும்பின, வன்சிறை-வலிய சிறகையுடைய.

6. குணில்கள் - வளை தடிகள், ஓலம் இட்ட - கத்தினவை, உண்டை - உண்டை வில், கோடி-கோடிக்கணக்கானவை.

பட்ட பட்டவை எடுத்து வேடுவர்
பருத்த கட்டைகள் அடுக்கியே
சுட்ட சுட்டதசை தின்று தின்றுறு
சுணங்கி னம்பல பிணங்கவே
மட்ட றப்பருகி யிட்ட ளித்திலர்ம
டுக்க ளில்புனல் அருந்தியே
இட்ட மாலைபுனை மன்னர் மன்னவன் இ
ருந்த சூழலிடை எய்தினர். 7

'இவ்வி டத்துளவி லங்கி றந்த;எறி
வேல்பி ழைத்தும்வலை பீறியும்
வெவ்வி டக்கணைகள் தப்பி யும்சிலவி
லங்கு போனவுள; ஆயினும்
அவ்வி டத்தினில்ந டப்ப தோ,அடவி
புகுவ தோ,நகரி அணைவதோ?
எவ்வி டத்தினிது சேர்தும்?' என்றவர்வி
ளம்ப, மன்னவன் இயம்புவான்: 8

'சென்ற சென்றதிசை தோறும் யாம்இனிது
சென்று திண்டிறல்வி லங்கெலாம்
கொன்று கொன்றவைமு டிந்த பின்வருதல்
ஆகும் உன்னியகு றிப்பெனக்(கு)'

7. பட்ட பட்டவை-இறந்துபட்ட மிருகங்களை எல்லாம், தசை-மாமிசத்தை, சுணங்கு இனம்-நாய்க் கூட்டம், பிணங்க-ஒன்றோடு ஒன்று சண்டையிட, மட்டு அறப் பருகிபிட்டு - கள்ளை மிகுதியாகக் குடித்துவிட்டு, அளித்திலர் - நாய்களுக்கும் ஒன்றும் கொடாதவர்களாய், மடுக்களில் - நீர் நிலைகளில், புனல் - நீரை, இட்ட மாலை-விருப்பமான மாலை, சூழலிடை - இடத்தில்.

8. இறந்த - மடிந்தன, பிழைத்தும் - தப்பியும், பீறியும் - கிழித்தும், கணைகள் - அம்புகள், அடவி - காட்டில், நகரி - நகரம், சேர்தும்-சேர்வோம்.

9. திண்டிறல்-மிக்க வல்லமை, கழல் - பாதங்களில், இறைஞ்சி-

என்று தேரின்மிசை ஏறி யேஇறைவன்
ஏக லும்கழல்இ றைஞ்சியே,
நின்ற வேடுவர்பெ ரும்ப டைத்திரள்நெ
ருங்கு கானிடைப ரந்தவே. 9

குன்று குன்றுதொறும் நீலம் மேவியகு
ளங்தொ றுங்குளிர்வ னங்தொறும்
சென்று சென்றடிதொ டர்ந்த டர்ந்துபல
திக்கி னும்செறிவி லங்கெலாம்
கொன்று கொன்றுகுவை செய்தெ ரித்திடுகொ
டுங்க னற்படுகொ ழுந்தசை
தின்று தின்றுபுனல் உண்டு வென்றிபுனை
திண்பெ ரும்படைந டந்ததே. 10

[வேடர்கள் காடு முழுவதும் கொளுத்தினர்கள்.]

சுட்ட செந்தழலில் வெந்து வெந்துடல்சு
ருண்ட பற்பலவி லங்கினம்;
கட்டு பாசமது விட்ட ஞாளிகள்க
டித்தி டச்சிலக ழிந்தன;
கெட்ட ழிந்துநிலை அற்று மீமிசைகி
ளர்ந்தெ ழுந்துகுதி கொண்டுபோய்
விட்ட மாமுனிஇ ருந்த சூழலில்வெ
ருண்டு சிற்சிலவி ழுந்தவே. 11

---

வணங்கி, படைத்திரள் - சேனைக் கூட்டம், கானிடை - காட்டில், பரந்த - பரவின.

10. நீலம் - கருங்குவளை மலர், மேவிய - பொருந்திய, அடர்ந்து - நெருங்கி, செறி - திரண்ட, குவை செய்து - குவித்து, கொழுந்தசை - கொழுமையான மாமிசம், புனல் உண்டு - நீர் பருகி, வென்றி புனை - ஜயங்கொண்ட.

11. பாசம் - கயிறு, ஞாளிகள் - நாய்கள், மீமிசை - வெகு உயரத்தில், கிளர்ந்து எழுந்து - வேகமாய்ச் சென்று, விட்ட மாமுனி - (தன்

[தாம் ஏவிய மிருகங்களனைத்தும் இறந்தமை அறிந்த விசுவாமித்திரர் உடனே ஒரு பன்றியைச் சிருட்டித்தனர்.]

கலி நிலைத்துறை

பொன்னி றத்துமெய், வெண்ணிறத் துகிர்,புட்ப ராக
நன்னி றக்கண்டம், நாலுகா லும்செழும் பவளம்,
சென்னி றத்தகண் செம்மணி, செழுமுகம் பச்சை,
அன்னி றக்குரம் நலம்,வச் சிரத்தெயி றதற்கே. 12

அப்பெ ருங்கொடும் பன்றியை அருந்தவன் நோக்கி,
'எப்பெ ரும்படைத் தலைவரும் எயினரும் இறக்கத்
தப்ப றக்கொலை செய்தரிச் சந்திரன் தன்னை
இப்பெ ரும்பொழில் கொணர்ந்துநீ போ,'என இசைத்தான்.

என்று கூறிட, இருடியை வணங்கி,நெட் டெயிற்றால்
குன்று நீறெழ எற்றி,நீள் குவடெலாம் குறைத்து,
நின்று நின்றுசெங் கண்களால் நெருப்புக விழித்துச்
சென்று சாடிற்று மன்னவன் சேனையைச் சிதற. 14

தலைகள் அற்றிடத் தடங்கரம் அற்றிட வீரர்
குலைகள் அற்றிடக் குஞ்சரம் அற்றிடக் கொலைஞர்

---

கனை) ஏவிய விசுவாமித்திர முனிவர், வெருண்டு - பயந்து, விழுந்த - விழுந்தன.

12. மெய் - உடல், வெண்ணிறத்து உகிர் - வெண்ணிறமுடைய நகம், கண்டம் - கழுத்து, சென்னிறத்த - (செல்+நிறத்த) மேகம் போலும் நிறத்தை உடைய, செம்மணி – இரத்தினம், அன்னிறக்குரம் - (அல்+நிற+குரம்) இருள் நிறக் குளம்பு, வச்சிரத்து எயிறு - வைரம் போன்ற பல், அதற்கு - அப்பன்றிக்கு.

13. எயினரும்-வேடரும், தப்பு அற - தப்பாமல், இசைத்தான் - சொன்னார்.

14. இருடியை-முனிவரை, நெட்டெயிற்றால் - நீண்ட பற்களால், நீறு எழ-பொடியாக, எற்றி-தாக்கி, குவடு - மலைச்சிகரம், குறைத்து-அழித்து, நெருப்பு உக - தீச்சிந்த, சாடிற்று - மோதியது, சிதற-கலைந்து ஓடும்படி.

சிலைகள் அற்றிடச் செஞ்சரம் அற்றிடத் திரைகள்
வலைகள் அற்றிட எற்றிற்று மாயவவ் வராகம். 15

சென்ற சென்றஅத் திசைஎலாம் பிணக்குவை செறியக்
கொன்று வீழ்த்திடக் குலைந்ததக் கொடும்படைக் கூட்டம்;
நின்ற திக்கினை நாடியே நிருபன்முன் ஒருவன்
பன்றி ஓடிய விசையினைப் பலமுறை பகர்ந்தான்: 16

'வானம் ஏழும்மண் ஏழும்முன் மருப்பினுல் எடுத்த
ஏன மோ!புரம் எரித்தவன் உலகெலாம் எரிக்கும்
தான மோ!உயிர் துரிசறச் சமன்நெடும் பன்றி
ஆன தோ!அது சிறிதும்யாம் உணர்ந்திலம் ஐயா! 17

'தலைநி றம்பச்சை; தன்னிறம் பொன்னிறம்; தறுகண்
நிலைநி றம்செழு மாமணி; குரம்இந்த்ர நீலம்;
மலையி னும்பெரி தானதோர் வராகம்வந் தெய்திக்
கொலைபு ரிந்தது கூன்பெருங் கோட்டினுல்,' என்றான். 18

'சேனை யும்பெருந் தேர்களுந் திண்பரித் திரளும்
யானை யும்கொடு முடுவலும் இறந்திட எற்றிக்

---

15. தடங்கரம் - விசாலமான கைகள், குஞ்சரம் - யானை, சிலைகள் - விற்கள், சரம் - அம்பு, திரைகள் - திரைச்சீலைகள், எற்றிற்று - தாக்கியது, மாயவவ்வராகம் - (மாய + அவ்வராகம்) மாயையாகிய அப்பன்றி.

16. குவை - குவியல், குலைந்தது - கலைந்தது, நிருபன் முன் - அரசன் முன்னே, பல முறை - பல விதமாக.

17. முன் - திருமால் வராகாவதாரம் எடுத்த அக்காலத்தில், ஏனமோ - பன்றியோ, புரம் எரித்தவன் - சிவபெருமான், தானமோ - வலிமையோ, துரிசு அற - தீவர் அற்றுப் போகும்படி, சமன் - இயமனே.

18. தறுகண் - கொடுங்கண்கள், கூன் - வளைவான, கோட்டினுல் - தந்தத்தினுல்.

19. கொடுமுடுவல் - கொடிய நாய்கள், எற்றி - அழித்து, தேன்

கானெ லாம்பிணக் காடுசெய் தெய்திற்றுக் கண்டாய்!
தேன லங்கலாய்! தேரினைத் திரித்தருள்,' என்றான். 19

[உடனே அரிச்சந்திரன் தனது தேரைச் செலுத்திச் சென்றனன். அப்பன்றி அவனை எதிர்த்தது.]

அறுசீர் விருத்தம்

உதித்தது னைப்பிறை ஒத்தம ருப்பையொ
டுக்கவு ணர்ச்சிபெருக்
கதித்தபெ ருத்தசி லைக்குள டுத்தொர்க
னற்கணை தொட்டுவிட,
எதிர்த்தகி ருட்டியின் நெற்றியில் மூற்றிஎ
டுத்தக லக்கொடுபோய்
விதிர்த்துடல் உட்கிவெ ருக்கொள மற்றொரு
வெற்பிடை உய்த்ததுவே. 20

உய்த்தது நீளிடை பத்துள யோசனை
உற்றெழு மால்வரைமேல்
வைத்ததும் வாய்வழி கக்கிய சோரியில்
வட்டணை யாவுழலா
மெய்த்தவன் வாழ்பொழில் உட்புக ஓடலும்
விட்டப தாதியெலாம்
மொய்த்தன காவல னைப்புடை சூழ்தர
முற்கிளர் வாரிதிபோல். 21

அலங்கலாய் - தேன் துளிக்கும் மலர் மாலையை அணிந்த அரசரே, திரித்தருள் - திருப்பியருள்க, கண்டாய் - முன்னிலை அசை.

20. மருப்பை - தந்தத்தை, கதித்த - சிறந்த, கனற்கணை - அக்கினி அஸ்திரம், தொட்டு - தொடுத்து, கிருட்டியின் - பன்றியின், மூற்றி - பாய்ந்து, கொடு போய் - கொண்டு போய், விதிர்த்து - நடுங்கி, உட்கி - கூசி, வெருக்கொள - அஞ்சும்படி, வெற்பிடை - மலையில், உய்த்தது - செலுத்தியது.

21. சோரியில் - இரத்தத்தில், வட்டணையா - வட்டமாக, உழலா - சுழன்று, பதாதி - காலாள் படை, வாரிதி - சமுத்திரம்.

கடற்படை சுற்றிஇ ரைத்திறை பத்மக
ழல்துணை யைத்தொழலும்
தடக்கைஅ மைத்துமனத்தில்அ லைத்தல்த
விர்த்திர தத்தினைமுன்
நடத்திஎ திர்த்தகி ருட்டிவ தைக்கக
டுத்தனு வைத்துபிணக்
குடற்கள்தெ றித்துவி றற்படை பட்டகொ
லைக்களம் உற்றனனே. 22

புரவலன் அப்படை கரிபரி பட்டதொர்
புதுமைத னைத்தெரிசித்(து)
'அரகர! இப்படி விளைவதெ னக்குன
தருளின்நெ றிச்செயல்!'என்(று)
இருகரம் வைத்திரு செவியைய மைத்தெழில்
முடியைஅ சைத்தெதிரே
துரகம்ந டத்திட விரைவின்இ ழுத்தன
சுடர்இர தத்தினையே. 23

ஏனம்வி ழுந்தயர் மால்வரை கண்டதின்
ஏறிஇ ழிந்தகலப்
போனது ணர்ந்தடி மீதுதொ டர்ந்துபு
காதவ னங்கள்புகுந்(து)
ஆனன மும்திரு மேனியும் நுண்பொடி
ஆடம டந்தையுடன்
மானவன் வந்தொரு வாசநெ டும்புனல்
வாவிஅ ணைந்தனனே. 24

---

22. பத்ம கழல் - தாமரை மலர் போன்ற பாதம், பிணக்குடற்கள் - கொழுப்போடு கூடிய குடல்கள், தெறித்து - அறுத்து, பட்ட - அழிந்த.

23. துரகம் - குதிரைகள், சுடர் - பிரகாசம் பொருந்திய.

24. அயர் - சோர்ந்த, மால் வரை - பெருமலை, ஆனனமும் - முக

[மன்னனும் மற்றவரும் அக்குளத்தில் நீராடிப் பூஞ்சோலையில் இளைப்பாறி இருந்தனர்.]

வேறு

தாபமும் புனலும் கொள்வார் தாபதர் வந்து மாதர்
தீபமும் அயோத்தி வேந்தும் சேனையும் இருக்கக் கண்டு
கோபமுற் றழன்று, 'மன்னா! கோசிகன் கண்டால் உன்னைச்
சாபமிட் டெரிப்பன்! ஈண்டுச் சார்ந்தது தகாதே!' என்றார்.

'யாமவற் கடிமை அன்றோ? எம்வயின் சீற்றம் என்னோ!
யாமவற் கிழைத்த தீங்குண் டென்னினும் திருத்திப் பின்னைப்
போமதே கருமம்,' என்னாப் புரவலன் புகலக் கேட்'டீண்(டு)
ஆமதே காண்டி!' என்றா அருந்தவர் அகன்று போனார். 26

[முனிவர் சென்றதும் இரவு வந்தது. மன்னவனும் மற்றவரும் கூடாரங்களில் அயர்ந்து தூங்கினர். விடியற்போதில் மன்னன் ஒரு தீக்கனவு கண்டு திடுக்கிட்டெழுந்து, தன் மனைவிக்கும் மந்திரிமார்க்கும் அதனைத் தெரிவிக்கலாயினன்.]

'என்னைஈன் றெடுத்த தாதை யாக்கையோ டெய்தி உம்பர்
தன்னையுற் றிமையோர் நீக்கத் தாரகைத் தலத்த மர்ந்த
பின்னையான் பிரசக் கூந்தல் பேதையர் ஐவர் தம்மை
முன்னை ஊழ் விதியி னாலே முயக்கமுற் றினி திருந்தேன். 27

---

மும், வாச நெடும்புனல் - வாசனை பொருந்திய மிகுந்த நீரையுடைய, வாவி - குளம்.

25. தாபமும் - உஷ்ணமும், தாபதர் - தவசிகள், மாதர் தீபமும் - பெண்களுள் மணி விளக்குப் போன்ற சந்திரமதியும், ஈண்டு - இவ்விடம்.

26. அவற்கு - அம்முனிவனுக்கு, எம் வயின் - எம்மிடம், சீற்றம் - கோபம், காண்டி - பார்.

27. தாதை - தந்தை, யாக்கையோடு - உடலோடு, உம்பர் தன்னை - தேவருலகத்தை, இமையோர் - தேவர், தாரகைத் தலம் - நட்சத்திர மண்டலம், பிரசம் - தேன், பேதையர் - பெண்கள், முயக்கமுற்று - மணந்து.

'அருத்தியில் மணந்த மாதர் ஐவரில் அருந்த வத்தோற்(கு)
ஒருத்தியை யானே ஈந்தேன்; ஒருத்திபோய் அவனோடுற்றாள்
ஒருத்தி ஊண் அற்ற கன்றாள்; ஒருத்திபோய்க்கண் இழந்தாள்
ஒருத்திவிட் டென்னை நீங்கா திருமைக்கும் உறுதி தந்தாள்.

'இப்படி இன்று கண்டேன்! இக்கொடுங் கனவி னாலே
எப்படி விளைவதோ! அஃ துணர்ந்திலேன்! இயம்பும்,' என்ன
அப்படி அரசன் கூற; அடியிணை தொழுது நன்றால்
தப்பற உணர்ந்த கேள்விச் சத்திய கீர்த்தி சொல்வான்:

'அருவினை விளைத்த தெல்லாம் கௌசிகன்; அவனால் இன்னம்
வருவினை மிகவும் உண்டு: வளநகர் நாடி ழந்து
திருவினை இழந்து சேயும் செல்வியும் வேறு வேறாப்
பெருவினை முடிப்பான் தன்னைப் பின்னையாம் வெல்வோம்,' என்றான்.

அனையவை அமைச்சன் கூற, அரசனை அரிவை போற்றி,
'எனை இழந் தாலும் மன்னா! என்வயிற் றுதித்த மைந்தன்
தனை இழந் தாலும் இந்தத் தலம்இழந் தாலும் வெம்போர்
முனையிழந் தாலும் நீதி முறைஒன் றும் இழவேல்,' என்றாள்.

ஆ. செய்யுள் 98.

---

28. அருத்தியில் - விருப்பத்தால், அருந்தவத்தோற்கு - அருமையான தவத்தைச் செய்த ஒரு முனிவனுக்கு, ஊண் - உணவு, இருமைக்கும் - இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய, உறுதி - நன்மையை.

29. என்ன - என்று, சத்திய கீர்த்தி - அரிச்சந்திரன் முதல் மந்திரி.

30. திருவினை - செல்வத்தை, சேயும் - மகனும், செல்வியும் - மனைவியும்.

31. அரிவை - சந்திரமதி, போற்றி - துதித்து, இந்தத் தலம் - இந்த நாட்டை, ஒன்றும் - ஒன்றை மட்டும், இழவேல் - விடாதீர்.

## 5. சூழ்வினைக் காண்டம்

### அறுசீர் விருத்தம்

வென்றிவேல் மன்னன் விட்ட
வெங்கணை தைத்து வாயால்
துன்றிய குருதி சோரச்
சுழன்றுடல் துடிது டித்துக்
குன்றினைக் கடந்து சென்று
கோசிகன் தன்பால் போந்து
பன்றியாய் வந்த மாயம்
பட்டபா டனைத்தும் சொல்லும்: 1

'என்னை ஆ ளுடையாய்! உன்றன்
ஏவலின் படியான் ஏகி
மன்னரும் கரியும் மாவும்
சேனையும் மாளக் கொன்றேன்;
பின்அவன் விட்ட அம்பால்
சுழன்றியான் பிழைத்துப் போந்தேன்;
உன்அருள் உடையேற் கல்லால்
உய்வுண்டோ?' என்ற தன்றே. 2

கோலத்தின் உரையைக் கேளாக்
கோசிகன் வடவைச் செந்தீச்
சீலத்தின் சிவந்த கண்ணன்,
சிந்தையும் அனையன், ஊழிக்

---

1. வென்றி - வெற்றி பொருந்திய, வெங்கணை - கொடிய அம்பு, துன்றிய குருதி - மிகுந்த இரத்தம், போந்து - வந்து, பட்ட பாடு - அனுபவித்த துன்பம்.

2. ஆளுடையாய் - அடிமையாகக் கொண்டவரே, மாவும் - குதிரைகளும், சுழன்றியான் - சுழன்று + யான், போந்தேன் - வந்தேன், உடையேற்கு - உடைய எனக்கு, உய்வு உண்டோ - பிழைப்பு உண்டாகுமோ? அன்றே - அசை.

காலத்தின் கடுங்கால் அன்ன
மூச்சினன், கடலில் தோன்றும்
ஆலத்தின் கிளர்ச்சி அன்ன
கோபத்தன், அழன்றெழுந்தான். 3

பேச்சினில் கிளிபோல் செங்கால்
பெயர்ச்சியில் பெடைபோல் செங்கை
வீச்சினில் மின்போல் சீற்ற
மிகுதியால் முனிவன் விட்ட
மூச்சினில் பிறந்திரண்டு
மோகினி மாதர் ஆழி
நீச்சினில் நிலைத்து நிற்கும்
நீலமென் கொடிபோல் நின்றார். 4

நாவிஅம் கமலத் துற்ற
பிரமனை நகைப்பான் வேண்டி
வாவிஅம் கமல வாசக்
கோசிகன் வாதில் தீட்டும்
ஓவியம் என்ன நீல
ஒதிமம் என்ன நீண்ட
காவிஅம் கண்ணார் காந்தள்
கைதொழு திறைஞ்சி நின்றார். 5

---

3. கோலத்தின் - பன்றியின், கேளா - கேட்டு, சீலத்தின் - தன்மையைப்போல, கடுங்கால் - கடுங்காற்று, ஆலத்தின் - விஷத்தின், கிளர்ச்சி - பொங்குதல், அழன்று - (மனம்) கொதித்து.

4. செங்கால் பெயர்ச்சியில் - செம்மையான கால் நடையில், பெடைபோல் - பெட்டை அன்னம்போலவும், வீச்சினில் - வீசுதலில், மின்போல் - மின்னலைப் போலவும், மோகினி மாதர் - மாயப் பெண்டிர், ஆழி நீச்சினில் - சமுத்திர நீர்ப் பெருக்கில், நீலமென் கொடி - கருங்குவளைக் கொடி.

5. நாவிஅம் கமலத்து உற்ற - (திருமாலின்) உந்தியில் தோன்றிய அழகிய தாமரை மலரில் பொருந்திய, நகைப்பான்-பரிகசித்தற்கு,

தீதிலா மறைகள் நான்கும்
தெளிவுற உணர்ந்த நீர்மைக்
கோதிலாக் குணத்தோர்க் கெல்லாம்
கோபம்சண் டாளம் என்பார்:
ஆதலால், முனிவன் மூக்கின்
ஆரழல் சீற்றத் தூடே
போதலால் அந்த மாதர்
புலைச்சியர் ஆயி னாரே. 6

மாதரை முனிவன் பார்த்து
வரவழைத் திருத்தி, நாநா
பேதமும் எழுத்தும் சொல்லும்
பெருங்கலை இருநா லெட்டும்
கீதமும் நாத யாழும்
கின்னரம் முதல ஆய
போதமும் வாரி நீரில்
கரைத்துடன் புகட்டி னானே. 7

அந்தவே ளையில்அ யோத்தி
அரசனைக் கண்டு மீண்டு
கந்தவார் சடில மௌலிக்
கௌசிகன் தன்னைப் போற்றி,

---

வாதில் திட்டும் - போட்டியால் எழுதிய, ஓவியம் - சித்திரம், ஓதிமம்- அன்னம், காவி - நீலோற்பல மலர் போன்ற, காந்தள் - செங்காந்தள் மலர் போன்ற (நாபி - நாவி ; எதுகை நோக்கிய திரிபு.)

6. மறைகள் நான்கு - (இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும்) நான்கு வேதங்களையும், 'நீர்மை - தன்மையை உடைய, கோதிலா - (கோது+இலா) குற்றமில்லாத, சண்டாளம் - துரோகம், ஆரழல் - மிகுந்த தீப்போன்ற, சீற்றத்தூடே - கோபத்தில், போதலால் - பிறத்தலால், புலைச்சியர் - இழிந்த பெண்டிர்.

7. இருத்தி - இருக்கச்செய்து, நாநா - பல வகையான, இருநாலெட்டும் - அறுபத்து நான்கும், நாத யாழும் - இனிய இசையை எழுப்பும் வீணையும், கின்னரம் - ஒரு வகை வீணை, முதல - முதலியன, போதமும் - ஞானமும், புகட்டினன் - கற்பித்தார்.

'இந்தவா வியிலே மன்னன்
எண்ணருஞ் சேனை யோடும்
வந்தனன்,' என்ன வேத
மாதவர் எடுத்துரைத்தார். 8

[இதைக்கேட்ட விசுவாமித்திரர் மகிழ்ந்து, அம்மகளிரை நோக்கி,]

'பெடைநடை.. மடவீர்! வாவிப்
பெருங்கரை தன்னில் வந்த
படையுடை வேந்தன் பால்போய்ப்
பாடலால் உருக்கி வெற்றிக்
குடையினைக் கொண்மின்; அல்லால்
கொழுநனைக் கொண்மின்,' என்று
விடைகொடுத் திடலும் மாதர்
விரைவினில் தொழுது போனார். 9

[அப்பெண்டிர் அரிச்சந்திரனை அணுகி வணங்கி,]

'யாணர்க்குள் யாண! நின்னை
எய்துதற் கிழைத்த வேதா
வீணர்க்குள் வீணன்; எம்மை
விதித்தஅன் றிந்தி ரற்கும்
வாணர்க்கும் அனந்த ஞர்க்கும்
வாய்த்தவா றேபோல் நின்னைக்
காணற்குத் தொழற்கு வாழ்த்தக்
கண்ணைநாப் படைத்தி லானே! 10

---

8. சந்தவார் சடில மௌலி - வாசனை பொருந்திய நீண்ட சடைமுடியையுடைய.

9. மடவீர் - இளம்பெண்களே, வேந்தன்பால் - அரசனிடம், உருக்கி - (மனம்) உருகச் செய்து, கொண்மின் - வாங்குங்கள், கொழுநனை - கணவனை.

10. யாணர்க்குள் யாண - அழகருள் அழகனே, எய்தற்கு - (நாங்கள் உன்னை) அடைதற்கு, இழைத்த - சிருஷ்டித்த, வேதா - பிரமன்,

'வையம்நின் நகரி; செம்பொன்
வடகிரி நினது பீடம்;
வெய்யவன் நினது தீபம்;
வேலைமஞ் சனநீர்ச் சாலை;
செய்யவள் நினது பாரி;
திங்கள்நின் கவிகை! செவ்வேல்
ஐய!நின் பெருமை எம்மால்
அளவிடற் கரிதே,' என்றார். 11

சொல்லிய மாற்றம் கேளாத்
தோன்றலும் வியந்து நோக்கி,
'வல்லியீர்! யார்கொ லீதூர்தான்?
வந்தவா றேதீண் டெ'ன்றான்;
'அல்லிஅம் தொடையல் மார்ப!
இவ்வனத் தகத்து வாழ்வோம்;
புல்லிய சாதி ஈனப்
புலைச்சியர் யாங்கள் ஐயா! 12

---

வாணர்க்கும்-வாணாசுரனுக்கும், அனந்தனுர்க்கும் - ஆதிசேடனுக்கும், வாய்த்த வாறேபோல் - ஏற்பட்ட விதத்திற்கு ஒப்பாக, (இந்திரனுக்கு ஆயிரங் கண்களும், வாணாசுரனுக்கு ஆயிரங் கைகளும், ஆதிசேடனுக்கு ஆயிரம் நாக்களும் உண்டென்பர்), 'காணற்குக் கண்-தொழற்குக்கை-வாழ்த்த நா' எனப் பொருத்துக.

11. வையம் - உலக முழுவதும், நகரி - நகரமாம், பீடம் - இருக்கை, வெய்யவன் - சூரியன், வேலை - கடல், செய்யவள் - இலக்குமி, பாரி - மனைவி, திங்கள் - சந்திரன், கவிகை - குடை, ஐய - தலைவனே.

12. கேளா - கேட்டு, தோன்றல் - அரசன், வல்லியீர்-பூங்கொடி போன்ற பெண்களே, அல்லி அம் தொடையல் - அக இதழையுடைய அழகிய மலர் மாலை அணிந்த, வனத்தகத்து-காட்டில், புல்லிய-அற்பமான, ஈனம் - இழிவு.

'வேதமா முனிவன் வைகும்
மேதகு சாரல் நின்றுண்
பாதமே பணிந்து நோக்கும்
அருத்தியில் பதறி வந்தோம்;
போதமும் நெறியும் இல்லாப்
புல்லியேம்; நல்லி யாழும்
கீதமும் சிறிது வல்லேம்;
கேள்,' எனுக் கிளத்திப் பின்னர் 13

[தம் கையிலிருந்த மகர வீணையை மீட்டி,]

காவிஅம் கண்ணும் மூடா;
கவர்இதழ் தாமும் கோடா;
வாவிஅம் கமலம் அன்ன
வதனமும் நுதலும் ஏரு;
தூவிஅம் தோகை நல்லார்
சுவரின்மேல் எழுதி வைத்த
ஓவியம் பாடிற் றென்னப்
பாடினார் உருக யாரும். 14

நல்லியல் மகர யாழின்
நாதமும் மிடறும் ஒன்றப்
புல்லிய கீத ஓதை
செவிவழி புகுத லோடும்

---

13. வைகும் - வசிக்கும், மேதகு சாரல் நின்று - மேன்மைபொருந்திய மலைச் சாரலிலிருந்து, அருத்தியில் - விருப்பத்தினால், பதறி - விரைந்து, போதமும் - ஞானமும், நெறியும் - சன்மார்க்கமும், கிளத்தி - சொல்லி.

14. கவர் - பிளவுபட்ட, இதழ் - உதடு, கோடா - கோணலடையா, வதனம் - முகம், நுதல் - நெற்றி, தூவி அம் தோகை - மெல்லிய இறகை உடைய அழகிய மயிலைப்போன்ற, நல்லார் - பெண்கள், 'யாரும் உருகப் பாடினார்,' என இயைக்க.

15. நல்லியல் - நல்ல இலட்சணம் வாய்ந்த, மிடறும் - கண்டத்

வல்லியர் தம்மை நோக்கி
மலர்த்திருக் கரம்அ மைத்து.
மெல்லியல் தானும் வெற்றி
வேந்தனும் மிகம கிழ்ந்தார். 15

மணியொடு கடகம் செப்பொன்
வளைஎரி மணிப்பொன் ஆரம்
அணிதுகில் பிறவும் நீட்டிக்
'கொண்ம்,'என அளித்த லோடும்,
'பணிகளும் துகிலும் பொன்னும்
பெறற்கியாம் படர்ந்தேம் அல்லேம்;
திணிசுடர் முடியாய்! யாங்கள்
தேடிய பரிசில் கேளாய்: 16

'ஏத்திய பரிசி லாளர்க்
கெண்ணிய அனைத்தும் நல்கும்
பார்த்திவ! இவையெ லாம்நின்
திருவுளப் படியால் உள்ளேம்;
மூர்த்திகள் மூவர்க் காகும்
முடிபுனை அந்நா ளேநீ
சாத்திய தவளக் கொற்றக்
கவிகையைத் தருதி,' என்றார். 17

---

தொனியும், ஒன்ற - பொருந்த, புல்லிய தழுவிய, ஓதை - ஓசை, திருக் கரம் அமைத்து - ஆசீர்வதித்து, மெல்லியல் தானும் - சந்திரமதியும்.

16. கடகம் - கங்கணம், வளை - வளையல், எரி மணி - இரத்தினம், அணி துகில் - அணியும் ஆடை, பிறவும் - மற்றவைகளும், நீட்டி - கொடுத்து, கொண்ம் - பெற்றுக்கொள்ளுங்கள், பணிகளும்-ஆபரணங் களும், பெறற்கியாம் - பெறற்கு + யாம், படர்ந்தேம் - வந்தோம், திணி - நெருங்கின, பரிசில் - வெகுமானத்தை.

17. பரிசிலாளர்க்கு-யாசகர்க்கு, நல்கும்-கொடுக்கும், பார்த்திவ - அரசனே, உள்ளேம் - நினைக்கமாட்டோம், ஆகும் - விருப்பமாகிய, தவளம் - வெண்ணிறம் பொருந்திய, கொற்றக் கவிகையை - வெற்றியை உடைய குடையை, தருதி - தருவாயாக.

'பழிவழி ஒழுகா நீதிப்
  பானுவின் குலத்து வேந்தர்
வழிவழி வந்த கொற்றக்
  கவிகையை வழங்க மாட்டேன் ;
விழிவழி கண்ட வேறு
  கவிகையை விளம்பில் உங்கள்
மொழிவழி தருவேன்,' என்று
  மொழிந்தனன் மன்னர் கோமான்.

[மன்னன் இங்ஙனம் கூறலும், மகளிர் தம்மை மணந்துகொள்ளுமாறு அவனை வேண்டினர்.]

வாட்பொரு கண்ணார் கூற,
  மந்திரத் தலைவன் சொல்வான் :
'வேட்பன இல்லை என்னு
  மெய்ந்நெறி வேந்தன் தன்பால்
கேட்பன அறிந்து மக்குக்
  கிடைப்பன உணர்ந்து கேளீர் ;
சேட்பட நில்லும்,' என்னத்
  தெரிவையர் செப்ப லுற்றார் : 19

'முன்பியாம் கருதி வந்த
  முழுமணிக் குடையும் நல்காய் ;
பின்பியாம் குறித்த இன்பப்
  பெரும்பயன் தானும் தாராய் ;

---

18. ஒழுகா - நடவாத, பானு - சூரியன், வழி வழி - பரம்பரையாக, விளம்பில் - (தரச்) சொன்னால், மொழி வழி - சொல்லின்படியே, மன்னர் கோமான் - சக்கரவர்த்தி.

19. வாட்பொரு - (வாள் + பொரு) வாளாயுதத்தை ஒத்த, மந்திரத் தலைவன் - சத்தியகீர்த்தி, வேட்பன - (பிறர்) விரும்புவனவற்றை, என்னு - என்று சொல்லாத, சேட்பட - (சேண் + பட) தூரத்தில், தெரிவையர் - பெண்கள்.

20. முன்பியாம் - முன்பு + யாம், பின்பியாம் - பின்பு + யாம், இன்

அன்பியாம் உன்மேல் வைத்த(து)
அவத்திலே போன தந்தோ!
வன்பியாம் உன்பால் கண்டோம்;
வள்ளன்மை கண்டி லேமால்.' 20

'கொடுப்பன கொடுப்ப தல்லால்
கொடாதன கொடுக்க மாட்டார்;
விடுப்பன விடுப்பர்; என்றும்
விடாதன விடவு மாட்டார்;
தொடுப்பன தொடுத்து நும்மால்
சொல்வன சொல்லி நுங்கட்(கு)
அடுப்பன கொண்மின்; அல்லால்
அகன்மின்,' என் றமைச்சன் சொன்னான். 21

'வள்ளல்என் றடைந்தோம் உன்பால்;
வந்திரந் தோர்க்கொன் றீயாக்
கள்ளனென் றறிந்தால் இங்கு
வருகலம் கண்டாய்!' என்றார்;
உள்ளமும் கண்ணும் செந்தீ
உருத்தெழச் சினந்து வேந்தன்,
'தள்ளும்!' என் றருளிச் செய்தான்
வினைவது தன்னை ஓரான். 22

பப் பெரும்பயன் - திருமணம், அன்பியாம் - அன்பு + யாம், அவத்திலே - வீணிலே, வன்பியாம் - வன்பு + யாம், வன்பு - கொடுமை, வள்ளன்மை - தரும குணத்தை, ஆல் - அசை.

21. தொடுப்பன தொடுத்து - ஆலோசிக்க வேண்டுவனவற்றை ஆலோசித்து, சொல்வன - சொல்லத் தகுந்த சொற்களை, அடுப்பன - பொருத்தமானவற்றை, கொண்மின் - பெற்றுக்கொள்ளுங்கள், அகன்மின் - அப்பாற்செல்லுங்கள்.

22. வருகலம் - வரமாட்டோம், சினந்து - கோபித்து, ஓரான் - நினையாதவனாய், 'வேந்தன், வினைவது தன்னை ஓரான்...அருளிச்செய்தான்,' என இயைக்க.

பார்த்திவன் உரைப்பக் கேட்டுப்
பப்பரர் நெருங்கிச் சீறித்
தீத்திரள் செங்கண் சிந்த
நூக்குவான் செல்ல, ஏங்கிக்
காத்திரம் நடுங்கக் கையும்
கால்களும் நடுங்க, மார்பில்
சேர்த்திய யாழும் போகட்(டு)
இரிந்தனர் திசைம யங்கி. 23

ஆறுகொண் டோடார் செல்ல
அடவியில் சென்று மேனி
மாறுகொண் டுதிரம் சிந்த
மஞ்சினைப் பழித்த கூந்தல்
தூறுகொண் டீர்க்கச் சோர்ந்த
துகில்கிழிந் தகலச் சாப
வீறுகொண் டேவி விட்ட
முனிவன்முன் வீழ்ந்தார் வந்து. 24

ஷை வேறு

மண்டலம் தனில்இழுப் புண்டசெந்
துகில்களும் மாற டித்த
புண்டனில் பொழிபசுங் குருதியும்
துவர்இதழ்ப் பொரும லும்தான்

---

23. பப்பரர் - பப்பர தேசத்து வீரர், சீறி - கோபித்து, நூக்குவான் - (அப்பெண்களை அப்பால்) தள்ளுவதற்காக, காத்திரம்-உடல், சேர்த்திய - சார்த்தியிருந்த, போகட்டு - போட்டுவிட்டு, திசை மயங்கி இரிந்தனர் - திசை அறியாமல் ஓடினர்.

24. ஆறு கொண்டு ஓடார் - வழியை அறிந்து ஓடாதவர்களாய், அடவி - காடு, மேனி - உடல், மஞ்சினை - மேகத்தை, பழித்த - (கரிய நிறத்தால்) அவமதித்த, தூறு - புதர், ஈர்க்க - இழுக்க, சோர்ந்த துகில் - அவிழ்ந்த ஆடை, சாப வீறு - சாப வல்லமை.

25. மண்டலம் - பூமி, குருதி - இரத்தம், துவர் இதழ்ப் பொரும

கண்டனன் கௌசிகன்; கடையுகக்
கனல்எனக் கடிய கோபம்
கொண்டனன்; 'வந்தவா றேஎ'னக்
கோதைமார் கூற லுற்றார்: 25

'ஐய! கேள் நின்னருள் படியினால்
அரசன்மாட் டணுகி நின்றே
பையஏழ் இசைகளும் பாடி,நீ
சொன்னஅப் பரிசு ரைத்தேம்;
கையன்எங் களைஅடித் துமர்எனச்
செய்தஅக் கண்ட னத்தால்
உய்யவும் போகுமோ! உரையும்உண்
டோ!எமக் குயிரும் உண்டோ!' 26

எனவுரைத் திடவெயர்த் திடியிடித்
தெனநகைத் திருக ணாலும்
கனல்தெறித் திருபுடைக் கடம்அனைத்
தும்புகை கடிது மூடச்
சினம்மிகுத் திறைவனுக் கிடர்விளைத்
திடுவதே செயல்என த்தன்
மனம்நினைத் தருமறைத் தவமுனித்
திரள்உடன் வரநடந்தான். 27

---

லும்- சிவந்த உதடுகள் துடித்தலையும், கடையுகம்-உலக முடிவு காலம், கோதைமார் - பெண்கள்.

26. அரசன் மாட்டு - அரசனிடம், பைய - மெள்ள, ஏழ் இசை- (குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும்) ஏழு வகையான இராகங்கள், அப்பரிசு உரைத்தேம்- அவ்விதமே சொன்னோம், கையன் - கீழ் மகன், அடித்துமர் என - அடித்து+உமர் என, உமர் - உம்முடைய பெண்கள், கண்டனத்தால் - நிராகரிப்பினால், உய்யவும் போகுமோ - தப்பவும் முடியுமோ, உரையும் - (நாங்கள் சொல்ல வேறு) சொல்லும்.

27. கனல் தெறித்து - தீப்பொறி சிதறி, இருபுடை - இருபக்கங்களிலுமுள்ள, கடம் அனைத்தும் - காடு முழுவதும், திரள் - கூட்டம்.

கரதலத் திடும்எழில் குசைவிதிர்ப்
புறஇணைக் கழல்வ ருந்தப்
பரவுபொன் தடமலர்ச் சடைவிரிந்
தகல்பெரும் படியில் நாலச்
சுரர்மிகப் பரதவித் தபயமிட்
டலறிடச் சுவண வெற்பால்
புரமெரித் திடவரும் புனிதன்ஒத்
தணிமலர்ப் பொய்கை புக்கான். 28

[விசுவாமித்திரரைக் கண்டதும் அரிச்சந்திரன் அஞ்சி,]

'உருமிடித் தனஎனச் சினமிகுத்
திகல்செயற் குறுவ தற்குக்
கருமிடற் றவன்அலேன்! கடல்பிறத்
தவன்அலேன்! கமலன் அல்லேன்!
கிருமியின் கடையனும் எளியனே
வலன்!'எனக் கெழுமை அன்புற்(று)
இருமலர்க் கழல்களைக் கரமுறத்
தழீஇநிலத் திடைகி டந்தான். 29

28. கரதலத்து இடும் - கையிலுள்ள, எழில் குசை - அழகிய தருப்பை, விதிர்ப்புற - நடுங்க, இணைக்கழல் - இரண்டு பாதங்களும், படியில் நால - பூமியில் தொங்க, சுரர் - தேவர், சுவணவெற்பு - பொன் மலை, புனிதன் – சிவன், பொய்கை புக்கான் - (அரிச்சந்திரன் பரிவாரத்தோடு தங்கியிருந்த) குளக்கரையை அடைந்தார்.

29. உரும் இடித்தன என - இடிகள் இடித்தன எனும்படி, இகல் செயற்கு உறுவதற்கு - (என்னுடன்) சண்டை செய்ய வருதற்கு, கருமிடற்றவன் - சிவபெருமான், கடல் பிறந்தவன் - திருமால், கமலன் - பிரமன், கிருமியின் - புழுவைவிட, வலன் - (உம்மோடு சண்டையிட) வல்லவன், கெழுமை அன்பு உற்று - நிறைவாகிய அன்பு கொண்டு, தழீஇ - தழுவி, நிலத்திடை கிடந்தான் - பூமியில் விழுந்து வணங்கினான்.

கரமுறத் தழுவலும் கௌசிகப்
　　பெயரினன் கால்ப றித்தே
சிரமிசைத் திருமுடிச் சுடர்மணித்
　　தொகைகள்பல் திசைதெ றிக்க
உரமிசைப் பணிதெறித் திடஉதைத்
　　தனன் ;உதைத் திடலும், 'உன் றன்
மருமலர்க் கழல்சிவப் புறும் !' எனுக்
　　கைகளால் வருடல் உற்றான். 30

'குடியினில் பிழைஇழைத் திலம் ! உனக்
　　கடிமையில் குறையும் இல்லேம் !
இடியிடித் தனஎனச் சினம்மிகுத்
　　திடைவிடா தெனை உதைத்த
அடிவடுப் படும்எனக் கவலுகிற்
　　பதைஒழிந் தைய ! என் றன்
முடிவடுப் படும்எனக் கவல்கிலேன் !
　　வெகுளிஎன் ? மொழிதி,' என்றான். 31

[அது கேட்ட விசுவாமித்திரர்,]

'மாவினைத் துணிசெய்தாய் ! கேழலுக்
　　கிடர்செய்தாய் ! வான்அ ளாவும்
காவினைப் பொடிசெய்தாய் ! நீதியால்
　　ஈன் றஎன் காதல் மக்கள்

---

30. கால் பறித்து-காலை உதறிப் பிடுங்கிக்கொண்டு, பல் திசை-பல திக்குகளிலும், உரம்மிசைப் பணி-மார்பிலணிந்திருந்த ஆபரணம், மரு மலர்க் கழல் - வாசனை பொருந்திய தாமரை மலர் போலும் பாதங்கள், சிவப்புறும் - கன்றிவிடும், வருடல் உற்றான் - தடவினான்.

31. குடியினில்-(உமக்குக்) குடியாய் இருப்பதில், இழைத்திலம்-(நாங்கள்) செய்யவில்லை, அடி-பாதங்களில், வடுப்படும்-காயமுண்டாகும், கவலுகிற்பதை ஒழிந்து – வருந்துவதை விட்டு, முடி - தலையிலே, கவல்கிலேன் - (யான்) வருந்தவில்லை, வெகுளி என் - (என் மீது நீங்கள் கொண்ட) கோபத்திற்குக் காரணம் என்ன ? மொழிதி - சொல்க.

32. மாவினை - பல மிருகங்களை, துணி செய்தாய்-வெட்டி வீழ்த்

பாவினைப் பழிசெய்தாய்! தீவினைக்
குரியவோர் பாவி நீதான்
ஆவின்நல் தோல்பொதிந் தடுபுலித்
தொழில்செய்தாய்! அழகி'தென்றான். 32

'நாடழித் திடினும்நல் நகரழித்
திடினும்என் நறுமலர்ப்பூங்
காடழித் திடினும்நீள் கால்அறக்
கிளையினைக் களையினும்கொன்(று)
ஈடழித் திடினும்நீ தான்விடுத்
தனைஎனா யான்அறிந்தால்
பாடிழைத் திடுவனோ!' என்றரிச்
சந்திரன் பலமொழிந்தான். 33

'சிறியரானவர்தமக் குரியவே
அல்லவோ தீமை? நன்னூல்
அறிஞரானவர்தமக் கல்லவோ
பொறை? பிறர்க்காகுமோதான்?
நெறியிலா வினையினேன் ஒருவனைப்
பொருளதா நீமுனிந்தால்
பொறையும்நின் அருளும்என் அளவிலோ
இலஎனப் போன!' என்றான். 34

---

திறைய், கேழலுக்கு - பன்றிக்கு, காவினை - (என்) பூஞ்சோலையை, பொடி செய்தாய் - அழித்தாய், காதல் மக்கள் - அன்புக்குரிய பெண்கள், பாவினை - பாட்டை, ஆவின் - பசுவின், பொதிந்து - மூடி, அடுபுலி - கொல்லும் புலியின், அழகிது - (உன் செய்கை மிகவும்) அழகானது!

33. கால் அற - வமிசம் அற்றுப்போகும்படி, கிளையினை - (என்) உறவினரை, களையினும் - அழித்தாலும், ஈடு அழித்திடினும்-(என்) பெருமையை அழித்தாலும், பாடிழைத்திடுவனோ - பாடு + இழைத்திடுவனோ, பாடு - துன்பம்.

34. நன்னூல்-நல்ல சாஸ்திரங்களைக்கற்ற, பொறை-பொறுமை,

'மடித்தவா யினன்மிகக் கொதித்தநெஞ்
சினன்எதிர் மறுத்து, 'நீதான்
படித்தவா சகம்எலாம் எனக்குநீ
பிதற்றிடற் பாலவோதான்?
வடித்தஏழ் இசைநினக் கிசைக்கவே
வந்தஎன் மக்கள் தம்மை
அடித்தகா ரணம்எலாம் எனக்குநீ
தக்கவா றறைதி,' என்றான். 35

### கலி விருத்தம்

'மீண்டும் மன்னவன் வேதியன் தாள்கரம்
பூண்டு வாயில் புனல்வறந் தற்றிட,
'ஆண்ட நாயக! இம்முனி வாற்றிடல்
வேண்டும்; யான்அது விண்ணப்பம் செய்வனால்: 36

'இக்க ருங்குழல் ஏழையர் தம்மைநின்
மக்கள் என்பது ணர்ந்திலம் மாதவ!
தக்க வாறுரை யாமையின் தள்ளினேம்;
புக்க திது;பொ றுத்தருள் நீ,'என்றான். 37

---

நெறி இலா வினையினேன் - நீதி மார்க்கம் அறியாத பாவியேனுடைய, பொருளதா - ஒரு பொருளாகக் கொண்டு, போன - போய்விட்டன.

35. பிதற்றிடற்பாலவோ - உளறத் தக்கவைகளோ, வடித்த - ஆராய்ந்து கற்ற, அறைதி - சொல்வாயாக.

36. வேதியன்-(தவத்தால்) பிரம ரிஷியான விசுவாமித்திரரின், தாள் - பாதங்களை, கரம் பூண்டு - (தன்) கைகளால் பற்றிக்கொண்டு, புனல் - நீர், ஆண்ட - (எங்களை) அடிமை கொண்ட, இம்முனிவு ஆற்றிடல் வேண்டும்-இக்கோபந் தணிதல் வேண்டும், விண்ணப்பம் செய்வன் - தெரிவிப்பேன், ஆல் - அசை.

37. ஏழையர் - பெண்டிர், புக்கதிது - (புக்கது+ஈது) நேரிட்ட செய்தி இது.

[அது கேட்ட விசுவாமித்திரர்,]

‘கழுத்த ரிந்திது கைபிழை வந்ததென் (று)
அழுத்த மாக உரைத்தனை ! ஆதலால்,
பழுத்த நல்லறி வுற்றுனைப் பற்றிய
ஒழுக்கம் என்றுளம் உட்கிடக் கூறினாய். 38

‘இரப்ப வர்க்கொன் றிலையெனில் யாரையும்
கரப்ப வர்க்குறு கட்டுரை கூறுவர் ;
புரப்ப வர்க்குப் பொறுத்தல்அல் லால்அடித்(து)
உரப்ப லும்தகு மோ?’என்று ருத்தனன். 39

[அது கேட்ட கோமகன் மிகவும் அஞ்சினவனாய்,]

‘மைகு லாவுகண் மாதரை மோதிய
கைகு றைக்கினும் கண்ணினைச் சூலினும்
மெய்கு றைக்கினும் வேண்டிய வாறுநீ
செய்க,’ என்ன, மறைமுனி செப்புவான் : 40

‘கொய்து மாக்களைக் கொன்றதும், பன்றியை
எய்த தும்,இசை கேட்டடித் தினமாய்
வய்த தும்,என்றன் மக்களை நீமணம்
செய்தி டின்பொறுப் பேன்,’என்று செப்பினான். 41

‘நிலத்தில் யாரும் நெறிஅல செய்திடின்
விலக்கும் நீஇவை என்கண் விளம்பல்என் ?

---

38. உட்கிட - அஞ்சும்படி.

39. யாரையும் கரப்பவர்க்கு-எவரையும் ஏமாற்றுபவருக்கு, உறு கட்டுரை - பொருந்திய நயமான வார்த்தைகளை, கூறுவர் - (உலகத்தார்) சொல்லுவர், புரப்பவர்க்கு - அரசர்க்கு, உரப்பலும் - அதட்டித் துரத்துதலும், உருத்தனன் - கோபித்தார்.

40. குலாவு - விளங்குகின்ற, மோதிய - அடித்த, குறைக்கினும்- வெட்டினாலும், சூலினும் - தோண்டினாலும், மெய் - உடலை.

41. மாக்களை - மிருகங்களை, வய்ததும்-(வைததும்) திட்டியதும்.

புலைக்குலத்தொடு மன்னர் பொருந்துதல்
நலத்ததோ?' என்று நாயகன் கூறினன். 42

'மலையில் வைகும் வசிட்டன் சபித்தலால்
புலையன் ஆனவன் மைந்த! இப் பூவையர்
விலையிலாமணம் வேற்றுமையோ?' எனக்
கலையுணர்ந்த கவுசிகன் கூறினன். 43

[அது கேட்ட அரிச்சந்திரன்,]

'அற்றை ஞான்றெம தையன் வசிட்டனால்
பெற்ற சாபப் பெரும்புலை தீர்த்தனை!
இற்றை ஞான்றிங் கெனைப்புலை ஆக்க நீ
கற்றதே'தெனக் கால்கரம் பூண்டனன். 44

[அது கேட்ட விசுவாமித்திரர்,]

'முன்னம் உந்தை முழுப்புலை நீக்கினம்:
இன்னம் நீக்கல் எமக்கரி தன்று; யாம்
சொன்ன வாசகம் கேட்டுச் சுடர்முடி
மன்னர் மன்ன! எம் மக்களைச் சேர்'கென்றான். 45

[அது கேட்ட அரிச்சந்திரன்,]

'அடினும், நின்விழி ஆரழலால் எனைச்
சுடினும், என்னுடல் தன்னைத் துறந்துயிர்

---

42. நிலத்தில் - உலகில், நெறி அல - நீதியல்லாத காரியங்களை, என்கண் - என்னிடம், நலத்ததோ - நன்மையுடையதோ?

43. வைகும் - வசிக்கும், புலையன் ஆனவன் - திரிசங்கு மன்னன், மைந்த - மகனே, பூவையர் - பெண்கள், விலையிலா - விலையில்லாத (எளிதில் கிடைக்கத் தகுந்த), வேற்றுமையோ - வித்தியாசமானதோ?

44. அற்றை ஞான்று - அந்நாளில், ஐயன் - குருவாகிய, பெரும் புலை - பெரிய இழிவை, புலை ஆக்க - இழிந்தவன் ஆக்க, கற்றது ஏது - யோசித்தற்குக் காரணம் என்ன? கரம் - (தன்) கைகளால்.

45. உந்தை - உன் தந்தையின், சேர்கென்றான் - சேர்க என்றான்.

விடினும், மேனியை வெட்டி அரிந்துகூ(று)
இடினும், இச்சொற் கிசைகிலன் யான்,' என்றான். 46

'யூப வேள்விக் கௌசிகன் ஓய்விலாக்
கோபம் எய்தி, 'கொடிஇடை மங்கையர்
தாபந் தன்னைத் தணிக்கிலை ஆயின், என்
சாபம் நீபெறு' கென்றுரை சாற்றினான். 47

[அது கேட்ட அரசன்,]

'கூற்றம் உண்ணக் கொடுத்தெம தாருயிர்
தோற்றல் நன்றுநன்' றென்று துணிந்து, 'நின்
சீற்றம் ஆறிடச் செப்பிடும் சாபம்யான்
ஏற்றனன்; இடு' கென்ன இயம்பினான். 48

[அது கேட்ட முனிவர், மன்னன் பொறுமையை வியந்தனர்; எனினும், தாம் இந்திர சபையில் கூறிய சபதம் பொய்க்குமென்றெண்ணி, மன்னனை நோக்கி,]

'துடிம மருங்குல் அத் தோகையர் தங்களைக்
கடிம ணம்செயல் தீதென்ற கள்வனே!
குடிமை செய்யும் கொடும்புலை யற்குநீ
அடிமை ஆவை! அறிதி!' என் றோதினான். 49

[அது கேட்ட மன்னன்,]

'கொஞ்சிப் பேசும் குழவிசொல் குற்றத்தால்
வஞ்சித் தன்னை வழங்கும்நல் பாலினில்

46. அடினும்-(என்னை) அழித்தாலும்.

47. யூப வேள்வி-தூண்களை நட்டு யாகம் செய்கின்ற, தாபந் தன்னை-(மன) வேட்கையை, பெறுகென்றுரை-பெறுக + என்று + உரை.

48. கூற்றம்-யமன், இடுகென்ன-இடுக + என்ன.

49. துடி-உடுக்கையைப் போன்ற, மருங்குல்-இடுப்பை உடைய.

50. குழவி-குழந்தையின், வழங்கும்-(அப்பிள்ளைக்குக்) கொடுக்கும், நஞ்சு இட்டால் - விஷங் கலந்தால்.

நஞ்சிட் டால்,அதை நாடிவி லக்கும்நல்
நெஞ்சத் தார்உள ரோஇந்நி லத்திலே? 50

'வாரி காய்ந்து கொதித்திடின் மாற்றத்தண்
ணீரி யாவர் தருவர்? அந் நீதியில்
சீரி யாய்! எனை நீமிகச் சீறிடின்
யாரி யார்அஞ்சல் என்பவர்?' என்றனன். 51

[அது கேட்ட முனிவர் பின் வருமாறு கூறினார்:]

'அன்னை என்பை! அருந்துணை என்பை! உன்
முன்னை வாழ்வும் முதல்வனும் என்பை! மற்(று)
என்னை இப்படி வெல்பவன் இச்சமர்த்(து)
உன்னை அல்லது கண்டிலன்! உண்மையே!' 52

[அது கேட்ட அரிச்சந்திரன்,]

'கண்ணை வேண்டினும் ஈகுவன்; காக்கின்ற
மண்ணை வேண்டினும் வாழ்வுடன் ஈகுவன்;
பண்ணை வேண்டிய செஞ்சொல் பறைக்குலப்
பெண்ணை வேண்டிலன் யான்!' என்று பேசினான். 53

[அது கேட்ட முனிவர் மகிழ்ந்து,]

'மருவும் நாடும் வளநக ரும்பெருந்
திருவும் ஈகுவன் என்றனை செவ்வியோய்!
'தருவன்,' என்ற மொழிதவ றாமல்உன்
அரச ளிக்கின்அ மையும்,' எனச்சொன்னான். 54

---

51. வாரி - கடல், சீரியாய் - சிறந்த முனிவரே, அஞ்சல் - பயப்படாதே.

52. என்பை - என்று கூறுவாய், இச்சமர்த்து - இந்தச் சாமர்த்தியத்தையுடைய.

53. பண்ணை - இசையை.

54. மருவும் - (நீ) தங்கிய, திரு - செல்வம், செவ்வியோய் - நற்குணம் வாய்ந்தவனே, அமையும் - போதும்.

அந்த ணுளனை நோக்கிஅவ் வண்ணலும்,
உந்தம் மக்கள் உறுநலன் வேண்டிலேன் ;
எந்தம் நாடும் இருநிதிக் குப்பையும்
தந்த னன்;மொழி தப்புவ தில்,'என்ருன். 55

[முனிவர், 'அங்ஙனமாயின், தாரை வார்த்துத்தா,' என்றனர்.]

'வையம் நின்னது ; மாநகர் நின்னது;
வெய்ய வாசியும் வேழமும் நின்ன;பொன்
செய்ய தேர்களும் செல்வமும் சேவிக்கும்
தையலார்களும் தானையும் நின்னவே.' 56

என்று மன்னன் இயம்பிஇ றைத்தநீர்
அன்று கௌசிகன் அங்கையின் ஏற்றபின்
நின்ற மாதவர் தங்களை நேர்குறித்(து),
'இன்று நீர்எழுந் தார்த்திடும்,' என்றனன். 57

சந்தக் கலித்துறை

கோசிகன் இன்னே கூறிய பின்,'கூ கூ!'என்றே
ஆசிகள் சொன்னார் ; ஆடினர் ; ஆர்த்தார் ; அணிஆடை
வீசினர் ; 'நீயே மேன்மகன் !' என்று மென்மேலும்
பேசினர் ; பேசி மாசனர் நேசம் பெரிதுற்ருர். 58

'வாரண மும்திண் தேர்பரி தேசம் வளன்எல்லாம்
ஆரணம் ஓதும் கௌசிக னுக்கா யின,'என்றே

---

55. உந்தம் - உம்முடைய, உறு நலன் — பெரிய இன்பத்தை, இருநிதிக் குப்பை - பெருஞ்செல்வக் குவியல், தப்புவது இல் - தவறுவது இல்லை.

56. வையம் - நாடு, வெய்ய வாசி - கடுவேகமுடைய குதிரைகள், வேழம் - யானை, நின்ன - உன்னுடையவை, செய்ய - செம்மையான, சேவிக்கும் தையலார்கள் - தொண்டு புரியும் பெண்கள், தானை— சேனை.

57. அங்கையின் - உள்ளங்கையில்; ஆர்த்திடும் - ஆரவாரியுங்கள்.

58. இன்னே - இப்படி, ஆசிகள் - வாழ்த்துரைகள், அணி ஆடை - அழகிய காவி வஸ்திரங்களை, மாசனர் — மகா ஜனங்கள்.

பூரண கும்பம் வீதிகள் தோறும் பொலிவித்துத்
தோரணம் இட்டார் தாரணி எங்கும் துறவோரே. 59

மென்னடை அன்னம் நன்னடை யாளை விறலானை
முன்னடை யாநின் றின்னவை பின்னும் முனிகூறும் :
'என்னகர் நின்றே இவ்வுல கெல்லாம் யான்ஆள
நின்னடை யாளம் தந்திடு மாறு நெறி,' என்றான். 60

'வாழிய! நாடூர் செல்வம் அமைச்சன் மாசேனை
சூழிநெ டுங்கைப் போர்மத வேழம் துரகம்தேர்
ஊழியின் மட்டும் ஆளுதி; தந்தேன் உலெ'தன்றே
ஆழி அளித்தான் பார்உள மட்டும் அழியாதான். 61

'குடைதந் தேன்;நீள் கொடிதந் தேன்;என் குழுவாய
படைதந் தேன்;நற் கனகத் திண்டேர் பரிதந்தேன் ;
தடைதந் தேன்;இன் றடியேன் ஏகத் தவனே! நீ
விடைதந் தேகெ'ன் றடிமேல் பரவி வீழ்வானை 62

துணியும் தனிநெஞ் சுடையான், 'நினது தோள்மாலை
மணியும் வளையும் வலயங் களும்நின் வடிவாளும்

---

59. வாரணம் - யானை, பரி - குதிரை, ஆரணம் - வேதத்தை, ஆயின - (உரியவை) ஆயின, பொலிவித்து - விளங்கச் செய்து, தாரணி - நாடு, துறவோர் - முனிவர்கள்.

60. முன் அடையா - முன் அடைந்து, கூறும் - கூறுவான்.

61. வாழிய - (நீர்) வாழக்கடவீர், சூழி நெடுங்கை - முக படாத்தையும் நீண்ட துதிக்கையையுமுடைய, துரகம்-குதிரை, ஊழியின் மட்டும் - யுகாந்த காலமளவும், ஆளுதி - ஆள்வீராக, ஆழி - மோதிரத்தை, பார் உள மட்டும் அழியாதான் - பூமி உள்ள வரையில் அழியாத புகழை உடைய அரிச்சந்திரன்.

62. குழுவாய - கூட்டம் ஆகிய, கனகம் - பொன் மயமான, தடை தந்தேன் - தடை கூறுவதும் விட்டேன், ஏக - (இந்நகர் நீங்கிச்) செல்ல, தவனே - முனிவரே, தந்தேகு - தந்து+ஏகு, பரவி-துதித்து, வீழ்வானை - விழுந்த அரிச்சந்திரனை.

அணியும் முடியும் சேயும் தாயும் அணியும்பொன்
பணியும் கழலும் தந்தே'னென்று பலசொன்னான். 63

'எத்துக் கிவை?' என் றணிமா முடியும் வடிவாளும்
புத்திப் புதல்வன் பூணும் பணியும் புனைமாதின்
பத்திக் கிரணப் பணியும் கனகப் பணியும்வெண்
முத்தின் பணியும் கழியா முனிவன் முனம்உய்த்தான். 64

'உனையும் மடமா தினையும் அரசே! உன்மைந்தன்
தனையும் விடுதற் கணியும் பணிநீ தந்தாய்காண்!
வனையும் கழலாய்! மகனும் நீயும் மடவாளும்
புனையும் கிரணக் கலைதந் தகலப் போ,' என்றான். 65

'ஆரை இரப்போம் ஆடை அளித்தால் அரனே!' என்(று)
ஊரை அளித்த காவலன் நின்றே உயிர்சோரும்
தாரை நினைத்தே கௌசிகன் ஆங்குத் தான்மூடும்
சீரை கிழித்தே மூவகை இட்டுச் செலவுய்த்தான். 66

காவிச் சீரை உடுத்துக் கூறை கழித்துச்சென்(று)
ஆவிக் காகுலம் ஆகச் சேனை அழுங்கப்போய்ப்

---

63. தனி செஞ்சடையான் - விசுவாமித்திரர், வலயங்களும் - தோளாபரணங்களும், வடி - கூர்மையான, முடி - கிரீடம், சேயும் - பிள்ளையும், தாயும், - (அப்பிள்ளையின்) தாயாகிய சந்திரமதியும், பணியும் - ஆபரணமும், கழலும் - வீர கண்டையும்.

64. எத்துக்கு இவை - இவை (நமக்கு இனி) எதற்காக, பத்திக் கிரணம் - தொகுதியான பிரகாசத்தையுடைய, கனகப்பணி - பொன்னாபரணம், கழியா - (உடலிலிருந்து) கழித்து, உய்த்தான் - வைத்தான்.

65. வனையும் - அணிகின்ற, மடவாளும் - சந்திரமதியும், புனையும் - அணிகின்ற, கிரணக் கலை - ஒளி பொருந்திய ஆடைகளை.

66. இரப்போம் - யாசிப்போம், அரனே - சிவனே, தாரை - கண்ணீர், சீரை - காவி வஸ்திரத்தை, மூவகை இட்டு - மூன்று துண்டாக்கி, செல உய்த்தான் - (உடுத்திப்) போகச் செய்தார்.

67. கூறை - வஸ்திரத்தை, ஆவிக்கு ஆகுலம் ஆக - உயிருக்குத்

பாவிக் கோசிக ஞர்முன் ஞல்ஒரு பால்வைத்துத்
தாவித் தாளிணை பூசித் தே'விடை தா,' என்ருன். 67

[முனிவர் மன்னனை நோக்கி,]

'செந்தேன் ஓடும் தண்பணை சூழும் திருநாடா!
வந்தே நானும் மாமுனி வோரும் வளர்வேள்விக்(கு)
உந்தேம் நண்ணிஇ ரந்தப சும்பொன் உளஎல்லாம்
தந்தே போவாய்,' என்றிறை யோனைத் தடைசெய்தான்.

[அரசன் முனிவரைப் பின் வருமாறு வினவினன்:]

'முன்னம் உனக்குச் சொன்ன திறத்தின் மொழிமாறி,
அன்னது கைக்கொண் டிந்நிதி தந்தேன் அல்லேன்யான்;
நன்னக ரோடு பொன்உள முற்றும் நனிதந்தேன்;
இன்னம் உனக்குப் பொன்தர என்பால் இடமுண்டோ?'

[அது கேட்ட முனிவர் அரசனை நோக்கி,]

'தாருட னேசெந் தாமரை யாள்சேர் தடமார்பா!
யாருட னேஇம் மோசம்உ ரைப்பாய் அறிவில்லாய்!
ஊருட னேமுன் கூறிய பொன்னும் உடன்என்றே
நீருட னேநீ பேசிஅ ளித்த நெறியுண்டோ? 70

'சொன்னது மாருர் பானுகு லத்தின் தொல்வேந்தர்;
அன்னது காணும் நின்னிடை!' என்ருன்; அதுகேளா,

---

துன்பமுண்டாக, அழுங்க-வருந்த, ஒரு பால் - ஓரிடத்தில், பூசித்து - பூசை செய்து.

68. தண்பணை-குளிர்ந்த வயல்கள், உந்தேம்-(உம்+தேம்) உம்மிடத்தை, இறையோனை - அரசனுயிருந்த அரிச்சந்திரனை.

69. திறத்தின் - வாக்குறுதியின், அன்னது - (உம் வேள்விக்குத் தரச் சம்மதித்த) அப்பொருளை, நனி - மிகுதியாக, இடமுண்டோ - வழியுண்டோ?

70. தாருடனே-மலர் மாலையுடன், செந்தாமரையாள்-இலக்குமி, தடம்-விசாலமான, நீருடனே-தாரையுடன்.

மன்னவன் உள்ளம் நொந்தற நாணி, 'மதிவல்லோய் !
இன்னமும் ஒன்றுண் டென்ன இரந்தே இவைகூறும் : 71

வேறு

'நித்த னைப்பிர மனைஅனை யாய் ! நினை வழிந்த
பித்த னைப்பொருள் விழைவினை ; எங்ஙியான் பெறுகோ !
இத்த னைத்தினைத் தீவதென் றியம்புவை எனின்,யான்
அத்த னைக்குள்நின் பொருள்தர அவதிஈ கென்றான். 72

[அது கேட்ட முனிவர்,]

'ஊரும் நாடும்நின் மலைகளும் கானமும் உழன்றே
யாரு னேடியுப் புண்பவர் ? அவதியார் இடுவார் ?
சோரம் உள்ளநீ கூறும்அப் பொருள்தனைச் சொரிந்து
பேரடா ! உனைத் தடுத்தனன் ; பேர்கலை !' என்றான். 73

[அது கேட்ட அரிச்சந்திரன்,]

பக்கம் நோக்கிலன் பார்மிசை விழுந்தடி பூண்டு,
கக்கல் வந்திட மிடற்றினை ஒடுக்கும்அக் கதைபோல்
விக்க லும்பொரு மலும்மிசை மிசைஎழ விரிநீர்
உக்க கண்ணன்வாய் ஊறுநீர் வற்றிட உரைப்பான் : 74

' 'இழைத்த தீவினை பொறுத்தனன் ; அரசுதா,' என்னத்
தழைத்த அன்பொடு தந்தியான் அகன்றிடுங் காலை

---

71. தொல் - பழைய, அன்னது-அத்தன்மையை, நின்னிடை - உன்னிடம், கேளா-கேட்டு, அற நாணி - மிக வெட்கி, இரந்து - கெஞ்சி, கூறும் - சொல்வான்.

72. நித்தனை - சிவனையும், அத்தனைக்குள் - அவ்வளவிற்குள், அவதி - தவணை, ஈகென்றான் - ஈக+என்றான்.

73. சோரம் - திருட்டுத்தனம், பேரடா - இவ்விடம் விட்டுச் செல்லடா, பேர்கலை - போகாதே.

74. மிடற்றினை ஒடுக்கும் - கழுத்தை நெரிக்கும், மிசை மிசை - மேலுக்குமேல், எழ - உண்டாக, உக்க - சிந்திய.

அழைத்த நீஎனக் கவதியிட் டாள்விடின் ஐய!
பிழைத்திலன்; இதோர் பெரும்புகழ் பெறுதி,' என் றிரந்தான்

'சுற்றுண் டாகிய மலைகளில் வனங்களில் தொட்டுண்
பற்றுண் டாகிய பதிகளில் படுபொருள் அல்லால்
உற்றுண் டாகிய நிதியம்உன் திருவுளம் உணர
மற்றுண் டாம்எனின் விளம்பிடு வழங்கிட,' என்றான். 76

[அது கேட்ட முனிவர் பின் வருமாறு கூறினர்:]

'ஆமதே எனின் அரச! கேள்: அவதியான் உரைப்பன்:
ஏம கூடமும் காசியும் அன்றியில் இப்பால்
தாம மார்ப! நீ தந்தநல் நா(டு); இதற் கப்பால்
போம துண்டெனின் பொருளும்அப் பொருள்அலா தளியேல்

'இந்த எல்லையில் இப்பொருள் ஈதல்இல் லாமல்
அந்த எல்லையில் பொருள்தர வல்லையே ஆனால்
முந்து நீசொன்ன முறைமையால் அவதியான் ஈவேன்;
தந்தி டாய்எனில் சத்தியம் ஏதெ'னச் சாற்றும்: 78

'காசி நாட்டினில் சென்றஅந் நாளில்உன் கனகம்
ஆசில் மாதவ! அளிப்பன்அவ் வவதியில்; அதுநீ

---

75. தழைத்த - பெருகிய, காலை - சமயத்தில், ஆள் விடின் - ஓராளை என்னோடு அனுப்பினால், பிழைத்திலன் - (அப்பொருள் தரத்) தவறேன், இரந்தான் - கெஞ்சினான்.

76. படு பொருள் - உண்டாகும் திரவியம், வழங்கிட - (யான்) கொடுக்க.

77. ஆமதே எனின் - அது கூடுமானால், அவதி - தவணை, ஏம கூடம் - ஒரு மலை, தாம மார்ப - மலர் மாலை அணிந்த மார்பனே, அப் பொருள் அலாது - (இந்த எல்லைக்கு அப்பால் தேடும்) அந்தப்பொருள் அல்லாமல், அளியேல் - (வேறு இந்நாட்டிலுள்ள பொருளைத்) தாராதே.

78. முந்து - முன்னே, சத்தியம் ஏது - (அதற்குப்) பிரமாணிக்கம் என்ன? சாற்றும் - (அரிச்சந்திரன்) சொல்லுவான்.

79. கனகம் - பொன்னை, ஆசில் - (ஆசு + இல்) குற்றமில்லாத, அது

பேசி டாய்,'என, 'இருபது நாளையின் பின்பு
மூசி வண்டுறை தாரினாய்! தரு'கென மொழிந்தான். 79

[அது கேட்ட அரிச்சந்திரன்,]

'அங்குற் றெய்தநாள் அம்முறைக் கிருமடங் கடங்கா;
எங்குற் றீட்டுவ திப்பொருள் ஐய!'என் றியம்ப,
'நங்குற் றம்இலை; நாற்பதிற் றெட்'டென நவின்றான்;
'உங்குற் றம்இதற் குள்கொடா தொழிந்திடின்,' என்றான்.

'இப்புத் திக்கினி தொத்தனன்! ஆள்விடு'கென்று
குப்புற் றேகலும் கௌசிகன் மீளவும் கூவித்
'தப்புத் தீர்தரத் தந்தஅப் பொருள்எலாம் பதிவந்(து)
ஒப்புத் தந்துபின் போ,'எனா மன்னனுக் குரைத்தான். 81

'பார்அ ளித்தனை புரக்க;நின் பதியிடைச் சென்றால்
'ஆர்அ ளித்தனர்?' என்பர்நின் அடியவர் எல்லாம்;
ஊர்அ ளித்திட உடன்வரத் துணிதி;ஈ தொழியின்
நீர்அ ளித்ததே எனக்கு;மண் நினக்'கெனா மொழிந்தான். 82

'நன்று நன்றுநீ நகரியில் எழுந்தருள்; நாயேன்
இன்று நின்பிற கெய்துவல்,' என்றினி தியம்பச்

---

நீ பேசிடாய்-அந்தக் கெடுவை நீர் தெரிவிப்பீராக, மூசி-மொய்த்து, வண்டுறை - வண்டுகள் தங்கியிருக்கிற.

80. அங்குற்று எய்த - அந்த இடத்தை அடைந்து (பொருளைப்) பெற, அம்முறைக்கு இரு மடங்கு அடங்கா - அத்தவணைக்கு இரு மடங்கு போதா, ஈட்டுவது - சம்பாதிப்பது, நம் குற்றம் இலை-(அது) நமது குற்றம் இல்லை.

81. இப்புத்திக்கு இனிது ஒத்தனன் - இம்முறைக்கு நன்கு சம்மதித்தேன், குப்புற்று ஏகலும் - தலை குனிந்து போகத் தொடங்கினதும், பதி - நகரம்.

82. புரக்க - ஆள, பதியிடை-நகரில், ஆர் அளித்தனர்-(உனக்கு இந்நகரை) யார் கொடுத்தனர்? நீர் அளித்ததே எனக்கு - நீ தாரை வார்த்ததுதான் எனக்கு மிச்சம், மண் - பூமி.

சென்று கௌசிகன் தேர்மிசை ஏறினன்; திரண்டு
நின்ற மாதவர் கரியினும் பரியினும் நிறைந்தார். 83

தேரில் ஏறிமா முனிசெலச் சேனையின் செல்லப்
போரில் வீரனும் தேவியும் புதல்வனும் நடுவே
பாரின் மேல்நடந் தடிபொரு துடல்பதை பதைக்க
வெரி வாவிவிட் டயோத்தியை நோக்கியே விரைந்தார் 84

கன்னல் அம்பெருங் கழனியும் சோலையும் கடந்து
வன்ன மாமணிப் புரிசையின் புறத்துவந் தணைந்தார்;
நன்ன கர்ப்பெருஞ் சனமெலாம் எதிர்கொடு நண்ணி
மன்னனைச்செழுந் தேர்மிசைக் கண்டிலர், மருண்டார். 85

'இரதம் மேல்முனி ஏறிய தகிதமோ! இதமோ!
சரத மோ!'எனும் ஐயத்தார் வந்தவண் சார்ந்தார்;
'விரதம் இவ்வகை விளைந்தவா றே!'என மெலிந்து
கரத லங்களால் முகத்தறைந் தழுதனர் கதறி. 86

ஏங்கு வார்;இளங் கொடியையும் சேயையும் ஏந்தித்
தாங்கு வார்;செழுந் தாளிலே வீழ்ந்துவீழ்ந் தயர்வார்;
ஓங்கி ஓங்கியே அறைந்தறைந் தொளிமுகம் கன்றி
வீங்கு வார்;அழு வார்;விழு வார்;உளம் மெலிவார். 87

---

83. நகரியில் - நகரத்தில், கரி - யானை, பரி - குதிரை.

84. வெரி வாவி - (மலர்) மணம் பொருந்திய குளம்

85. கன்னல் - கரும்பையுடைய, வன்னம்-சிறப்பமைந்த, புரிசையின் - மதிலின், எதிர் கொடு - எதிர் கொண்டு, மருண்டார் - மயங்கினார்கள்.

86. அகிதமோ - தீமையோ, இதமோ - நன்மையோ, சரதமோ - (நாம் காண்பது) உண்மையோ, ஐயத்தார் - சந்தேகமுடையவராய், அவண் சார்ந்தார் - அவ்விடத்தை அடைந்தனர், விரதம் - (நம் அரசனுக்கு இத்தகைய) தவவேடம், மெலிந்து-வருந்தி, கர தலங்களால்-கைகளால்.

87. இளங்கொடி - சந்திரமதி, சேய் - பிள்ளை, அயர்வார் - மெய் மறப்பார்.

'முன்னை வற்கும்நம் அன்னைக்கும் மைந்தற்கும் அந்தோ !
என்ன பாவம்வந் தெய்தியி!' என்றிருந் தேங்கப்
பொன்ன கர்ப்பெரும் புரிசையின் புறத்துவந் தணுகி
இன்னல் செய்தவக் கௌசிகன் இரதம்விட் டிழிந்தான். 88

கோசி கன்தனை உடன்கொடு கோநகர் புகுந்து,
வாசி உள்ளவும் மதகரி உள்ளவும் வழங்கிக்
காசின் நல்லறை பூசனை அறைஎலாம் காட்டித்
'தூசின் நல்லறை துயிலறை பார்,'எனச் சென்றான். 89

'என்னின் முன்னவர் இருபதோ டொருவர்உண் டந்த
மன்னர் வைத்தசெம் பொன்அறை ஈதெ'தல வழங்கி,
'அன்ன சத்திரம் இவை: இவை அடியனேன் வைத்த
பொன்அறைத் தொகை; கொள்கெ'னக் கொடுத்தனன் புகழோன். 90

'ஆட ரங்குகள் அம்பலம் மடம்அன்ன சாலை
மாட மாளிகை மண்டபம் மஞ்சனச் சாலை
கூட கோபுரம் மடைப்பள்ளி கோயில்செய் குன்றம்
பீடம் ஆதனம் இவை,'எனக் கொடுத்தனன்; பின்னை 91

'இந்த ஆதனத் திருந்தருள் !' என முனி இருந்தான் ;
அந்த எல்லையில் அரசனும் அவன்அடி பணிந்தான் ;

---

88. எய்திய - நேரிட்டன, இன்னல் - துன்பம்.

89. கொடு - (அழைத்துக்)கொண்டு, கோ - அரசனாயிருந்த அரிச்சந்திரன், வாசி - குதிரைகள், காசின் நல்லறை - நல்ல பொக்கிஷச் சாலை, தூசின் - வஸ்திரங்களுள்ள, துயிலறை - பள்ளியறை.

90. புகழோன் - அரிச்சந்திரன்.

91. ஆடரங்குகள் - (ஆடு + அரங்குகள்) - நடன சாலைகள், அம்பலம் - பொதுச் சபை, மடைப்பள்ளி - சமையல் அறை, ஆதனம் - இருக்கை, பின்னை - பிறகு.

92. ஆதனத்து - இருக்கையில், இருந்தருள் - அமர்ந்தருளுங்கள், எல்லையில் - சமயத்தில், மன்னரும் - சிற்றரசரும், குமாரும் - கூட்டமும், சுந்தரக் கழல் - அழகிய வீரகண்டை அணிந்த.

வந்த மன்னரும் அமைச்சரும் மங்கையர் குழாமும்
சுந்த ரக்கழல் சேனையும் அவன்அடி தொழுதார் : 92

தொழுதெ ழுந்துதம் சுடர்முடி மன்னனை நோக்கி
அழுது நின்றஅத் தலைவரை அவன்கையால் அமைத்துப்
'பழுதி லாதுநீர் எமக்குமுன் செய்தஅப் பரிசே
முழுதும் இந்தமா முனிவற்கும் முறைசெயும்,' என்றான்.

'எவர்க்கும் நல்லவர் ; திரிபுரம் எரிஎழச் சிரித்த
சிவர்க்கும் நல்லவர் ; செங்கண்மா லுக்கும்நான் முகத்தர்
அவர்க்கும் நல்லவர் ; அமரர்க்கும் நல்லவர் ஆவர் ;
இவர்க்கு நல்லவர் எனக்குநல் லவர்,'என இசைத்தான்.

வையம் ஏழுடை மன்னவன் அவ்வுரை வழங்கச்
செய்ய வாய்மலர் செங்கையால் புதைத்தடி வணங்கி,
'ஐய ! நின்மொழி மறுப்பவர் ஆர் ?'என முகத்தில்
கைய றைந்தழக் கண்டஅக் கௌசிகன் கருதும் : 95

' அறம்தி ரண்டுரு ஆகிய அரசனை அவமே
புறப்ப றைந்தனம் புன்மையேம் புந்திஇல் லாமல் ;

---

93. சுடர் முடி - பிரகாசம் பொருந்திய கிரீடத்தை அணிந்த, பழுதிலாது - (பழுது + இலாது) குற்றமில்லாமல், முன் செய்த - (யாம் அரசு புரிந்திருந்த) அக்காலத்தில் செய்த, அப்பரிசே - அவ்விதமே, முறை செயும் - தொண்டு செய்யுங்கள்.

94. எரி எழ - தீப்பற்றும்படி, செங்கண்மாலுக்கும் - திருமாலுக்கும், நான்முகத்தர் - பிரமதேவர், அமரர்க்கும் - தேவர்க்கும், இசைத்தான் - சொன்னான்.

95. வையம் ஏழு உடை - (அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதலம் என்னும்) உலகங்கள் ஏழையும் (தன் புகழ் பரவுதற்கு இடமாக) உடைய, வழங்க - சொல்ல, செய்ய - சிவந்த, புதைத்து - மூடி, கருதும் - நினைப்பாராயினர்.

96. அவமே - வீணிலே, புறம் பறைந்தனம் - புறங் கூறினோம், புன்மையேம் - அற்பத்தனமுடைய நாம், புந்தி - புத்தி, மெய் - உடல்,

திறம்தெ ரிந்தவர் செயலிதோ !' எனக்கவு சிகன்மெய்
மறந்தி ருந்து,பின் மற்றும்ஓர் வாசகம் உரைப்பான் : 96

'இந்த வையமும் இந்நிதிக் குழுவும்இப் பொருளும்
முந்து நீதர மொழிந்தஅப் பொருளும்யான் இழப்பேன் ;
என்றன் மக்களை மணம்புணர்ந் திந்நகர் இரு,'என்(று)
அந்த ணன்மகிழ்ந் தரசனைக் கைபிடித் தமைத்தான். 97

கைபி டித்தலும் முனிவனைக் கால்பிடித் திறைவன்,
'மெய்பி டித்தலும் மிக்கவை செய்தலும் அல்லால்,
மைபி டித்தகண் பரத்தையர் மணத்தலும் வழங்காப்
பொய்பி டித்தலும் அறன்அல செய்தலும் புகழோ ? 98

'உமக்கு யான்சொலல் வேண்டுமோ? மனுவின்பின் உதித்தே
எமக்கு முன்அர சாண்டபார் வேந்தர்மூ வெழுவர்
தமக்கு முன்ஒருத் தருக்கும்தாங் கரும்பெரும் பாரம்
சுமக்க வல்லனோ ? தவிர்கஇச் சொல்,'எனாத் தொழுதான்.

'சிறுத்த நாயினேன் செய்தஇப் புன்மைகள் எல்லாம்
பொறுத்தல் வேண்டும்!'என் றடிஇணை இருகரம் பூண்டான் ;
கறுத்த சிந்தையன் கௌசிகன், 'பொறுத்தனன்,' என்றான் ;
மறுத்தும் 'இன்னம்ஒன் றுரைத்திடக் கேள்,'எனாவள்ளல் 100

97. இரு நிதிக் குழு - பெருஞ்செல்வக் குவியல், முந்து - முன்னே, அந்தணன் - பிரம ரிஷியாகிய விசுவாமித்திரர், அமைத்தான் - இருக்கச் செய்தார்.

98. மெய் பிடித்தலும் - சத்தியத்தைப் பின் பற்றுதலும், மிக்கவை - சிறந்த காரியங்களை, மை பிடித்த - மை பொருந்திய, பரத்தையர் - வேசியரை, வழங்கா - (பெரியோர் தம் நாவால்) பேசாத, அறன் அல - தருமமல்லாத காரியங்களை.

99. மனு - ஓரரசன், தவிர்க - விடுக.

100. புன்மைகள் - இழிந்த செயல்கள், கறுத்த - கோபித்த, வள்ளல் - அரிச்சந்திரன்.

கையி னால்பிடித் தமைச்சரைக் காட்டி,'மற் றிவர்கள்
வையி னும்நினை மறுக்கினும் மற்றுமோர் குற்றம்
செய்யி னும்பொறுத் தருள்செய்வாய் செல்கதி அளித்த
ஐய னே!உன தடைக்கலம் இவர்,'எனா அளித்தான். 101

'குடைநி ழல்பொலி கௌசிகன் அடியின்மேல் கொடிநேர்
இடையி னாளையும் மகனையும் இறைஞ்சுவித் தேத்திப்
படையை நோக்கி,'நீர் நின்மின்,'என் றங்கையால் பணித்து
'விடைஇ தே,'எனாப் பணிந்தனன் வேந்தர்க்கு வேந்தன்.

'பரம்உ னக்குல கென்றிறை அகன்றனன்; பரிந்து
புரம்எ ரித்தவன் அனையமா முனிபுவி புரந்தான்;
சிரமம் நீங்குவீ ரர்கள்செறி மன்றமும் தெருவும்
பிரம சாரிகள் மலிந்தனர் பெருகும்உள் களிப்பால். 103

'தோலி னோர்களும் துரகதத் தோர்களும் சோதி
வேலி னோர்களும் மாதரும் மிடைந்தமை மாறி,
நூலி னோர்களும் நுண்ணிடைக் கவுந்தியர் களும்முக்
கோலி னோர்களும் மலிந்தனர் கொடித்தெரு எல்லாம். 104

---

101. வையினும்-(உம்மை) இகழ்ந்தாலும், மறுக்கினும்-(உமது சொற்படி நடக்க) மறுத்தாலும், செல் கதி - மோட்சம்.

102. பொலி - விளங்குகின்ற, நேர் - சமானமான, இறைஞ்சுவித்து ஏத்தி-வணங்கச் செய்து துதித்து, படையை-(தன்) சேனையை, நின்மின் - நில்லுங்கள், பணித்து - கட்டளையிட்டு.

103. பரம் - (பூமியை ஆள வேண்டிய) பாரம், பரிந்து - சந்தோஷித்து, புரந்தான் - ஆண்டார், பிரமசாரிகள் - முனிவர்கள்.

104. தோலினோர் - யானை வீரர், துரகதத்தோர் - குதிரை வீரர், மிடைந்தமை - நெருங்கியிருந்தது, நூலினோர் - பூணூலணிந்த அந்தணர், கவுந்தியர் - தவப் பெண்டிர், முக்கோலினோர் - திரிதண்ட சந்நியாசிகள், மலிந்தனர் - நிறைந்தனர்.

புனித மாதவர் சூழ்ந்திடப் புரவலர் போற்றக்
கனிதி ருந்திய செய்யவாய்க் கன்னியர் காண,
நனிதி ருந்திய நவமணி ஆதனத் தேறி
இனிதி ருந்தனன் கௌசிகன் ; இப்பால் 105

ஆ. செய்யுள் 203.

105. புரவலர் - சிற்றரசர், கனி திருந்திய - கொவ்வைப் பழம் போலச் சிறந்த, நனி திருந்திய - மிகத் திருத்தமான, நவமணி - (கோமேதகம், நீலம், பவளம், புருடராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வயிடூரியம் என்னும்) ஒன்பது வகை மணிகள் இழைக்கப்பெற்ற, ஆதனத்து - சிங்காதனத்தில், இப்பால் - இதன் பிறகு.

## 6. நகர் நீங்கிய காண்டம்

### அறுசீர் விருத்தம்

'தலம்முழுதும் தவமுனிவன் தனக்களித்தேம்;
இனியுறைதல் தகுதி அன்'றென்(று)
இலகுமணி பண்டபமும் எழில்மணிச்சிங்
காதனமும் இழந்து போந்து
பலஅரசருடன் அமைச்சர் அழுதுடன் போய்ப்
பரதவிக்கப் பதாதி மொய்க்கக்
குலமகனும் மடமயிலும் முன்நடக்கப்
பின்நடந்தான் கொற்ற வேந்தன். 1

தொடைதுறந்து முடிதுறந்து பணிதுறந்து
துடிமுரசம் துறந்து தாமக்
குடைதுறந்து வெண்கவரிக் குழாம்துறந்து
கரிபரிதேர்க் குலந்து றந்து
கடைதுறந்து மறுகணைந்த காவலன்தன்
திருமுகத்தைக் கண்டோர் எல்லாம்
அடையமனம் அழிந்துருகி அவரவரே
முகத்தில்அறைந் தழுவார் ஆனார். 2

---

1. தலம் - நாடு, இலகு - விளங்குகின்ற, போந்து - வந்து, பதாதி மொய்க்க - காலாள் வீரர் சூழ, குலமகனும் - மேன்மை பொருந்திய மகனாகிய தேவதாசனும், மடமயிலும் - இளமயில் போலுஞ் சந்திரமதியும், கொற்றம் - வெற்றியையுடைய.

2. தொடை - மாலை, துடி - உடுக்கை, தாமக்குடை - முத்து மாலைகளையுடைய வெண்கொற்றக்குடை, கவரிக் குழாம் - வெண்சாமரைத் தொகுதி, குலம் - கூட்டம், மறுகு அணைந்த - வீதியை அடைந்த, அடைய - முழுமிக்க, அழிந்து உருகி - நொந்து சோர்ந்து.

மயிரோடும் சிறைஇழந்த போகில்போல்
வேலியொடு வரம்பி ழந்த
பயிரேபோல் கரம்இழந்த கரியேபோல்
பொறிஇழந்த பாவை யேபோல்
உயிரேபோய்ப் பரதவிக்கும் உடலேபோல்
மத்தால்உள் உடைந்த லம்பும்
தயிரேபோல் தளர்ந்தலைந்து தத்தமக்கு
நிகழ்ந்தஎல்லாம் சாற்ற லுற்றார் : 3

'கொடிமீது செறிதேரும் குஞ்சரமும்
பொன்சிவிகைக் குழாமும் இன்றிப்
படிமீது நடந்திடவும் படித்தனவோ
பார்வேந்தன் பாதம் !' என்பார் ;
'அடிமீது தொழும்அரசர் முடிமீதும்
மடிமீதும் அன்றிச் சுட்ட
பொடிமீது நடந்திடவும் பொறுத்தனவோ
குலகுமரன் பொன் தாள் !' என்பார். 4

'அஞ்சாயல் மடஅன்னத் தணிதூவி
அதனாலும் அனிச்சத் தாலும்
பஞ்சாலும் பதைபதைக்கும் பதத்தாட்குக்
கால்நடையோ பலித்த தெ'ன்பார் ;

3. போகில் - பட்சி, வரம்பு - வரப்பு, கரம் - துதிக்கை, பொறி - சூத்திரமாகிய கயிறு, பாவை - பொம்மை, நிகழ்ந்த - தோன்றிய கருத்துகள்.

4. செறி - பொருந்திய, குஞ்சரம் - யானை, சிவிகைக் குழாம் - பல்லக்குத் திரள், படி மீது - பூமியின் மேல், படித்தனவோ-பழகினவோ, சுட்ட பொடி - வெப்பங்கொண்ட மண் புழுதி, பொன் தாள் - அழகிய பாதங்கள்.

5. அஞ்சாயல் - (அம்+சாயல்) அழகிய சாயலையுடைய, அன்னத்து அணி தூவி - அன்னத்தின் அழகிய மெல்லிய சிறகு, அனிச்சம் -(மோந்தால் வாடுந் தன்மையையுடைய) ஒரு மலர், பதத்தாட்கு-

'செஞ்சாலிக் கோசலமும் இராசகுல
வளநாடும் தேவர் நாடும்
அஞ்சாமல் காத்தருள்எம் பெருமானுக்
கிதுவோவந் தடுத்த'தென்பார். 5

'முல்லைமுகை நகையாளும் முடிவேந்த
னும்மகனும் முழுதும் போனா
லெல்லாம் மணஅறையும் மலர்அணையும்
உண்டோ!'என் றிரங்கி வீழ்வார்;
'தொல்லைவிதிப் பயனாலே வந்திரந்த
மாமுனிவன் சொன்ன எல்லாம்
இல்லையெனு தீந்தோருக் கித்தனையோ
பெறும்பே'றென் றேங்கி வீழ்வார். 6

'வல்லார்க்கும் மாட்டார்க்கும் மறமேநன்
றென்றுரைப்பார்; மறம்நன் றாமோ?
அல்லார்க்கும் குழல்மடவீர்! அறமேநன்
றென்றுரைப்பார்; அதுநன் றாகில்,
நல்லார்க்கும் தீயார்க்கும் எல்லார்க்கும்
ஒருமையினால் நடவா தென்னே?
எல்லார்க்கும் உளதாகில் எங்கோனுக்
கிலையான தென்னோ!' என்பார். 7

பாதங்களையுடைய சந்திரமதிக்கு, பலித்தது - சம்பவித்தது, செஞ்சாலி - செந்நெல்லை உடைய, கோசலம் - கோசல நாடு, இராச குல வள நாடு - (மற்றச்) சிற்றரசருடைய சிறந்த வளம் பொருந்திய நாடுகள், பெருமானுக்கு - தலைவனாகிய அரிச்சந்திரனுக்கு, அடுத்தது - சம்பவித்தது.

6. முல்லை முகை - முல்லை அரும்பு போன்ற, நகையாளும் - பற்களையுடைய சந்திரமதியும், மலர் அணை - மலர் பரப்பிய படுக்கை, தொல்லை - பழமையான, இரந்த - யாசித்த, மாமுனிவன் - விசுவாமித்திரர், பெறும் பேறு - பெற்ற செல்வம், இத்தனையோ - இவ்வளவோ.

7. வல்லார் - செய்ய வல்லவர், மாட்டார் - செய்ய இயலாதவர், மறமே - வீரமே, உரைப்பார் - (உலகத்தார்) கூறுவர், அல் ஆர்க்கும்

'கொண்டிருந்த வளநாடும் குறையாத
பெருந்திருவும் கொடித்திண் தேரும்
பண்டிருந்த மாளிகையும் பரிசனமும்
தமக்களித்துப் பாலனோடும்
வண்டிருந்த தாரானும் வாள்நுதலும்
வறியோர்போல் வனத்தே போகக்
கண்டிருந்தும் விலக்காத கௌசிகனார்
தம்மனமும் கல்லோ !' என்பார். 8

'செம்மையினால் உலகம்எலாம் தனக்களித்துச்
செறிவனத்தே தேம்பிச் செல்வோர்
தம்மைவர வழைத்திருத்தி ஒருமனைக்குத்
தலம்ஈயாத் தறுகண் பாவி
நம்மைஎல்லாம் காத்தளிக்க வல்லவனோ !'
எனக்கரங்கள் நடுக்கி மாறா
வெம்மையினால் வெய்துயிர்ப்பார் ; 'மின்னுமல்
இடிவந்து வீழ்ந்த தெ'ன்பார். 9

என்றலமந் தனைவோரும் வயிறலைத்து
விழுந்தேங்கி இரங்குங் காலை,
கன்றினொடும் பிடியினொடும் கிளையினொடும்
வனம்புகுதும் களிறே போல,

---

குழல் - இருள் நிறம் பொருந்திய கூந்தலையுடைய, மடவீர் — இளம் பெண்களே, ஒருமையினால் - ஒரே விதத்தால்.

8. திருவும் - செல்வமும், பண்டு இருந்த- முன்பு (உரியனவாய்) இருந்த, வாள்நுதலும் — பிரகாசம் பொருந்திய நெற்றியையுடைய சந்திரமதியும், வறியோர் போல் - தரித்திரரைப்போல.

9. செறி - நெருங்கின, தேம்பி - வருந்தி, தலம் ஈயா - இடம் தாராத, தறுகண் - அஞ்சாமையுடைய, மாறா வெம்மையினால்-தீராத மனப் புழுக்கத்தால், வெய்துயிர்ப்பார் - பெருமூச்சு விடுவார்.

10. என்று அலமந்து - என்று கூறி வருந்தி, வயிறு அலைத்து - வயிற்றிலடித்துக்கொண்டு, பிடியினொடும் - பெண் யானையோடும்,

'இன்றளித்த அருள்முனிவர்க் கேற்றனவோ
ஏற்றிலவோ !' என்று ஏங்கிக்
குன்றனைய மதில்கடந்தே நளிநடந்து
சரையுவினைக் குறுகி னானே. 10

உரைபெறுசீர் இரவிகுலத் தரசர்க்கு
வழிவழியே உரிமை ஆய
சரையுஎனும் தாதி,'அரிச் சந்திரற்கு
வந்தவினை தானோ'என்று,
விரைமலர்த்தாள் பூண்டுகிடந் தரற்றிடவும்
இழிந்தேகி விரைந்து போய்,மேல்
கரைஅணுகி விரிமணலில் விரிமலர்கள்
சொரியும்நறுங் காவில் புக்கான். 11

வரைக்கனக புயத்தினன்அம் மலர்க்காவில்
விரிமணல்மேல் வந்தி ருந்தான் ;
விரைக்கரும்பூங் குழலாளும் திருமகனும்
இருபாலும் வீற்றி ருந்தார் ;
திரைக்கடலுள் பொருமெனப்போய்ச் செங்கதிரோன்
சென்றனன்;அச் சென்ற காலை
'உரைப்பனவும் விளைப்பனவும் அறிதும்,'என
முனிவனும்வந் தொளித்தி ருந்தான். 12

---

கிளையிரொடும் - சுற்றத்தோடும், களிறே போல - ஆண் யானையே போல, இன்று அளித்த - (யான்) இன்று கொடுத்தவை, என்று - என்று கூறி, குன்று அனைய - மலை போன்ற, சரையுவினை - சரையு என்னும் நதியை,

11. உரை - புகழ், இரவி - சூரியன், விரை மலர்-வாசனை பொருந்திய தாமரை மலர் போன்ற, விரி மணலில் - பரவிய மணலில், நறுங்கா - வாசனை பொருந்திய சோலை, புக்கான் - (அரிச்சந்திரன்) புகுந்தான்.

12. வரைக்கனக புயத்தினன் - (கனக வரைப் புயத்தினன்) பொன்மலை போன்ற புஜங்களையுடைய அரிச்சந்திரன், விரை-வாசனை உடைய, திரை - அலைகளையுடைய, பொருமென - 'சகியாதவனைப் போல, செங்கதிரோன் - சூரியன், விளைப்பனவும் - செய்கின்ற காரியங்களையும், அறிதும் - அறிவோம்.

அக்காலத் தமைச்சர்எலாம் அடல்வேந்தன்
அடிபோற்றி, 'அரசே! நீமீண்(டு)
எக்காலம் எழுந்தருள்வ 'தென்றுரைக்க,
ஆங்கவரை இருகண் நோக்கி,
'முக்காலங் களும்உணரும் முனிவனுக்கின்
றியான்கொடுத்த மூதூர் தன்னில்
எக்கால மும்வருவ தில்லை' என்றான்;
அமைச்சர்எலாம் ஏங்கி வீழ்ந்தார். 13

'முன்செய்த தீவினையோ, முனிசெய்த
உபகாரம் முன்னுண் டாகப்
பின்செய்த கைம்மாறோ, பேரரசு
கொடுத்தகன்று பெருங்கா டெய்த?
மின்செய்த நெடுவேலாய்! மெய்த்தவனை
யாம்துரந்து விட்டேம் ஆகில்
என்செய்வான்?' எனஉரைப்பார்; 'யாம்போதும்
அவன்போருக் கெதிர்க்க,' என்பார். 14

'தோல்ஏந்து மார்பில்மலர்த் தொடைஏந்தத்
தருப்பைமுடிச் சுருக்கத் தோடே
கோல்ஏந்தும் குறுங்கைகதிர் வேல்ஏந்தக்
கனகமுடி கோடீ ரத்தின்
வேல்ஏந்தி இருடிஇருந் துலகாள
அவன்குடைக்கீழ் வீணே அன்றோ
கால்ஏந்தி வாழ்வதில்யாம் கனல்வீழ்கல்
அமையும்.'எனக் கட்டுரைப்பார். 15

---

13. அடல் - வல்லமை வாய்ந்த, எழுந்தருள்வது -(நாட்டுக்குள்) வருவது, மூதூர் தன்னில் - பழைய நகரத்தில்,

14. கைம்மாறோ - பிரதி உபகாரமோ காரணம், மின் செய்த - ஒளி வீசிய, துரந்துவிட்டேம் - துரத்திவிட்டோம், போதும் - போவோம்.

15. தோல் - மான் தோலை, கோல் - திரிதண்டம், குறுங்கை -

‘சடைபிடித்தும் கரம்பிடித்தும் தாள்பிடித்தும்
மரவுரியால் தகைந்துடுத்த
உடைபிடித்தும் ஈர்த்தவனை உயர்வனத்தில்
இப்பொழுதே ஓட்டுகின்றோம்!
மடைபிடித்த வயல்சூழும் வளநாடு
நீபுரக்க வருவாய்!’ என்று
படைபிடித்த மலர்க்கரத்தால் பதம்பிடித்து
விறல்வேந்தர் பணிந்து வீழ்ந்தார். 16

படிபுரக்கும் மன்னவன்கேட் டிருகரத்தால்
செவிபுதைத்துப் ‘பாவம் அந்தோ!
குடிகெடினும் உயிர்கெடினும் கொடுத்ததுவாங்
கேன்’! என்று கூறும் எல்லை
கடிபொழிலில் காத்திருந்த கௌசிகனும்
வந்தெதிர்த்தான்; கண்ட போதே
அடியிணைதன் முடிசார்த்தி இருகரத்தால்
உறப்பூண்டான் அரசர் கோமான். 17

‘வெய்தாநீ வேடுவரால் விலங்கனைத்தும்
கொல்வித்தாய்; வெகுண்டேனத்தை
எய்தாய்; என் மக்களையும் இசைகேட்டுத்
துரந்தடித்தாய்; இன்றும் என்னை

---

சிறுகை, கதிர்-பிரகாசத்தையுடைய, கனகமுடி - பொன் கிரீடத்தை, கோடீரத்தின்மேல் - சடை முடியின்மீது, ஏந்தி - தாங்கி, இருடி - முனிவன், கட்டுரைப்பார் - உறுதி கூறுவார்கள்.

16. தகைந்து - மறைத்து, ஈர்த்து - இழுத்து, மடைபிடித்த-நீர்க்கால்கள் பொருந்திய, புரக்க - அரசு புரிய, படை - ஆயுதம், விறல் வேந்தர் - வெற்றி வாய்ந்த சிற்றரசர்.

17. படி - பூமியை, புதைத்து - மூடி, எல்லை - சமயத்தில், கடி பொழில் - வாசனை வீசும் சோலை, அரசர் கோமான் - சக்கரவர்த்தியாகிய அரிச்சந்திரன்.

18. வெய்தா - கொடிதாக, வெகுண்டு+ஏனத்தை-கோபித்துப்

வய்தாய்; நீ எனக்களித்த மண்டலத்தை
யான்தரநீ வாங்காய் ஆகில்,
செய்தாய்இன் றிவர்உரைத்த தீமைஎல்லாம்,'
என்னை முனி செப்பினனே. 18

'சிறுத்தவர்கள் அறியாமல் செய்தபிழை
அத்தனையும் செவ்வியோய்! நீ
பொறுத்தருளா யாமாகில் பொறை என்னும்?
முறை என்னும்? புலமை என்னும்?
ஒறுத்திடினும் வெறுத்திடினும் உனக்களித்த
அரசுரிமை ஒருகா லத்தும்
மறுத்தினியான் வாங்கேன்,' என் றெடுத்துரைத்தான்
மன்னன்; முனி வாட்டம் உற்றான். 19

'பொன்கேட்கப் பொன்னளித்தான்; புவிகேட்கப்
புவிஅளித்தான்: போதா தென்று
என்கேட்கி னும்தருவ தில்லைஎனும்
புன்மைஇவ னிடத்தில் இல்லை;
முன்கேட்ட பொருளாலே மொழிவழுவந்
தெய்தும்; அது முடக்கம் ஆனால்
பின்கேட்டார் இகழ்வார்கள்; யாம்பொறுத்தும்,'
எனைநினைந்து பேசலுற்றான்: 20

---

பன்றியை, எய்தாய் - அம்பினால் அடித்து வீழ்த்தினாய், வய்தாய் - (வைதாய்) திட்டினாய்.

19. பொறை - பொறுமைக் குணம், என்னும் - என்ன பயன் தரும்? முறை - நீதி, புலமை-அறிவு, ஒறுத்திடினும்- தண்டித்தாலும், மறுத்து இனி - மறுபடியும் இனிமேல்.

2. புன்மை - அற்பத்தனம், மொழி வழு - சொல் குற்றம், முடக்கம் ஆனால் - தடைபடுமானால், பொறுத்தும் - பொறுப்போம்.

'ஒன்றுரைக்க நீகேளாய் : உண்மைக்கும்
வண்மைக்கும் உரியோய்! என்னை
இன்றுரைத்த பிழைபொறுத்தேன் ; 'அழல்வேள்வி
முடித்திடுதற் கிவேன்,' என்றங்(கு)
அன்றுரைத்த பொருள்அதனை அளிப்பாயோ
அளியாயோ அரச !' என்றான் ;
என்றுரைத்த கௌசிகனை அடிதொழுது
வாய்புதைத்தங் கீதுரைப்பான் : 21

'உன்னுடனே உரைத்தபொருள் உனக்கடியேன்
உகந்தளித்த உரிமைச் செல்வம்
தன்னுடனே போனதெனு உணர்ந்தேன்ஆ
யினும்முனிவால் தருவல் என்றே
நின்னுடனே யான்உரைத்த சபதம்இனி
மாறுவனோ? நீஆள் விட்டால்
பொன்னுடனே தருவன்,'என்றான் ; புகரோனை
அவனழைத்துப் பொருத்தினானே. 22

உள்ளியதீ வினைஅனைத்தும் தனித்திருத்தி
வகைவகையே உரைத்து, 'நீபோய்
அள்ளிஇடும் பொருள்கவரா தானையின்மேல்
கவண்சிலைபோம் அளவும் தந்தால்

21. வண்மைக்கும் - தருமத்திற்கும், புதைத்து - மூடி, ஈது - இவ்வார்த்தையை.

22. முனிவால் - கோபத்தால், தருவல் - கொடுப்பேன், புகரோனை - சுக்கிரனை, அவன் - விசுவாமித்திரர், பொருத்தினான் - (அரிச்சந்திரனுடன் சென்று பொருள் பெற்றுவர) இசையச்செய்தார்.

23. உள்ளிய - (தாம் அரிச்சந்திரனுக்கு உண்டாக்க) நினைத்த, தீவினை - தீங்குகள், தனித்து இருத்தி - (சுக்கிரனைத்) தனியிடத்தில் இருக்கச் செய்து, கொள்ளுதி - வாங்கிக்கொள், பெறுதி - பெற்றுக் கொள், வெள்ளிதனை - சுக்கிரனை, வாய்மை - சொல்.

கொள்ளுதி; நீ பின்போன கூலியையும்
பெறுதி,' எனக் கூறித் தீய
வெள்ளிதனை உடன் கூட்டி மீண்டும் அழைத்
தொருவாய்மை விளம்ப லுற்றான் : 23

'துன்றுபசிக் கடகுகளி தேடும்போ(து)
'எனக்கினிய சோறு வேண்டும்,'
என்றுமொழி; தந்திடினும் ஏலாது,
'வேண்டா,' என்; இவன் ஊண் பெற்றால்,
'அன்றுபொருள் தருமுன் உணற் ககலேல்; நில்'
எனத்தடு; நம் அவதி வந்தால்
நின்றவரைக் கரிகுறித்து மறுதினத்தில்
நில்லாமல் நீவா,' என்றான். 24

'அடுத்திருத்தி மனம்கலக்கி, 'முனிக்களித்த
மொழிமாறி 'அளியேன்,' என்று
எடுத்துரைக்கில் உன் அரசை யான்வாங்கித்
தருவேன்,' என்; இசைந்தான் ஆகில்,
தடுத்தழைத்து வருதி; நமக் கதுபோதும்,'
எனப்பலவும் சாற்றிக் கூட்டி
விடுத்தனன்; விட் டரசனுக்கு விடைகொடுத்து
மாமுனிவன் மீண்டு போனான். 25

முனிஏக மன்னவனும் மூரிநெடுஞ்
சேனைதனை, 'முனிவன் தன்னோ(டு)
இனிஏகும்; அவற்கினியார் எனக்கினியார்,'
என, அழுதங் கியாரும் மீண்டார்;

---

24. துன்று - மிகுந்த, அடகு - இலை, ஏலாது - ஏற்றுக்கொள்ளாமல், ஊண் - உணவு, அவதி - தவணை, நின்றவரை - மற்றவர்களை, கரிகுறித்து - சாட்சியாகக் குறித்துவிட்டு.

25. அடுத்து இருத்தி - (அரிச்சந்திரனை) உன் பக்கத்தில் அமரச் செய்து, தடுத்து - மேலே சொல்வதைத் தடுத்து, வருதி - வருவாயாக,

பனிவரும் முனம்எழுந்து பைந்தொடியும்
மன்னவனும் பாலன் தானும்
தனிவரக் கண்டமைச்சன் சத்தியகீர்த்
தியும்அவர்கள் தம்பின் சென்றான். 26

வருகின்ற மந்திரியை மன்னவனும்
கண்டுவிழி வழிநீர் வார
உருகினிய அன்பினுடன், 'நீபோந்தால்
மறைமுனிவற் குறுநர் உண்டோ?
அருகிருந்து புவிநடத்த நின்போல்ஆங்
கறிவுடையார் ஆரும் இல்லை;
திருநகர்க்கே மீண்டேடெ'கன் றுரைத்திடலும்
அமைச்சர்பிரான் செப்ப லுற்றான்: 27

'கோதிலாப் பெருங்குணத்தாய்! குற்றேவல்
இந்நெடுநாள் கொடியேன் செய்தேன்;
ஆதலால் நீவரும் அருஞ்சுரத்தில்
பணித்தபணி ஆர்தான் செய்வார்?
மாதரார் உடன்வர மகன்வர
நின்னுடன்யான் வாரேன் ஆகில்
ஏதிலான் ஆனேன்நான்!' என்றிடியே
றுண்டமரம் என்ன வீழ்ந்தான். 28

---

26. மூரி-வலிமை பொருந்திய, அவற்கினியார்-அவனுக்கு இனியவர், யாரும் - எல்லாரும், பைந்தொடி - பசுமையான வளையலை அணிந்த சந்திரமதி.

27. வார - ஒழுக, உருகு இனிய - மனமுருகுகிற இனிமையான, போந்தால் - (எம்மோடு) வந்தால், உறுநர் - உற்றவர், புவி நடத்த - பூமியை ஆள, அமைச்சர் பிரான் - மந்திரிகளுள் தலைவனான சத்திய கீர்த்தி.

28. கோது இலா - குற்றமில்லாத, இந்நெடு நாள் - இவ்வளவு நீண்ட காலம், அருஞ்சுரத்தில்-செல்லுவதற்குக் கஷ்டமான காட்டில், பணித்த பணி - கட்டளையிட்ட தொழிலை, மாதரார் - (உம்) மனைவி

இடிவீழ்ந்த மரம்போல வீழ்ந்தரற்றும்
மந்திரியை எடுத்து மேனிப்
பொடிதுடைத்து முடிதடவிப் பொழிவிழிநீர்
தனைமாற்றிப் பொருமல் ஆற்றி,
'கடிநகரில் இவனைவிடில் உயிர்விடுவன்,'
எனக்கதறிக் கலங்கி, 'காமர்
வடிவழுங்க, மனம்கருக, உயிர்நடுங்க,
வருந்தேல்; நீ வருதி,' என்றான். 29

கலி விருத்தம்

'வாழ்வினைவளர்ந்தபொழு தென்னின்மிக வாழ்ந்தாய்;
தாழ்வினைநிகழ்ந்தபொழு தென்றனொடு தாழ்ந்தாய்;
சூழ்வினைநமைக்கடிது சுற்றின் அவை எல்லாம்
ஊழ்வினை,'எனச்சொலிஉடன்கொடுநடந்தான். 30

[அவர்கள் அயோத்தி நீங்கிச் சென்றார்கள்.]

நண்பினொடு மின்புரிசை நன்னகரை நோக்கி
விண்புலமளாம் தமதில் வேலிதனை நோக்கித்
தண்புனல் வழங்கிடுதடங்களையும் நோக்கிக்
கண்புனல்சொரிந்தழுது காரிகைநடந்தாள். 31

---

யாராகிய சந்திரமதியம்மையார், ஏதிலான் - அயலான், இடியேறு உண்ட - பேரிடி விழப்பெற்ற.

29. அரற்றும் - அழுகின்ற, மேனி - உடலில் படிந்த, பொடி - மண் புழுதியை, முடி - தலையை, பொருமல் - அழுகையை, கடி - காவலையுடைய, காமர் - அழகிய, வடிவு அழுங்க - வடிவம் கெடவும், வருந்தேல் - வருந்தாதே, வருதி - வருவாயாக.

30. வாழ் வினை - வாழ்தற்குரிய நல்வினை, தாழ் வினை - தாழ்தற்குரிய தீவினை, சூழ்வினை - ஒருவர் ஆலோசித்துச் செய்கிற சதியாகிய செய்கை, சுற்றின் - சூழ்ந்தால், ஊழ் வினை - (நமது) பழவினைப் பயனேயாகும், உடன் கொடு - (சத்திய கீர்த்தியையும்) தன்னுடன் அழைத்துக்கொண்டு.

31. நண்பினொடு-பிரியத்தோடு, மின் புரிசை - ஒளி வீசும் மதிலை

பாதகம லங்கள்பத றப்பதம வைத்துக்
காதலிந டந்தநடை கண்டரசர் கோமான்,
'நாதனருள் இப்படிஇ ருந்தெ'தன நக்கான் ;
ஆதபன்அழன்றெழும்அ ருஞ்சுரம்அ டைந்தார். 32

அந்தநெடு வெஞ்சுரம்அ ழன்றெழுதல் கண்டே
மைந்தனையெ டுத்துமதி மந்திரிந டந்தான் ;
பைந்தொடிப டும்பரிசு கண்டுயிர்ப தைத்தே,
'வந்தெனது தோளின்இவர் வாய்,'எனஉ ரைத்தான். 33

'பூமகளும் மண்மகளும் ஏறுதல்பொ றுமல்
மாமுனிவ னுக்குறஅ ளித்தநின்ம ணித்தோள்
நாமநெடு வேல்இறைவ! நாயின்இகழ் பெண்பால்
ஆமெளியள் ஏறின்நர காழ்ந்தழிவன்,' என்றாள். 34

என்றுமயில் கூறிட,இ ரங்கிஎறும் மன்னன்
நின்றுதளர் வெய்தி,விழி நீர்உகஉ யிர்த்து,
'மன்றல்சொரி கின்றகுழல் வல்லிஅனை யாய்!நிற்(கு)
என்றும்உள திந்தஅறி வெ'ன்றழுது சென்றான். 35

---

உடைய, விண்புலம் - ஆகாயத்தில், வேலிதனை - காவலை, தண்புனல் வழங்கிடு - குளிர்ந்த நீரைத் தருகின்ற, தடங்களையும் - குளங்களையும், காரிகை - அழகியாகிய சந்திரமதி.

32. காதலி - மனைவி, நக்கான் - சிரித்தான், ஆதபன் - சூரியன், அழன்று - கொதித்து.

33. வெஞ்சுரம் - கொடிய பாலை வனம், பைந்தொடி - பசுமையான வளையலையணிந்த சந்திரமதி, படும் - வருந்தும், பரிசு - தன்மையை, இவர்வாய் - ஏறுவாயாக, உரைத்தான் - (அரிச்சந்திரன்) கூறினான்.

34. பூமகள் - இலக்குமி, மண் மகள் - பூமி தேவி, அளித்த - (அவ்விருவரையும்) கொடுத்த, மணி - அழகிய, நாமம் - (பகைவர்க்கு) அச்சம் தருகின்ற, நாயின் இகழ் - நாய் போல இகழத் தகுந்த, பெண்பால் ஆம் - பெண்ணாகிய, நரகு ஆழ்ந்து - நரகில் மூழ்கி.

35. மயில் - மயில் போன்ற சாயலையுடைய சந்திரமதி, இரங்கி - வருந்தி, எறும் - வலிமை பொருந்திய, நீர் உக - நீர் சிந்த, உயிர்த்து -

நீரும்இலை ; நெட்டிலையின் நிழல்இலை ; நீள்பேய்த்
தேரதனை நீர்எனந டந்தடிசி வந்தார் ;
வேரிநெறு வெந்தமர நிழலைவி ரும்பிச்
சேரிலும்அ டர்ந்தரவு சீறிஎழும் அன்றே. 36

காவலவன் அப்பரிசு கண்டுகைஅ றைந்தே,
'யாவர்எழு பாரின்இது பட்டவர்கள் !' என்று
மூவரையும் நோகிலன்;அம் முனிவனையும் நோகான் ;
தேவரையும் நோகிலன்;முன் தீவினையை நொந்தான். 37

[அவர்கள் பாலை வனத்தைக் கடந்து கோமதி நதிக்கரையை அடைந்ததும் சூரியன் மறைந்தனன். மன்னன்,]

மைதிகழ்கு றும்பொறைவ னத்தில்இழி மால்யா(று)
எய்தி,அதன் வண்துறைஇ ழிந்துபுனல் உண்டு,
கைதவம்நி னைந்து,மிளிர் கண்கலுழி சிந்தப்
பெய்தமணல் வண்டலிடை பேதையொடி ருந்தான். 38

---

பெருமூச்சு விட்டு, மன்றல் சொரிகின்ற - வாசனை வீசுகின்ற, வல்லி - பூங்கொடி, அனையாய் - போன்றவளே, நிற்கு - உனக்கு.

36. நெட்டிலையின் - நீண்ட இலையினையுடைய மரத்தின், நீள் பேய்த் தேரதனை - நீண்ட கானல் நீராகிய பேய்த் தேரை, நீர் என - தண்ணீர் என்று தவறாக நினைத்து, அடர்ந்து - நெருங்கி, அரவு - பாம்பு, அன்றே - அசை.

37. காவலவன் - அரசன், அப்பரிசு - அத்தன்மையை, கை அறைந்து - (வியப்பினால்) கைகளைத் தட்டி, பாரின் - உலகில், இது - இக்கஷ்டத்தை, மூவரையும் - (பிரமன், திருமால், சிவன் என்னும்) மூத்தேவரையும், அம்முனிவனையும் - அந்த விசுவாமித்திர முனிவரையும்.

38. மை திகழ் - மேகம் விளங்குகிற, குறும்பொறை வனத்தில் - சிறு மலைகளையுடைய காட்டில், இழி மால் யாறு - (மலையிலிருந்து) இறங்குகின்ற பெரிய ஆற்றை, எய்தி - அடைந்து, வண் துறை - வளப்பம் பொருந்திய துறையில், கைதவம் - (முனிவரின்) வஞ்சகத்தை, கலுழி - அழுகை நீரை, பெய்த - மேடிட்டுக் கிடக்கும், வண்டலிடை - மேட்டில், பேதையொடு - சந்திரமதியுடன்.

அந்தஅம யத்தடவி யும்பொழிலும் நண்ணி
வந்தடிவ ருந்தியவ ருத்தம்உ ணா ராமல்,
கந்தமொடு காய்கனி கவர்ந்தருகு வந்தே
மந்திரியும் மன்னவன்முன் வைத்தடிப ணிந்தான். 39

அக்கணம்எ டுத்திறைவன் அக்கனியுள் எல்லாம்
மிக்கனதெ ரிந்துமறை விப்பிரன்முன் வைத்தே
தக்கனவு ரைத்‘தனது சஞ்சலம் உணர்ந்தே
இக்கனிஎ டுத்தினித ருந்’தனஇ சைத்தான். 40

### கொச்சகக் கலிப்பா

‘நீயும் முனியும் நிகழ்த்தும்நெறி முன்உணர்ந்து
தோயும் தயிர்நெய்பால் சோற்றோ டருந்தாமல்
காயும் கிழங்கும் கனியும்இலை யும்தின்று
வாயும் வயிறும் வளர்க்கிலேன் மன்னவனே !’ 41

என்று புகர்இயம்ப, ஏங்கிக் குலைகுலைந்து,
நின்று மொழிகுழறி, நெஞ்சடைத்து, வாய்புலர்ந்து,
சென்று பணிந்து, திருக்கரத்தால் தாள்பூண்டு,
குன்றும் சிலையும் கரைந்துருகக் கூறலுற்றான் : 42

‘நாடும் நகரும் முனிக்களித்து நான்அறியாக்
காடு திசைநோக்கி வந்தமைநீ கண்டிலையோ ?

---

39. அமயத்து - சமயத்தில், அடவி - காடு, பொழில் - சோலை, கந்தம் - கிழங்கு, கவர்ந்து - பறித்துக்கொண்டு.

40. மிக்கன - சிறந்தவற்றை, மறை விப்பிரன் - வேதமுணர்ந்த அந்தணனாகிய சுக்கிரன், சஞ்சலம் - துன்பத்தை, இனிது அருந்து - சந்தோஷமாக உண்பாயாக.

41. முனியும் - விசுவாமித்திர முனிவரும், நிகழ்த்தும் நெறி - நடத்தும் முறையை, முன் உணர்ந்து - முன்னமே தெரிந்து, (‘யான் காய் முதலியன தின்று பழகியவனல்லேன்,’ என்பது கருத்து.)

42. புகர் - சுக்கிரன், குலைகுலைந்து - நடுநடுங்கி, மொழி குழறி - சொல் தடுமாறி, புலர்ந்து - உலர்ந்து, சிலை - கல்.

வாடும் தமியேன் வருந்திப்போய்ப் பால்அடிசில்
தேடும் பரிசுளதோ செப்பாய் தர,'என்றான். 43

'கன்னெஞ்சர் ஆய கௌசிகனார் நெஞ்சம்போல்
வன்னெஞ்சோ உன்நெஞ்சும்?' என்ன மயில்உரைத்தாள்;
தன்னெஞ் சுருகிஒரு சற்றே தயையாகித்
தின்னும் கனிஅருந்தித் தெண்ணீரும் தான்குடித்தான். 44

தாமம் திகழ்புயனும் தையலாளும்மகனும்
மாமந் திரியும் மலர்க்கரத்தா லேவாங்கித்
தேமென் கனிஅருந்திச் செவ்வாய் வெளுப்பேறத்
தாமும் புனல்அருந்தித் தாரணிமேல் கண்வளர்ந்தார். 45

[அப்பொழுது விசுவாமித்திர முனிவர் பெருமழை பெய்யச் செய்தனர். மழையால் வருந்திய மன்னன் சுக்கிரனை நோக்கி,]

'மாறுவதும் இல்லை மழைதான் மறையோனே!
ஆறு பெருகிடுமுன் அப்பால் படுத்தும்,'எனச்
சீறும் அரவேபோல் சினத்து,'நீர் செல்லும்ஊர்
தோறும் வரஎனக்குக் காரணம்என்? சொல்லும்,'என்றான். 46

'எந்நகரில் புக்கேம்? இடர்வனத்தை விட்டினிஓர்
நன்னகரம் சேர்ந்தால்,அந் நாளே உனக்கடியேன்

43. தமியேன் - திக்கற்ற யான், அடிசில் - சோற்றை, பரிசு உளதோ - வகையுண்டோ? செப்பாய் - சொல்வாயாக.

44. கன்னெஞ்சர் - கல்+நெஞ்சர், ஆய - ஆகிய, வன்னெஞ்சோ - கொடிய மனமோ? தன்னெஞ்சு உருகி - (சுக்கிரன்) தன் மனம் கரைந்து, தயை ஆகி - கருணை கொண்டு, தெண்ணீரும் - தெளிந்த நீரையும்.

45. தாமம் - மலர் மாலை, திகழ் - விளங்குகின்ற, புயனும்-தோள் களையுடைய அரிச்சந்திரனும், தையலாளும் - அழகியாகிய சந்திரமதியும், தேமென் கனி - தேன் மயமான மிருதுவான பழங்களை, தாரணி மேல் - பூமி மேல், கண் வளர்ந்தார் - தூங்கினர்.

46. படுத்தும் - படுப்போம், சினத்து - (சுக்கிரன்) கோபித்து.

சொன்ன பொருள்தருவேன்; தூயோய்! வருதி,' எனு,
மன்னவனும் மந்திரியும் மாதும்அவன் தாள்பூண்டார். 47

கலி விருத்தம்

அன்று விடிந்தபின் அத்தலம் விட்டுச்
சென்று செழுங்கனி தின்றயல் நண்ணிக்
குன்று கடந்துகு ளிர்ந்தம லர்த்தாள்
கன்ற நடந்தணி கங்கைஅ ணைந்தார். 48

[அவர்கள் கங்கையில் நீராடி, அங்கிருந்த ஒரு சோலையில் தங்கினார்கள். முனிவர் ஏவலால் வனவிலங்குகள் பல அவர்களைப் பயமுறுத்திச் சென்றன. அப்போது சுக்கிரன் மன்னனை நோக்கி,]

'மன்னவ! கேள்: வினை வந்தது சற்றே!
இன்னம் வரும்வினை எல்லை இலாத;
முன்னம்உ ணர்ந்து,'மு னிக்களி யேன்,' என் (று)
உன்னர செய்துதல் உத்தமம்,' என்றான். 49

'நின்பரம் 'சந்திலன் யான்,' என நிற்றல்;
என்பரம் நின்னர செய்தஅ ளித்தல்;
துன்பம்உ ணர்ந்திவை சொல்லல்து ணிந்தேன்;
மின்பயில் வேலவ! மீளுதி,' என்றான். 50

---

47. புக்கேம் - புகுந்தோம், இடர் - துன்பம் தருகின்ற, தூயோய் - பரிசுத்தமானவனே, வருதி - வருவாயாக, எனு - என்று சொல்லி, மாதும் - அழகியான சந்திரமதியும்.

48. அத்தலம் - அவ்விடத்தை, அயல் நண்ணி - அப்பாற்சென்று, கன்ற - வருந்த, அணி கங்கை - அழகிய கங்கை நதியை.

49. சற்றே - சிறிதே, எல்லை இலாத - அளவு இல்லாதனவாகும், முன்னம் - (அத்திவினைகள் சம்பவிப்பதற்கு) முன்னமே, அரசு எய்துதல் - அரசாட்சியை அடைதல்.

50. பரம் - (பாரம்) சுமை, அரசு எய்த - அரசாட்சியை (மீண்டும்) அடையும்படி, அளித்தல் - (விசுவாமித்திரரிடமிருந்து வாங்கிக்) கொடுத்தல், துன்பம் - (நீ படும்) கஷ்டத்தை, மின் பயில் - பிரகாசம் பொருந்திய, வேலவ - வேலாயுதத்தையுடையவனே, மீளுதி - திரும்பி (என்னுடன்) வருவாயாக.

அந்தணன் அவ்வுரை கூறிட, அண்ணல்,
'மைந்தனும் மங்கையும் மற்றும்உ ளோரும்
நைந்தெனு டன்தொலை வெய்தினும் நான்முன்
தந்தது மாறிலன்,' என்றுத ணித்தான். 51

[அது கேட்ட சுக்கிரன்,]

'சொன்னவை கொள்கிலை; சூழ்வினை எய்தின்
அன்னவை பட்டறி ஆகுல மன்னா!'
என்ன, விடிந்திருள் ஏகலும் ஏகி
மன்னன் நடந்தனன் மற்றவ ரோடும். 52

[பின்பு அவர்கள் நெடுந்தூரம் நடந்து சென்று, யமுனை நதிக் கரையில் தங்கினார்கள். அப்பொழுது முனிவர் மிக்க கோபாவேசத் துடன் அரசன் முன் தோன்றினர். அரசன் அஞ்சி, அவரைப் பின் வருமாறு வினவினன் :]

அறுசீர் விருத்தம்

'எந்தம் நாயக! உனக்கெமர்நெ
டும்பிழைஇ ழைத்த னர்கொலோ!
தந்த மாநிதியி னிற்சிலக
ரந்துசில தந்த உளவோ!
உந்தம் ஏவல்தவ றிச்சிலர்பி
ழைத்தெதிர்உ ரைத்த னர்கொலோ!
வந்த காரணம்எ டுத்தினிது
ரைத்தருள்வ ருத்தம் அறவே.' 53

---

51. அந்தணன் - சுக்கிரன், அண்ணல் - பெரியோனை அரிச்சந் திரன், நைந்து என்னுடன் தொலைவு எய்தினும் - வருந்தி என்னோடு இறந்தாலும், தணித்தான் - (சுக்கிரன் வாயை) அடக்கினன்.

52. பட்டறி-(பட்டு+அறி) அனுபவித்து அறிந்துகொள், ஆகுல மன்னா - துன்பப்படும் அரசனே, ஏகலும் - கழிந்தவுடன்.

53. எமர் - எம்மவர், நெடும்பிழை - பெருந்தவறு, கரந்து - மறைந்து, உந்தம் - உமது, ஏவல் - கட்டளையை, பிழைத்து - தவறி நடந்து, எதிர் - (உமது சொல்லுக்கு) மாறான சொல், அற - நீங்கும்படி

[அது கேட்ட விசுவாமித்திரர்,]

‘இந்த வெங்கடம்அ ணைந்துடல்த
ளர்ந்துயிர்இ டைந்த னைஎனா
நொந்த னன்மனது; நொந்தபடர்
சிந்தனை த ணிந்தி டமுன்நீ
தந்த நாடுநகர், ‘தந்ததிலை,
தந்ததிலை,’ என்று மொழிதந்(து)
அந்த நாடுதனில் வந்தரசு
கொண்டுறைக,’ என்ற ருள்செய்தான். 54

‘எந்தம் நல்லுயிரும் என்கிளைஞர்
இன்னுயிரும் மன்உ யிர்களும்
நந்தி னும்,உடல் பதைக்கநர
கத்தினில்இ ருத்தி விடினும்
முந்த அந்தணர்அ றிந்திடமொ
ழிப்படிஅ ளித்த பொருளைத்
‘தந்த தில்லை,’என உன்றன்எதிர்
நின்றுரைசெ யத்த குவதோ! 55

‘கடிஞை இட்டபலி யைக்கையில்எ
டுத்தடுப சிக்கு நுகரும்
மிடியர் இப்புவியி டத்திலை;எ
னக்கிதுவி தித்த தல,’என்(று)

---

54. வெங்கடம் - கொடிய காடு, இடைந்தனை எனா - வருந்தினாய் என்று, படர்சிந்தனை - துன்புற்ற (என்) மனமானது, தணிந்திட - சாந்தமடையும்படி, மொழி தந்து - கூறி, அரசு - (உனது) அரசாட்சியை.

55. எந்தம் - எமது, கிளைஞர் - பந்துக்களின், மன் உயிர்களும் - உலகில் நிலைபெற்ற மற்ற உயிர்களும், நந்தினும் - அழிந்தாலும், இருத்திவிடினும் - இருக்கச் செய்துவிட்டாலும், முந்த - முன்னமே, மொழிப்படி - (உமக்குத் தருவேன் என்ற) சொல்லின்படி.

56. கடிஞை - பிச்சைப் பாத்திரத்தில், பலியை - பிச்சையை,

அடிக ளில்கரம்இ றுக்கினன்; இ
றுக்கிடம றுத்த ரசன்முன்
கடிய சொல்கொடுவி னைக்கவுசி
கப்பெயரி னன்க ழறுவான்: 56

'தொக்க பற்பலவி லங்குகள்தொ
டர்ந்துடல்பி ளந்து நலியும்;
புக்க இக்குடிஞை யிற்குடிஞை
பற்பலபொ ருப்பு மஃதால்,
இக்க டத்தினில்அ வத்தில்எளி
திற்புகுதல் தக்க தலதென்
மக்க ளைத்திரும ணஞ்செய்தும
கிழ்ந்துநின்வ ளம்பெ றுதியால்.' 57

[அது கேட்ட அரிச்சந்திரன்,]

'குக்கி புக்கதுசெ ருக்கொடுகு
டற்கருவ ருப்பு வரவே
கக்கி விட்டதுபு சிப்பவர்க
டற்புவியி டத்தில் உளரோ?

---

எடுத்து - (பிச்சையிட்ட தாமே மீண்டும்) வாரி, அடு பசிக்கு நுகரும்- வருந்துகின்ற பசி நீங்கும்பொருட்டு உண்ணுகின்ற, மிடியர் - தரித்திரரும், விதித்தது அல - (நீர்) கட்டளையிட்டது (தகுதி) அல்ல, சொல் கொடு - சொல்லைக் கொண்டு, கழறுவான் - இடித்துச் சொல்வான்.

57. தொக்க - திரண்ட, நலியும் - (உங்களை) வருத்தும், புக்க - (நீங்கள்) இறங்கின, இக்குடிஞையில் - இந்த நதியின் கரையில், குடிஞை பற்பல-பறவைகள் பலவற்றையுடைய, பொருப்பும்-மலையும், அஃதால்-அவ்வகை மிருகங்களையுடையதே ஆகையால், இக்கடத்தினில் - இக்காட்டில், அவத்தில்-வீணிலே, தக்கது அலது - தகுந்தது அல்லாத செயல், பெறுதி - பெறுவாயாக, ஆல் - அசை.

58. குக்கி - வயிற்றில், குடற்கு - குடலுக்கு, கடற்புவி - கடலால் சூழப்பட்ட உலகம், சமுக்கினன் - கர்வமுடையவன்.

தக்க சொல்திறம்உ ரைத்திலை;ச
முக்கினன்எ னப்பெ யர்இடும்
இக்க ருத்தைஇனி விட்டுவிடு
விட்டுவிடெ'ட னக்க மறினான். 58

'இந்த உத்தரம்உ னக்கினிஎ
னக்குரைசெ யத்த குவதோ?
வெந்த மற்குள்ளே விட்டிடினும்,
வெட்டிவகிர் இட்டு விடினும்,
முந்து வன்பினுடன் என்வயின்மு
னிந்தமுனி விற்க டியனேன்
தந்து விட்டபொருள் கொள்வதில்வி
ருப்பம்ஒரு சற்றும் இலையே. 59

'புனித! நின்சொலைம றுத்தலில்
வெறுத்திடல்பொ றுத்த ருள்,'எனப்
பனித வழ்ந்தவிழி யன்படி
விழுந்தடிப ணிந்து தொழலும்
முனிவெ குண்டிருவி ழிக்கடைசி
வப்புறும்நெ ருப்பெ ழமுனிந்(து),
'இனிவ ரும்பரிசு கண்டிடுக!'
என்றவண்அ கன்ற னன்அரோ. 60

[முனிவர் அச்சோலையில் ஒரிடத்தில் மறைந்திருந்து, சுக்கிரனை நினைத்தனர். உடனே சுக்கிரன் அவர்முன் தோன்றினன். முனிவர் அரிச்சந்திரனுக்குப் பின்னும் பல துன்பங்களை இயற்றச் சுக்கிரனுக்குக்

---

59. உத்தரம் - மறு மொழியை, வெந்தழற்குள் - வெப்பமான நெருப்பில், வகிர் - பிளவு, முந்து-முன்னே, வன்பினுடன் - கொடுமையோடு, என் வயின் - என் மீது, முனிவிற்கு - கோபத்திற்கு, அடியனேன் - அடியவனை யான்.

60. புனித - பரிசுத்தரே, பனிதவழ்ந்த-நீர் ததும்பிய, விழியன்-கண்ணை உடையவனாய், படி - பூமியில், தொழலும் - வணங்கினதும், பரிசு - தன்மைகளை, அவண் - அவ்விடம் விட்டு, அரோ - அசை.

கட்டளையிட்டுச் சென்றனர். பின்னர்ச் சுக்கிரனும் மற்றவரும் யமுனை நதியைக் கடந்து அப்பாற்சென்றனர்.]

கலி விருத்தம்

கன்னியும் மன்னனும் காதல் மைந்தனும்
நன்னதி யமுனைவிட் டேகும் நாளிலே
சென்னியைத் துளக்கிக்கண் சிவந்து கௌசிகன்
வன்னியை வருகென மனத்தில் உன்னினான். 61

வருகென நினைத்தலும் மலர்த்தண் சூழலில்
இருபிறப் பாளனாய் விரைவின் எய்தியே,
'அருமறை மாதவ! எனை அழைத்த அக்
கருமமே துரை,'எனக் கனல்வி ளம்பினான். 62

கடுநெருப் பின்னணம் பகரக் கௌசிகன்,
'நெடுவனம் பொடிபட எரித்து, நீமறித்(து)
அடுதிறல் மன்னனை அடர்ந்து, கோளொடும்
சுடு'கென உரைத்தனன்; அவனும் சொல்லுவான்: 63

'கற்பினில் மிக்கவள் கன்னி; நன்னெறிப்
பொற்பினன் மன்னன்;யான் சுடவும் போதிலேன்;
வெற்பில்நின் றருந்தவ! வெளிஅ டக்கிநின்
சொற்படி மறுக்கிலேன் சுடுவன் யான்,'என்றான். 64

---

61. கன்னி - சந்திரமதி, சென்னியை - தலையை, துளக்கி - அசைத்து, வன்னியை - அக்கினி தேவனை, உன்னினான் - நினைத்தார்.

62. சூழலில் - சோலையில், இரு பிறப்பாளனாய் - பிராமண வடிவமுடையவனாய், கனல் - அக்கினி தேவன்.

63. கடு நெருப்பு இன்னணம் பகர - கடிய அக்கினி தேவன் இவ்வாறு சொல்ல, பொடி பட - சாம்பலாக, அடர்ந்து - நெருங்கி, கோளொடும் - வலிமையோடும், சுடுக - சுடுவாயாக.

64. கன்னி - சந்திரமதி, பொற்பினன் - அழகன், போதிலேன் - தகுதியில்லாதவன், வெளி அடக்கி - வெளியிடம் முழுதும் எனக்குட் படுத்தி.

இவ்வகை கேட்டபின் முனிவன் ஏகினன்;
அவ்வழி நீங்கியே அகல எய்திட
வெவ்வழல் மறித்தினி திருக்க வேந்தனும்
நவ்விஅன் னாளுடன் நடந்து போயினன். 65

வெறிகமழ் சோலையும் வெற்பும் வெண்திரை
எறிபுனல் பொய்கையும் நீங்கி ஏகியே
செறிகழை வனத்திடைச் செல்லச் சேணிடை
பொறிகளும் கரும்பெரும் புகையும் தோன்றின. 66

கண்டனர், 'புகைவதே'தென்னும் காலையில்
மண்டலம் வளர்ந்துயர் வானைத் தாவியே
அண்டர்அண் டங்களும் வெடிக்க ஆர்த்தழல்
மண்டலம் எங்கணும் வளைந்து கொண்டதே. 67

இடம்சிறி திலைஎன எண்திசா முகம்
படர்ந்தன விலங்கெலாம் இரிந்து பாறிடக்
கடந்தஅத் தொகுதியைக் கடிது நாடியே
தொடர்ந்தன எனஅழல் சுடர்எ ழுந்ததே. 68

அவ்வழல் வளைந்திட அரசர் கோமகன்,
'இவ்வழல் எவ்வழல்?' என்று கூறலும்,

---

65. நவ்வி அன்னாளுடன் - மான் பார்வை போலும் பார்வையை உடைய சந்திரமதியுடன்.

66 வெறி கமழ் - வாசனை வீசுகின்ற, வெற்பும் - மலையும், திரை எறி - அலை மோதுகின்ற, பொய்கை - குளங்களும், செறி கழை - நெருங்கிய மூங்கிற்புதர்களையுடைய, சேணிடை - தூரத்தில், பொறிகளும் - தீப்பொறிகளையும்.

67. மண்டலம் வளர்ந்து - பூமியிற்பரவி, அண்டர் அண்டங்களும் - தேவருலகங்களும், ஆர்த்து - சத்தஞ் செய்து, அழல் - தீ.

68. படர்ந்தன - சென்ற, இரிந்து - ஓடி, பாறிட - ஒளிக்க, கடந்த அத்தொகுதியை — அப்படி ஓடிய அக்கூட்டத்தை.

69. செவ்வழல் - செந்தீப்போலப் பிரகாசிக்கின்ற, அயில் படை - வேலாயுதத்தை உடைய, நீர் - குணம் பொருந்திய.

செவ்வழல் அயில்படைச் செல்வ! கேள்:'எனு
வெவ்வழல் அனையநீர் வெள்ளி கூறுவான்: 69

'சண்டவெம் பசியினால் அழன்று தாவியே
அண்டகோ ளத்தினை அடர்ந்த செந்தழல்
மண்டலத் தரசர்தம் மரபில் ஓர்உயிர்
உண்டல தேகில'தென் றுணர்த்தினான். 70

'ஒருவரை ஆருயிர் உண்டு போகில்யான்
ஒருவனே இறப்பன்; நீர் உய்ந்து போம்,' எனத்
திருவையும் மகனையும் நோக்கிச் செங்கண்நீர்
வரவர அனல்எதிர் மன்னன் ஏகினான். 71

புரவலன் அடிகளைப் பூண்ட மைச்சன், 'ஓர்
உரைஇது கேட்டியான் ஒருவன் நிற்கவே
அரசழி வதுநலன் அன்று; நிற்றிநீ;
விரைகொடு கனலிடை வீழ்வல் யான்,' என்றான். 72

அறுசீர் விருத்தம்

அன்னவை உரைக்க, அண்ணல்
அவனைமார் பிறுகப் புல்லி,
'மன்னவர் தம்மை அன்றி
மற்றவர் உயிரை உண்ணா(து)

---

70. சண்ட வெம்பசி - வேகமான கொடும்பசி, அண்ட கோளத்தினை - உருண்டை வடிவான பூமியை, மரபில் - குலத்தில், உண்டு அலது - உட்கொண்டு அல்லாமல், ஏகிலது - போகாது.

71. உய்ந்து போம் - பிழைத்துச் செல்லுங்கள், திருவையும் - இலக்குமியைப் போன்ற சந்திரமதியையும்.

72. கேட்டி - கேட்பாயாக, அரசு - அரசனாகிய நீ, நிற்றி - நிற்பாயாக, விரைகொடு - விரைவுடன், வீழ்வல் - விழுவேன்.

73. புல்லி - தழுவி, உண்ணாது - (இத்தீ) உட்கொள்ளாது.

என்னவும் கேட்டேன் ; யான்நீ
இறக்கினும் இறக்க வேண்டும் ;
உன்னுயிர் விடாமல் என்றன்
ஒருயிர் விடுதல் நன்றே. 73

'இருவரும் இறந்தோம் ஆகில்
இவரைஓர் பதியில் சேர்க்க
ஒருதுணை உண்டோ ? சொல்லாய்
உறுபொருள் உணர்ந்தோய்!' என்று
மருமலர் நறுந்தார் மன்னன்
மறுதலைத் துரைக்கும் எல்லை
திருஎழில் வடமீன் கற்பின்
திருந்திழை செப்ப லுற்றாள் : 74

'மாந்தரால் இறத்தல் வாழ்தல்
மாதரார்க் கென்று மேல்நாள்
ஆய்ந்தநூல் அறிந்தோர் கூறக்
கேட்டனன் ; ஆத லாலே,
வேந்தனை விடாது காத்தி
அண்ணல்நீ ; யான்இவ் வெந்தீப்
பாய்ந்துயிர் விடுவேன்,' என்றுப்
பைந்தொடி முந்திச் சென்றாள். 75

அன்னைதான் ஏக மைந்தன்
அலறிச்சென் றடிவீழ்ந்(து), 'அன்னாய் !
என்னைநீர் பயந்தீர் உங்கள்
இடுக்கணுக் குதவ அன்றோ ?

74. இவரை - சந்திரமதியையும் தேவதாசனையும், பதியில் - நகரத்தில், உறு பொருள் - இனி வரும் காரியத்தை, மரு - வாசனை பொருந்திய, மறுதலைத்து - தடுத்து, எல்லை - சமயத்தில், திரு எழில் - சிறந்த அழகை உடைய, வடமீன் - அருந்ததிக்கு ஒப்பான, திருந்திழை - சந்திரமதி.

75. மாந்தரால் - புருஷராலே, மாதரார்க்கு - பெண்களுக்கு, மேல் நாள் - முன் காலத்தில், காத்தி - காப்பாயாக, பைந்தொடி - சந்திரமதி.

முன்னைஊழ் விதியி னாலே
  மூந்தயான் தழலில் வீழ்வேன் ;
பின்னைநீர் பிழைமின்,' என்றான்
  பெருகுநீர் அருவிக் கண்ணான். 76

தையலாள் அச்சொல் கேட்டுத்
  தனயனைத் தழுவி மோந்து,
'செய்யவாய்ப் பல்வீழ்ந் தில்லாய்!
  செய்திறம் அறிந்தாய் அல்லை!
ஐய! இத் துணிவும் இந்த
  அறிவும்எங் கடுத்த?' என்னாக்
கையினால் முகத்தில் மோதிக்
  கண்ணினால் அருவி சோர்ந்தாள். 77

'செய்தவப் பயத்தி னாலே
  தோன்றிய செல்வ! செய்த
கைதவம் உண்டேல் நம்மைக்
  கடுங்கனல் கொல்லும்; அல்லால்
உய்தக உதவும்; உள்ளம்
  வருந்தலை; ஒழிநீ,' என்று,
மொய்தழல் தன்னைச் சென்று
  முடுகிநின் றினைய சொல்வாள் : 78

---

76. பயந்தீர் - பெற்றீர்கள், இடுக்கணுக்கு - துன்பத்தில், பிழைமின் - பிழைத்திருங்கள்.

77. தனயனை - மகனை, செய்திறம் - (தொழில்) புரியும் வகையை, ஐய - அப்பனே.

78. பயத்தினால் - பயனால், தோன்றிய - பிறந்த, கைதவம் - வஞ்சனை, உய்தக - (நாம்) பிழைக்கத் தகுந்தபடி, வருந்தலை - வருந்தாதே, மொய் தழல் - நெருங்கும் தீயை, முடுகி நின்று - எதிர்த்து நின்று, இனைய - இப்படிப்பட்ட சொற்களை

'மறைவழி கடந்தேம் ஆகில்,
வருவிருந் திகழ்ந்தேம் ஆகில்,
முறைவழி செய்யேம் ஆகில்,
மூப்பரை இகழ்ந்தேம் ஆகில்
பிறர்பொருள் நயந்தேம் ஆகில்
பிறர்நலம் கொன்றேம் ஆகில்,
குறைசில செய்தேம் ஆகில்
கொல்,'எனக் கனலிற் பாய்ந்தாள். 79

'மதுரமென் மொழியாள் கற்பு
வளர்நெடு வடவைத் தீயின்
முதிர்தழல் அதுதான் என்னைச்
சுடும்,'என முழங்கு செந்தீ
அதிர்குரல் ஆர்ப்பு மாறி
அடங்கிநா ஒடுங்கிக் காலைக்
கதிரவன் வரவு கண்ட
இருள்எனக் கழிந்த தன்றே. 80

மண்டழல் தணிந்து மூங்கில்
வனம்எலாம் வாவி ஆகி
முண்டகம் குமுதம் நீலம்
முளரிகள் நிறையப் பூப்பக்

79. மறைவழி-வேத மார்க்கத்தை, முறைவழி-நீதி வழியிலே, மூப்பரை - பெரியவரை, நயந்தேம் - விரும்பினோம், கொன்றேம் - அழித்தோம்.

80. கற்பு - கற்பானது, வடவைத் தீயின் - (கடலில் உண்டான) வடவாமுகாக்கினியைப் போல, முழங்கு-சத்தம் செய்கின்ற, ஆர்ப்பு-ஒலிப்பு, அன்றே - அசை.

81. மண்டழல் - (மண்டு+அழல்)அதிகரித்த தீ, வாவி - குளம், முண்டகம் - வெண்டாமரை, குமுதம் - அல்லி, முளரிகள் - செந்தாமரைகள், வண்டலில் - சேற்று நிலத்தில், மணி கொழிக்கும் - முத்து

கண்டகம் குளிர்ந்து, கற்பிற்
கரசியைப் புகழ்ந்து போற்றி,
வண்டலில் மணிகொ ழிக்கும்
வாரண வாசி சேர்ந்தார். 81

வாரண வாசி நண்ணி,
வண் துறை யதனில் மேவி,
ஆரண நெறிநீர் ஆடி,
அந்நதி அகன்று போகிப்
பூரணக் குணமார் மாதும்
புதல்வனும் பின்னே போகக்
காரணத் தமைச்ச னோடும்
காசிநல் நாட்டைச் சேர்ந்தான். 82



களை ஒதுக்குகின்ற, வாரணவாசி - வாரணு அசி என்னும் இரு நதிகளின் சங்கமத்தை.

82. வன் துறையதனில் - வளப்பம் பொருந்திய தீர்த்தத் துறையில், மேவி - அடுத்து, ஆரண நெறி - வேத விதிப்படி, காரணத்து அமைச்சன் - பிரதான மந்திரியாகிய சத்தியகீர்த்தி.

## 7. காசி காண்டம்

*[அரசனும் மற்றவரும் காசி விசுவநாதரின் ஆலயமடைந்து, சிவ பெருமானை வணங்கி, ஓர் அம்பலச் சாவடியில் தங்கினர். சத்திய கீர்த்தி சேகரித்து வந்த உணவுப் பொருள்களைச் சந்திரமதி இனிது சமைக்க, அனைவரும் உண்டனர்.]*

*சந்தக் கலி விருத்தம்*

ஒருநாள்செல மறுநாளையில் உறுதீவினை நினையா,
பொருமால்களி றுடையானொடு புகரோன்மிக வெகுளா,
'முருகார்தொடை முடியாய்!மறை முனிகூறிய பொருள்நீ
தருமாறுள தெனில்இன்றது தருகென்று தடுத்தான். 1

அதிரப்பெரு கரவத்தொடும் அழல்கண்புகர் பலகால்
முதிரச்சில சுடுகட்டுரை மொழியப்'பொருள் தரும்அச்
சதுர்எப்படி?' எனஎய்த்துடல் தளரத்துணை விழிமுத்(து)
உதிரச்சிறி தெதிர்உத்தரம் உரையாமல் இருந்தான். 2

மொழியும்பழி உணராமதி முகத்தாள்முதிர் கடல்நீர்
பொழியும்கயல் விழியாள்முனி பொருள்நல்குதல் துணியா,

---

1. உறு தீவினை - உற்ற தீங்கை, நினையா - நினைத்து, பொரு மால் களிறு உடையானொடு - போர் செய்கின்ற பெரிய ஆண் யானை களை வைத்தாண்ட அரிச்சந்திரனோடு, புகரோன் - சுக்கிரன், வெகுளா - கோபித்து, முருகு ஆர் - வாசனை பொருந்திய, தொடை முடியாய் - மலர் மாலையை அணிந்த கிரீடத்தைத் தரித்தவனே, தருகென்று - தருக+என்று.

2. அதிர - பூமி அதிரும்படி, அரவத்தொடும் - ஒலியொடும், புகர் - சுக்கிரன், சதுர் - திறமை, எய்த்து - இளைத்து, துணை விழி - இரு கண்ணிலும், முத்து - முத்துப் போன்ற நீர்த்துளி, சிறிது - சிறி தும், உத்தரம் - மறுமொழி.

3. மொழியும் பழி - உலகத்தார் கூறும் பழியாகிய களங்கத்தை, நல்குதல் - கொடுத்தலை, துணியா - துணிந்து, நலி - வருந்திய, வெருகு அஞ்சிய - பூனைக்குப் பயந்த.

'எழுகின்றதொர் பசியால்நலி வெருகஞ்சிய எலிபோல்
அழுகின்றதென் அரசே!'என அவனும்சிலமொழிவான்: 3

'மின்அஞ்சிய இடையாய்!கதிர் வேல்அஞ்சிய விழியாய்!
வன்னெஞ்சுடை முனிநம்முடை வளமுள்ளது கொண்டான்;
என்நெஞ்சமும் உன்நெஞ்சமும் ஒன்றன்றிஇ ரண்டோ?
உன்னெஞ்சறி யாதென்வயின் உளதோபொருள்?' என்றான். 4

'கல்என்றுயர் தோளாய்!கவு சிகன்எண்ணுதல் அல்லால்
இல்என்பதும் உளதென்பதும் யாம்எண்ணுதல் தகுமோ?
எல்ஒன்றினி அவதித்தினம்; எனையும்மக னையும்நீ
வில்,'என்றனள் கற்புக்கொரு வித்தாகிஉ தித்தாள். 5

அவ்வாறுரை செயமன்னவன் அலையும்குறை உயிர்கொண்(டு)
'எவ்வாறுமை விலைகூறுவல்!' எனஎண்ணிஇ டைந்தான்;
'வெவ்வாய்வடி வேலோய்!எமை விலைகூறுதல் அரிதென்(று)
ஒவ்வாய்எனின் விடுமோநம தூழின்வலி?' என்றாள். 6

தேமென்கனி வாயாள்இது செப்பச்'செயல் இதுவே
ஆம்,'என்றெழ வேவெள்ளியும், 'அதுவேநலன்!' என்றான்;
மாமன்னவன் மைந்தன்தலை மிசையும்குல மடவாள்
பூமென்குழல் மிசையும்சிறு புல்வைத்துந டந்தான். 7

---

4. இடையாய்-இடுப்பை உடையவளே, வன்னெஞ்சுடை-கடின மனமுடைய.

5. கல் என்று உயர்-மலையென்று சொல்லும்படி உயர்ந்த, இல்-இல்லை, எல் ஒன்று-ஒரு பகல், அவதித் தினம்-தவணை நாள், உதித்தாள்-பிறந்தவளான சந்திரமதி.

6. கூறுவல்-கூறுவேன், இடைந்தான்-வருந்தினான், வெவ்வாய்-கொடிய வாயை (கூர்மையை) உடைய, ஒவ்வாய்-சம்மதிக்க மாட்டாய், ஊழின் வலி-பழவினையின் வலிமை.

7. செயல்-செய்யத் தகுந்த காரியம், நலன்-நன்மை, தலை மிசையும்-தலை மீதும், குலமடவாள்-மேன்மை வாய்ந்த இளமை உடையவளான சந்திரமதியின், (தலைமேல் புல் வைத்தல், அங்ஙனம்

மெள்ளச்செல நாணம்செல விரையச்செல வாய்மை
தள்ளப்புதல் வனையும்மயில் தனையும்முன் நடத்தி,
உள்ளத்துயர் அறிவாகிய உரனால்உகு விழிநீர்
வெள்ளத்தினை அடையா,இறை விலைகூறிநடந்தான். 8

'ஞாலத்தறம் உணராதுயிர் தளரும்படி பலசெய்
மேலைப்பழ வினைபற்றிட விற்கின்றனன் வினையேன்!
வாலைச்சிறு பருவத்தென்நல் மரபின்புதல் வனையும்
நீலக்கயல் விழியாளையும் நிதிஉள்ளவர் கொண்மின்.' 9

சோதித்திரு முடியான்இவை சொல்லச்சுடர் மாட
வீதித்தலை நின்றோர்சிலர் மிகவும்மனம் அழலா,
'போதில்திரு அனையாள்இவள் தனையும்புதல் வனையும்
ஏதிப்படி விலைகூறிட எய்தும்திறம்!' என்பார். 10

'செருவுற்றகண் அயிலைப்பொரு திருஒப்பவள் இவளும்
மருவுற்றணி தெரியல்புய மதன்ஒப்பவன் மகனும்
ஒருவர்க்குறு விலையின்பொருள் உடையார்களும் உளரோ!
இருவர்க்குறு விலைஇப்பதி எவர்நல்குவர்!' என்பார். 11

---

வைக்கப்பட்டார் பிறர்க்கு அடிமையாதற்குரியார் என்பதைக் காட்டும் அறிகுறியாம்.)

8. நாணம் செல - வெட்கம் உண்டாக, வாய்மை - சத்தியம், மயில் – சந்திரமதி, உரனால் - வலிமையினால், உகு - சிந்துகின்ற, வெள்ளத்தினை - பெருக்கை, அடையா - தடை செய்து, இறை - அரசன்.

9. ஞாலத்து - உலகத்தின், அறம் - தருமம், மேலைப் பழவினை - முன் பிறவியிற்செய்த பழைய கருமத்தினால், பற்றிட - தொடர, வினையேன் - தீவினையாளனாகிய யான், வாலை - இளமையான, மரபின் - குலத்தின், கயல் - கெண்டை மீன் போலும், நிதி - செல்வம், கொண்மின் - வாங்கிக்கொள்ளுங்கள்.

10. சோதி - பிரகாசமுடைய, மாட வீதித்தலை - மாளிகைகளை உடைய தெருவில், அழலா - கொதித்து, போதில் திரு - செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியை, திறம் - காரணம்.

11. செருவுற்ற - போருக்குத் தகுந்த, அயிலைப் பொரு கண் -

[அப்பொழுது ஓர் அந்தணன் அரிச்சந்திரனெதிர் வந்து,]

'என்சொல்லினை? முன்சொன்னவை இன்னம்பகர்,' எனவே,
'மென்சொல்லியை இளமைந்தனை விலைகூறினன்,' என்றே
மன்சொல்லலும், 'நின்சேயையும் மடமானையும் விற்கும்
பொன்சொல்,'என, விறல்வேலினன் மறையோனொடு பகல்வான்: 12

'களபப்பிடர் மிசைநின்றெறி கவணிற்படு சிலைபோம்
அளவுக்கிரு நிதிநல்கிடின், அதுவேவிலை,' என்றான்;
'உளதப்பொருள் முழுதும்;உன துரையின்படி தருவேன்
தளவத்திரு நகையாளொடு மகனைத்தரின்,' என்றான். 13

கலி விருத்தம்

'உண்மகிழ்ந்தின் றளிக்கும் உறுபொருள்
கொண்மார் தம்மை அழை,'எனக் கூறினன்;
வெண்மனத்தன் என் வெள்ளியைக் கூவிஅந்
நுண்மறைக்குலத் தோன்முகம் நோக்கியே 14

---

வேலையொத்த கண்களையுடைய, தெரியல் புயம் - மாலையை அணிந்த தோளையுடைய, மதன் - மன்மதனை, ஒருவர்க்கு உறு - ஒருவருக்குத் தகுந்த, இப்பதி - இந்நகரில், நல்குவர் - தருவர்.

12. என் சொல்லினை - என்ன கூறுகிறாய்? பகர் - சொல்லு, சொல்லியை - சொற்களைப் பேசுகின்றவளையும், மன் - அரசன், சொல்லலும் - சொன்ன உடனே, சேயையும் - பிள்ளையையும், மடமானையும் - இளமான் போலும் மனைவியையும், பொன் - விலைப் பொருளை, விறல் - வெற்றி பொருந்திய.

13. களபப் பிடர் மிசை - யானையின் கழுத்தின் மீது, எறி - வீசுகின்ற, கவணில் படு சிலை - கவண் கயிற்றிற்பொருந்திய கல், இரு நிதி நல்கிடின் - பெரும்பொருள் கொடுத்தால், தளவத் திரு நகையாள் - முல்லை அரும்பைப் போன்ற பற்களையுடையவள்.

14. உண்மகிழ்ந்து - (உள் + மகிழ்ந்து) மனம் களித்து, உறு பொருள் - மிக்க செல்வத்தை, கொண்மார்தம்மை - வாங்கிக்கொள்பவரை, வெண் மனத்தன் என் - குற்றமற்ற மனமுடையவன் என்று சொல்லுகின்ற, வெள்ளியை - சுக்கிரனை, கூவி - அழைத்து.

'இவர்தமக்களி,' என்றலும், 'ஈவன்,' என்(று)
அவர்தமக்கவன் அங்கைஅறைந்தனன்;
உவரி சூழ்புவி மன்னவன், 'உற்றுநீர்
கவரும் மாநிதி கைபுக்கதோ?' என்றான். 15

'வந்ததென்பொருள்; மாதையும் சேயையும்
அந்தணற்களித் தாவணம் நல்கெ'ன,
முந்த ஆவணம் தீட்டிமுடிந்தபின்
மைந்தனோடு மயிலைவழங்கினான். 16

வல்லி போற்றி,'வருந்தல்எமக்'கெனச்
சொல்லி வேல்கண்துளிபல சிந்திட
அல்லி மாமலர்த் தாள்களை அன்புடன்
புல்லி வீழ்ந்துகிடந்துபுலம்பினாள். 17

'நின்று காணும்நிருபரும் யானும்அன்(று)
அன்று காணஅவாவுறு செம்முகம்
இன்று காண்தக எய்திய தன்றிமற்(று)
என்று காண்பன்இனி!' என ஏங்கினாள். 18

15. இவர்தமக்கு அளி - இவருக்குக் கொடு, என்றலும் - என்று கூறியதும், ஈவன் - கொடுப்பேன், அங்கை அறைந்தனன் - கைபோட்டுக் கொடுத்தான், உவரி - கடலினால், உற்று - என்னோடு வந்து, கவரும் - பெற்ற, கைபுக்கதோ - கைக்கு வந்ததோ?

16. ஆவணம் நல்கு - அடிமைச் சீட்டு (எழுதிக்) கொடு, முந்த - விரைவாக, தீட்டி - எழுதி, மயிலை - சந்திரமதியை, வழங்கினான் - (அரிச்சந்திரன்) கொடுத்தான்.

17. வல்லி - பூங்கொடி போன்ற சந்திரமதி, போற்றி - (அரிச்சந்திரனை) வணங்கி, எமக்கு வருந்தல் - எங்களுக்காக வருந்தாதீர், துளி - அழுகை நீர்த் துளிகள், அல்லி - அக இதழுடைய, புல்லி - தழுவி.

18. நிருபரும் - சிற்றரசரும், அன்று அன்று - நாள்தோறும், அவாவுறு - விரும்புகின்ற, காண் தக - காணத் தகுந்தபடி, எய்தியது அன்றி - அமைந்ததன்றி.

ஏங்கி, 'மன்னன் இடைவன்,'என் றேபடர்
தாங்கி, 'நாயக! தாவிடை,' என்றயல்
நீங்கி னாள்; இறை நீள்கழுத் தைத்தழீஇத்
தூங்கி வாய்விட்டுத் தோன்றல்அ ரற்றினான் 19

'எமைய! என்னையும் யாயையும் தாங்கிய
சுமையி றக்கினை யோ! சுகம் உற்றதோ!
உமைஅ ணைந்திங் குறவென் றிருந்தவா(று)
அமையு மோ! ஐய னே!'என்ற ரற்றினான். 20

கழுத்தைப் பூண்டழும் காதலன் கைகளை
அழுத்த மாம்பற் றறவிடு வித்தனன்;
விழித்த கண்பொறி சிந்திட வேதியன்
இழுத்துப் போய்த்தன தில்லிடம் எய்தினான். 21

[அக்காட்சி கண்ட மன்னன் மிக வருந்தி, மந்திரி தேற்றத் தேறி,]

அந்த ணன்முகம் நோக்கி,'அ ரும்பொருள்
வந்த தோ?'என்று மன்னன்வி ளம்ப,'யான்
இந்த மாநிதி பெற்றனன்; இன்னமும்
சிந்தை யோடுரை செய்வதொன் றுண்'டென்றான். 22

'முனிக்கு முன்னம் மொழிந்தபொன் ஈந்தனை;
எனக்குக் கூலிநீ ஈகுவ தென்?'என,

---

19. இடைவன் - வருந்துவன், படர் தாங்கி - துன்பத்தை அடக்கிக்கொண்டு, தாவிடை - போக உத்தரவு கொடும், அயல் நீங்கினாள் - அப்பாற்சென்றாள், இறை - அரசனுடைய, தழீஇ - தழுவிக்கொண்டு, தூங்கி - தொங்கி, தோன்றல் - தேவதாசன், அரற்றினான் - அழுதான்.

20. எமைய - (எம் + ஐய) எம் தலைவரே, யாயையும் - என் தாயையும், தாங்கிய - பாதுகாத்த, அமையுமோ - போதுமோ.

21. காதலன் - மகனுடைய, பொறி சிந்திட - தீப்பொறி சுக்க, இல்லிடம் - வீட்டை.

22. சிந்தையோடு - வருத்தத்தோடு, உரை செய்வது - சொல்வது.

23. உத்தமன் தனக்கு - உத்தமனாகிய அரிச்சந்திரனுக்கு, வினைச் சல்லியன் - தீவினை போலும் சுக்கிரன்

'உனக்கும் ஈகுவன் வா,'என, உத்தமன்
தனக்குப் பின்நடந் தான்வினைச் சல்லியன். 23

அன்ன காலைஅ மைச்சனை நோக்கியே,
'என்னை நீவிற்றி வற்குப்பொன் ஈகெ'னச்
சொன்ன போதில் துணுக்கென ஏங்கி,'எம்
மன்ன! கேள்,'என மந்திரி கூறுவான்: 24

'அன்னை யாய்எம தாண்தகை ஆகிய
நின்னை யான்விலை கூறுதல் நீதியோ!
என்னை நீவிற்றி வற்குச்செ லத்தகும்
பொன்னை நல்கெ'ன வீழ்ந்தடி பூண்டனன். 25

மண்ணில் வீழ்ந்தஅ மைச்சனை மார்பணைத்(து)
ஒண்ணி லாவத னத்தொளி மாழ்கவே
கண்ணி லில்புனல் ஆட்டிக் 'கவுசிகன்
எண்ணும் நீர்மைக்கி தேற்கும தோ!'என்றான். 26

'ஏற்கு மோபொருட் குன்னைவிற் றீகுவ(து)!
ஆர்க்கு மாதவன் எண்ணம்அ றியலாம்!
தார்க்கு லாவுவெள் வேலவ! தாழ்க்கிலா(து)
ஊர்க்குள் என்னைவிற் றொண்ணிதி நல்'கென்றான். 27

'என்ன பாவம்எ னக்குப் பலித்த'தென்(று)
அந்ந கர்ப்பல ஆவண வீதிவாய்ப்

---

24. அன்ன காலை - அச்சமயம், இவற்கு - இவ்வந்தணனுக்கு, துணுக்கென - திடுக்கிட்டு.

25. ஆண் தகை - தலைவன்.

26. ஒண்ணிலா வதனத்து - பிரகாசமான சந்திரனைப் போன்ற முகத்தின், மாழ்க - மழுங்க, நீர்மைக்கு இது ஏற்குமதோ - தன்மைக்கு இது பொருந்துவதோ?

27. அறியலாம் - அறிதல் கூடும், தார் குலாவு - மலர் மாலை விளங்கும், தாழ்க்கிலாது - (காலம்) தாழ்த்தாமல், ஒண்ணிதி-சிறந்த பொருளை.

பொன்னின் மாமுடி மீதில்புல் சூடியே
மன்னனை விலை மந்திரி கூறுவான் : 28

'ஆதி நூலினர் ஆயினும் அல்லது
சாதி ஈனர்கள் ஆயினும் சால்புடைக்
கோதி லான்தனைக் கொண்மின்,' எனப்பல
வீதி தோறும்விலையது கூறினான். 29

[அது கேட்ட வீரவாகு என்னும் பெயருடைய ஒரு புலைமகன்,]

சுமக்கும் காவைத் துத்தூசொடு வாய்புதைத்(து),
'உமக்கு வேண்டும் உறுபொருள் நல்கிடின்
அமைக்கும் புன்தொழி லாளர்எம் போல்பவர்
தமக்கும் விற்கத் தகுதியுண் டோ?' என்றான். 30

'தருகு வேன்,' எனத் தன்பெய ரால்பொறித்(து)
அருளி னன்புலை யற்கமைச் சாவணம் ;
பொருளை வாங்கிப் புகர்க்களித்(து), 'ஐய! போய்
வருக,' என்ன, மகிழ்ந்தவன் ஏகினான். 31

மீளி வேந்தும் விடக்கின்த சைச்சுமை
தோளில் ஏற்றிப் புலையன் தொடர்ந்தனன் ;
ஆளி மொய்ம்பின் அமைச்சனும் மன்னவன்
தாளில் வீழ்ந்துதளர்ந்துவருந்தினான். 32

---

28. பலித்தது - சம்பவித்தது, ஆவண வீதிவாய்-கடைத் தெருக்களில்.

29. ஆதி நூலினர் - வேத சாஸ்திரமுணர்ந்த அந்தணர், ஈனர்கள் - இழிவானவர்கள், சால்பு உடைக் கோது இலான்தனை-பெருமை உடைய குற்றமில்லாதவனை.

30. கா - காவடியை, தூசொடு - துணியினால், புதைத்து - மூடி, புன் தொழிலாளர் - அற்பத் தொழிலைச் செய்பவராகிய.

31. பொறித்து - எழுதி, ஆவணம் - அடிமைச் சீட்டு.

32. மீளி - பெருமையுடைய, வேந்தும் - அரசனும், விடக்கின் - மாமிசத்தின், புலையன் - வீரவாகு, ஆளி மொய்ம்பின் - சிங்க வல்லமை உடைய.

'கொற்ற வா! நின் குளிர்மலர்த் தாளினை
உற்ற நாள்தொட்டும் உன்பணி யேசெயப்
பெற்ற மாதவப் பேறெனக் கின்றறும்
அற்ற தே!'என் றயல்அழு தேகினான். 33

[பின்பு வீரவாகு அரிச்சந்திரனுடன் தன் மனையை அடைந்து,]

அறுசீர் விருத்தம்

'தூங்கிருள் கடியும் செந்தீச்
சுடலையில் சுடும்பி ணத்துக்(கு)
ஓங்கிய புலைப்பே றுடை
ஒன்றுண்டு; பணம்கால் உண்டு;
வாங்கிஈ தெனக்கு வைத்து,
வாய்க்கரி சியைநீ அட்டுண்(டு)
ஆங்கிரு,' என்று பின்னும்
அண்ணலுக் கவன்உ ரைப்பான்: 34

'எனக்குநீ பணமும் கொள்ளி
ஆடையும் இனிது நல்கி,
உனக்குவாய்க் கரிசி தந்தேன்
உண்டிரு பசியை நீக்கி;
மனத்துளே வஞ்சம் இன்றி
மயானத்தில் உறைவாய்,' என்னத்
தனக்குநேர் இல்லான் தானும்,
'நன்'றெனச் சுடலை சார்ந்தான். 35

33. கொற்றவா - அரசரே, தொட்டும் - தொடங்கியும், பேறு - பெருமை.

34. தூங்கு இருள் -(உலகில்) தங்கிய இருளை, கடியும் - நீக்கும், பேறு ஆடை - பெறுவதாகிய ஆடை, அட்டு உண்டு - சமைத்துப் புசித்து, ஆங்கு இரு - அச்சுடலையில் இருப்பாயாக.

35. நேர் - சமானம்.

சுட்டவெம் பிணத்தோ டொக்கத்
தொலைந்துவெந் தெரிந்த கொள்ளிக்
கட்டையும் பாடை சேர்ந்த
கழிகளும் எடுத்துக் கூட்டிக்
கொட்டில்ஒன் றெடுத்து, மேல்நாள்
கொடுஞ்சவம் கொணர்ந்து போட்ட
கட்டில்ஒன் றேறிச் செங்கோல்
காவலன் வீற்றி ருந்தான். 36

பாடையில் கொணர்ந்து வைத்த
பிணஞ்சுடு பணமும் கொள்ளி
ஆடையும் வாங்கி ஈட்டி
ஆண் தகைக் களித்தங் குற்றுக்
கூடையில் நிறைத்து நாளும்
கொடுத்தவாய்க் கரிசி வைத்தாங்(கு)
ஓடைமாக் களிற்றின் மன்னன்
உறைந்தனன்! உறைந்த பின்னர் 37

அத்திரு நகரின் மற்றோர்
அம்பலத் திரவு தங்கிச்
சத்திய கீர்த்தி என்பான்
தங்கள்நா யகனைத் தேடிப்
புத்தியில் வருத்தம் நண்ணிப்
புலைக்குடில் அருகு தேடி
உத்தமன் ஈமம் காக்கு
மாறுகேட் டோடிச் சென்றான். 38

---

36. ஒக்க - ஒருங்கே, கொட்டில் ஒன்று எடுத்து - கொட்டகை ஒன்று கட்டி.

37. ஈட்டி - சேர்த்து, ஆண் தகைக்கு - தலைவனாகிய வீரவாகுவுக்கு, ஓடை-முகபடாத்தையுடைய, உறைந்தனன்-தங்கியிருந்தனன்.

38. அம்பலத்து – பொதுச் சாவடியில், ஈமம் - சுடுகாடு.

நெருப்பெழுந் தெரியுஞ் செந்தீச்
சுடுகரை நீந்தி ஏகி,
மருப்பயில் அலங்கல் மன்னை
மந்திரத் தலைவன் அண்மிச்
செருப்பயில் வீர வேலான்
சிறுகுடில் தனிலே புக்கங்(கு)
இருப்பது கண்டான்; காணு
ஏங்கியே அலறி வீழ்ந்தான். 39

'மன்னவர் இடம்பெறாது
வந்துசூழ்ந் திறைஞ்சிப் போற்ற
அன்னமென் னடையார் ஆட
அரம்பையர் பாட வைகும்
பொன்னெடுங் கோயில் நீங்கிப்
பூதமும் பிசாசும் ஆடும்
இந்நெடுங் கோயி லோவந்
தெய்திய தைய!' என்றான். 40

*[பின்பு மன்னன் மந்திரியைத் தேற்ற, அவன் ஒருவாறு தேறி இருந்தனன்.]*

ஆ. செய்யுள் 325.

---

39. சுடுகரை - சுடுகாட்டு எல்லை, நீந்தி - கடந்து, மருப் பயில் அலங்கல் - வாசனை பொருந்திய மலர் மாலை அணிந்த, மன்னை - அரசனை, அண்மி - நெருங்கி, செருப் பயில் - போரில் பழகுகின்ற, குடில்- குடிசை, புக்கு - புகுந்து, காணு - கண்டு.

40. மன்னவர் - சிற்றரசர், இறைஞ்சி - வணங்கி, அரம்பையர் - தெய்வப் பெண்டிரையொத்த பாடல் மகளிர், வைகும் - தங்கியிருக்கும், கோயில் - அரண்மனை, எய்தியது - சம்பவித்தது.

## 8. மயான காண்டம்

### அறுசீர் விருத்தம்

வல்லியும் மகனும் அந்த
மறையவன் மனையில் சேர்ந்து,
சொல்லிய பணிகள் எல்லாம்
சோர்வறச் செய்து, பின்னும்
எல்லிஓர் சாமம் என்ன
எழுந்திருந் தேவல் முற்றி,
அல்இரு சாமம் சென்றால்
அளித்தகூழ் உண்டு றங்கி 1

கையினில் உலக்கை பற்றிக்
காந்தளின் உதிரம் பாய,
மெய்யினில் வெயர்நீர் சிந்த,
விழியினில் அருவி பாய,
நெய்யினில் முடித்த கூந்தல்
நெல்குற்றும் கொடுமை காணா,
மையினில் திகழ்வேல் கண்ணார்
அரம்பையர் மறுகிச் சோர்ந்தார். 2

புன்கணுற் றரம்பை மாதர்
வருந்தவும் புந்தி செய்யா
வன்கணன் இரக்கம் இல்லான்;
மடித்தவாய் வெடித்த சொல்லான்;

---

1. வல்லியும் - சந்திரமதியும், சோர்வு அற - களைப்பில்லாமல், எல்லி - இரவு விடிய, சாமம் - 7½ நாழிகைக் காலம் (3 மணி நேரம்), ஏவல் முற்றி - வேலையை முடித்து, அல் - இரவில்.

2. காந்தளின் - காந்தள் மலர் போன்ற கரத்திலிருந்து, கூந்தல் - கூந்தலையுடைய சந்திரமதி, காணா - கண்டு, அரம்பையர் - தெய்வப் பெண்டிர், மறுகி - வருந்தி.

தன்கண் அன் பில்லான்; பொல்லான்;
　　தறுகணன்; விலைகொண் டாள்வோன்;
இன்கண் இல் லாதான் பாரி
　　இவனிலும் கொடிய பாவி. 3

அடியினால் அஞ்சி மைந்தன்
　　அனந்தலைப் பயம்உ ணர்த்த,
விடியுமுன் எழுந்தி ருந்து,
　　விளைபுலம் களைய றித்துக்
கடிவனத் தடகு கொய்து
　　காட்டமும் சமிதை யும்பொன்
முடிபுனை தலையில் வைத்து,
　　முறைமுறை வரும்அந் நாளில் 4

மைந்தனும் சிறுரோ டேகி,
　　வனந்தனில் விறகு கட்டித்
தந்திடு வழியின் ஓர்பால்
　　தருப்பைகண்(டு), 'இதுவிட் டேகில்
அந்தணன் முனிவான்,' என்று
　　அஞ்சி,ஓர் வடத்தின் நீழல்
இந்தனம் இறக்கி, அப்புல்
　　இருந்திடு புதற்கண் சென்றான். 5

---

3. புன்கண் உற்று - துன்பமடைந்து, புந்தி செய்யா - மனத்திற் கொள்ளாத, வன்கணன் - கொடியவனாகிய அந்தணன், வெடித்த-கடுகடுத்த, தன்கண் - தன்னிடம், இன் கண் - கருணை, பாரி - மனைவி.

4. அனந்தலை - தூக்கத்தை, கடி வனத்து - பேய் வாழுங் காட்டில் உள்ள, அடகு - இலைகளை, காட்டமும் - விறகும், சமிதையும் - ஓம விறகும், புனை - தரிக்கின்ற, முறை முறை வரும் - வழக்கமாகச் செய்து வருகிற.

5. சிறுரோடு - (அயல் வீட்டுச்) சிறுவருடன், தந்திடு-கொண்டு வருகிற, வடத்தின் - ஆலமரத்தின், இந்தனம் - விறகை, புதற்கண் - புதரில்.

பறித்தனன் குசையைப் பற்றி;
  பறித்தலும் முனிவன் ஏவல்
குறித்துவந் ததனுள் தங்கும்
  கோள்அராச் சீறி ஓங்கித்
தெறித்தழல் விழியால் சிந்தத்
  தீண்டிற்று; தீண்ட லோடும்
வெறித்தெழுந் தலறி ஓடி,
  வெருவியே தரையில் வீழ்ந்தான். 6

வடத்தின்கீழ் இருந்த தோழர்
  மறுகிப்போய் வள்ளல் வீழ்ந்த
இடத்தினை அணுகி, 'ஐயோ!
  என்உற்ற துரையாய்!' என்னப்
'படத்தினால் பெரிய நாகம்
  கடித்தது; பாரும்,' என்று
விடத்தினால் அறிவு சோர்ந்தான்;
  விட்டுயிர் அடங்கிற் றன்றே. 7

ஆவிபோய் அகன்ற பின்னை
  அனைவரும் புரட்டிப் பார்த்துப்
'பாவினூழ் என்னே! இந்தப்
  பாலகன் இறந்தான்!' என்று
மேவிஅவ் வடத்தின் கீழ்வந்
  தவரவர் விறகு கொண்டு
காவிஅம் கழனி சூழும்
  காசியம் பதியில் புக்கார். 8

---

6. குசையை - தருப்பையை, கோள் அரா - வலிமையுடைய பாம்பு, தீண்டிற்று - கடித்தது, தீண்டலோடும் - கடித்ததும், வெருவி - பயந்து.

7. வடத்தின் - ஆலமரத்தின், மறுகி - மனங்கலங்கி, வள்ளல் - தேவதாசன், என் உற்றது - (உனக்கு) என்ன நேரிட்டது? உரையாய் - சொல்வாயாக.

8. ஆவி - உயிர், பின்னை - பிறகு, மேவி - சென்று, காவி - குவளை மலரையுடைய.

[அப்பொழுது தன் மகன் வருகையை எதிர் நோக்கி அந்தணன் வீட்டு வாயிலில் நின்றுகொண்டிருந்த சந்திரமதி, திரும்பி வந்த சிறுவரால் தன் மைந்தன் மாண்டதை அறிந்து,]

'அறுதியீ தெ'ன்று சால
அறிவழிந் துருகி வீழ்ந்து,
மறுகினாள்; உடையோற் கஞ்சி
வாய்திறந் தரற்றாள்; மாழ்கிச்
'சிறுதொழில் முழுதும் செய்து
தீர்ந்தபின் தேடிச் சேறல்
உறுதி,'என் றுளத்தின் உள்ளே
ஒடுக்கிவந் தகத்திற் புக்காள். 9

முறைமுறை பணிகள் எல்லாம்
செய்தற முடித்துப் பின்னர்
மறையவன் தன்னை ஏத்தி,
வாய்புதைத் தழுது விம்மி,
'இறைவ! கேள்: அரவம் தீண்டி
என்மகன் இறந்தான்! யான்அச்
சிறையிலே சேறற் குன்றன்
திருவுளம் அறியேன்,' என்றாள். 10

சினக்கடுஞ் சொல்லால் சீறித்
திடுக்கிட உரப்பி, 'வீணி!
எனக்குறு குறையே அன்றி
என்பொருட் கழிவு வந்தால்

9. அறுதி ஈது - (மகன்) முடிவு இது, சால - மிகவும், மறுகினாள் - கலங்கினாள், உடையோற்கு - (தன்னை அடிமையாக) உடையவனுக்கு, மாழ்கி - வருந்தி, சேறல் - செல்லுதல்.

10. அற முடித்து-முற்றும் முடித்து, ஏத்தி-வாழ்த்தி, இறைவ-தலைவரே, அச்சிறையிலே - அவ்விடத்திலே, சேறற்கு - செல்லுதற்கு.

11. உரப்பி - அதட்டி, உறு விலை - பெருவிலை, தவிர்க - நீங்குவாயாக.

உனக்குறு குறைதான் உண்டோ?
உறுவிலைப் பட்ட பையல்
தனக்கொரு தாயும் உண்டோ?
தவிர்கநீ போவ'தென்றான். 11

'அடிமையே எனினும் ஐயா!
அந்தரத் திறந்தான் என்றால்
கொடியனேன் தனக்குப் பெற்ற
வயிறுதான் கொதித்தி டாதோ?
படியின்மேல் இறந்தான் தன்னைப்
பார்த்தெடுத் தெரித்துக் கங்குல்
விடியுமுன் வருவேன்; நல்கு
விடை,'எனத் தொழுது வீழ்ந்தாள். 12

மாலையம் குழலாள் கூற
மறையவன் மனம்பொ ருந்தி,
'வேலைகள் மிகவும் உண்டு;
விடியுமுன் வருவா யாகில்
நீலவேல் விழியாய்! ஏகு
நீ,'என ஒருகால் சொன்ன
காலையே எழுந்தி ருந்து,
கடிநகர் கடந்து போனாள். 13

'பாவியேன் மகனே!' என்பள்;
பதைப்பள்;பொன் முகத்தில் மோதித்
தாவியே விழுவள்; நின்று
தயங்கியே மயங்கி வீழ்வள்;

---

12. அந்தரத்து - தனிமையில், படியின்மேல் - பூமியின்மேல், கங்குல் - இரவு, விடை நல்கு - விடை கொடு.

13. கடி நகர் - காவலையுடைய நகரத்தை.

14. பாவியேன் - பாவியாகிய என்னுடைய, அலமரும் - வருந்துகின்ற.

காவியம் கண்ணீர் பாயக்
கதறுவள்; பதறி ஏங்கி
ஆவியைத் தேடித் தேடி
அலமரும் உடலம் ஒத்தாள். 14

[இவ்வாறு ஆறாத் துயருடன் காட்டிற் பல இடங்களிலும் அலைந்து, முடிவில் ஆலமரத்தின்கீழ் இறந்து கிடந்த தன் மைந்தனை வாரி மடிமீதமைத்து, வாய் விட்டு அரற்றலாயினள்:]

எழுசீர்ச் சந்த விருத்தம்

பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து
பசியால் அலைந்தும் உலவா
அனியா யவெங்கண் அரவால் இறந்த
அதிபா வமென்கொல் அறியேன்!
தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே!
இனியா ரைநம்பி உயிர்வாழ் வமென்றன்
இறையோ னும்யானும் அவமே! 15

'நிறைஒ சைபெற்ற பறைஒ சைஅற்று
நிரையாய் நிறைந்த கழுகின்
சிறைஒ சைஉற்ற செடியூ டிறக்க
விதியார் இழைத்த செயலோ!
மறையோன் இரக்க வளநா டனைத்தும்
வழுவா தளித்த வடிவேல்
இறையோன் அளித்த மகனே! உனக்கும்
இதுவோ விதித்த விதியே! 16

15. உலவா - அழியாமல், என்கொல் - என்னவோ, செறிந்து - முற்றி, அவமே - வீணே.

16. நிரையாய் - கூட்டமாய், சிறை - சிறகுகளின், செடியூடு - செடிகளினிடையில், விதியார் - பிரம தேவர், இரக்க - யாசிக்க, வழுவாது - (சொன்ன சொல்) தவறாமல், அளித்த - பெற்ற.

'வானின் றிழிந்து சொரிகின் றதாரை
மழைபோ லவிழ விழிநீர்
ஊனின் றிமேனி உதிரங் கன்சிந்த
உயிரின் றிவெம்பு தழலின்
மேனின் றுவெந்த தளிர்போல் உயங்கி
விதியா ரைநொந்து தனியே
யானின் றிரங்க ஏனென் பதில்லை!
இதுவோ உன்நீதி மகனே! 17

'செங்கோல் அறத்தின் முறையே செலுத்து
திறலோன், எவர்க்கும் உரவோன்,
வெங்கோ பயானை விறல்மன் னன்நம்மை
விடுவிக் கஎண்ணி வரும்நாள்
பங்கே ருகத்து மலர்போல் விளங்கு
வதனா! மகிழ்ந்த பரிவால்,
'எங்கே என்ஆசை மகன்?' என் றுரைக்கின்
எதிர்ஏ துசொல்வன் மகனே? 18

'நீர்ஆ ளவாவி செறிநா டனைத்தும்
நிறைமா தவற்கு தவினும்
பார்ஆ ளும்நீர்மை தொடர்பற் றதன்று;
படிஆ ளும்எந்தை முடியின்,
கார்ஆ ளர்ஏர்கள் கடவோ சைஓய்வில்
கன்னோ சிநாட தனைமேல்
ஆர்ஆ ளவல்லர்? அவமே வனத்தில்
அரவால் இறந்த மகனே! 19

---

17. தளிர் போல் - கொழுந்தைப் போல, உயங்கி - வாடி, விதியாரை - பிரமதேவரை, இரங்க - வருந்த.

18. உரவோன் - வலியவன், வெங்கோபம்-கொடிய கோபத்தை உடைய, பங்கேருகத்து - தாமரையின், வதனா - முகத்தையுடையவனே, பரிவால் - அன்பினால்.

19. தொடர்பு-சம்பந்தம், படி-பூமியை, எந்தை-என் தந்தையா

'நல்லோர் வகுத்த முறையாம் அறங்கள்
நாலெட் டில்ஒன் று குறையேம்!
இல்லோ ரைஅற்பம் இகழேம்! இறுக்கும்
இறைஅன் றிஏற உகவேம்!
சொல்லோ மறுத்தும் உரையேம்! உரைத்த
துறவோர் கள்புத்தி கடவேம்!
எல்லோர் தமக்கும் இனிதே விளைப்பம்!
ஏதா கவந்த திதுவே! 20

'மறைநீ திஉற்ற புறநா டழித்து
வருசே னைஆள்வ தறியேம்!
அறைநீ திமுற்றும் உணரா அமைச்சை
அணிவா யில்வைத்தும் அறியேம்!
குறையே இழைத்து வினையே விளைத்த
குடிவைத் திருந்தும் அறியேம்!
இறையே! தவத்தின் விளைவே! எமக்கும்
இதுவோ விதித்த விதியே! 21

'கனமும் தருக்கள் குலமும் தரித்த
கரமும் பெருத்த உரமும்
தினமும் சிறக்கும் முகமும் தரித்த
சிகையும் கிடக்கும் முறைகண்(டு)

---

கிய மதிதயன், மூடியின் - இறந்தால், கார் ஆளர் - உழவர், கடவு ஓசை - செலுத்தும் ஒலி, ஓய்வு இல் - ஓய்தல் இல்லாத, அவமே - வீணிலே.

20. வகுத்த - ஏற்படுத்திய, முறையாம் - ஒழுங்கான, அற்பம் - சிறிதும், இறுக்கும் - (குடிகள்) செலுத்தும், இறை - வரி, ஏற - அதிகரிக்க, உகவேம் - விரும்பமாட்டோம், துறவோர்கள் - முனிவர்கள்; விளைப்பம் - செய்வோம், ஏது ஆக - எது காரணமாக.

21. புற நாடு - அயல் நாடு, அறை - சொல்லுகின்ற, அமைச்சை - மந்திரிகளை, அணி வாயில் - அழகிய சபையில், விளைவே - பயனே.

இனமும் தரித்த துயிரா னபாவி
இறவா மல்என் றன் மகனே !
மனமும் தரிப்ப திலை!நொந் துபெற்ற
வயிறும் தரிப்ப திலையே ! 22

'பரவா திகட்கு மிகவே விளைத்த
படிபோல் உளத்தில் அறமே
விரவா ததுட்ட முனிகௌ சிகற்கு
வினையேம் இழைத்த குறைபோல்
கரவே பிடித்து வறியேன் அளித்த
களிறா விசெற்ற கடுவாய்
அரவே! உனக்கும் உளதோ பகைக்க
அளியேன் இழைத்த வினையே ! 23

'என்னா யகன்றன் மணிமார் பில்ஏறி
விளையா டுகின்ற எழிலோய் !
முன்னாய் விளைந்த கனல்சூழ் களம்மின்
முதலே நடந்த மதலாய் !
செந்நாய் திரண்டு செறிகான் இருந்து
தெளியா திரங்கும் எனைநீ,
'அன்னாய் ! வருந்தலை,'எனா ததுன்றன்
அறிவுக் கடாது மகனே ! 24

---

22. கனமும் - மேகமும், தருக்கள் குலமும் - கற்பகம் முதலிய தெய்வ விருக்ஷங்களின் கூட்டமும், தரித்த - உவமையாகக் கொண்ட, உரமும் - வலிமையும், சிகையும் - குடுமியும்.

23. பரவாதிகட்கு - பரசமய வாதிகளுக்கு, விளைத்தபடி - செய்த தீங்கின் விதம், விரவாத - கலவாத, துட்ட - துஷ்டனாகிய, கரவே பிடித்து - வஞ்சனையே கொண்டு, வறியேன் - எளியவளாகிய யான், அளித்த - பெற்ற, களிறு ஆவி - ஆண் யானை போன்ற மைந்தன் உயிரை, செற்ற - அழித்த, அளியேன் - எளியவளாகிய யான், அரவே - பாம்பே.

24. மணி - அழகிய, எழிலோய் - அழகனே, ('முன்னாய்...நடந்த

''மறவாள் எயிற்று மணிமா சுணத்தின்
வலியால் இறந்து ளஎனோ(டு)
இறவா திருக்கும் அதிபா விதன்னொ
டுறவே தெனக்க ருதியோ
திறவாய் சிவந்த கனிவாய், உரைத்தல்
செய்கிலாய், முகத்து விழியாய்?
பிறவா தசித்தன் அடியே வழுத்து
பெருமான் அளித்த மகனே! 25

'வடியே றுவெற்றி நெடுவேல் மலர்க்கை
மகனோ டிறந்து மடியாக்
கொடியேன் முகத்தில் விழியார் முனிக்கு
வளநா டளித்த கொடையார்!
இடியே றடர்த்த மரமா கிமண்ணி
னிடையே உழத்தல் அழகோ!
அடியே னையொக்க முடியா திருத்தல்
அனியா யமிக்க யமனே! 26

மதலாய்' - நகர் நீங்கிய காண்டம் - செய். 76 பார்க்க), செறி கான் - கூடிய காட்டில், தெளியாது - (ஒரு வழியும்) அறியாமல், இரங்கும் - வருந்துகிற, வருந்தலை - வருந்தாதே.

25. மறவாள் எயிற்று - கோபத்தையுடைய கூர்மையான பற்களைக் கொண்ட, மணி - இரத்தினத்தையுடைய, மாசுணத்தின் - பாம்பினது, இறந்து உள்ள - மடிந்து கிடக்கும், அதிபாவிதன்னொடு - பெரும்பாவியோடு, உறவு ஏது - (எனக்குச்) சம்பந்தம் என்ன இருக்கிறது? சித்தன் - சிவபிரானுடைய, வழுத்தும் - துதிக்கின்ற, பெருமான் - பெருமையை உடையவனாகிய அரிச்சந்திரன்.

26. வடி ஏறு - கூர்மை பொருந்திய, கொடியேன் - கொடியவளாகிய எனது, கொடையார் - வள்ளலாகிய அரிச்சந்திரர், இடி ஏறு அடர்த்த - பேரிடியானது அழித்த, மண்ணினிடையே - பூமியில், உழத்தல் - (யான்) வருந்துதல், ஒக்க - ஒருமிக்க, முடியாது - அழியாமல், மிக்க அனியாயம் - மிகுந்த அநீதியாகும்.

எண்சீர் விருத்தம்

எனமறுகி, 'இவனுடன்நாம் இறந்தோம் ஆகில்
இவனைஎடுத் தெரித்தடக்க உரியார் இல்லை ;
மனம்உருகான் நம்மைவிலை கொண்டோன் ; சால
வன்கண்ணன் ; மனைவிஅவன் தனின்மா பாவி ;
சினமுடையார் விடியும்முனர்ச் செல்லேன் ஆகில்
செறுவர்; இவன் தனைக்கருக்கிச் செல்வன்,' என்று
தனதுதிரு மகனைஎடுத் தணிதோள் வைத்துத்
தள்ளாடி மதிதயனார் தனையை மீண்டாள். 27

[சந்திரமதி பல வித இடையூறடைந்து, காட்டில் பல இடங்களிலும் திரிந்து, ஈமத்தீயின் ஒளியினால் சுடலையை அடைந்து,]

கண்டனள்,'ஈதீமம்'எனக் கருத்தில் உன்னிக்
கடவுளர்தம் காவலில்தன் மகனை வைத்துப்
பண்டுவெந்து கரிந்தகுறைக் கட்டை எல்லாம்
பலதிசையும் விரைந்தோடிப் பார்த்தெடுத்துக்
கொண்டுவந்து பிணங்கள்சுடும் சுடலை நண்ணிக்
கொள்ளிஎடுத் தோடிஅனல் கூட்டி மூட்டி,
மண்டுதழல் கட்டையின்மேல் மகனை வைத்தாள் ;
வளர்ந்தெரியும் கனல்விளக்கம் மன்னன் கண்டான். 28

அரவுகடித் தரசிளங்கோ இறந்தான் என்ப
தறியாமல் வெகுண்டிறைவன், 'ஆரே இந்த
இரவுதனில் பிணஞ்சுடுவார் ! அறிவோம் !' என்று
எழுந்திருந்து விரைந்தோடி, 'ஏடி மூடி !

---

27. மறுகி - வருந்தி, சால வன்கண்ணன் - மிகவும் கொடியவன், அவன் தனின் - அவனைக்காட்டிலும், செறுவர் - தண்டிப்பர், கருக்கி - தகனம் செய்து, தனையை - மகளாகிய சந்திரமதி.

28. ஈது ஈமம் - இது சுடுகாடு, கருத்தில் உன்னி - மனத்தில் எண்ணி, பண்டு - முன்னமே, கரிந்த - கரியான, கொள்ளி - நெருப்பு, மண்டுதழல் - அதிகரிக்கின்ற தீயை உடைய, கனல் விளக்கம் - தீயின் வெளிச்சத்தை.

தரவுரிய பொருள்எனக்குத் தாரா தேநீ
தனியேஇப் பனிஇருளில் சவம்கொ ணர்ந்து
கரவின்அழல் சுடுவதுனக் கடைவோ ?' என்றாக்
கால்வீசிக் கான்முளையை எடுத்தெ றிந்தான். 29

எறிந்திடலும் உயிர்ஏங்க ஏங்கி, வேனில்
இடிவீழ்ந்தால் படிமிசையே அடிசாய்ந் தாடி
முறிந்துவிழும் மரம்போல்சென் றடிமேல் வீழ்ந்து,
மொழிகுழறி, விழிஅருவி சொரிய வல்லி,
'அறிந்தும்இலன் இவ்வூரில் வழங்கும் நீதி ;
அருவினையேன் ஆரும்இலி ; அறவும் பாவி ;
மறிந்தமகன் தனைச்சுடநான் வந்தேன் ஐயா !
வறியேற்குப் பொருள்உளவோ வழங்க?' என்றாள். 30

'பொருள்உடையேன் தமர்உடையேன் ஆனால் இந்தப்
புத்திரனைத் தோள்மீது வைத்துப் போந்திவ்
விருள்இடையில் சுடலையில்வந் தெய்து வேனோ ?
எரிந்தகுறைக் கட்டையினில் ஏற்று வேனோ ?
தெருள்உடையாய்! அறம்உடையாய்! வினையேன் ஈன்ற
சிறுவனையான் சுடக்கருணை செய்யாய் ; தேயா
அருள்உடையாய் ! ஆதாரம் அற்றேற் குன்றன்
அடியிணையே தஞ்சம்,'என அலறி வீழ்ந்தாள். 31

---

29. அரசிளங்கோ - இளவரசனான தேவதாசன், இறைவன் - அரசன், ஆரே - யார், ஏடி - அடி, பனி இருளில் - குளிர்ந்த இரவில், சவம் - பிணத்தை, கரவின் - வஞ்சகமாக, அடைவோ - தகுதியோ ? கான்முளையை - (தன்) பிள்ளையின் உடலை.

30. எறிந்திடலும் - வீசினதும், படி மிசையே - பூமியில், அடிமேல் - அரிச்சந்திரனுடைய பாதங்களில், விழி - கண்கள், வல்லி - சந்திரமதியானவள், அருவினையேன் - தீராப் பாவம் செய்தவளாகிய யான், இலி - இல்லாதவள், அறவும் - மிகவும், மறிந்த - இறந்த, வறியேற்கு - ஏழையாகிய எனக்கு, வழங்க - கொடுக்க.

31. தமர் - பந்துக்களை, போந்து - வந்து, எய்துவேனோ - சேரு

'பொன் அனையாய் ! விடுவிடு! யான் புலையன் என்னில்
புலையனும்அல் லேன்; புலையற் கடிமை கண்டாய்;
என் அடியைத் தீண்டுவது தகாது நீதான் ;
இப்பொருட்கியான் உரியனலேன்; என்னை ஆள்வோன்
சொன்னபணம் கால்உண்டு ; கொள்ளி ஆடைத்
துண்டமும்ஒன் றுண்டு; தந்து சுடுதி ; அன்பால்
அன்னவன் தான் படியாக எனக்குத் தந்த
வாய்க்கரிசி யான் அளிப்பேன் அறிதி,' என்றான். 32

'துஞ்சியமைந் தனை எடுத்துச் சுமந்து போந்து
சுடுவார்அற் றிடுகாட்டில் தோள்மேல் ஏற்றிப்
பஞ்சிபடும் பாடுபடும் பாவி யேற்குப்
பணம்ஏது ? கொள்ளிமுறிப் பாதி ஏது ?
நெஞ்சுதளர்ந் தருவினையேன் வருந்தக் கண்டும்
நீ இரங்காய் !' என இரந்து நிற்குங் காலை
வஞ்சிதிரு மணிமிடற்றில் வயங்கா நின்ற
மங்கலநாண் கண்டிறைவன் மறித்தும்சொல்வான்: 33

'நல்லைநல்லை ! அறச்சமர்த்தி நீயே கண்டேன் !
நன்னுதலார் அனைவரினும் இந்த்ர சாலம்
வல்லைவல்லை ! விறகுகளும் களவே ; செம்பொன்
மங்கலநாண் உன்கழுத்தில் இருக்க, 'ஏதும்

---

வேறு? தெருள் - அறிவு, தேயா - அழியாத, ஆதாரம் அற்றேற்கு - திக்கற்றவளாகிய எனக்கு, தஞ்சம் - புகலிடமாம்.

32. பொன் அனையாய் - இலக்குமி போன்றவளே, புலையற்கு - புலையனுக்கு, சுடுதி - சுடுவாயாக, அன்னவன் தான் - அப்புலையன்.

33. துஞ்சிய - இறந்த, போந்து - வந்து, இடு காட்டில் - மயானத்தில், கொள்ளி முறிப்பாதி - கொள்ளி வஸ்திரத்துண்டு, வஞ்சி - பூங்கொடி போன்ற சந்திரமதியின், மணி மிடற்றில் - அழகிய கழுத்தில், வயங்கா நின்ற - விளங்குகிற, மங்கல நாண் - தாலியை.

34. நல்லை நல்லை - நீ மிகவும் நல்லவள், அறச் சமர்த்தி - மிகுதியும் கெட்டிக்காரி, நன்னுதலார் - பெண்டிர், இந்த்ர சாலம் - கண் கட்டு

இல்லை,'எனச் சொல்லுவது சற்றும் ஏலா(து);
இதனை எனக் கீவாய்,'என் றியம்ப, வேடர்
பல்லம்உயர் நிலைவாயில் பட்ட மான்போல்
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறி வீழ்ந்தாள். 34

கலி விருத்தம்

'அலைவி லாஅரிச் சந்திரற் கல்லது
தொலைவில் யாவர்க்கும் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதுவ தோ!'என
உலையின் மீதுமெ ழுகொத்து ருகினாள். 35

'இருள்அ றுங்குணத் தெந்தைக்கு நல்வரம்
அருளும் காலத் தரவணி வேணியான்
திருவு ளம்செய்த திவ்விய மென்மொழிப்
பொருளும் இத்தலம் புக்கபின் பொய்த்ததோ! 36

'பனிம திச்சடைப் பாவைபங் காளனார்
இனிய வாசகம் இன்றுடும் தீர்ந்ததால்;
புனித னாரினும் பூஅளந் தோனினும்
முனிவ னேமுதி யோன்!'என ஏங்கினாள். 37

---

வித்தை, வல்லை வல்லை - நீ மிகவும் வல்லவள், ஏலாது - பொருந்தாது, பல்லம் - வலையின், பட்ட - அகப்பட்ட, பைந்தொடியாள் - சந்திரமதி.

35. அலைவு இலா - மனச் சலனம் இல்லாத, தொலைவில் - அழிவில்லாத, தோற்றருமங்கலம் - புலனாகாத தாலி, போதுவதோ - சம்பவிப்பதோ, உலையின் மீது - (கொல்லன்) உலைக்களத்திலிட்ட.

36. இருள் அறும் - களங்கமற்ற, எந்தைக்கு - என் தந்தைக்கு, அருளும் காலத்து - கொடுத்த போது, அரவு அணி வேணியான் - சிவபெருமான், திருவுளம் செய்த - குறிப்பிட்ட, திவ்விய - தெய்வத் தன்மை பொருந்திய, இத்தலம் - இவ்விடம், புக்க பின் - வந்த பிறகு.

37. பனி மதி - குளிர்ச்சியையுடைய பிறைச் சந்திரனையுடைய, பாவை - பார்வதி தேவி, புனிதனாரினும் - சிவபிரானைக்காட்டிலும், பூ அளந்தோனினும் - (வாமனாவதாரமாய் வந்து) பூமியை அளந்த திருமாலைக்காட்டிலும், முனிவனே முதியோன் - விசுவாமித்திர முனிவரோ சிறந்தவர்!

'அற்புக் காழிஆ ளுன்அரிச் சந்திரன்
விற்பப் போயின மேன்மைக் குலத்தொடும்
பொற்புப் போம்;பொறை போம்;நிறை போம்;என்றன்
கற்புப் போவதென்!' என்றுக லங்கினுள். 38

[அவள் முறையிட்டைக் கேட்ட அரிச்சந்திரன், அவளே தன் மனைவி என்பதையும் இறந்தவன் தன் மைந்தனே என்பதையும் அறிந்து மனம் வருந்தி,]

'கள்ள வேகத் தரவுக டிக்கநம்
வள்ள லோஇறந் தான்!'என்று மன்னவன்
உள்ளு ளேநொந் துயிர்த்துயிர்த் துப்புறம்
விள்ள லான்;உரை விம்மிம யங்கினுன். 39

'அன்னை இன்றிஅ ருங்கானில் எய்திய
உன்னை ஓடிஉ ரகம்க டித்தவின்
மின்னை யும்உனை யும்விற்ற வெவ்வினை
என்னை எவ்வணம் நொந்தனை ஏந்தலே! 40

'நந்தம் நாடும்ந லமும்இ ழந்துநீ
எந்த மோடுவந் திவ்வணம் பட்டனை!
மைந்த னே!என்ற ஞல்பெற்ற வாழ்வுனக்(கு)
இந்த வாழ்வள வோ!'என்றி ரங்கினுன். 41

---

38. அற்புக்கு - அன்புக்கு, ஆழி ஆளுன் - கடலை ஒத்தவனுகிய, விற்ப - விலைப்படுத்த, போயின - அழிந்த, பொற்பு - அழகு, பொறை - பொறுமை, நிறை - உயர்வு, போவது என் - அழிவது எக்காரணத்தால்?

39. கள்ள வேகத்து - மாயமான வேகத்தையுடைய, உயிர்த்து உயிர்த்து - பெருமூச்சு விட்டு, புறம் விள்ளலான் - (தன் எண்ணத்தை) வெளியிற் சொல்லாதவனுய், உரை விம்மி - சொல் தடுமாறி.

40. உரகம் - பாம்பு, மின்னையும் - மின்னலைப் போன்ற உன் தாயையும், வெவ்வினை - தீவினையையுடைய, ஏந்தலே - இளவரசனே.

41. நந்தம் - நம்முடைய, எந்தமோடு - எம்முடன், பட்டனை - அழிந்தாய்.

''ஒன்றி லாதஉ யிரினை ஓம்பியே
பொன்றி லாதுபு லையனுக் காட்பட்டான்;
வென்றி வேந்தினி மீட்கத் தகுவனோ ?'
என்றி றந்தனை யோ?'என்றி யம்பினான். 42

'விற்ற நாளில்என் மேனிதழீஇ அழப்
பற்றி அந்தணன் ஈர்த்ததும் பார்த்திருந்(து)
இற்றை நாள்மட் டிரங்காத என்வயின்
உற்ற பாவம்ஒ ழித்தனை யோ?'என்றான். 43

'காத லால்உனைக் காணாத தாயையும்
ஈதெ லாம்வினைத் தெற்றிய என்னையும்
மீதெ லாம்அர வின்விடம் மேயநாள்
ஏதெ லாம்உரைத் தாய்?உரை ஏந்தலே! 44

'வாளின் மிக்க வயமன்னர் வந்துநின்
தாளில் வீழ்ந்தழல் இன்றிநின் தாய்திருத்
தோளில் ஏற்றிச் சுடலையி லேவர
வேளின் மிக்கவ! வெவ்வினை யோ?'என்றான். 45

இன்ன வாறுரைத் தேங்கிட, ஏந்திழை
தன்ன கத்தின்உ ணர்ச்சிதழைத்திட,

---

42. ஒன்றிலாத - நிலை பெறுதல் இல்லாத, ஓம்பி - பாதுகாத்து, பொன்றிலாது - அழியாமல், ஆட்பட்டான் - அடிமையானான்.

43. தழீஇ - தழுவி, ஈர்த்ததும் - இழுத்ததும், இற்றை - இன்று, என் வயின் உற்ற பாவம் - என்னிடம் பிறந்த பாவத்தை.

44. காணாத - (உயிருடன்) பாராத, எற்றிய - உதைத்தெறிந்த, விடம் - விஷம், மேய நாள் - பரவியபோது, உரை - சொல்வாயாக.

45. வாளின் - வாட்போரில், வய மன்னர் - வெற்றி வேந்தர், வேளின் - மன்மதனைக்காட்டிலும், மிக்கவ - சிறந்தவனே, வெவ் வினையோ - தீவினையோ காரணம்?

46. தழைத்திட - உண்டாக, மதித்து - தீர்மானித்து, பொன் - அழகிய, ஓதுவாள் - சொல்லுவாளானாள்.

'மன்ன னேஇவன்,' என்றும தித்தவன்
பொன்அ டித்துணை பூண்டழு தோதுவாள்.: 46

'கொதித்தெ ழுந்துப டர்குடி கொண்டுளம்
கதித்த துன்வயின் கண்டனன் உத்தம!
விதித்த தல்லது வேறறு காஎ'தன
மதித்தி ருநுதல் வல்லிவி ளம்பினுள். 47

'தீமை செய்ததுனக்கும்சி றுவற்கும்
வாய்மை தான்;அது மண்ணுக்கும் விண்ணுக்கும்
தூய்மை யேஇனி என்றுது ணிந்தனன்;
நீம யங்கல்;அ றத்தைநி னே,'என்றாள். 48

[அது கேட்ட அரிச்சந்திரன்,]

'தோகை! கேள்:புலை யற்குத் தொழும்பன்நான்!
ஆகை யால்மற் றவன்பணி நீத்தவன்
ஈகை யான்இழந் தால்தவ றெய்திடும்;
போகை நன்றுபொ ருள்தரு தற்கெ'ன்றான். 49

'உன்னை ஆளும்ம றையவற் குற்றிது
சொன்ன காலம்த ரின்அந்தத் தூசொடு
பொன்னை வாங்கிஅ ளித்து,நின் புத்திரன்
தன்னை நீசுடத் தக்கது னக்கெ'கன்றான். 50

---

47. படர் - துன்பம், கதித்தது - விரைந்ததை, உன் வயின் - உன்னிடம், மதித்திரு நுதல் - பிறைச்சந்திரன் போலும் அழகிய நெற்றியை உடைய, வல்லி - சந்திரமதி.

48. சிறுவற்கும் - சிறுவனாகிய தேவதாசனுக்கும், வாய்மைதான் - சத்தியமேயாகும், தூய்மை - சிறப்பே, மயங்கல் - மயங்காதே.

49. தோகை - மயில் போன்றவளே, தொழும்பன் - அடிமை, பணி நீத்து - கட்டளையை விட்டு, ஈகை - (அவனுக்குத் தர வேண்டிய) பொருளை, எய்திடும் - உண்டாகும், போகை - (நீ) போவது.

50. ஆளும் - அடிமை கொண்ட, தூசொடு - கொள்ளி ஆடையுடன்.

'அரக்கெனச்சிவப் புற்றஅழல்கணான்;
இரக்கம் அற்பமும் இல்லவன்; இப்பொருள்
தரக்க ருத்திலன்; தந்திடில் காண்பன்,' என்(று)
உரைத்து வல்லிம கனைவைத் தோடினாள். 51

ஷை. வேறு

மங்கைகடி தேகிடலும் மைந்தன்முகம் நோக்கி,
அங்கைதொட நாணி,மனம் அஞ்சி,அயல் நின்றே,
கங்கைவள நாடன் இரு கண்கலுழி சிந்த
வெங்கயம்நு கர்ந்தவிள வின்கனியை ஒத்தான். 52

மன்னவன் வருந்தியுற, மாமயிலை அன்னாள்
துன்னஅரி தாயசுடு காடது துறந்தே,
'என்னவினை இன்னம்வரும்!' என்பதுக ருத்தாய்
மின்னும்மணி நீள்புரிசை வீதியிடை புக்காள். 53

கிள்ளைமொழி அம்மறுகு கிட்டுவதன் முன்னே
வள்ளைஒலி மாடம்நிறை காசிநகர் மன்னன்
பிள்ளையைஎ டுத்தயல்பெ யர்ந்துயிர்செ குத்தே
கள்ளர்சிலர் நல்அணிக வர்ந்துகொடு போனார். 54

---

51. அரக்கென - செந்நிறம் போல, அழல் - தீயைக் கக்குகின்ற, இல்லவன் - இல்லாதவன், வல்லி - சந்திரமதி.

52. கடிது ஏகிடலும் - விரைவாகச் சென்றதும், அங்கை - அழகிய கைகளால், நாணி - வெட்கமடைந்து, அயல் - சிறிது தூரத்தில், கங்கை வளநாடன் - அரிச்சந்திரன், கலுழி - அழுகை நீரை, வெங்கயம் - கொடிய யானை என்னும் நோயானது, நுகர்ந்த - உண்டுவிட்ட, விளவின் கனி - விளாம்பழத்தை.

53. துன்ன - நெருங்க, அரிதாய - கஷ்டமாகிய, துறந்து - விட்டு நீங்கி, நீள் புரிசை - நீண்ட மதிலையுடைய, வீதியிடை - (அரச) வீதியில், புக்காள் - புகுந்தாள்.

54. கிள்ளை மொழி - கிளிபோலப் பேசும் சொற்களையுடைய சந்திரமதி, அம்மறுகு - அந்த அரச வீதியை, வள்ளை ஒலி மாடம்-மங்கல வள்ளை என்னும் கீத ஓசையையுடைய மாளிகைகள், பெயர்ந்து -

அம்மதலை யைத்தெரு அகத்தினிடை காணா,
'இம்மதலை யார்மதலை!' என்ன அலமந்தாள்;
'எம்மதலை யைக்கணம்எ றிந்ததுகொல்!' என்னாத்
தம்மதலை மெய்க்குறித னைத்தெரித லுற்றாள். 55

[அப்பொழுது காசி அரசன் ஏவலர் கடுகி வந்து அவளைக் கண்டு, மன்னன் மைந்தனைக் கொன்றவள் அவளே எனத் தவறாக எண்ணி, அவளைப் பலவாறு வருத்தினர்.]

சென்றவர்கள் சென்றவர்கள் சேரஅட ரக்கண்(டு)
அன்றவர்க ளில்சிலர்வி லக்கி,'அக லப்போம்!'
என்று,'தலம் ஏது? குலம் ஏது? சிறு சேயைக்
கொன்றபரி சேதரிவை கூறெ'னவு ரைத்தார். 56

[அவற்றைக் கேட்ட சந்திரமதி,]

'தேவருள்ந மக்கிலை! செ குத்திலன்எ னிற்றான்
ஆவதிலை! நம்மொழியை ஆர்உறுதி கொள்வார்!
நோவதிலும் நம்மகவின் நோதகவி னாலும்
சாவதினி தெ'ன்பதும னத்திடைத ரித்தாள். 57

---

சென்று, செகுத்து - அழித்து, நல் அணி - அழகிய ஆபரணங்களை, கவர்ந்துகொடு - அபகரித்துக்கொண்டு.

55. மதலையை - பிள்ளையை, தெரு அகத்தினிடை - தெருவில், காணா - கண்டு, அலமந்தாள் - துக்கித்தாள், எம் மதலையை - எமது பிள்ளையை, கணம் - பேயானது, எறிந்ததுகொல் - கொன்றுவிட்டதோ, மெய்க்குறிதனை - உடல் அடையாளத்தை, தெரிதலுற்றாள் - ஆராயத் தொடங்கினாள்.

56. சென்றவர்கள் சென்றவர்கள் -(வீதியில்) சென்ற பற்பலரும், சேர - (அரசகாவலர்) ஒன்று கூடி, அடர - (சந்திரமதியை) வருத்த, அகலப்போம் - அப்பாற்செல்லுங்கள், தலம் - (உனது) இருப்பிடம், சேயை - பிள்ளையை, பரிசு ஏது - விதம் என்ன? அரிவை கூறு - பெண்ணே கூறுவாயாக.

57. தேவருள் - (தே+அருள்) கடவுள் கிருபை, செகுத்திலன் - யான் கொல்லவில்லை, உறுதி - மெய்யாக, நோதகவு - வருத்தம், இனிது என்பது - நல்லது என்பதை, மனத்திடை - மனத்தில்.

'மெய்யுரைசெ யின்பொய்என மேவிஅது வீணும்;
ஐயம்இதின் இல்லை;அத னுல்புரைஇ லாத
பொய்யுரையும் மெய்யொடுபொ ருந்தும்,'என நாடித்
தையல்அவ ரோடிதுத னைப்பகர லுற்ருள்: 58

'ஒன்றினிது கேண்மின்:உல கத்தினில்இ ரக்கத்
தன்றிஉயிர் கொன்றுழல்அ ரக்கிஅறி யீரோ?
இன்றுயிர்இ ழந்தமக வென்கையில்இ ருக்கக்
'கொன்றதிலை,' என்னவல ளோகொடியள்?' என்ருள். 59

'ஆயின்விடன் மின்!'என அடித்தணிக யிற்ருல்
சாயும்இரு கைத்துணைபி ணித்தவிச வத்தை
வேயும்விழை தோளின்மிசை ஏற்றி,விறல் மன்னன்
வாயில்தனை நாடி,மயி லைக்கொடுந டந்தார். 60

அத்தலம்அ ணைந்தவருள் அக்கொடியர் மன்னைக்
கைத்தலம்எ டுத்திருக ழல்தொழுது நின்ருர்!
மெய்த்தவம்மு யன்றமணி வேய்அனைய தோள்மேல்
வைத்தபிண மும்கொடும டக்கொடியும் நின்ருள். 61

நின்றளவில் மன்னனும்,'நிகழ்ந்தபிழை என்கொல்!'
என்றதிச யித்திஃதி றக்கெனஉ ரைக்க,

---

58. மேவி - அமைந்து, ஐயம் - சந்தேகம், புரை - குற்றம், நாடி - யோசித்து, தையல் - அழகியாகிய சந்திரமதி.

59. கேண்மின் - கேளுங்கள், அரக்கி - இராட்சசி என்பதை, மகவு - பிள்ளை, வலளோ - வல்லவளோ ?

60. ஆயின் விடன்மின் - அப்படியானுல் விடாதீர்கள், அணி - அழகிய, பிணித்து - கட்டி, அவி சவத்தை - இறந்த பிணத்தை, வேயும் விழை - மூங்கிலும் (தனக்கு உவமையாகப் பெற) விரும்பும், மன்னன் - காசி அரசனுடைய, வாயில்தனை - (அரண்மனை) வாயிலை, நாடி - நோக்கி, மயிலைக் கொடு - சந்திரமதியை அழைத்துக்கொண்டு.

61. அத்தலம் - அவ்விடத்தை, மன்னை - அரசனை, கழல்-பாதங்களை, மணி வேய் அனைய - அழகிய மூங்கிலை ஒத்த, மடக்கொடி - சந்திரமதி.

மன்றல்கமழ் கோதைபிணம் வைத்தனள்நி லத்தில்;
'கொன்றபரி செந்தநெறி? கூறிடுமின்,' என்றான். 62

என்றிறைஉ ரைத்திட,இ றைஞ்சிஅவர்,'மன்னா!
இன்றிரவு நின்மகவை வந்திவள்எ டுத்து
மன்றணிநெ டுந்தெருவில் வைத்துடல்பி ளந்து
கொன்றபடி கண்டுகொடு வந்தனம்முன்,' என்றார். 63

அந்தமொழி சொன்னவரை அங்கையின்அ மைத்து,
'வந்தபடி யாவும்இவண் வல்லி! உரை,' என்னச்
சந்திரம தித்தெரிவை தன்அடியை நோக்கிச்
செந்துவர்ம லர்க்குமுத வாய்மலர்தி றந்தாள். 64

'செய்யமக வின்னுயிர்செ குத்தபடி கண்டாய்!
கையினில்எ டுத்ததொர்ச வத்தைஎதிர் கண்டாய்;
மெய்யிடையு லால்வெறிவி ரிந்தமுடை கண்டாய்;
ஐயம்இலை யானும்ஓர் அரக்கிஅறி,' என்றாள். 65

'என்றும்நர வன்தசைகள் உண்டுடல்எ டுத்தேன்;
வென்றிவடி வேல்இறைவ! நின்நகரில் மேவி

---

62. நின்ற அளவில் - நின்ற போது, இஃது இறக்கு - இப்பிணத்தைக் கீழே வை, மன்றல் கமழ் கோதை - வாசனை வீசும் மலர் மாலையை அணியும் சந்திரமதி, கொன்ற பரிசு எந்த நெறி - (இவள் நம் பிள்ளையைக்) கொன்ற விதம் எவ்விதம்?

63. இறை - அரசன், மன்று அணி - அலங்காரத்தைக் கொண்ட, கொடு வந்தனம் - கொண்டு வந்தோம்.

64. அங்கையின் - அழகிய கையினால், அமைத்து - அமைதியாய் இருக்கச் செய்து, வந்தபடி - நிகழ்ந்த விதம், இவண் - இவ்விடத்தில், வல்லி - பெண்ணே, செந்துவர் - மிக்க செந்நிறம் வாய்ந்த, குமுதம் - அல்லி போன்ற.

65. செய்ய - செம்மையான, செகுத்தபடி - அழித்த விதத்தை, வெறி - நாற்றம், விரிந்த - பரவிய, முடை - முடை நாற்றத்தை.

66. நர வன் தசை - மனிதரின் வலிய மாமிசத்தை, எடுத்தேன் - வளர்த்தேன், வென்றி - வெற்றியையுடைய, மேவி - அடைந்து.

இன்றிரவில் நின்மகவி னந்தசைவி ரும்பித்
தின்றிடநி னைந்துயிர்செ குத்ததுள'தென்றாள். 66

மடக்கொடிஉ ரைக்கஇது மன்னவன்உ ரைப்பான் :
'அடக்கமும்ஒ டுக்கமும்அ ரக்கிஅலள் என்னும்!
இடர்ப்பலஇ வட்கிவர்இ ழைத்தமைந மக்குச்
சுடச்சுடஉ ரைக்கும்இவள் சொன்னமொழி,' என்றான். 67

'உயிர்க்கொலைபு ரிந்தவர்மு கங்குறிஉ ரைக்கும்;
கையில்குறிஉ ரைக்கும்;இரு கண்குறிஉ ரைக்கும்;
குயில்குரல்ம டந்தைஇவள் கொன்றகுறி உண்டென்(று)
அயிர்ப்பிலைஎ னக்கெ'னஅ மைச்சரொடு ரைத்தான். 68

வள்ளல்இவை கூறிடலும் வந்தவர்கள், 'மன்னா!
பிள்ளையைஎ டுத்தஅடி யின்பிறகு சென்று
கள்ளிஇவள் கொன்றபடி கண்டுகொடு வந்தேம்;
உள்ளதல தில்லதைஉ ரைக்கவிதி உண்டோ? 69

'உன்உரைத னக்கொர்எதிர் உத்தரமும் உண்டோ?
என்உரைசெ யத்தகுவ தெம்பெரும!' என்றே,
'மன்உரை;க டல்புவிவ ளாகமிசை வாழும்
இன்உயிர்இ றக்கும்இவள் தன்னைவிடில்,' என்றார். 70

வள்ளலும்வ ருந்திமிக மங்கைமுகம் நோக்கி,
'உள்ளதுரை செய்'கெனஉ ரைத்திட,ம றித்தும்

---

67. என்னும் - என்று தெரிவிக்கும்.

68. உரைக்கும் - தெரிவிக்கும், அயிர்ப்பு இல்லை - சந்தேகித்தற்கு இடமில்லை.

69. இல்லதை - இல்லாததை, விதி - நியாயம்.

70. என் - என்ன, மன் உரை - அரசே கட்டளை இடுவாயாக, வளாகம் மிசை - இடத்தில்.

71. உள்ளது - உண்மையானதை, கள்ளி - திருடி, அள்ளல் - சேற்றை உடைய, வியந்தான் - ஆச்சரியமடைந்தான்.

'கள்ளினை அல்லதிலை,' என்றுகழ றக்கேட்(டு)
அள்ளல்வயல் நாட்டரசன் நொந்தகம்வி யந்தான். 71

முன்னைவிதி யாலும்வினை முற்றும்அத னாலும்,
'என்னை இவள் தன்னைவிடல்!' என்பதுநி னைந்தே
கன்னல்செறி காசிபதி கன்னபுரி மன்னன்
மின்னைவதை செய்வதுவி ரும்பிஒரு மித்தான். 72

கலி நிலைத்துறை

விடிந்த காலையில் வேறொரு திறம்புறம் காணான்,
'மடிந்த மைந்தனை எடும்,'என மனையிடைப் போக்கி,
முடிந்த தீவினைப் பயத்தினும் முதிர்வினை யானும்
கடிந்தி டும்படி கருதினன் காசியர் கோமான். 73

[ஏவலர் சென்று வீரவாகுவை அழைத்து வந்து அரசன் முன் விட, வீரவாகு]

தூர நின்று,வாய் புதைத்துளம் அலைந்து,தூ சொடுக்கிப்
பார மேனியைச் சுருக்கி,வீழ்ந் தரசனைப் பணிந்(து),'இந்
நேரம் நாயினேன் தன்னைஎன் நினைந்தவா'றென்றான்;
வீர வாகுவை நோக்கிஅவ் வேந்தர்கோன் உரைப்பான்: 74

'துட்டி யாம்இவள் குழவியைத் துணித்தனள்,' என்னாத்
'திட்டி யால்கண்டேம்,' எனச்சிலர் அரிவையைப் பிடித்துக்

---

72. முன்னை விதியாலும் - பழைய ஊழினாலும், வினை முற்றும் - ஊழ் முடியும், கன்னல் செறி - கரும்புகள் நிறைந்த, மின்னை - மின்னலைப் போன்ற சந்திரமதியை, ஒருமித்தான் - சம்மதித்தான்.

73. திறம் - வகை, புறம் - வெளிப்படையாக, எடும் - கொண்டு போங்கள், மனையிடை - அரண்மனைக்குள், பயத்தினும் - பயத்தினாலும், கடிந்திடும்படி - தண்டிக்கும்படி.

74. புதைத்து - மூடி, அலைந்து - கலங்கி, தூசு - வஸ்திரத்தை, பார மேனியை - பருத்த உடலை, நாயினேன் தன்னை - இழிந்தவனாகிய என்னை.

கட்டி வந்தனர்; கட்டொடும் கொண்டுபோய்க் களத்தில்
வெட்டு வித்திடெ'டன் றீந்தனன் காசியர் வேந்தன். 75

[வீரவாகு சந்திரமதியைத் தன் சேரிக்கு அழைத்துச் சென்று, அரிச்சந்திரனிடம் அவளை விட்டு, அரசன் கட்டளையை அறிவித்து, தன் வாளை அவனிடம் கொடுத்தனன்.]

வாளை வாங்கித்தன் மாதையும் வாங்கினன் வந்தான்
பாளை ஓதியை அறிந்தனன்; பாவையும் அறிந்தாள்;
'வேளை வென்றவற் கேற்றதோ!' எனஇறை மெலிந்தான்;
காளை வாட்டமும் கோட்டமும் கன்னிகண் டுரைப்பாள்: 76

'முன்னை நாள்அர சாண்டணி முடிபுனைந் திருந்த
மன்னர் செய்கையும் அறங்களும் திறங்களும் வளர்ந்த;
இன்ன மும்குறைந் துயிர்தரித் திருந்தவர் இல்லை;
அன்ன தேதுணி படியனேற் கிரங்கலை,' என்றாள். 77

அக்க ணத்தினில் அமைச்சனும் விரையவந் தணுகிப்
புக்க வாறெலாம் புரவலன் புகன்றிடக் கேட்டுப்
பக்கம் நோக்கியே மன்னனைப் பணிந்துயிர் பதைக்க
ஒக்க ஏகியே சுடர்மணித் தெருவில்வந் துற்றான். 78

75. துட்டியாம் - கொடியவளாகிய, இட்டியால் - பார்வையால், வெட்டுவித்திடு - கொலை செய்வி.

76. மாதையும் - மனைவியாகிய சந்திரமதியையும், பாளை - (கூந்தற்பனையின் விரிந்த) பாளையைப் போன்ற, ஓதியை - (நீண்ட) கூந்தலை உடையவளை, பாவை - சந்திரமதி, அறிந்தாள் - (அரிச்சந்திரனை) அறிந்தாள், வேளை வென்றவற்கு - மன்மதனை ஜயித்த சிவ பெருமானுக்கு, ஏற்றதோ - (இச்செயல்) சம்மதந்தானோ! இறை - அரசனாகிய அரிச்சந்திரன், காளை - அரிச்சந்திரனுடைய, கோட்டமும் - மனக்கோணலையும், கன்னி - சந்திரமதி.

77. அணி முடி - அழகிய கிரீடத்தை, திறங்களும் - வெற்றிச் செயல்களும், வளர்ந்த - (உலகத்தில்) உயர்வடைந்தன, குறைந்து - (தம் கடமையில்) தவறி, அன்னதே - அப்படி நடப்பதே, அடியனேற்கு - அடியவளான எனக்காக, இரங்கலை - வருந்தாதே.

78. புக்கவாறு எல்லாம் - நிகழ்ந்த விதங்களை எல்லாம், புர

[அவ்விருவரும் சந்திரமதியோடு கொலைக்களம் செல்வதைக் கண்ட நகர மாந்தர்,]

எழுசீர் விருத்தம்

'கையோசெ ழுங்கமலம் ! முகமோநி றைந்தமதி
காலோஇ ளஞ்சினை வரால் !
மெய்யோக லாபமயில் ! இடையோநு டங்குகொடி !
விழியோக டைந்த வடிவேல் !
மையோசு ருண்டகுழல் ! மலர்மாம கட்பொருவு
வனிதைக்கெ'ன ப்பு கலுவார் ;
ஐயோ ! இ வட்குவிதி கொலையோ !'எ னக்கதறி
அழுவார்அ றைந்து விழுவார். 79

'தவளத்தி ருத்தரள நகையும்சி றந்தஇரு
தனுவைப்ப ழித்த நுதலும்
பவளத்தை ஒத்தகனி இதழும்ப டைத்தவிதி
பதறிப்ப டைத்த துளதோ !
கவளக்க ளிற்றரசன் உலகத்து யிர்க்குதவு
கபடற்றி ரக்கம் உடையோன்
இவளைக்கொ லக்கருதி இவர்கைக்கொ டுத்ததிறம்
ஏதெ'ன் றிரங்கி அழுவார். 80

வலன் - அரசனான அரிச்சந்திரன், பக்கம் நோக்கி - பக்கத்தில் (எவரேனும் இருக்கின்றனரோ எனப்) பார்த்து, ஒக்க - ஒருமிக்க.

79. மதி - சந்திரன், வரால் - வரால் மீன், மெய் - உடல், கலாப மயில் - தோகையை உடைய மயில், நுடங்கு - துவள்கின்ற, கடைந்த - செப்பம் செய்த, வடி வேல் - கூர்மையான வேலாயுதம், மையோ - மேகமோ, மலர் மாமகள் - தாமரை மலரிலுள்ள இலக்குமியை, பொருவு - ஒத்திருக்கிற, வனிதைக்கு - (இந்தப்) பெண்ணுக்கு, கொலையோ - கொலைத் தண்டனையோ.

80. தவளம் - வெண்மையான, தரள நகையும் - முத்துப் போன்ற பற்களும், தனுவை - வில்லை, நுதலும் - புருவமும், கனி இதழும் - கொவ்வைக் கனி போன்ற உதடுகளையும், விதி - பிரமன், பதறி - விரைந்து, கவளக்களிற்று - கவளத்தை உண்ணும் யானையையுடைய, திறம் - வகை.

'வேலைப்ப ழித்தவிழி யாளைச்சி னத்தரசன்
வெட்டென்று ரைத்த பொழுதே
சாலச்ச வங்கள்சுடு கோலின்த டிந்துநனி
தள்ளிக்கொ ணர்ந்த புலையன்
சீலத்தை யும்கனக மார்பத்தை யும்குலவு
திண்தோளி னையும் கண்டிடின்
மாலொப்பன்; அன்றிமயி லோன்ஒப்பன் ; அல்லதொரு
மதன்ஒப்பன்,' என்று மருள்வார். 81

'மறையோன்இ டத்திவளை விலைகூறி மிக்கஒரு
மகனோடும் விற்ற வனிவன் ;
குறையோபொ ருட்செலவு ! தெரியாது மற்றும்ஒரு
கொடியோன்அ லக்கண் உறவே,
பறையோன்இ டத்திவனை விலைகூறி விற்றும்உளன் ;
பலநாள்க ழித்த தறிவேம் ;
இறையோன்ம கற்கிறுதி செயலால்இ வர்க்குவரும்
இடையூறி'தென்று ரைசெய்வார். 82

'எங்கோம கன்கதற உயிருண்ட கொலைகாரி
இவளோ!'எ னத்தொ டருவார் ;
'வெங்கோப வன்கரியின் முன்போடும்!' என்றுசிலர்
வெகுள்வார்நெ ருங்கி அடர்வார் ;

---

81. சினத்து - கோபித்து, சால - மிக, சவங்கள் - பிணங்களை, நனி தடித்து - மிக அடித்து, சீலத்தையும் - ஒழுக்கத்தையும், கனகம்-பொன் போன்ற, குலவு - விளங்குகின்ற, மால் ஒப்பன் - திருமாலைப் போல்வன், மயிலோன் - முருகக் கடவுளை, மதன் - மன்மதனை, மருள்வார் - மயங்குவார்.

82. மிக்க - சிறந்த, கொடியோன் - சத்தியகீர்த்தி, அலக்கண் - துன்பம், இறுதி - முடிவை.

83. கோமகன் - அரச புத்திரன், வெங்கோப வன்கரி - கடுங் கோபமுடைய கொடிய யானை, அடர்வார் – வருத்துவார், பறைக்கு - பறையனுக்கு, பங்கோ - பாத்தியமோ? படை - ஆயுதம், படாதோ-

'பங்கோப றைக்கிவளை வதைசெய்தல்? நப்படைய
டாதோ?'எ னப்ப தறுவார்;
'செங்கோல்மு றைக்குவழு நீர்கொல்வ தெ'ன் றுசிலர்
செயலால்வி லக்கி வருவார். 83

'அழியாத காசிபதி மகன்ஆவி கொண்டஇவள்
அனியாய காரி; அசடி;
பழிபூணி இங்ககலின் எளிதா விடாதுநமர்
பலராவி யும்ப ருகுவாள்;
விழியால்எ றிந்தும்உயிர் கவர்வாள்;மு கத்தில்எதிர்
விழியாது நில்லும்!' எனவே
மொழிவார்;'வ தைத்திடுகை பொருளாக அற்பம்மனம்
மூசியாள்,'எ னப்ப கருவார். 84

'தப்பாது மன்மகனை உயிர்கொண்டு திரமுண்ட
தறுகண்அ ரக்கி நமர்தம்
கைப்பாசம் உற்றுவர வலளோ!வி சும்பினிடை
கரவாதி ருத்தல் இலளோ;
அப்பால லைக்கறுவி இவள்கொன்ற தோஅலது
யார்கொன்ற தோஓ! தெய்வமே!
இப்பாவி தன்தலையில் வைத்தாய்!உ னக்குநடு
இலையோ?'எ னப்பு கலுவார். 85

கொல்லாதோ? செங்கோல் முறைக்கு வழு - அரச நீதிக்குக் குற்றமாகும்.

84. காசிபதி - காசியரசன், அசடி - குற்றமுள்ளவள், பழி பூணி - பழியைக்கொண்டவள், இங்கு அகலின் - இவ்விடம்விட்டுச்சென்றால், எளிதா - சுலபமாக, நமர் - நம்மவர், விழியால் எறிந்தும் - கண்ணால் வெருட்டியும், மூசியாள் - வருந்தாள்.

85. மன் மகனை - அரச புத்திரனை, உதிரம் - இரத்தத்தை, தறுகண் - அஞ்சாமையையுடைய, நமர்தம் - நம்மவருடைய, பாசம் உற்று - கயிற்றால் கட்டுண்டு, விசும்பினிடை - ஆகாயத்தில், கரவாது - மறையாமல், கறுவி - கோபித்து, நடு - பொது நிலை.

'கொலைகாரி யைத்தெருவில் விலைகூறி விற்றபடு
கொலைகார துட்டன் இவனும்
புலையாவி னைக்கொலைசெய் இவளாவி கொள்வதொரு
பொருளோ!'எ னக்க தறுவார்;
'விலைகூறி விற்றவனும் இவனாகில் விட்டிடுவன்;
விடலீர்!'எ னத்தொ டருவார்;
கலையால்இ றுக்கிமடல் உறப்பி ணித்தகயி
றுடனேபி டித்து வருவார். 86

'தனியாய பாவிகுறை எவர்போய்உ ரைத்திடுவர்!
தருமால யப்பு ரவலன்
அனியாயம் என்றுசிறி துணராதொர் பெண்பழியை
அவமேகொ ளக்க ருதினான்!
இனியார்இ ரங்குபவர்!' எனவேஅ லைந்துவயி
றெறியாஉ லைந்து சுழல்வார்;
கனிவாய்பு லர்ந்துநிலை தளர்வார்;க லங்கிஉடல்
கரைவார்;பு லம்பி அழுவார். 87

'வல்லார்கள் வல்லபடி சொல்வார்கள்! மன்னும்இறை
மருமானை இவள் கொன்றவா(று)
அல்லாத போதிவளை வறிதேவ தைத்தபழி
ஆர்பால தென்று பகர்வார்;

---

86. புலையா - பொய்யாக, விடலீர் - விடாதீர், கலையால் - வஸ்திரத்தினால், இறுக்கி - இறுகக் கட்டி, மடல் உற - தோள் மடல்கள் சேர.

87. தனியாய - திக்கற்ற, தருமாலயம் - தருமத்திற்கு இருப்பிடமான, புரவலன் - அரசன், அவமே - வீணிலே, அலைந்து - வருந்தி, வயிறு எறியா - வயிற்றில் மோதிக்கொண்டு, உலைந்து - மனமழிந்து, புலர்ந்து - உலர்ந்து.

88. வல்லார்கள் -(விஷயத்தைக் கட்டிச் சொல்ல) வல்லவர்கள், மருமானை - மகனை, வறிதே - வீணே, ஆர் பாலது - யாரைச் சார்வதாகும்? வன் சிறையில் - கொடிய சிறைச்சாலையில், கொலைதான் விளங்கின் - கொலை செய்தது வெளியானால்.

கொல்லாது வன்சிறையில் வைத்தேவி ளங்கின் இவள்
கொலைதான்வ தைத்தி டுதலாம்;
அல்லாது விட்டிடலும் அறமாகும்,' என்னஅவர்
அவரோடு ரைத்து ழலுவார். 88

'பதியேது! பாவிஇவண் வரவேது! வந்துபெறு
பலனேது! பாவம் நிகழ்பெண்
மதியேதி தித்தனையும் விளைவித்த தே'தென்று
மறுகாம ருண்டு விழுவார்;
'விதியே!அ றக்கொடியை! எளியாள்த னைக்கறுவி
விலைகூறி விற்ற துமலால்
சதியேவி ளைத்தனை இ தறமோ!'எ னச்சிலர்கள்
தளர்வார்;மு கத்தில் அறைவார். 89

'அங்கேஅ டித்தஅடி இங்கேஅ லைக்கும்அலை
வல்லாமல் எய்து கொலையும்
பங்கேரு கத்தின்நறு மலர்போல்வி ளங்குமுகம்
அறியாத பாவை அனையாள்
எங்கேபி றந்தனள்கொல்! எங்கேவ ளர்ந்தனள்கொல்!
எங்கேஇ ருந்த னள்கொலோ!
இங்கேஇ றந்தவிய வந்தாள்,'எ னப்பலரும்
இடைகின்ற எல்லை தனிலே 90

---

89. பதி - ஊர், இவண் - இவ்விடம், வரவு-வருதற்குக் காரணம், மதி - புத்தி, மறுகா - வருந்தி, மருண்டு-மயங்கி, விதியே-தெய்வமே, அறக் கொடியை - நீ மிகவும் கொடுமையை உடையாய், கறுவி - கோபித்து, விற்றதும் - விற்கச் செய்ததும், சதியே - கெடுதியே.

90. அங்கே - (அரசன் காவலர் இவளைக் கண்ட) அவ்விடத்தில், அலைக்கும் - வருத்தும், அலைவு - வருத்தம், எய்து - நேரிட்ட, பாவை- பொம்மை, பிறந்தனள்கொல் - பிறந்தனளோ, இறந்து அவிய - மாண்டு அழிய, இடைகின்ற - வருந்துகின்ற, எல்லைதனிலே - சமயத்தில்.

கலி நிலைத்துறை

'என்ன பாதகம் செய்தனம்!' என இறை நகைத்துக்
கன்னி கைகளைக் கட்டிய கயிறுதான் பிடித்துத்
துன்னும் மாமணித் தோரண வாயிலைக் கடந்து,
பொன்னின் மாநகர்ப் புரிசையின் புறத்துவந் திறுத்தான். 91

உற்ற நாளையில் வசிட்டன் அவ் வும்பர்கோன் தனக்குக்
'கொற்ற வா! நினக் கியான்புகல் கோதிலா னிடத்தே
அற்றை நாள்முதல் கௌசிகன் 'அமைக்குமூ றனைத்தும்
இற்றை நாள்விடும்; காண்பம்; நீ எழுக,' என் றிசைத்தான். 92

தாழும் வார்சடை மாமுனி அவ்வுரை சாற்றச்
சூழும் மாதரும் தும்புரு நாரதர் தாமும்
வாழும் வச்சிர பாணியும் வசிட்டனும் யாரும்
ஏழு பாலரும் காணவந் தந்தரத் திருந்தார். 93

அந்த வேலையில் கௌசிகன் விரைந்துவந்(து), 'அரசே!
இந்த நோதக வெய்தல்என்? எனக்குநீ முன்னம்

---

91. பாதகம் - பாவம், இறை - அரசனாகிய அரிச்சந்திரன், கன்னி - சந்திரமதியின், துன்னும் - நெருங்கிய, மா மணி - சிறந்த அழகையுடைய, பொன்னின் - பொன் மயமான, புரிசை - மதில், இறுத்தான் - சேர்ந்தான்.

92. உம்பர் கோன் தனக்கு - தேவேந்திரனுக்கு, நினக்கு யான் புகல் கோது இலானிடத்தே - உனக்கு யான் சொன்ன குற்றமில்லாத அரிச்சந்திரனிடம், அற்றை நாள் - அன்றைய தினம், அமைக்கும் ஊறு - செய்யும் துன்பங்கள், இற்றை நாள் - இன்றைய தினம், விடும்- (அரிச்சந்திரனை) விட்டு நீங்கும், காண்பம்- நாம் அதைப் பார்ப்போம், எழுக - புறப்படுக.

93. தாழும் வார் சடை-தொங்குகின்ற நீண்ட சடையையுடைய, வாழும் - (இவரோடு) வாழ்கின்ற, வச்சிரபாணி - இந்திரன், ஏழு பாலர் - அட்ட திக்குப் பாலர்களுள் இந்திரன் ஒழிந்த மற்ற எழுவரும், அந்தரத்து - ஆகாயத்தில்.

94. வேலையில் - சமயத்தில், வந்து - (அரிச்சந்திரனிடம்) வந்து, நோதகவு எய்தல்-வருத்தமடைதல், என்-என்ன? உந்தம்-உம்முடைய,

தந்த நாடு,'யான் தந்திலேன்,' எனும்மொழி சாற்றி
உந்தம் நாடும்இவ் வுயிர்களும் பெறு'கென உரைத்தான். 94

சேர நின்றவன் செப்பிய தாங்கவர் அன்றி
ஆரும் கேட்டிலர்; வசிட்ட னும் அமரரும் அறிந்தார்;
வீர வேந்தனும் மங்கையும் அவனடி வீழ்ந்(து)'இங்(கு)
ஆரை நீயிந்த ஏழைமைக் காட்செய்தி?' என்றார். 95

'செய்மை அண்மையில் உயிர்க்கொரு துணைஎனச் சிறந்த
வாய்மை யால்அகம் தூய்மையாம்; மற்றிலை; புறத்தைத்
தூய்மை செய்வது நீர்அலால் சொல்லின்வே றுளதோ?
நோய்மை செய்யினும், வாய்மையே நோன்பெமக் கறிதி. 96

'புலைய னும்விரும் பாதஇப் புன்புலால் யாக்கை
நிலைஎ னுமருண் டுயிரினும் நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்;
கலைஉ ணர்ந்தநீ எமக்கிது கழறுவ தழகோ? 97

இம்மை அம்மைவீ டெனமறை புலங்கொள இயம்பும்
மும்மை யுந்தரும் முறையுடைத் தெனும்நிலை முரணி,
எம்மை ஆழ்வயிற் றடக்கிமீட் டுமிழ்கலா எரிவாய்
வெம்மை கூர்நர குய்க்கினும் மெய்ம்மையை விடேமால். 98

---

95. சேர - நெருங்க, அமரரும் - தேவரும், ஏழைமைக்கு - அறியாமைக்கு, ஆள் செய்தி - அடிமையாக்குகிறாய்.

96. செய்மை அண்மையில் - தூரத்திலும் சமீபத்திலும், வாய்மையால் - சத்தியத்தினால், தூய்மையாம் - பரிசுத்தமாகும், மற்று இலை - வேறு இல்லை, புறத்தை - உடலை, நோய்மை - துன்பம், நோன்பு - விரதமாகும், அறிதி – (இதை நீ) அறிவாயாக.

97. புன் புலால் யாக்கை - அற்பமாகிய மாமிச உடல், நிலை எனு - நிலையானது என்று, நெடிது உறச் சிறந்து - மிக அதிகமாகச் சிறப்படைந்து, தலைமை சேர்தரு - முதன்மை பெற்ற, பிறழ்வது - தவறுவது, தரியேம் - சகிக்கமாட்டோம், கழறுவது - சொல்லுவது.

98. இம்மை - இப்பிறவி, அம்மை - வரு பிறவி, வீடு-மோட்சம், மறை - வேதம், புலம் கொள - அறிவு கொள்ளும்படி, உடைத்து -

'பதிஇ ழந்தனம்; பாலனை இழந்தனம்; படைத்த
நிதிஇ ழந்தனம்; இனிஎமக் குளதென நினைக்கும்
கதிஇ ழக்கினும் கட்டுரை இழக்கிலேம்,' என்றார்;
மதிஇ ழந்து,தன் வாய்இழந் தருந்தவன் மறைந்தான். 99

மறைந்து போகலும் வாசவன் மாமுனி வனைக்கூய்,
' அறைந்த காரணம் அறிந்துபோ!' எனஅரு கழைத்தான்;
நிறைந்த நாணமும் குறைந்தபார் வையும்உற நினைவு
குறைந்தி ருந்தனன் முகிலிடத் தவருடன் கூடி. 100

வாசத் தார்புனை வாசவ னுடன்முனி வைகப்
பாசத் தான்கரம் பிணித்ததோர் பாசங்கை பற்றிப்
பேசத் தான்பெறான், பிணம்சுடு கோலினால் தள்ளி
நேசத் தார்மகன் கிடந்ததோர் நெடுநிலம் உற்றான். 101

' வழக்கின் என்றும்நீ வழிபடு தெய்வத்தை வணங்கிக்
கிழக்கு நோக்கிஈண் டிரு,'எனக் கிளிமொழி மடந்தை

---

உடையது, முரணி - மாறுபட்டு, ஆழ் வயிற்று - ஆழமான வயிற்றிலே, மீட்டு உமிழ்கலா - மறுபடியும் வெளிவிடாத, எரிவாய் - தீ பொருந்திய, வெம்மை கூர் நரகு உய்க்கினும் - கொடுமை மிகுந்த நரகத்தில் வீழ்த்தினும், விடேம் - விடமாட்டோம், ஆல் - அசை.

99. பதி - நகரத்தை, நிதி - செல்வத்தை, கதி - மோட்சத்தை, கட்டுரை - (சொன்ன) உறுதிச் சொல்லை, மதி - புத்தியை, வாய் - சொல்லை, அருந்தவன் - விசுவாமித்திரர்.

100. வாசவன் - இந்திரன், மாமுனிவனைக் கூய் - விசுவாமித்திரரைக் கூவி, அறைந்த - (அரிச்சந்திரன் மீது பழி) கூறிய, நாணமும் - வெட்கமும், உற - உண்டாக, நினைவு குறைந்து - நினைவழிந்து, முகிலிடத்தவருடன் - மேக மண்டலத்திலிருந்த தேவருடன், இருந்தனன் - (விசுவாமித்திரர்) இருந்தார்.

101. வாசத்தார் - மணம் வீசும் மாலையை, வாசவனுடன் - இந்திரனுடன், வைக - தங்கியிருக்க, பாசத்தாள் - அன்புடையவள், பாசம் - கயிற்றை, பேசத்தான் பெறான் - ஒன்றும் பேசாதவனாய், நேசத்து ஆர் - காதலில் மிகுந்த, மகன் - தேவ தாசன், நெடுநிலம் - சுடுகாடு.

102. வழக்கின் - வழக்கப்படி, வழிபடு - வணங்குகிற, மடந்தை-

பழக்கம் ஆன அக் கணவனைப் பரவி,'என் ஆவி
இழக்கற் கஞ்சிநீ அறம்வழு வேல்,'என இயம்பும்: 102

'பொருந்தும் நீத்தத்தில் புற்புத வாழ்வைநீ மெய்யென்(று)
அருந்த வத்தையும் அறத்தையும் மெய்யையும் விடுத்து
வருந்தல் மன்னவ! வழிவழி சிறக்'கென வாழ்த்தி
இருந்த பின்சுடர் வாள்படை வலக்கையின் எடுத்தான்.

'உலகு யிர்க்கெலாம் பசுபதி ஒருமுதல் ஆயின்,
அலகில் சீருடை அவன்மொழி மறைஎனின், அதன்கண்
இலக றம்பல வற்றினும் வாய்மைஈ டிலதேல்,
விலகு றாமல்அவ் வாய்மையே விரதமாக் கொளின்யான்

'நெறியின் அன்னஎன் றனைவிடா நிறைஇவட் குளதேல்,
இறுதி இன்மையைப் பெறுக;இல் எனின் இவள் இறுதி
பெறுக,' என் றுவாள் வீசினன்; பேதைதன் கழுத்தில்
மறும ணத்திடும் மாலையாய் வீழ்ந்ததவ் வடிவாள். 105

ஆ. செய்யுள் 430

---

சந்திரமதி, பரவி - துதித்து, இழக்கற்கு - இழப்பதற்காக, வழுவேல்- தவறுதே, இயம்பும் - (பின்னும்) சொல்லுவாள்.

103. நீத்தத்தில் - வெள்ளத்தில் உண்டாகிற, புற்புத வாழ்வை- நீர்க்குமிழி போல் (அழியத் தகுந்த) வாழ்க்கையை, வருந்தல் - வருந் தாதே, வழி வழி - வமிச பாரம்பரியமாக, சிறக்க என - சிறப்படைவா யாக என்று, வாள் படை - வாளாயுதத்தை.

104. உலகு உயிர்க்கெலாம் - உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம், பசுபதி - சிவபெருமான், ஒரு முதல் - ஒப்பற்ற முதற்கடவுள், அலகு இல் - அளவில்லாத, சீர் உடை - சிறப்பையுடைய, இலகு அறம் - விளங்குகின்ற தரும முறைகள், வாய்மை - சத்தியம், ஈடு இலதேல் - ஒப்பற்றதானுல், விலகுறாமல் - தவறுமல், கொளின் - கொண்டால்,

105. நெறியின் - நீதி மார்க்கத்தில், அன்ன - அப்படிப்பட்ட, என் றனை விடா - என்னை நீங்காத, நிறை - நிறை குணம், இறுதி இன் மையை - மரணம் அடையாமையை, இல் எனின் - இல்லை என்றால், பேதைதன் - சந்திரமதியின், மறு மணத்து இடும் - இரண்டாம் விவா கத்தில் இடுகின்ற.

## 9. மீட்சிக் காண்டம்

*கலி நிலைத்துறை*

படத்த காதபா டியாவையும் பட்டுளத் தழுத்தும்
திடத்தி னின்றுவாள் வெட்டினிற் பிழைத்திடு செழுந்தீப்
புடத்தி னின்றுமாற் றுயர்ந்தசெம் பொன்னெனப் பொலிந்தாள்
மடத்தின் தீர்ந்தொளிர் சந்திர மதியெனும் அணங்கு. 1

சடைபட் டோங்கிய முடிமுனி தனதுசூழ் வினையால்
அடைபட் டுறுபா டனைத்தையும் கடந்து,சா ணையினால்
கடைபட் டானபின் செழுமணி எனஒளி காட்டிக்
கொடைபட் டார்புகழ்க் கோமகன் விளங்கினன் குணத்தால். 2

[அப்பொழுது தேவர் அனைவரும், வசிட்டரும், விசுவாமித்திர முனிவரும், காசி மன்னன் முதலியவரும் அங்கு வந்து அடைந்தனர்.]

'என்றனால்இவன் குணம்எலாம் விளங்கிடின், எனைப்போல்
நன்றி யார்செய்தார் இவற்'கென நகைமுகம் மலர்ந்து,
துன்று வார்சடை சுவல்மிசைச் சுழன்றுவீழ்ந் தாட,
வென்று ளான்எனக் கௌசிகன் ஆடினன் விரைந்து. 3

[அரிச்சந்திரன் வெற்றிகுறித்து வசிட்டர் பெருமகிழ்வடைந்தனர். அரிச்சந்திரனும் சந்திரமதியும் அனைவரையும் வணங்கி ஆசிபெற்றனர். முருகன் திருவருளால் மாண்ட அரச மைந்தர் இருவரும் உயிர் பெற்றெழுந்தனர்.]

---

1. பாடு யாவையும் - துன்பம் யாவற்றையும், பொலிந்தாள் - விளங்கினாள், மடத்தின் தீர்ந்து - அறியாமையிலிருந்து நீங்கி, அணங்கு - தெய்வத் தன்மை பொருந்தியவள்.

2. சூழ் வினையால் - வஞ்சகச் செயலால், உறுபாடு - துன்பம், செழு மணி - செழுமையான மாணிக்கம், கொடை பட்டு ஆர் புகழ் - கொடுத்தலைச் செய்து நிரம்பிய புகழையுடைய.

3. என்றனால் - என்னால், இவற்கு - இவ்வரிச்சந்திரனுக்கு, துன்று - நெருங்கிய, சுவல் மிசை - கழுத்தின்மேல், வென்றுளான் என - வெற்றி பெற்றவனைப் போல.

ஆசில் நன்குணத் தயோத்தியர் வேந்தனும் அணங்கும்
காசி வேந்தனும் மதலையர் இருவரும் களித்துக்
கூசி மெய்ம்மயிர் பொடித்திடக் கொண்டனர் புளகம்;
வீசி ஓங்கிட இறைஞ்சினர்; அவசம்மே வினரால். 4

மன்னர் மன்னனை நோக்கியே மலர்க்கரம் அமையா,
'என்னை யோ!' என உருகித்தம் திருவுளம் இரங்கி,
'முன்னை உத்தமர் எவருளும் முறைமைக்கும் நெறிக்கும்
உன்னை ஒப்பவர் இலர்!' என மூவரும் உரைத்தார். 5

தேவ தேவர்கள் அருளிய திருமொழி கேளா,
'யாவர் இப்பயன் பெற்றவர்!' என்றுநைந் துருகிப்
பூவ ருங்குழல் வல்லியும் புதல்வரும் புருடர்
மூவ ரும்விழுந் தெழுந்துபன் முறைமுறை துதித்தார். 6

[பின்னர் அங்கிருந்தார் அனைவரையும் நோக்கி,]

எழுசீர் விருத்தம்

வாசவன் முன்னாள் வினயகா ரணமும்,
வசிட்டனும் தானும்அன் றிட்ட
பூசலும், விலங்கால் புனம்அழித் ததுவும்,
புரவலன் வேட்டைபோந் ததுவும்,

---

4. ஆசு இல் - குற்றமில்லாத, அயோத்தியர் வேந்தன் - அரிச்சந்திரன், பொடித்திட - சிலிர்க்க, புளகம் - மயிர்க் கூச்சு.

5. அமையா - அமைத்து, முன்னை - பழமையான, மூவரும் - (பிரமன் விஷ்ணு சிவன் என்னும்) மூன்று பேரும்.

6. கேளா - கேட்டு, நைந்து - வருந்தி, புருடர் மூவர் - (சத்திய கீர்த்தி, அரிச்சந்திரன், காசி மன்னன் ஆகிய) முப்புருஷர், பன் முறை - பல தடவை, முறை - ஒழுங்காக.

7. வாசவன் - இந்திரன், வினய - வினவிய, தானும் - விசுவாமித்திரரும், பூசலும் - சண்டையும், புனம் - வயலை, போந்ததுவும் - வந்ததும், நீச மங்கையரை - இழி குலப் பெண்டிரை, நிருபன் - அரசன், புக்கு - புகுந்து, சமம்-சுடலையை.

நீசமங் கையரை விடுத்ததும், தனக்கு
நிருபன்நல் நாடளித் தேகிக்
காசிபுக் கிமம் காத்ததும், விளைத்த
கருமமும் கௌசிகன் உரைத்தான். 7

'கோதிலாக் குணத்தோன் நீதியும் நெறியும்
குறியும்யான் அறிகிலா திகழ்ந்தேன்!
ஆதலால் வென்றோன் வசிட்டனே! தோற்றேன்
அடியனே! அடியனே! மேல்நாள்
காதலால் செய்த தவத்தினில் பாதி
காவலன் தனக்கியான் அளித்தேன்;
ஈதலால் எனக்கன் றீந்தபே ரரசும்
ஈந்தனன்,' என்றுரை செய்தான். 8

உரைத்தது செவியில் காய்ந்தநா ராசம்
ஒட்டிய தென இறை உருகிக்
'கரப்பினர் தாமும் கொடுத்தது வாங்கக்
கண்டிலோம்; கேட்டிலோம்; 'கைஏற்(று)
இரப்பினர்க் களித்த பொருள்தனைக் கொண்டோன்
இவன்!'எனப் பெயர்படைத் துலகம்
புரப்பவன் யாரோ? இப்பழி தனையான்
பூண்கிலேன்,' என்றனன்; பின்னும் 9

'இம்மையில் பழியாம், மறுமையில் நரகம்
இரந்தவர்க் களித்ததை வாங்கின்;
செம்மையோர்க் கெல்லாம் பெருநகை ஆம்;இத்
தீமைசெய் வதற்குநீ உலகத்(து)

---

8. குறியும் - மனக் குறிப்பும், அறிகிலாது - அறியாமல், மேல் நாள் - முன்னாளில், காதலால் - பெரு விருப்பத்தோடு, காவலன் - அரிச்சந்திரனுக்கு, ஈது அலால் - இது மட்டுமல்லாமல்.

9. நாராசம் - இருப்புச் சலாகையை, ஒட்டயது என - செலுத்தினது போல, கரப்பினர்தாமும் - வஞ்சகருங்கூட, இரப்பினர்க்கு - யாசகர்க்கு, புரப்பவன் - காப்பவன்.

எம்மையோ கண்டாய்? இதற்குமுன் இரா
இடர்பல விளைத்தனை எனினும்
மும்மையும் பழியே சூட்டுதல் தகுமோ?'
என்றனன்; முனியதற் குரைப்பான்: 10

'கன்னல்அம் கழனி நாடும்நல் நகரும்
கருதிச்செய் தவத்தையான் விட்டு
மன்னவன் ஆக வல்லனோ மீண்டும்?
வள்ளல்கேள்: வசிட்டனும் யானும்
முன்னமே மொழிந்த முறைஅறி வதற்குன்
முறைமைசோ தித்தறிந் துணர்ந்தேன்;
நின்னகர் நீயே ஆளுதி,' என்ன,
நெடுந்தகை மறுத்தனன்; மறித்தும் 11

'வேதியர்க் காளாய் மின்னையும் மைந்தன்
தன்னையும் விற்றனன்; யான்போய்ச்
சாதியில் கீழாம் புலையனுக் காளாய்ச்
சவம்சுடு காடுகாத் திருந்தேன்;
சோதிமண் டபத்தின் மணித்தவி சேறிச்
சுடர்முடி கவித்துமண் புரக்க
நீதிஅன் றென்றே யான்அர சளித்தேன்;
நினக்கதே; எனக்கிதே,' என்றான். 12

[அப்பொழுது அந்தணனும் வந்து சந்திரமதியையும் அவள் மைந்தனையும் அடிமை கொண்ட அக்கினி தேவன் தோன்றி,]

10. பெருநகை-பெருஞ்சிரிப்பு, மும்மையும் - (அம்மை, இம்மை, உம்மை என்னும்) மூன்று பிறவியிலும்.

11. ஆளுதி - ஆள்வாயாக, நெடுந்தகை - பெருந்தன்மைவாய்ந்த அரிச்சந்திரன், மறித்தும் - மீண்டும்.

12. மின்னையும் - சந்திரமதியையும், தவிசு - சிங்காதனம், கவித்து - சூடி, புரக்க - ஆள, நினக்கு அதே - உனக்குரியது அவ்வரசாட்சியே, எனக்கு இதே - எனக்குரியதிச் சுடலைகாக்குந் தொழிலே.

'என்னை நீ உரைத்தாய்! எனக்குவிற் றதுவும்
இகழ்ச்சியோ? இவள்விலை படுதல்
முன்னமே உணர்ந்து, கொள்வதற் கிசைந்து,
முதுமறைக் குலத்துவந் துதித்து,
மின்னையும் மைந்தன் தன்னையும் விற்க
விலைகொண்ட ஆவணம் ஈதென்(று)
அன்னைபங் காளன் திருமுனே வைத்தான்;
அரசனும் அதிசயம் உற்றான். 13

[அப்பொழுது இயமன் தோன்றி,]

'அலைகடல் புவியில் புலையருக் கடிமை
ஆவைஎன் பதுமுதல் அறிந்து,
புலையனாய்ப் பிறந்து கொண்டவன் யானே;
பொறித்துநீ தந்தஆ வணம்ஈ(து);
இலைகுலாம் தொடையாய்! இருந்துநீ காத்த
ஈமமும் யாகசா லைகள்காண்;
தொலைவிலா வடுஎன் றுணரின்,நீ இகழ்ந்த
சுடலையைப் பார்!' என உரைத்தான். 14

ஆங்கவன் தன்னைப் பாங்குடன் நோக்கி,
'அரச!நீ அயோத்தியின் அணுகித்
தீங்கற மகுடம் சூடி,இம் முனிவன்
செய்தவம் பாதியும் கொண்டு,

---

13. என்னை - என்ன? ஆவணம் ஈது - அடிமைச் சீட்டு இது, அன்னை பங்காளன் - பார்வதி பங்கரான சிவபெருமான்.

14. கொண்டவன் - (அடிமையாக) வாங்கியவன், பொறித்து - எழுதி, இலை குலாம் - இலைகள் விளங்கும், தொடையாய் - மலர் மாலையையுடையவனே, தொலைவு இலா வடு - அழியாத குற்றம்.

15. ஆங்கு - அப்பொழுது, அவன் தன்னை - அவ்வரிச்சந்திரனை, பாங்குடன் - மகிழ்வுடன், வாங்கு நீர் - வளைந்த கடலால் சூழப்பட்ட, பொது அறப் புரந்து - எல்லா அரசர்க்கும் பொதுவாய் இல்லாதபடி

வாங்குநீர் உலகம் பொதுஅறப் புரந்து,
வருதிளம் பதத்தினில்,' என்றுத்
தேங்கமழ் சடையான் திருவுளம் மகிழ்ந்து,
தேவர்கோ மாற்குரை செய்வான்: 15

'காரணம் ஒன்று கேட்டியால்: நீயும்
காசிபன் முதல்முனி வரரும்
வாரணா வாசி மன்னனும் அயோத்தி
மன்னவன் தன்னுடன் ஏகித்
தோரண வீதித் திருநகர் புகுந்து
சுடர்முடி சூட்டிய பின்னர்
ஊரணைந் திடுமெ'ன் றுரைத்திட, வணங்கி
உவகையால் அன்னவர் உரைப்பார்: 16

'திங்கள்மே வியசெஞ் சடைமுடி யாய்!நின்
திருவுளத் தின்படி அல்லால்
எங்கள்மாட் சிமைவே றில்லை,'என் றளித்த
ஏவல்தம் தலைமிசைக் கொண்டார்;
அங்கண்மா ஞாலம் அகன்றெழுந் தீசன்
அணிதிகழ் கயிலையில் புக்கான்;
செங்கண்மால் ஏகிப் பாற்கடல் புகுந்தான்;
திசைமுகன் தனதுல கடைந்தான். 17

[அரிச்சந்திரன் முதலியவர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு அயோத்தியை அடைந்தனர்.]

அறுசீர் விருத்தம்

வள்ளலை முனிவன் கூட்டி வருகின்ற வாறு கேட்டுப்
பள்ளமுற் றும்பர் வெள்ளம் பாய்கின்ற பரிசே போல

---

(உனக்கே சிறப்பாக) ஆண்டு, சடையான் - சிவபெருமான், தேவர் கோமாற்கு - இந்திரனுக்கு.

16. கேட்டி - கேட்பாயாக, ஆல் - அசை, வாரணவாசி - காசி.

17. மேவிய - பொருந்திய, மாட்சிமை - பெருமை, அளித்த - கட்டளையிட்ட, செங்கண்மால் - திருமால், திசைமுகன் - பிரமன்.

உள்ளமும் மகிழ, ரோமம் சிலிர்ப்புற, ஊரில் சேனை
வெள்ளமும் அரசர் தாமும் வியந்தெதிர் கொண்டார் அன்றே

ஆரணம் முழங்க யோத்தி அணிபெருஞ் சேனை யோடும்
வாரண வாசி வேந்தன் படையொடும் வள்ளல் ஏகித்
தோரண வாயில் நண்ணிச் சுடர்மணித் தேர்இ ழிந்து,
பூரண கும்பம் மன்னும் மண்டபம் பொலியப் புக்கான். 19

பன்முடி வேந்தர் தாழ்ந்து பணியப்பொன் தவிசின் ஏற்றிச்
சொன்முடி வற்ற நீர்மைத் தாபதர் சூழ்ந்து வாழ்த்த,
நென்முடி சாயப் பாயும் நீர்வயல் நாடன் தன்னைப்
பொன்முடி சூட்டி வாழ்த்திப் புரந்தரன் விசும்பில் போனான். 20

'கார்உள சோலை சூழும் கௌசிகன் திமை நன்றே!
நீர்உள அளவும் ஈரேழ் நிலம்உள அளவும் உன்றன்
பேர்உள தொருகா லத்தும் பிழைப்பில துனக்கு நேர்வே(று)
ஆர்உளர்!'என்று வாழ்த்தி அருந்தவ முனிவர் போனார். 21

'மைந்தனை நின்னை மாதை இத்தனை வருத்தம் கண்டேம்;
நிந்தனை சிறிதும் நின்பால் கண்டிலேம் நீதி வேந்தே!
எந்தப்பா தவத்தில் பாதி யாவரும் காண இன்றே
தந்தனம் உனக்கே!' என்று கௌசிகன் தாரை வார்த்தான். 22

---

18. வள்ளலை - அரிச்சந்திரனை, முனிவன் - விசுவாமித்திரர், உம்பர் வெள்ளம் - மேட்டு வெள்ளம், பரிசே - தன்மையே, ரோமம் - மயிர், சேனை வெள்ளமும் - சேனைப் பெருக்கும், வியந்து - அதிசயித்து, எதிர் கொண்டார் - வரவேற்றனர், அன்றே - அசை.

19. ஆரணம் - வேதம், பொலிய - அழகு பெற.

20. பல் முடி வேந்தர் - கிரீடமணிந்த பல அரசர், தவிசின் - சிங்காதனத்தில், நீர்மை - தன்மையுடைய, தாபதர் - முனிவர், புரந்தரன் - இந்திரன், விசும்பில் - தேவலோகத்திற்கு.

21. கார் - மேகம், என்று - என்று.

22. எந்தம் - எமது, தாரை வார்த்தான் - தத்தம் செய்தார்.

'உற்றறிந் தளவிட் டோரா தும்மையான் இகழ்ந்து பேசப்
பெற்றவை பொறுத்திர்!' என்று வசிட்டனுக் கினிய பேசிக்
கொற்றவன் தன்னை ஆற்றிக் குமரனை மயிலைத் தேற்றி,
மற்றும்மந் திரியை வாழ்த்திக் கௌசிகன் வனத்தில் போனான். 23

தேவரும் முனிவர் தாமும் திண்புவித் தலைவர் தாமும்
யாவரும் அகன்ற பின்னர் இணைமணிக் கவரி வீச
மூவரும் அனைய நீர்மை முனிவனும் காசி வேந்தும்
ஏவரும் நிகர்இ லானும் இனிதுரைத் துடன்இ ருந்தார். 24

இருந்தபின் காசி வேந்தன் வசிட்டனை இறைஞ்சி ஏத்தி,
'அருந்தவர் தம்பால் ஐய! அறம்அலால் மறமும் உண்டோ?
வருந்திட இவர்பால் இந்த வன்கண்மை செய்ய உள்ளம்
பொருந்திய வாறே'தென்ன, வசிட்டனும் புகல லுற்றான் :

ஆ. செய்யுள் 455

---

23. உற்று அறிந்து-ஆராய்ந்தறிந்து, அளவிட்டு ஓராது-அளவு செய்து பாராமல், பொறுத்திர் - பொறுப்பீராக, குமரனை - தேவதாசனையும், மயிலை - சந்திரமதியையும்.

24. புவித் தலைவர் - அரசர், இணை மணிக் கவரி-இரண்டு அழகிய வெண்சாமரை, நீர்மை - தன்மையையுடைய, முனிவனும் - வசிட்டரும், ஏவரும் - எவரும், நிகர் இலானும் - சமானமில்லாதவனான அரிச்சந்திரனும், இனிது உரைத்து - இன்பமாகப் பேசிக்கொண்டு.

25. இறைஞ்சி - வணங்கி, ஏத்தி-துதித்து, மறமும்-பாவச் செயலும், வன்கண்மை - கொடுமை, உள்ளம் பொருந்தியவாறு - (விசுவாமித்திரர்) மனம் சம்மதித்த விதம்.

# 10. உத்தர காண்டம்

*[காதி என்னும் மன்னன் மைந்தனாகிய கௌசிகன் அரசு புரிந்த காலத்தில்]*

எண்சீர் விருத்தம்

'ஒருஞான்று புலரிதனில் எழுந்து போகி,
உயர்வரைகள் தோறும்உழன் றொன்றும் இன்றி
வருநாளில் அவ்விடத்தோர் மானின் பின்போய்,
வாய்புலர்ந்து, நாவுலர்ந்து, காலும் ஓய்ந்து,
பெருநாணமும்பசியும் தவிப்பும் ஆகிப்
பின்பிடித்த விலங்கைவிட்டுத் துன்பம் எய்தித்
தருநீழல் தன்னிலியான் இனிது வைகித்
தவம்புரியும் மலைச்சாரல் தன்னில் சார்ந்தான். 1

'யான் அவனைக் கண்டிரங்கி, 'நீயார்?' என்ன,
அடிபணிந்து, 'கௌசிகமன் னவன்யான்; இந்தக்
கானகத்தில் மான்வேட்டை போந்து, மற்றோர்
கடுமானின் பின்ஓடிக் கால்கள் சோர்ந்து,
தானையும்யா னும்பசியும் தவிப்பும் ஆகித்
தளர்ந்துனது சரண்அடைந்தேம்,' என்னக் காம
தேனுவை'வா' என்றழைத்தியான் அமுது நல்கித்
தீராத பசிதாகம் தீர்த்த பின்னர் 2

---

1. ஒரு ஞான்று - ஒரு நாள், புலரிதனில் - விடி காலையில், எழுந்து போகி - புறப்பட்டுப் போய், வரைகள் - மலைகள், ஒன்றும் - ஒரு மிருகமும், விலங்கை - மிருகத்தை, தரு - மரத்தின், தன்னிலியான் - தன்னில்+யான், வைகி - தங்கி.

2. இரங்கி - இரக்கங்கொண்டு, போந்து - வந்து, கடுமான் - விரைந்தோடும் மான், தானையும் - சேனையும், காமதேனுவை-தெய்வப் பசுவை, அழைத்தியான் - அழைத்து+யான், அமுது நல்கி - உணவு கொடுத்து.

'அப்பசிதீர்ந் தமைச்சரொடு விரைவின் வந்தென்
அருகணைந்து, 'மாமுனியே! அடியனேற்கின்(று)
இப்பசுவைத் தரல்வேண்டும்,' என்னக் கேட்க,
'இதற்குரியன் யானல்லேன்,' என்ன னோடும்
அப்பசுவைக் கரிபரிதேர் சேனை யோடும்
அடங்கவளைந் தெறிபாசத் தாலே வீசத்
தப்பறவே பூண்டகயிற் றெதிர்போய் அந்தத்
தானையெலாம் மடிந்துவிழச் சாடிற் றவ்வான். 3

அறுசீர் விருத்தம்

'அமராவதி யில்பசு எய்திடவே
அரசன்குல மைந்தர்கள் நூற்றுவரும்
எமதாவிகொ ளக்கரு திச்சினமுற்
றிடிபோலமு ழக்கம்எ ழக்குமுறிச்
சமராடல்தொ டங்கிநெ டும்பொழுதில்
சரமாரிபொ ழிந்திட லும்உடலும்
கமராகவெ டித்து,வி ழித்தவிழிக்
கனலாலவர் வெந்துக ழிந்தனரே. 4

'சண்டத்தழ லால்இவன் மைந்தர்படத்
தனுஅங்கைஎ டுத்தெதிர் வந்துகடுங்
கொண்டல்சர மாரிபொ ழிந்திடவே
கொடியோன்இவ னுக்கெதி ராஎனது
தண்டத்தினை நட்டனன்; விட்டபெருஞ்
சரமாரிம ழுக்கதை சக்கரம்வேல்

3. கரி - யானை, சேனை - காலாட்கள், எறி பாசம் - வீசு கயிறு, அவ்வான் - அப்பசு, சாடிற்று - அழித்தது.

4. அமராவதி - தேவலோகம், குமுறி - சத்தஞ் செய்து, சமராடல் - போர் செய்தலை, உடலும் - (என்) தேகமும், கமராக - பிளவாக, கழிந்தனர் - இறந்தனர்.

5. சண்டத் தழலால் - வேகமான (சாபத்) தீயினால், பட - இறக்க, தனு - வில்லை, கடுங்கொண்டல் - பெருமேகம் போல, சர

விண்டற்ப அரும்பொடி யாய்உதிர
விசையால்நகை யோடுவீ ழுங்கினதால். 5

'விடுகின்றகொ டும்படை அத்தனையும்
விறல்கொண்டுயர் தண்டம்வீ ழுங்கிடவே,
'அடுகின்றதெ மக்கெளி தல்ல!'என
அமரா,மிக ஆசைஅ டைந்துறவே
சுடுகின்றம னத்துடன் ஊர்அணுகித்
'துறவோர்வலி யோர்இறை யோர்இல்,'எனுக்
கொடுவெங்தொழில் நாடுது றந்தகலக்
குணபால்அணு கித்தவம் உற்றனனே. 6

'இவனுற்றத வத்தைஅ ழிக்கநினைத்
திமையோர்க்கிறை விட்டதி லோத்தமையோ(டு)
இவன்அத்தவம் விட்டுந லத்திடைபுக்
கழிபட்டுட னேஅறி வுற்றவனை,
'புவனத்தில்ம னித்தர்பி றப்பினில்நீ
போ!'என்றுச பித்தகல் தென்றிசைபோய்ச்
சிவனைக்கரு தித்தவம் முற்றிடவே
திராவரம் ஈசன்அ ளித்தனனே. 7

'அந்நாளில்எ னைத்திரி சங்குகுற்(று)
'அங்கத்தொடு விண்புகல் வேண்டும்,'எனச்
சொன்னான்;முடி யாதென யான்மொழியத்
'துறவோர்பிற ரால்உறு வேன்!'எனலும்,

மாரி - அம்பு மழையை, தண்டத்தினை - திரிதண்டம் என்னும் தவக் கழியை, விண்டு - உடைந்து, நகையோடு - விருப்பத்துடன்.

6. விறல் - வல்லமை, அடுகின்றது - அழிக்கின்றது, அமரா - ஓய்ந்து, சுடுகின்ற - (தன்னை) வருத்துகின்ற, துறவோர்-முனிவரைப் போன்ற, இறையோர் - அரசர், குணபால் - கிழக்குத் திசையை.

7. திலோத்தமை - தெய்வ மகள், நலத்திடை புக்கு - இன்பத்தில் ஈடுபட்டு, அழிபட்டு - தவமழிந்து, அறிவு உற்று - உணர்வுபெற்று, புவனத்தில் - பூமியில், மனித்தர் – மனிதர், முற்றிட - முடிக்க.

'இன்னாதுரை செய்தனை; நீபுலையா
கெ'னவே புலை ஆய், எழில் கெட்டவமே
தன்னுடனுறு இத்தமர் 'சீசீ!' எனத்
தள்ளத்தள மெள்ள நடந்தனனே. 8

'அன்றோ எனை விட்டிவனைத் தரிசித்(து),
'அங்கத்தொடு விண்புகல் வேண்டும் எனக்(கு),'
என்றே தன் உளத்தது சொல்ல, இவன்
என்னோடு தொடுத்த மறத்தொழிலால்
குன்றேயும் விமானம் அழைத்ததன்மேல்,
'கோ! ஏறெ'ன ஏறி நடந்திடவே
சென்றே அமராவதி சேருதலும்
தேவாதிபர் கண்டு சினந்தனரே. 9

'புலையா! சுரர் நாடு புகேல்!' எனவே
புறம் உந்தினர் வானவர்; புட்பகமோ(டு)
அலையா விழுவான், 'முனி கௌசிகனுக்
கபயம்!' என வீழ்வதறிந்தெதிர்போய்
நிலையான விமானம் விழாது நிறீஇ,
நெடுவெஞ்சினமாய், விழி நின்ற கனல்
பலபாலும் எரிந்தன; பல்லுயிரும்
படர்தீயினில் வெந்து பதைத்தனவால். 10

---

8. திரிசங்கு - அரிச்சந்திரன் தந்தை, அருகுற்று - அருகடைந்து, அங்கத்தொடு - (மாறிட) தேகத்துடன், விண் புகல் - தேவலோகத்துக்குச் செல்லுதல், துறவோர் - முனிவர், உறுவேன் - அடைவேன், இன்னாது - துன்பந் தருஞ்சொல்லை, புலை ஆக - புலையன் ஆவாயாக, எழில் - அழகு, அவமே - வீணிலே, தமர் - (தன்) பந்துக்கள்.

9. இவனைத் தரிசித்து - இந்த விசுவாமித்திரனைக் கண்டு, உளத்தது - மனக் கருத்தை, குன்றுஏயும் - சிறு மலையை ஒத்த, கோ - அரசனே, நடந்திட - அவ்விமானம் செல்ல, அமராவதி - தேவலோகத்தை.

10. சுரர் - தேவருடைய, புகேல் - புகாதே, வானவர் புறம் உந்தினர் - தேவர் வெளியே தள்ளினர், புட்பகமோடு - புஷ்பக விமானத்

'இவ்வண்டம்அனைத்தும்எரித்துலகம்
ஈரேழுடன் இந்திரனும்அயனும்
தெய்வங்களும் வேறுபடைப்பன்!'எனத்
தேவாதிபன் மால்சிவனோடயன்வந்(து)
'எவ்வண்ணம் விளைந்திடும்!' என்ன இரந்
தெழுகின்றசினந்தணிவித்துலகம்
உய்வண்ணம்உறத்திரிசங்குதனக்
குடுவின்பதம் நல்கஉரைத்தனரே. 11

'அத்தன்மையன் இம்முனி என்னுடனே
அந்நாளில்எடுத்தமறத்தொழிலால்
எத்தன்மை இழைத்தனன் அன்னஎலாம்
என்னோடுபலித்தில; ஆதலினால்,
இத்தன்மைஇழைத்தனன் மன்னனுடன்;
இதனாலும்வெலற்கரிதாயினன்;இப்
பித்தன்செயல் இத்தகவ்'என்றறவோர்
பெருமான்இறையோடுரைபேசினனே. 12

இந்நீர்மைவசிட்டன்உரைத்திடலும்
எழில்வாரணவாசியர் கோன்,'முனிவோர்
தந்நீர்மையை நீயலதாரறிவார்?
தனைஞானம்இலார்க்கறியத்தகுமோ?

துடன், அலையா - அலைந்து, நிறிஇ - நிறுத்தி, நெடு வெஞ்சினமாய் - பெருங்கொடுங்கோபமாய், கனல் - தீயினால், பலபாலும் - பலதிக்கும்.

11. அயனும் - பிரமனும், தேவாதிபன் - இந்திரன், உய் வண்ணம் - பிழைக்கும்படி, உற - அமைய, உடுவின் பதம் நல்க - நட்சத்திரப் பதவியைக் கொடுக்க.

12. எடுத்த - தொடங்கிய, மறத்தொழிலால் - போர்த் தொழிலால், அன்ன - அப்படிப்பட்டவை, பலித்தில - பலிக்கவில்லை, மன்னனுடன் - அரிச்சந்திரனுடன், வெலற்கு அரிது ஆயினன் - ஜயிக்க முடியாதவனானான், இத்தகவு - இத்தன்மையானது, அறவோர் பெருமான் - வசிட்டர், இறையோடு - காசி மன்னனுடன்.

நின்னீர்மை உணர்ந்தவ ரேஅறிவார்;
நீயே அவர் நீர்மையி னைந்துணர்வாய்;
எந்நீர்மை உனக்கரி தென்னஎழுந்
திருபாதம் இறைஞ்சி இருந்தனனே. 13

[பின்பு காசிமன்னன் அரிச்சந்திரன் முதலியவரிடம் விடை பெற்றுத் தன் நகருக்கு ஏகினன்.]

கடிமீதுறு கார்வளம் மல்குதிருக்
காசித்திரு நாடனும் ஏகியபின்
முடிமீதொளி பொங்கிட வெண்குடையும்
முத்தின் குடையும்கொடி யும்மிடையப்
படிமீதினில் மன்னவர் வந்துதொழப்
பலபாவையர் பாணர்ப ரிந்திடவே
அடிமீதுவ ணங்கஅ யோத்தியர்கோன்
அரியாசனம் மீதில்இ ருந்தனனே. 14

கலி விருத்தம்

மன்னர் வாழிய! மாமறை வாழிய!
செந்நெல் மன்னுக! செந்தமிழ் ஓங்குக!
அன்ன தான அரிச்சந்தி ரன்கதை
தன்னைக் கேட்டவர் வாழ்வுத ழைக்கவே! 15

ஆ. செய்யுள் 470.

---

13. தழை ஞானம் - வளர்கின்ற அறிவு, எந்நீர்மை - எந்தத் தன்மை, அரிது - கஷ்டமானது.

14. கடி மீதுறு - காவல் மிகுதியையுடைய, கார் வளம் மல்கு - மழை வளம் மிகுந்த, மிடைய - நெருங்க, படி மீதினில் - பூமியிலுள்ள, பரிந்திட - அன்பு கொள்ள, அரியாசனம் - சிங்காதனம்.

15. மாமறை - சிறந்த வேதங்கள், வாழிய - வாழ்க, மன்னுக - நிலை பெறுக, ஓங்குக - உயர்வடைக, அன்னது ஆன - அப்படிப்பட்ட.

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அக்கணத்தினில் | 127 |
| அக்கணமே | 79 |
| அக்காலத் | 70 |
| அக்காலையில் | 15 |
| அங்கண் | 6 |
| அங்குற் | 58 |
| அங்கேஅ | 132 |
| அங்கைவேல் | 9 |
| அஞ்சாயல் | 66 |
| அடிமைமேய | 108 |
| அடியினால் | 105 |
| அடிவணங்கி | 18 |
| அடிஇணும் | 49 |
| அடுத்திருத்தி | 74 |
| அண்டர்நா | 10 |
| அதிரப்பெரு | 93 |
| அத்தலம் | 123 |
| அத்தன்மையன் | 149 |
| அத்திரு | 102 |
| அத்திருக | 4 |
| அந்தஅம | 79 |
| அந்தணன் | 82 |
| அந்தணன்முகம் | 98 |
| அந்த ஞாளவை | 52 |
| அந்த நாட்டினில் | 6 |
| அந்த நெடு | 77 |
| அந்த மொழி | 124 |
| அந்த வேலையில் | 133 |
| அந்த வேளையில் | 35 |
| அந்நாளில்ஏ | 148 |
| அப்பசிதீர்ந் | 146 |
| அப்பெருங்கொடும் | 27 |
| அமராவதி | 146 |
| அமையும் | 15 |
| அம்மதலை | 122 |
| அரக்கெ | 121 |
| அரவுகடித் | 114 |
| அரிஅனந்தம் | 21 |
| அருத்தியில் | 32 |
| அருவினை | 32 |
| அருள்அ | 17 |
| அலைகடல் | 141 |
| அலைவிலாஅரிச் | 117 |
| அவ்வழல் | 87 |
| அவ்வாறுரை | 94 |
| அழியாத | 130 |
| அறநெறி | 7 |
| அறம்திரண்டுரு | 61 |
| அறுதியி | 107 |
| அறைபு | 22 |
| அற்புக்காழிஅ | 118 |
| அற்றை | 49 |
| அனையவை | 32 |
| அன்பால் | 14 |
| அன்று | 81 |
| அன்றேஎனை | 148 |
| அன்னகாலை | 99 |
| அன்னதன் | 6 |
| அன்னவை | 88 |
| அன்னான் | 12 |
| அன்னை இன்றி | 118 |
| அன்னை என்பை | 51 |
| அன்னை யாய்எம | 99 |
| அன்னை தான் | 89 |
| **ஆ** | |
| ஆங்கவன் | 141 |
| ஆசில் நன்குணத் | 138 |
| ஆடரங்குகள் | 60 |
| ஆதித்தன் | 15 |
| ஆதி நூலினர் | 100 |
| ஆமதேளவின் | 57 |
| ஆயின்விடன் | 123 |
| ஆரணம் | 143 |
| ஆரை | 54 |
| ஆவிபோய் | 106 |
| ஆறுகொண் | 42 |
| ஆற்று | 14 |
| **இ** | |
| இக்கருங்குழல் | 47 |
| இடம்சிறி | 87 |
| இடிவீழ்ந்த | 76 |
| இந்த ஆதனத் | 60 |
| இந்த உத்தரம் | 85 |
| இந்த எல்லையில் | 57 |
| இந்தவாறு | 20 |
| இந்த வெங்கடம் | 83 |
| இந்த வையமும் | 62 |
| இந்நீர்மைவ | 150 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| இப்படி இன்று | - 32 |
| இப்புத் திக்கினி | - 58 |
| இம்மை | - 134 |
| இம்மையில் | - 139 |
| இரதம் | - 59 |
| இரப்ப | - 48 |
| இருந்த | - 5 |
| இருந்தபின் | - 144 |
| இருவரும் | - 89 |
| இருள்அ | - 117 |
| இவர்த மக்களி | - 97 |
| இவனுற்றத | - 147 |
| இவ்வகை | - 87 |
| இவ்வண்டம்அ | - 149 |
| இவ்விடத்துளவி | - 25 |
| இழைத்த | - 56 |
| இறுதி | - 17 |
| இறைவன் | - 19 |
| இன்று | - 18 |
| இன்ன வாறுரைத் | 119 |
| **உ** | |
| உண்மகிழ்ந்தின் | - 96 |
| உதித்தது | - 29 |
| உமக்கு | - 62 |
| உயிர்க்கொலை | - 125 |
| உய்த்தது | - 29 |
| உருபிடித் | - 44 |
| உரைத்தது | - 139 |
| உரைபெறுசீர் | - 69 |
| உலகுயிர்க்கெலா | 136 |
| உள்ளிய தீ | - 73 |
| உற்ற நாளையில் | - 133 |
| உற்றதிர் | - 144 |
| உனையும் மடமா | - 54 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| உன்உரை | - 125 |
| உன்னுடனே | - 73 |
| உன்னை ஆளும் | - 120 |
| **ஊ** | |
| ஊரும் | - 56 |
| **எ** | |
| எங்கோம் | - 129 |
| எத்துக் | - 54 |
| எந்தத் தேயங்கள் | 5 |
| எந்தம் நல்லுயிரும் | 83 |
| எந்தம் நாயக | - 82 |
| எந்நகரில் | - 80 |
| எமைய ! | - 98 |
| எவர்க்கும் | - 61 |
| எறிந்திடலும் | - 115 |
| எனக்கு நீ | - 101 |
| எனமறுகி | - 114 |
| எனவுரைத் | - 45 |
| என்றனல் இவன் | 137 |
| என்றமைச்சர் இ | 23 |
| என்றலமந் | - 68 |
| என்றலும் | - 10 |
| என்றிறைஉ | - 124 |
| என்று கூறிட | - 27 |
| என்று புகர் | – 79 |
| என்று மயில் | - 77 |
| என்று மன்னன் | - 52 |
| என்றும்நர | - 124 |
| என்சொல்வினை ! | - 96 |
| என்ன பாதகம் | - 133 |
| என்ன பாவம் | - 20 |
| என்ன பாவம்எ | - 99 |
| என்னுயகன்றன் | 112 |
| என்னின் | - 60 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| என்னை ஆ | - 33 |
| என்னை ஈன் | - 31 |
| என்னை நீ | - 141 |
| **ஏ** | |
| ஏங்கி | - 98 |
| ஏங்கு | - 59 |
| ஏத்திய | - 39 |
| ஏற்கு மோபொருட். | 99 |
| ஏனம் எண்கு | - 24 |
| ஏனம்வீழுந்தயர் | 30 |
| **ஐ** | |
| ஐய! கேள் : | - 43 |
| **ஒ** | |
| ஒத்த தேஅமை | - 19 |
| ஒருநான்று | - 145 |
| ஒருநாள்செல | - 93 |
| ஒருவரை | - 88 |
| ஒன்றிலாத | - 119 |
| ஒன்றினது | - 123 |
| ஒன்றுரைக்க | - 73 |
| **ஓ** | |
| ஓடினார்கள் | - 23 |
| **க** | |
| கடற்படை | - 30 |
| கடிதெ | – 83 |
| கடிமீதுற் | - 150 |
| கடிநெருப் | - 86 |
| கண்டனர் | - 87 |
| கண்டனள், 'ச | - 114 |
| கண்ணை | - 51 |
| கரதலத் | - 44 |
| கரமுறத் | - 45 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| கலையும் மாறும் | 21 |
| கல்லென் றுயர் | 94 |
| கழுத்த | 48 |
| கழுத்தைப் | 98 |
| களபப்பிடர் | 96 |
| கள்ள வேகத் | 118 |
| கற்பினில் | 86 |
| கனழும் | 111 |
| கன்னல் அம்பெருங் | 59 |
| சன்னல்அம்கழனி | 140 |
| கன்னியும் | 86 |
| கன்னியென் | 9 |
| கன்னெஞ்சர் | 80 |
| **கா** | |
| காசி நாட்டினில் | 57 |
| காட்டுவாழ் | 20 |
| காதலால் உடலைக் | 119 |
| காரணம் | 142 |
| கார்உள | 143 |
| காவலவன் | 78 |
| காவல்மன்ன | 18 |
| காவிச் | 54 |
| காவிஅம் | 38 |
| **இ** | |
| இள்ளைமொழி | 121 |
| **கு** | |
| குக்கி புக்கதுசெ | 84 |
| குடியினில் | 45 |
| குளடதங் | 53 |
| குடைமி | 63 |
| குன்று | 26 |
| **கூ** | |
| கூட்ட | 23 |
| கூற்றம் | 50 |
| **கை** | |
| கைபிடித்தலும் | 62 |
| கையினால் பிடித் | 63 |
| கையினில் | 104 |
| கையோசெ | 128 |
| **கொ** | |
| கொஞ்சிப் | 50 |
| கொடிமீது | 66 |
| கொடுப்பன | 41 |
| கொண்டிருந்த | 68 |
| கொதித்தெ | 120 |
| கொய்து | 48 |
| கொலைகாரி | 131 |
| கொற்றவாயின் | 101 |
| கொற்றவாசவன் | 16 |
| **கோ** | |
| கோசிகன் | 52 |
| கோசிகன்தனை | 60 |
| கோதிலாக் | 139 |
| கோதிலாப் | 75 |
| கோலத்தின் | 33 |
| **ச** | |
| சடைபட் | 137 |
| சடைபிடித்தும் | 71 |
| சண்டத்தழ | 146 |
| சண்டவெம் | 88 |
| **சி** | |
| சிறியரா | 46 |
| சிறுத்த | 62 |
| சிறுத்தவர்கள் | 72 |
| சினக்கடுஞ் | 107 |
| **சு** | |
| சுட்ட செந்தழலில் | 26 |
| சுட்டவெம் | 102 |
| சுமக்கும் | 100 |
| சுற்றுண் | 57 |
| **செ** | |
| செங்கோல் | 110 |
| செந்தேன் | 55 |
| செம்மையினால் | 68 |
| செய்தவப் | 90 |
| செய்யமக | 124 |
| செருவுற்றகண் | 95 |
| செல்லும் | 23 |
| சென்ற சென்றஅத் | 28 |
| சென்ற சென்றதி | 25 |
| சென்றவர்கள் | 122 |
| **சே** | |
| சேய்மை | 134 |
| சேர | 134 |
| சேனை | 28 |
| **சொ** | |
| சொல்லிய | 37 |
| சொல்வ | 16 |
| சொன்னது | 55 |
| சொன்னவை | 82 |
| **சோ** | |
| சோதித்திரு | 95 |
| **த** | |
| தண்கவிகைக் | 2 |
| தப்பாது | 130 |
| தருகு வேன்என | 100 |
| தலம்முழுதும் | 65 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| தலைகள் | - 27 |
| தலைவி நம்பச்சை; | 28 |
| தவளத்தி | - 128 |
| தனியாய | - 131 |
| **தா** | |
| தாபமும் | - 31 |
| தாமம் | - 80 |
| தாருட | - 55 |
| தாலத்தறம் | - 95 |
| தாழும் | - 133 |
| **தி** | |
| திங்கள்மே | - 142 |
| தின்று தின்று | - 21 |
| **தீ** | |
| தீதிலா | - 35 |
| தீமை செய்த | - 120 |
| தீவெக் | - 13 |
| **து** | |
| துஞ்சியமைக் | - 116 |
| துடிமருங்குல்அத் | 50 |
| துட்டியாம் இவள் | 126 |
| துணியும் | - 53 |
| துன்றுபசிக் | - 74 |
| **தூ** | |
| தூங்கிருள் | - 101 |
| தூர நின்று | - 126 |
| **தெ** | |
| தெய்வக் | - 13 |
| தெரியும் | - 16 |
| **தே** | |
| தேமென் களி | 94 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| தேரில் ஏறிமா | - 59 |
| தேவதேவர்கள் | 138 |
| தேவரும் | - 144 |
| தேவிருள்ள | - 122 |
| **தை** | |
| தையலாள் அச்சொ | 90 |
| தையலாள் கழுத்தி | 9 |
| **தொ** | |
| தொக்க | - 84 |
| தொடைதுறந்து | - 65 |
| தொழுத | - 5 |
| தொழுதே | - 61 |
| **தோ** | |
| தோகை/கேள: | - 120 |
| தோளி மீனூர்களு | 63 |
| தோல்வந்து | - 70 |
| **ந** | |
| நண்பினொடு | - 76 |
| நந்தம் | - 118 |
| நல்லியல் நூலறி | 11 |
| நல்லியல் மகர | - 38 |
| நல்லநல்ல! | - 116 |
| நல்லோர் | - 111 |
| நன்று குக/என் | - 15 |
| நன்று நன்றுநீ | - 58 |
| **நா** | |
| நாடறித் | - 46 |
| நாடும் | - 79 |
| நாவி அம் | - 34 |
| நாற்றம் | - 21 |
| **நி** | |
| நித்த லைப்பிர | - 56 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| நிலத்தில் | - 48 |
| நிலம்வி ளக்கிடும் | 3 |
| நிறைற | - 109 |
| நின்பரம் | - 81 |
| நின்றளவில் | - 123 |
| நின்று காணும்நி | - 97 |
| **நீ** | |
| நீயும் | - 79 |
| நீரும்இலை | - 78 |
| நீர் ஆளவாவி | - 110 |
| நீர்கொள்வார் | - 1 |
| **நெ** | |
| நெருப்பெழுக் | - 103 |
| நெறியின் | - 136 |
| **ப** | |
| பக்கம் | - 56 |
| படத்த | - 137 |
| படிபுரக்கும் | 71 |
| பட்டபட்டவை | - 25 |
| பதிஇ முக்தன | - 135 |
| பதியேயது | - 132 |
| பரம்ஊ ளக்குல | - 63 |
| பரவா திகட்கு | - 112 |
| பரவும் | - 17 |
| பரிதி தன்மர | - 1 |
| பழிவழி | - 40 |
| பறித்தனன் | - 106 |
| பனிம திச்சடை | - 117 |
| பனியால் | - 108 |
| பன்முடி | - 143 |
| **பா** | |
| பாடையில் | - 102 |
| பாதகம | - 77 |

செய்யுள் பக்கம்

பாய்மைக் - 12
பாருக் - 12
பார்அளித்தனை - 58
பார்த்திவன் - 42
பாவியேன் - 108

பு

புரவலன் அப்படை 30
புரவலன் அடிகளைப்88
புலையனும்விரும். 134
புலையா!கூறாய் - 148
புனங்கொண் - 14
புனித! நின்சொலை 85
புனித மாதவர் - 64
புன்கணுற் - 104

பூ

பூமகளும் - 77

பெ

பெடைநடை - 36

பே

பேச்சினில் - 34

பொ

பொருந்தும் - 136
பொருளும் - 3
பொருள் உடை - 115
பொன்கேட்கப் - 72
பொன்அனையாய்! 116
பொன்னிறத்து - 27

ம

மகர தோரண - 3
மங்கைகடி - 121
மஞ்சலச் - 10
மடக்கொடி - 125

செய்யுள் பக்கம்

மடித்தவா - 47
மண்ணொடு - 39
மண்டல - 10
மண்டலம் - 42
மண்டழல் - 91
மண்மடந்தையர் - 6
மண்ணில் - 99
மதந்த - 20
மதுரமென் - 91
மந்தரம் - 8
மயிரோடும் - 66
மருவும் - 51
மலையில் - 49
மறவாள் - 113
மறைநீ - 111
மறைந்து - 135
மறையோன்இ - 129
மறைவழி - 91
மன்ன!கேள்: - 7
மன்ன! கேள்:ஒரு 17
மன்னர் மன்னனை 138
மன்னர் வாழிய - 150
மன்னவ! 81
மன்னவர் - 103
மன்ன வற்கும்நம் - 60
மன்னவன் - 121

மா

மாதரை - 35
மாந்தரால் - 89
மாவினைத் - 45
மாலையம் - 108
மாறு நெறிகொண் 14
மாறுவதும் - 80
மானவன்சொல் - 19

செய்யுள் பக்கம்

மி

மின்அஞ்சிய - 94

மீ

மீண்டும் - 47
மீளி வேந்தும் - 100

மு

முல்லைமுகை - 67
முழங்கு - 19
முறை முறை - 107
முனிஎக - 74
முனிக்கு - 98
முன்செய்த - 70
முன்பியாம் - 40
முன்னம் உந்தை - 49
முன்னம் உனக்குச் 55
முன்னை நாள்அர 127
முன்னைவிதி - 126

மூ

மூவரா யவரின் - 7

மெ

மெய்யுரைசெ - 123
மெள்ளச்செல - 95
மென்னடை - 53

மை

மைகுலாவுகண் - 48
மைதிகழ்கு - 78
மைந்தனும் - 105
மைந்தனை - 143

மொ

மொழிபும்பழி - 93

செய்யுள் — பக்கம்

யா

யாணர்க்குள் — 36
யாமவற் கடிமை — 31
யான் அவனைக் — 145

யூ

யூப வேள்விக் — 50

வ

வடத்தின் மீழ் — 106
வடியே றுவெற்றி 113
வந்த தென்பொ — 97
வந்த மாதவர் — 5
வருகின்ற — 75
வருகென — 86
வரைக்கனக — 69
வல்லார்கள் — 131
வல்லார்க்கும் — 67
வல்வி போற்றி — 97
வல்லியும் — 104
வழக்கின் — 135
வள்ளலும் — 125
வள்ளலே — 142
வள்ளல் இவை — 125
வள்ளல் ட — 9
வள்ளல் என் — 41

வா

வாசத் தார்புனை — 135
வாசவன் — 138
வாட்பொரு — 40
வாரண முந்தின் 52
வாரண வாசி — 92
வாரி காய்ந்து — 51
வாழிய — 53
வாழ்வினை வ — 76
வாளின் — 119
வாளை வாங்கி — 127
வானம் எழும் — 28
வானின் றிழிந்து 110

வி

விடிந்த — 126
விடுகின்றகொ — 147
விதியின் அர — 2
விற்ற நாளில் — 119

வெ

வெய்தாரீ — 71
வெய்யன் — 13
வெறிகமழ் — 87
வென்றிவேல் — 33

வே

வேதமா — 38
வேதியர்க் — 140
வேந்த! அப்பெரு — 17
வேலைப் பழித்த — 129
வேல்கள் — 24

வை

வையம் எழுடை — 61
வையம்நின் — 37
வையம் நின்னது — 52

Printed at The Premier Art Press, Madras